# அக புற மருந்துகளின் இலக்கணமும் விளக்கமும்

## (அக புற மருந்து தொகுப்புகள்)




நூல் ஆசிரியர்:

**மரு. ஐ.சொர்ணமாரியம்மாள்,** எம்.டி (சித்தா)

பேராசிரியர் / முன்னாள் இணை இயக்குநர் (ஓய்வு)

இந்திய மருத்துவம் மற்றும் ஓமியோபதி ஆணையரகம்,

சென்னை - 600 106.



வெளியீடு:

சித்த மருத்துவ பாடநூல் வெளியீட்டுப் பிரிவு

**இந்திய மருத்துவம் மற்றும் ஓமியோபதித் துறை**

சென்னை - 600 106.

# அக புற மருந்துகளின் இலக்கணமும் விளக்கமும்

(அக புற மருந்து தொகுப்புகள்)


நூல் ஆசிரியர்:

**மரு. ஐ.சொர்ணமாரியம்மாள்,** எம்.டி (சித்தா)
பேராசிரியர் / முன்னாள் இணை இயக்குநர் (ஓய்வு)
இந்திய மருத்துவம் மற்றும் ஓமியோபதி ஆணையரகம்,
சென்னை - 600 106.



வெளியீடு:

**சித்த மருத்துவ பாடநூல் வெளியீட்டுப் பிரிவு
இந்திய மருத்துவம் மற்றும் ஓமியோபதித் துறை
சென்னை - 600 106.**

# நூலடைவு


| | | |
|---|---|---|
| நூலின் பெயர் | : | **அக புற மருந்துகளின் இலக்கணமும் விளக்கமும்** |
| ஆசிரியர் | : | மரு. ஐ.சொர்ணமாரியம்மாள், எம்.டி (சித்தா) |
| வெளியிட்டோர் | : | இந்திய மருத்துவம் — ஓமியோபதித்துறை, சென்னை — 600 106. |
| பதிப்பு ஆண்டு | : | 2019 |
| பதிப்புரிமை | : | தமிழ்நாடு அரசு |
| நூல் வடிவம் | : | 1/8 |
| அச்சுத்தாள் | : | 70 GSM மேப் லித்தோ |
| அட்டைக் கட்டுமானம் | : | கடின அட்டை |
| எழுத்துக்கள் | : | 13 புள்ளி |
| மொத்த பக்கங்கள் | : | 255 |
| பிரதிகள் | : | 500 |
| நூலின் விலை | : | ரூ.229/- |
| அச்சிட்டோர் | : | அரசு மைய அச்சகம் சென்னை — 600 079. |
| வடிவமைப்பு | : | **SHARK DESIGNING CENTRE** *Kodambakkam, Chennai - 600 024. Phone: +91 90250 44447, 89460 29007* |

# இந்திய மருத்துவம் மற்றும் ஓமியோபதித் துறை

*சென்னை — 600 106.*

## சித்த மருத்துவ நூல் வெளியீட்டுப் பிரிவு

**நூலாக்கப் பணிக்குழு**


*பதிப்பாசிரியர்*

**மரு.ப.பார்த்திபன், M.D (சித்தா)**

*இணை இயக்குனர்,*
*இந்திய மருத்துவம் மற்றும் ஓமியோபதித் துறை,*
*சென்னை - 600 106.*

*மெய்ப்புத் திருத்துனர்*

**மரு.ஐ.சொர்ணமாரியம்மாள், M.D (சித்தா)**

*சீவன் - நூலாசிரியர்*

**மரு.பேராசிரியர் எம்.டி. சரவணாதேவி, M.D (சித்தா)**

*குணப்பாடத்துறை*
*அரசினர் சித்த மருத்துவக் கல்லூரி,*
*அருப்பாக்கம், சென்னை-106.*

*கூர்ந்தாய்வு மருத்துவ அலுவலர் (பொறுப்பு)*

**மரு. ஜெ.பி. வெண்தாமரைச் செல்வி, M.D (சித்தா)**

# ஆசிரியர் உரை

சித்த மருத்துவத்தில் மானிடர்களுக்கு வரும் நோய்கள் 4448 என வகைப்படுத்தியுள்ளனர் சித்தர்கள். இந்நோய்களை நீக்க 64 மருந்து முறைகளைக் கொடுத்துள்ளனர். இவற்றில் 32 உள் மருந்து முறைகளும், 32 புற சிகிச்சை முறைகளும் அடங்கும். இம்மருந்து முறைகள் ஒவ்வொன்றிற்கும் தனித்தனியாக இலக்கணங்கள் உண்டு.

ஒவ்வொரு சித்தர்கள் நூலிலும் இத்தகைய குறிப்புகள் யாவும் ஒரு சேர அன்றி பரந்து கிடக்கின்றன. பின் வந்த மருத்துவர்கள் தங்கள் அனுபவத்தில் கண்ட மருந்து முறைகளை மட்டுமே நூலில் வடித்துக் கொடுத்துள்ளதில் ஆயிரக் கணக்கான மருந்து முறைகள் அடங்கிய நூற்களே உள்ளன. மருத்துவம் பயில்வோர் மருந்து முறைகளைப் பற்றி படிக்க முயலுகையில் முதற்படியாக அடிப்படைக் கருத்துக்களோடு, ஒவ்வொரு மருந்துகளின் இலக்கணமும், செயல் விளக்கமும், தனித்தன்மையையும் அறிந்திருந்தால் தான் செய்முறைப் பயிற்சிகள் எளிதாகும்.

அவ்வகையில் 64 மருந்து முறைகளின் இலக்கணமும், செயல்முறைகளும், ஒன்றிரண்டு எடுத்துக்காட்டுக்களுடன் தொகுக்கப்பட்டுள்ளது. அவற்றுள் பல கற்றலின் மூலம் அறிய முடியாது, குரு வழியாக மட்டுமே அனுபவத்தால் தெரிந்து கொள்ளக் கூடிய அக, புற மருந்துமுறைகளும் உண்டு. ஆயினும் அவற்றைப்பற்றி நூற்களில் கூறப்பட்ட கருத்துக்களைத் தெரிந்துகொண்டால் மட்டுமே, அனுபவத்தால் அறிய முடியும் என்பதால் நூற்களில் கூறப்பட்டுள்ளவை யாவும் தொகுக்கப்பட்டுள்ளது.

மருத்துவ நூற்களில் மருந்து முறைகள் பலவற்றுள் சேரும் சரக்குகளின் அளவும், பிரயோகிக்கப்பட வேண்டிய மருந்தின் அளவும் (உம்:பிட்டு, உட்களி-மற்றும்) குறிப்பிடப் படாதிருப்பதைக் காண முடிகிறது. அந்நிலையில் நோயின் தன்மை, நோயாளியின் வயது, வன்மை இவற்றைக்கருத்தில் கொண்டு மருத்துவன் நிர்ணயித்துக் கொள்ள வேண்டியது பொது விதியாகும்.

புற சிகிச்சை முறையில் தொக்கணம் என்பதின் கீழ் கூறப்படும் ஒன்பது செயல்முறைகளின் இலக்கண விளக்கங்கள் கிடைக்கப்பெறவில்லை.

"தேரன் தரு" எனும் நூலில் மட்டுமே இதற்கான விளக்கங்கள் காணப்படுகின்றன. ஆனால்இன்றளவும் நோய் நிலைகளில் கடைபிடிக்கக்கூடிய செயல்முறைகள் யாவும் வழக்கில் உள்ளன.

இவ்வாறு கிடைத்த வரையில் நூல்வழியாகவும்,தொக்கண மருத்துவர்கள்மூலமாயும் விளக்கங்கள் தொகுக்கப்பட்டுள்ளன.

மிகநுட்பமான சிகிச்சை முறைகளான கீறல், குருதிவாங்கல், குடோரி,அறுவை முதலானவற்றின் விளக்கங்கள் தொகுக்கப்பட்டுள்ளன. ஆயினும்தற்காலத்தில் நவீன மருத்துவத்தின் அறுவை சிகிச்சை முறைகள் மிக விரிவு படுத்தப்பட்டுள்ள நிலையில் இம்மருத்துவ முறைகளை மிகப்பிரயாசத்துடன் நடைமுறைப்படுத்த முயல வேண்டும்.

மருத்துவம் கற்போருக்கு இந்நூல் பெரிதும் பயன்படும்.

- மரு. ஐ.சொர்ணமாரியம்மாள் M.D. (சித்தா)

**திரு. சு.கணேஷ், இ.ஆ.ப.,**
*இயக்குநர்,*
*இந்திய மருத்துவம் மற்றும் ஓமியோபதித்துறை,*

# அணிந்துரை

*சித்த மருத்துவத்தில் 32 உள் மருந்து முறைகளும் (அகமருத்துவம்), 32 வெளி மருத்துவ முறைகளும் (புறமருத்துவம்) கூறப்பட்டுள்ளது. இம்மருத்துவ முறைகள் ஒவ்வொன்றிற்கும் தனித்தனியான இலக்கணம் உண்டு.*

*64 மருத்துவ முறைகளின் இலக்கணத்தைத் "தேரன் தரு" என்ற நூலை ஆதாரமாகக் கொண்டு அதன் விளக்கத்தை மிகவும் எளிமையாகவும், தெளிவாகவும் நமக்கு தொகுத்து வழங்கியிருக்கின்றார் பேரா. ஐ. சொர்ணமாரியம்மாள், எம்.டி., (சித்தா) அவர்கள்.*

*சித்த மருத்துவத்தின் தனிச் சிறப்புகளில் ஒன்று, சித்த மருத்துவர்களே மருந்துகளை தயார் செய்து தங்கள் நோயாளிகளுக்குக் கொடுப்பதுதான். எனவே சித்த மருத்துவர்கள் அனைவருக்கும் அகப்புற மருந்துகளைத் தயார் செய்வதற்கு அதன் அடிப்படை இலக்கணம் ஆழமாக தெரிந்திருக்க வேண்டும். அதனை நன்கு உணர்ந்த நூலாசிரியர், சித்த மருத்துவர்களுக்குப் பயன்படும் வகையில் மிகத் தெளிவாக இதன் விளக்கங்களை கூறியுள்ளார்.*

*அதுமட்டுமல்லாமல், புற மருத்துவம் (External therapies) பற்றியும் மிகச் சிறப்பாக விளக்கியுள்ளார்.*

*அகப்புற மருந்துகளின் இலக்கணமும் விளக்கமும் என்ற இந்நூல் ஒவ்வொரு சித்த மருத்துவர் வீட்டிலும் இருக்க வேண்டிய ஒரு அரிய நூலாகும்.*

*இந்நூலை வெளிக்கொண்டு வர மிகவும் உதவிய பேரா. மரு. ப. பார்த்திபன், எம்.டி., (சித்தா) அவர்களையும், நூலாக்கப்பணி குழுவையும் மிகவும் பாராட்டுகிறேன்.*

**- திரு. சு.கணேஷ், இ.ஆ.ப.,**

# அக மருந்துகள்


1. சுரசம் 9
2. சாறு 11
3. குடிநீர் 14
4. கற்கம் 22
5. உட்களி 26
6. அடை 30
7. சூரணம் 32
8. பிட்டு 39
9. வடகம் 41
10. வெண்ணெய் 46
11. மணப்பாகு 50
12. நெய் 54
13. இரசாயணம் 58
14. இளக முறை 61
15. தைலம் 66
16. மாத்திரை 80
17. கடுகு 86
18. பக்குவம் 88
19. தேனூறல் 92
20. தீ நீர் 94
21. மெழுகு 98
22. குழம்பு 102
23. பதங்கம் 107
24. செந்தூர முறை 112
25. பற்பமுறை 123
26. கட்டு முறை 132
27. உருக்கினம் 137
28. களங்கு 139
29. சுண்ணம் 141
30. கற்பம் 145
31. சத்து முறை 149
32. குரு - குளிகை 153
33. கட்டு 157
34. பற்று 160
35. ஒற்றடம் 164
36. பூச்சு 168
37. வேது 173
38. பொட்டணம் 178
39. தொக்கணம் 180
40. புகை 185
41. மை 192
42. பொடி திமிர்தல் 197
43. கலிக்கம் 198
44. நசியம் 201

<u>அக மருந்துகள்</u>


| | | |
|---|---|---|
| 45. | ஊதல் | 204 |
| 46. | நாசிகாபரணம் | 205 |
| 47. | களிம்பு | 208 |
| 48. | சீலை | 212 |
| 49. | நீர் | 215 |
| 50. | வர்த்தி | 218 |
| 51. | சுட்டிகை | 220 |
| 52. | சலாகை | 225 |
| 53. | பசை | 226 |
| 54. | தலைவலிப்பசை | 227 |
| 55. | களி | 231 |
| 56. | பொடி | 232 |
| 57. | முறிச்சல் | 235 |
| 58. | காரம் | 237 |
| 59. | அட்டை விடல் | 240 |
| 60. | அறுவை | 243 |
| 61. | கொம்பு கட்டல் | 247 |
| 62. | உறிஞ்சல் | 248 |
| 63. | குருதி வாங்கல் | 249 |
| 64. | பீச்சு | 252 |

# சுரசம்

'ஐந்துறுப்புகளி லுண்டாம் அறலதைச்
சூடு பண்ணி தந்திடல் சுரசமாகும்"

- தே.தரு.

இது உலராத இலை, வேர், பட்டை, பூ, காய் போன்றவற்றை இடித்து அல்லது அரைத்துப் பிழிந்த சாற்றையாவது, உலர்ந்த சரக்குகளை நீர் அல்லது உரிய நீர்ப்பொருள் விட்டரைத்துப் பிழிந்த நீரையாவது ஒரு புதிய மட்பாண்டத்திலிட்டுக் கொதிக்க வைத்து எடுத்துக் கொள்வது.

இம்முறை 'முறித்தல்" என்றும் வழக்கில் பேசப்படும்.

மிகக்குறைந்த அளவாக இருப்பின் செங்கல்லைச் சுட்டு சாற்றிலிட்டும் அதைச் சூடு செய்து கொள்ளலாம்.

உள்மருத்துவ முறையில்

சுரசத்தின் பொதுவான அளவு — 140 மி.லி ஆயினும் பாலர், சிறுவர்களுக்கு அளவுகளை மருத்துவன் நிர்மாணித்துக்கொள்ள வேண்டும்.

| | | |
|---|---|---|
| மருந்தின் ஆயுட்காலம் | — | 3 மணி நேரம் |
| சீரணிக்கும் காலம் | — | 7 நாழிகை |

### நொச்சி சுரசம்

"மூட்டு நொச்சிப்பட்டை முருங்கைப்பட்டை
காட்டு மாவுலிங்கப் பட்டை வெண்ணியில்
ஆட்டு சார் பிழிந்தாறு சுரசத்தில்
கூட்டு சன்னி குதிக் தோடுங்கண்டிடே"

நொச்சிப்பட்டை, முருங்கைப்பட்டை, மாவிலங்கப் பட்டை இவற்றை சமனெடை எடுத்து வெந்நீர் விட்டரைத்து சாறு பிழிந்து சுரசம் செய்து கொடுக்க சன்னி தீரும்.

### பொடுதலை சுரசம்

"ஒருபிடி பொடுதலை யோர்கல் லுப்புடன்
இருவித மொன்றதாக விடித்துச் சாறு செய்
சிறுவித சட்டியிற் சிறுகச் செய் தயிர்
தருவித முண்டிடத் தணியு மாந்தமே" - பா.வா

ஒரு பிடி பொடுதலையை எடுத்து ஒரு கறியுப்புக்கல் சேர்த்து இடித்துச் சாறு பிழிந்து மண் சட்டியிலூற்றி சூடேற்றி கொடுக்க குழந்தைகட்கு காணும் மாந்தம் தீரும்

**கொத்தான் சுரசம்**

*கொத்தான்றனிலையிற்சாற்றிற் கொடிக்கழற் பருப்போடுள்ளி*
*உத்தமாகாணி நொச்சியுடன் சாறுகூட்டிக் காய்ச்சி*
*மெத்தனவோர்சி றங்கைவிதிப்படி தேன்விட்டுண்ணக்*
*கத்திய சூலைகுன்மங் குடகரி கடிதிற் போமே.*

*- ப.ரா.சே*

*கொத்தான் இலைச்சாறு, வேலிப்பருத்திச்சாறு, நொச்சியிலைச்சாறு, கழற்சிப்பருப்பு, உரித்தபூண்டு, சம எடை எடுத்து அரைத்துச்சேர்த்து ஒரு சட்டியிலிட்டு காய்ச்சி எடுத்து, 50 மி.லி வீதம் தேன் சேர்த்துக்கொடுக்க சூலை, குன்மம், குடல் வாதம் தீரும்.*

# **சாறு**

**சாறு வகைகள்**

*"தனி வெந்தை நீரே சாறாகும்"*

அப்பொழுதே கொண்டு வந்த மூலிகைகளை இடித்தாகிலும், அரைத்தாகிலும், பிட்டவியல் செய்தாகிலும், துருவியாகிலும், அனலில் வாட்டியாகிலும், சுட்டாகிலும், துவர்ப்பு சேர்த்தாகிலும் பிழிந்து எடுத்துக்கொள்வது சாறு அல்லது இரசம் என்பதாம்.

இது உள் மருத்துவத்தில் நேரடி மருந்தாகவும், பிற மருந்துகள் செய்யும் பொருட்டும் தயாரித்துக் கொள்வது.

| | | |
|---|---|---|
| இடித்துச்சாறு பிழிதல் | (உ.ம்) | கரிசாலை, இஞ்சி |
| அரைத்துச் சாறுபிழிதல் | " | தேங்காய் |
| பிட்டவியல் செய்து சாறு பிழிதல் | " | துளசி |
| துருவிப் பிழிதல் | " | புங்கன்வேர், வெண்பூசணி |
| அனலில் வாட்டிப்பிழிதல் | " | மருள், பூண்டு, வெற்றிலை |
| அனலில் சுட்டுப்பிழிதல் | | தும்மட்டி |
| துவர்ப்பி சேர்த்துப் பிழிதல் | " | கற்றாழை, வாழை |

உள் மருத்துவ முறையில் சாற்றின் பொதுவான அளவு — 140 மி.லி.

இருப்பினும் நோய், நோயாளன் வன்மை, வயது, பருவகாலம் இவற்றை நிர்ணயித்து கூட்டியோ குறைத்தோ கொடுக்க வேண்டும்.சில சாறு முறைகளில் சேர்க்கக் கூடிய மூலிகைச் சரக்குகட்கு அளவுகள் கொடுக்கப்படாத நிலையில் மருத்துவன் அளவுகளை நிர்ணயித்துக்கொள்ளவேண்டும்.

ஒரு நாளைக்கு அருந்தும் முறை ஒருவேளை மட்டுமேயாகும். ஆயினும் நோய்கட்கு ஏற்ப காலஅளவுகள் கொடுக்கப்பட்டிருப்பின் அவ்வாறே கொடுக்க வேண்டும்.

மருந்தின் ஆயுட்காலம் — 3 மணி நேரம்

உள் மருந்தாக இருப்பினும், மற்றைய மருந்துகள் செய்யுங்கால் எடுத்துக் கொள்வதாக இருப்பினும் 3 மணி நேரத்துள் பயன்படுத்திக் கொள்ள வேண்டும்.

மருந்தின் செரிப்புக் காலம் — 2½ மணி நேரம்

**தென்னம்பாளை சாறு**

*"நீரடா வினத் தென்னையின் பாளையைப்*
*பாரடா மடல் போக்கி மலரிடிச்*

சாறடா சொல்லாழாக்குச் சமன் தயிர்
நேரடா பழம்நீர் பலமேத்திடே"

"ஏர்த்திடாய் தினமு மிருநேரமும்
சேர்த்திடாய் ரெத்தஞ் சீழ் வயிற்றுக் கடுப்பு
பார்த்திடாய் பெரும்பாடுட நீர் அருந்
தாரத்திடாய்ப் புளியாகா தறிந்திடே" - ப.ரா.சே

தென்னம்பாளையை எடுத்து மடல் நீக்கி பூவை மட்டும் இடித்துச் சாறெடுத்து அதில் ஒரு ஆழாக்கு (200 மி.லி.) எடுத்து சம அளவு பசுந்தயிர், 35 மி.லி. எலுமிச்சம் பழரசம் சேர்த்து இருவேளை குடிக்க, வயிற்றுக்கடுப்பு, கிராணி, பெரும்பாடு தீரும். புளி நீக்க வேண்டும்.

**பிரண்டை சாறு**

"நாட்டிடும் பிரண்டை நறுக்கொண்டு தான்
காட்டிடும் பிழிந் தாங்கு ரசந்தன்னை
போட்டிடு மிருபோது மோரைந்து நாள்
கூட்டிடுஞ் சளி கோழை விட்டோடுமே" - பா.வா

பிரண்டையை நறுக்கி அனலில் வாட்டிப் பிழிந்து சாற்றை இரு வேளை ஐந்து நாள் கொடுக்க கோழைக் கட்டு தீரும்.

**அத்திப்பட்டை சாறு**

"இடித்து அத்திப்பட்டை வுடவிசையும் கதளிப்பழம் பிசைந்து
வடித்த நீறும் நெல்லிக்காய் வறுத்துஞ் சாறுதேன் கூட்டி
பிடித்து வறுத்த சீரகமும் பிரியமுடன் சர்க்கரை கலந்து
குடித்த போதே பித்தசுரம் பேசாதோடிப் போய் விடுமே" - தே.கு

அத்திப்பட்டை இடித்து சூரணமாக்கி அத்துடன் கதலி வாழைப் பழத்தை சேர்த்து பிசைந்த நீரை வடிகட்டி சம அளவு நெல்லிக்காய் சாறு, தேன் கூட்டி, வறுத்து, பொடித்த சீரகமும், சர்க்கரையும் கலந்து குடிக்க பித்த சுரம் தீரும்

**தென்னம்பாளைச் சாறு**

"தேங்காய்ப் பாளை மொட்டு முத்தஞ் சிதற விடித்துத் திறமாக
போக்கு முலைமேற்ப் புட்டாக்கிப் பிழிந்து தேனுமுட் கலந்து
வேங்குமே புகழுமதிவிட யமிலவம்பிசினு விட்டருந்த
பங்கப்படுத்து மதிசார சுரத்தைப் போக்குஞ் சொல்வோம்"

- ப.ரா.சே

தென்னம் பாளை மடல் நீக்கி, பூவை மட்டும் சேகரித்து முத்தக்காசு சேர்த்து இடித்து ஒரு பாண்டத்தில் நீர் விட்டு வேடுகட்டி அதன்மேல் இடித்த சரக்குகளை பரப்பி மேற்சட்டி கொண்டு முடி பிட்டவியல் செய்து சாறு பிழிந்து அத்துடன் அதிவிடயம், இலவம் பிசினும் பொடித்து கலந்து குடிக்க அதிசார சுரம் போகும்.

அதிவிடயம், இலவம் பிசின்,அளவுகள் கொடுக்கப்படவில்லையாதலால் மருத்துவன் நோயின் வன்மைக்கேற்ப மருத்துவன் நிர்மாணித்துக்கொள்ள வேண்டும்.

**வாழைப்பூச்சாறு**

*"மீறிய பேதிக்குள் மிக வாழைப்பூவு புளி*
*யாரை பிட்டாக்கு மதுவில்"* - *வை.கு*

வாழைப்பூ, புளியாரை சமவெடை இடித்து பிட்டாக அவித்து பிழித்து சாறு எடுத்து தேன் கூட்டிக் கொடுக்க கழிச்சல் தீரும்.

**அத்திச் சாறு**

"சேரு மத்திப் பிஞ்சதனைத் தேங்காய்ப் பால் விட்டிடித் ததன்பின்
சாருஞ் சாறு பிழிந்தெடுத்துக் குந்துருக்கம் பொடி தூவி
நீரு மாறு நாட்குடித்து நேருமுப்புப் புளிமறக்கில்
தீருஞ்சீயுங் கடுப்பெரிவுத் தேற்கு................"

- *ப.ரா.சே & மே.ரோ.நி*

அத்திப்பிஞ்சை தேங்காய் பால் விட்டு இடித்துச் சாறு பிழிந்து வெள்ளை குத்திரிக்கம் பொடி கூட்டி கொடுக்க நீர் எரிச்சல், கடுப்பு, சீழ்மேகம் ஆகியவை தீரும்.

# குடிநீர்

## குடிநீர் விதிமுறை

*"மருந்துநீர் குடிநீருண்ணீர் வழங்கிய கஷாயப் பேராம்"*

*வேராதி யெட்டாய் விரிபதார்த்தங் களையுந்*
*தாரார் மணியுபரசங் களையுஞ் — சேரா*
*விடியிடி நுண்டுகளா யிடித்துக் குடிநீர்*
*வடிவிடி யெனுஞ் சிலமதம்*

*— தே.தை.வ.சு. —21*

வேர் முதல் வித்து பரியந்தமுள்ள எட்டுவித திரவியங்களையும், நவரத்தினங்கள், உபரசங்களையும் நுண்ணிய துகளாயிடித்து ஒன்றுறச் சேர்த்து நீர் சேர்த்துக் காய்ச்சி வடித்துக் கொள்வதே குடிநீர்.

குடிநீர் தயாரிக்கும் முறையைக் கொண்டு ஊறல்குடிநீர், காய்ச்சி வடித்துக் கொள்ளும் குடிநீர் என இருவகைப்படும்.

சரக்குகளை உரிய நீர்ப்பொருளில் ஊறவைத்து வடிகட்டி எடுத்துக்கொள்வது ஊறல் குடிநீர் காய்ச்சி வடித்துக் கொள்ளும் குடிநீர் முறையில் சரக்குகளை இடித்து உரிய நீர்பொருள்விட்டு உரிய அளவு முறைப்படி காய்ச்சி குறுக்கி வடித்துக் கொள்வது எனவும், சரக்குகளைச் சட்டியிலிட்டு கருக்கிப் பின் முறைப்படி, நீர்விட்டுக் காய்ச்சி வடித்துக்கொள்வது எனவும் இருமுறையாகப் பிரியும்.

மேலும் காய்ச்சி வடிக்கும் குடிநீரானது சேர்க்கப்படும் சரக்குகளைக் கொண்டு அடைக்குடிநீர் எனவும், தொகைக் குடிநீர் எனவும் பிரியும்.

உ.ம். மண்டூராதி அடைக் குடிநீர்

## தசமூலக்குடிநீர்

தண்ணீரில் மிதக்கப்படும் பொருட்களாகிய கொம்பரக்கு, பலவிதப் பிசின், சிறிய இதழ்களை உடைய பூக்கள், சிறுசிறு வித்துக்கள், மாவு வகைகள் ஆகியவற்றைக் கிழி கட்டி காய்ச்ச வேண்டும்.

மாமிசம், பட்டை இலை, காய், பழம், தானியம் இவைகளைத் தனித்தனியே காய்ச்சி எடுத்துக்கொள்ள வேண்டும் என்பதாம்.

மரம், செடி, கொடி, புல் இவைகளின் வயிரமுள்ள கட்டை, வேர் முதலியவைகளை நைய இடித்து நீரில் ஊற வைத்துக் காய்ச்ச வேண்டும் என்பதாம்.

அடைக்குடிநீர், தொகைக் குடிநீர் ஆகியவற்றில் சரக்குகளைத் தனித்தனியே காய்ச்சக் கூடாது.

### குடிநீர் உட்கொள்ளும் விதி

"அடை கஷாயத்தி னளவுநாள் மூன்றுதர மொருநாள்
இடு கஷாயத்தி னளவிரு வேளையா மியம்பின்
படியிலெவ்வொரு வேளையு மடுவதே பாகம்
அடுகையோர்ப்பு யட்டமத்தொன்றதா வருக்கல்!" - சு.ஆ.பொ.ல

1. அடைக் குடிநீர் ஒருநாளைக்கு மூன்று வேளையும், மற்றைய காய்ச்சிவடிக்கும் குடிநீர் இருவேளையும் கொள்ளத்தக்கது.

2. ஒவ்வொரு வேளையும் புதியதாக காய்ச்சிக் கொள்வதே உரிய பாகமாகும்

3. எட்டில் ஒரு பாகமாக குறுக்கிக் கொள்வதே பாகம்.

குடிநீரின் சீரணக் காலம் 3 நாழிகை

ஆயுட்காலம் 3 மணி நேரம்.

### ஊறல் குடிநீர்

ஆதொண்டை குடிநீர்

"ஆடுமுன்னே விட்டோடு மாதொண்டை வேர் கபித்த
வேரோடு யிருத்த முறு புறணி — பாடலப்பூ
வைத்தது கால் மோரிற் வைத்திரு நாளட்டுணவே
பித்த சுர மென்று வந்த பேய்" — தே.வெ.

ஆதொண்டை வேர், விளா வேர், துளசிப்பட்டை, பாதிரிப்பூ வகைக்கு 10 கிராம் வீதம் எடுத்து இடித்துக்கொண்டு பசு மோரில் இரு நாள் ஊற வைத்துக்கொள்ள பித்த சுரம் தீரும்.

### அசைக் குடிநீர்

திறமான இளநீரும் படிதான் மூன்று
ஆகுமே எலுமிச்சம்பழச் சார் நாழி
அப்பனே சுண்ணநீர்த் தெளியுதானும்
ஒருமே படியரைதாளந்து வாரு
இகையான குமரிச்சார் பலந்தானாறு
வீருமே சீரகமும் பலந்தானொன்று
விதமான ஏலமரைப் பலந்தான் போடே
போடே நீ ஏலமதைப் பொடித்துப் போட்டு
பொற்கமுடன் புதுச் சட்டி தன்னிற்சேர்த்து
நாடேநீ மணலிட்டு ஈரஞ்செய்து

நாயகனேஇதுமேலேசட்டிவைத்து
கூடேநீ யீரச்சீலை யதனால் மூடி
குணமாக வைத்திரு நீபகற்காலந் தான்
காணோடுநீ ராக்காலம் பனியில் வைத்து
சார்வாக மண்டலமுங் கால்தான் கொள்ள
கொள்ளவே கால்படி தா னந்திசந்தி
குணமாகக் குமரிச்சார் பலமுங்காலு
உள்ளே நீகொண்டு வா இந்தப்பாகம்
உத்தமனே நீரெரிவு ரத்தம் வெள்ளை
தன்னே நீயுள் ளெரிவுங் கடுப்புந் தீரும்
தயவில்லா காங்கையது தணியும்பாரு
அன்னேநீபோகருட கடாட்சத்தாலே
அடைவாகப் புலிப்பாணி பாடினேனே. - பு.வை.500

இளநீர் 3.9 லிட் (3 படி) பழச்சாறு 1.3 லிட் (1 படி), சுண்ணநீர்தெளிவு 325 மி.லிட் (ரு படி), குமரிச்சாறு 210 மி.லிட், சீரகம் 35 கிராம், ஏலம் 17.5எடுத்து,சீரகத்தையும், ஏலத்தையும் பொடித்து அனைத்து சரக்குகளையும் ஒரு புதுச்சட்டியிலிட்டு ஒரு இடத்தில் மணலிட்டு அதில் நீர் ஊற்றி ஈரமாக்கி அதில் மேற்படி சட்டியை வைத்து ஈரச்சீலையை மூடி, இரவில் பனியில் வைத்து மறுநாள் 500 மி.லி. வீதம் 2 வேளை காலை, மாலை 1 மண்டலம் உட்கொள்ள வேண்டும்.

நீரெரிச்சல், வெள்ளை, நீரில் ரத்தம் வீழ்தல், நீர்ப்புழைபுண் தீரும்.

**பூசணிக்குடிநீர்**

நீற்றுப்பூசணிப்பழத்தைநேரிதாய்க்கீறியுள்ளே
தோற்றிய குடலைநீக்கிச் சொல்லியவாநெய்நாழி
ஏற்ற நற்றேனு நாழியினித்திடு சீனிநாழி
சாற்றியபேயன்வாழை தரும்பழமிருபதோடே
சேர்த்ததில் வைக்கநீராகுமனு தினமும்கலக்கியுண்ணச்
சூர்த்திடு பிரமியங்கள் சுற்றுறு தலைசுழற்ச்சி
ஆர்த்திடு பித்தங் கைகாலனல்கடுப் பெரிப்புத்தாகம்
பார்த்தறி போகுமென்று பகர்ந்தனர் முனிவரம்மா. - ப.ரா.சே

வெண்பூசணிப்பழத்தை எடுத்து மேற்புறம் கீறி அப்பகுதியை நீக்கி உள் உள்ள குடல் போன்ற பகுதியை முற்றிலும் நீக்கி விட்டு அதனுள் 2லி தேன், 2 கிலோ சர்க்கரை, 20 பேயன்வாழைப்பழம் சேர்த்துக்கலந்து வைக்கவேண்டும். அவை அனைத்தும் நன்கு ஊறி நீராகும். அதன் பின் அந்நீரை 100 மி.லி முதல் 200மி.லி வரை தினமும் கலக்கிக்கொடுக்க வேண்டும்.

*தீரும்நோய்கள்: பிரமியம், தலைசுற்றல், பித்தம், உட்டிணம், கடுப்பு, கைகால் காந்தல், தாகம் தீரும்.*

### எலுமிச்சம் பழ ஊறல் குடிநீர்

*"வல்லி நல்லா யெலுமிச்சம் பழத்தின் சாறு*
*வடித்துரியோடதி மதுரங் கழஞ்சு கூட்டிச்*
*சொல்லியதோர் புதுச்சட்டி தன்னிலே வார்த்துத்*
*தூயபனி தன்னிலே தூக்கிவைத்தே*
*எல்லையிலா மார்த்தாண்டனுதிக்கு முன்னே*
*யிணங்கிய சீனிகூட்டி யருந்துவீரேல்*
*புல்லிய பித்தங்களெல்லாஞ் சுத்தமாகப்*
*போகவழி தேடுமெனப் புகன்றாரன்றே"*

*500 மி.லி. பழச்சாற்றில் 8 கிராம் அதிமதுரத்தூள் சேர்த்து புதுச்சட்டியிலிட்டு, இரவில் பனியில் வைத்து மறுநாள் உதயத்திற்கு முன் வேண்டிய அளவு கரும்பு சர்க்கரை கூட்டி அருந்த பித்தம் தீரும்.*

### காய்ச்சி வடிக்கும் குடிநீர்

*மூளை சுரக் குடிநீர்*

*'கடுகு நொச்சி மஞ்சளுடன் காண்பார்க்குரிய வெட்பாலை*
*முடுகு நாவற் பூவுடனே மூன்று கடுகுஞ் சமநிலையாய்*
*திடமார் புனலீர் நாழியினிற் சிறக்கக் காய்ச்சிக் குடிப்பீரால்*
*கொடிய மூளை தனில் வெப்புக் குடிபோமென்று கூறினரே"*

*கடுகு, நொச்சி, மஞ்சள், வெட்பாலை, நாவல்பூ திரிகடுகு சம அளவு எடுத்து 1 படி நீர் விட்டு 1/8 பங்காக வற்றவைத்துக் கொள்ள வேண்டும்.*

*தீரும் நோய்கள்: மூளை சுரம்.*

### காக்கட்டான் குடிநீர்

*"காக்கட்டான் வேர் சீந்திலுடன் கடுக்காய் கடுகுரோகினியும்*
*ஆக்குமாகும் வேர்க்கொம்பு மமருங் களிப்பாக்குடன் கூட்டித்*
*தாக்குசீர் நாழி நீர் விட்டுத் தனியக் காய்ச்சிக் கொள்வீராய்*
*ஏக்கு மசதி சுரங்களுடனே முதிரந்தனிற் சுரமும்"*

*காக்கட்டான் வேர், சீந்தில், கடுக்காய், கடுகுரோகினி, சுக்கு, களிப்பாக்கு சம எடை எடுத்து (1.3 லிட்) (1 படி) நீர் விட்டு 1-8 பங்காக வற்றவைத்துக் கொடுக்க உதிரத்தைப் பற்றிவரும் சுரம், அசதி தீரும்.*

**மாம்பட்டைக் குடிநீர்**

*"கனமின்றி நீரிறங்கக் கேளு*
*விள்ளக்கேள் மாம்பட்டை யாவிரையின் பட்டை*
*வெள்வேல்தோல் வேப்பந்தோலிவை நால்வேராய்*
*கள்ளக்கேளிடித் தொரு பாண்டத்திட்டு அப்பனே சலம் விட்டூற வைத்து*
*துள்ளக்கேள் குறுக்கத் தினமுழக் கருந்துயர் தீரும்."* - தே.வை

*மாம்பட்டை, ஆவிரையின்பட்டை, வெள்வேலம்பட்டை, வேப்பம்பட்டை சம அளவாக எடுத்து இடித்து பாண்டத்திட்டு 8 பங்கு நீர் விட்டு ஊறவைத்து 1/8 பங்காக வற்றவைத்து எடுத்துக் கொள்ள வேண்டும்.*

*அளவு:* 200 மி.லி. வீதம் இருவேளை.

*தீரும் நோய்:* நீர்கட்டு நீங்கும், சிறு நீர் நன்கு இழியும்.

**கடுக்காய் குடிநீர்**

*ஆம்பிரம் பிண்டி யரிதகி யிலாக் கொட்டை*
*காம்பீரவேர்கள் கஷாயமாய்த் — தாம்பிறிவு*
*கால்கால்கால் கால் பங்கு காய்ச்சியுற மண்டலத்திற்*
*கால் கால் கால் கால்பங்கு கால்.* - தே.வெ

*கடுக்காய், இஞ்சி, முருக்கு ஆகியவற்றின் வேர்கள் ஒவ்வொரு வகைக்கும் கால் பலம் (10 கிராம்) வீதம் எடுத்துக்கூட்டி 8பங்கு நீர்விட்டுக் காய்ச்சி காற்பங்காகச் சுண்டக் காய்ந்த நீரையுண்ண ஒருமண்டலத்தில் கால் முடம் நீங்கி விடும் என்பதாம்.*

**மருக்காரை குடிநீர் (கொப்புளிக் குடிநீர்)**

*மருக்காரை சுக்கு மருதந்தோல் வெள்வேல்*
*பெருக்காவாரை பிரம்போடேழும் நறுக்கி*
*நாலிலொன்றாய்க் காய்ச்சி நாலுநாள் கொப்புளிக்கப்*
*பாலன் பல்லாம் கிழவன் பல்* - தே.கு

*மருக்காரை, சுக்கு, மருதம்பட்டை, வெள்வேலம்பட்டை, எருக்கு, ஆவாரை, பிரம்பு சம அளவு எடுத்து சிதைத்து 8 பங்கு நீர்விட்டு 1/4 பங்காக குறுக்கி 4 நாட்கள் கொப்பளிக்க பல்லசைவு நீங்கும்.*

**கருவேற் குடிநீர்**

*செம்மையொடு பன்னோய் போய்த் தின்பல்லாங் கந்திகறுத்*
*தம் மயில வன்னா யுதத்ததளர்க் — கம்மிவையொன்*
*றாக்குங் குடிநீரை யஞ்சு நாளுண்ண ரவி*
*போக்கும் பனியிருள்கள் போல்.* - தே.வெ

களிப்பாக்குத்தூள், கருவேலம்பட்டைத்தூள், எருக்கம்பட்டைத்தூள் இவற்றை சேர்த்து குடிநீராக்கி 5 நாட்கள் கொப்பளிக்க பல்நோய் தீரும்

**அதிவிடய குடிநீர்**

முகமாம் பிஞ்சதி விடையம் முத்தக்காசு பெருமரத்தோல்
தகமாஞ் சுக்கு விளாங்காயும் சமனா யொன்றாயோர் கழஞ்சு
உகையாய்க் கூட்டியிரு நாழியுழக்காய் காய்ச்சி வைத்தருந்த
பகையாய் வந்த வதிசார சுரம் போம் பாரீர் பாரீரே.

மாம்பிஞ்சு, அதிவிடயம், முத்தக்காசு, பெருமரத்தோல், சுக்கு, விளாங்காய் வகைக்கு 5.1 கி சேர்த்து இடித்து 2.6 லிட் நீர் விட்டு 1/8 பங்காய் காய்ச்சி கொடுக்க அதிசாரசுரம் போம்.

## III கருக்கு குடிநீர்

**வசம்பாதி கருக்கு குடிநீர்**

சேர்க்கும் வாந்தி பேதி வரின்
நிறமாய் மருந்து தனைக் கேளும்
ஏற்கையுடனே வசம்பு மஞ்சள்
இதமாய்ச் சுக்கு மிளகுடனே
பார்க்கக் கொஞ்சங் கொஞ்சமதாய்
பரிவாயரைத்து யெடுத்து வைத்துத்
தீர்க்கமுடனே பழந்துணியிற்
திறமாயொரு பக்கந்தான் தடவே

தடவிப் பின்பு மறுபக்கந்
தானே சுண்ணந்தான் தடவி
அடமாய்த் துணியைக் காய வைத்து
அன்பாயெடுத்து சட்டியிட்டு
நடமாய் வசம்பொன்று மஞ்சளொன்றும்
நறுக்கி அத்துடன் தான் போட்டு
திடமாய் வறுத்துக் கறுக்கி விட்டு
சேருமிரண்டு படிநீரே

இரண்டு படிநீர் தானுமிட்டு
இதமாய்க் காற்படி யாய்க் காய்ச்சி
திரண்ட காற்படி தண்ணீரை

தீர்க்க முடனே தானருந்து
முரண்டாய் வந்த பேதியுந்தான்
முடிவாய் நின்று போய் விடுமச்
சுரண்டா மிந்தக் கியாழமதைச்
சுகமாய்க் கொடுக்க நலம்பாரே. - ப.ரா.சே

வசம்பு, மஞ்சள், சுக்கு, மிளகு சமஅளவு எடுத்து நன்கு மைபோல் அரைத்து சீலையில் ஒருபக்கம் தடவி மறுபக்கம் சுண்ணாம்பை நீர் விட்டரைத்துத் தடவி நன்கு உலர்த்தி அத்துடன் மஞ்சள் ஒன்று, வசம்பு ஒன்று கூட்டி சேர்த்து சட்டியிலிட்டு கருக்கி 2.6 லிட் நீர்விட்டு எரித்து 325 மி,லியாக வற்ற வைத்துக் கொடுக்க வாந்திபேதி தீரும்.

**ஏலக் குடிநீர்**

.................... நோயினாலே யளவறு முழலை தாகம்
பெருத்திடு மதனை நீக்கப் பேசுதுச் சிற்றேலநற்
திருத்தமாந் துளிரே நல்ல செவ்வகத்திப் பூவும் வில்வத்
துரதிடு கனியினல்லவுட் சதையதினிலிடே
அரசு தன் முகையீதெல்லா மணவதாய்ச் சேர்த்திடித்து
வருமிளவறுப்பதாக வறுத்த நற்குடிநீர் காய்ச்சித்
தெளிவுற வடிக் கெடுத்துத் தேன்துளி கற்கண்டோடு
கடுகல்லிக் காரமல்லாற் சர்க்கரை சேர்ந்தருந்தே. - ப.ரா.சே

ஏலம், மாந்தளிர், செவ்வகத்திப்பூ, வில்வபழச்சதை, அரசுமொக்கு சேர்த்து இடித்து இளவறுப்பாக வறுத்து 8 பங்கு நீர்விட்டு 1/8 பங்காக வற்றவைத்து சிறிதுதேன், கற்கண்டு அல்லது சர்க்கரை சேர்த்துக் கொடுக்க பலவகை நோயினால் ஏற்பட்ட உழலை, தாகம் தீரும்.

**விளாஇலை கருக்குக்குடிநீர்**

பாரேதான் விளாவிலையுமாடாதோடை
பாங்கான அரசினுடக்கொழுந்துமப்பா
சேரேதான் வகைவகைக்கு பிடிதானொன்று
சிறப்பான மணலுமரைப்படிதான் போட்டு
கூரேதான் முந்திரிக்காய் மதுரந்தானும்
குணமாக வகைவகைக்கு விராகனொன்று
வீரேதான் இவையெல்லாம் கருகுமட்டும்
விதமாகத் தான்வார்த்து தண்ணீர் வாரே

*வார்த்தப்பா தானெரித்துக் கருகக் காய்ச்சி*
*வடிகட்டி தான்கொடுப்பாய் தாகந்தீரும்*
*கோர்த்தப்பா யிந்தவித மூன்றுநாளுங்*
*கொடுத்திடவே தாகமென்ற தெல்லாந்தீரும்*
*பார்த்தப்பா சுரதாக முஷ்ணதாகம்*
*பரிவான அந்திரதாகம் பரவைதாகம்*
*போர்த்தப்பா குடிநீரை குடித்தபோது*
*பொங்கமுடன் தீருமடா திண்ணந்தானே.* - *பு.வை.500*

*விளா இலை, ஆடாதோடை இலை, அரசமரத்துக்கொழுந்து இலை ஆகிய இம்மூன்றும் வகைக்கு ஒரு பிடி எடுத்து, ஆற்றுமணல் 500 கிராம், உலர்ந்த திராட்சை, அதிமதுரம் வகைக்கு 5.1 கிராம் எடுத்து, அனைத்தையும் ஒன்றுசேர்த்து சட்டியிலிட்டு கருகவறுத்து எட்டு பங்கு நீர்விட்டுக் காய்ச்சி எட்டில் ஒருபங்காக வற்றவைத்து எடுத்துக் கொள்ளவேண்டும்.*

*அளவு - 200 மிலிமுதல் தேவைக்கு ஏற்ப 3 நாள் வரை*

*தீரும்நோய்கள் - சுரதாகம், உஷ்ணதாகம், அந்திரதாகம் தீரும்.*

**கருணை கருக்கு குடிநீர்**

*காறாக் கருணையிலை கண்டு பாறங்கியுப்பு*
*நீறாக்கி யக்கணமே நீர்விட்டே — ஆறுமுன்னே*
*வெண்ணையுங்கற் கண்டுமிட்டு மெய்யா யருந்தவறு*
*முண்ணைபல மூலமறுமோர்.* - *தே.வெ*

*காறாக்கருணை இலை, கண்டுபாறங்கி, உப்பு சட்டியிலிட்டு வறுத்து சரக்கின் எடைக்கு எட்டு பங்கு நீர்விட்டு கால் பங்காக குறுக்கி வடிகட்டி வெண்ணெய்யும், கற்கண்டும் கூட்டிக் கொடுக்க மூல நோய் தீரும்.*

# கற்கம்

*"வந்திடு சரக்கைக் கல்லில் கல்லுற வரைத்தல் கற்கம்"*

*உலர்ந்த, உலராத வேர் முதலாகிய 8 வகைச் சரக்குகளையும், தாதுக்களையும், உரிய நீர்ப்பொருளிட்டு கல்லொடு கல்லாய் ஒட்டும்படி அரைத்து எடுத்துக்கொள்வதாம்.*

*"....மட்டிழை கற்கஞ் சிறுக்கவே"*
*- தே.தை.வ.சு — பக்.24*

*அரைக்கும் முறையில் கற்கம் அளவில் சிறியதாக குறுகிக்காணும் வரை அரைக்க வேண்டும் என்பதாம்.*

*கற்கத்தின் பொதுவான அளவு கூறுமிடத்து காற்பலம் என்பதால் உரிய அளவு 10 கிராம் உபயோகப்படுத்துங்கால் 12 பங்கு (120) கிராம் திரவ திரவியத்தையும் கூட்டி உபயோகிக்க வேண்டும். திரவதிரவியம் என பொதுவாகக் குறிப்பிட்டுள்ளதால் அரைப்பதற்கு எந்த திரவியம் பயன்படுத்தப்பட்டதோ அதையே கொள்ள வேண்டும் என்பதாம்.*

*கற்கம் சீரணக்காலம் 3 மணி நேரம் (1 சாமம்) என்பதாம்.*

*இதன் ஆயுட்காலம் 3 மணி நேரம் (1 சாமம்) ஆகும்.*

**கரந்தைக் கற்கம்**

உண்ணப்பா சிவகரந்தை விஷ்ணுகாந்தி
உத்தமனே அரைத்து முள்ளிக்காய் வீதம்
பண்ணப்பா கொள் மூலமுளைகளெல்லாம்
பதறியே யுதிர்ந்துவிடுங் கண்டுபாரு
நண்ணப்பா பத்தியங்களிதற்கோயில்லை
நாயகனேயீராரு நாளுக்குள்ளே
திண்ணப்பா தீர்ந்துவிடும் கண்டுபாரு
திறமான போகருட கடாட்சந்தானே. *- பு.வை.500*

சிவகரந்தை, விஷ்ணுகாந்தி சமூலம் எடுத்துக்கழுவி நன்குஅரைத்து எடுத்துக் கொள்ளவேண்டும்.

*அளவு: 10 கிராம் 12 நாட்கள்*

*அனுபானம்: நீர்*

*தீரும்நோய்: மூல முளை*

## கடுக்காய் கற்கம்

*கடுக்களிசுக் கிந்துகரி கால்மதங் கோடங்கை*
*கடுக்கணு நீர் வார்த்தரைத்துக் கொடுக்க*
*வளரு மிளமுலை மாதே வயிறு*
*களகுள களகுள காண். - தே.வா*

*கடுக்காய் நான்கு பங்கு,களிப்பாக்கு மூன்று பங்கு, சுக்கு இரண்டு பங்கு, இந்துப்பு ஒரு பங்கு,எடுத்துப்பொடித்து நிசிநீர் விட்டரைத்து கற்கமாக்கி, நிசிநீர் விட்டுக் கரைத்துக் கொடுக்க மலக்கட்டு தீரும்.*

## பூவரசன் கற்கம்

*பார்த்து பூவரசன் பட்டையோர் பலம்*
*தேர்த்து நீராகாரத்தி லாழாக்குடன்*
*ஏர்த்து மூன்று நாளிவ்விதங் கொண்டிடில்*
*போர்த்து மேற்சொரி போமுடல் விட்டிடே. - ப.ரா.சே*

*பூவரசன் பட்டை ஒரு பலம் எடுத்து மேற்புறணி நீக்கி நன்கு அரைத்து 200 மி.லி நீராகாரத்தில் கரைத்து 3 நாட்கள் கொடுக்க சொரி சிரங்கு நீங்கி விடும்.*

## ஆலம் விழுது கற்கம்

*விட்டிடாலின் விழுது ஓர் பலம்*
*பட்டிடாவெருமைத் தயிரோர் பலம்*
*தட்டிடாய்ப் பழச் சாற் பலமே விடு*
*தொட்டிடா வயிற்றுக் கடுப்போமே.*

*ஆலம் விழுது 35 கிராம் எடுத்து எருமைத்தயிர் 35 கிராம் விட்டரைத்து 35 கிராம் பழச்சாற்றில் கரைத்துக் கொடுக்க வயிற்றுக் கடுப்பு தீரும்.*

## கடுக்காய் கற்கம்

*கார்த்துப் பொற்கடுக்காய் களிப்பாக்குடன்*
*சேர்த்திரண்டு சமனரைத் தேபலம்*
*ஓர்தது மூன்று நாளிவ்விதங் கொண்டிடில்*
*போர்த்துக் கீரிப்புழுப் போகுங் கொண்டிடே*

*பொற்கடுக்காய்த் தோல், களிப்பாக்கு சமஎடை எடுத்து அரைத்து கற்கமாக்கி (35 கி) (ஒரு பலம்) கற்கம் மூன்று நாட்கள் காலையில் கொடுத்து வர கீரிப்புழு போகும்.*

### முடக்கத்தான் கற்கம்

*கொண்டிடுமுடக் கொத்தானிடை பலம்*
*பூண்டிடும் வெள்ளைப் பூண்டரைப்பலம்*
*வெண்டிடு மரைத் திவ்வித மூன்று நாள்*
*கண்டிடுஞ்சிறு நீர்க் கட்டிறங்குமே.*

*முடக்கொத்தான் ஒரு பலம் (35 கிராம்), வெள்ளைப் பூண்டு அரை பலம் (17.5 கிராம்) இவற்றை அரைத்து 2 வேளை வீதம் மூன்று நாட்கள் கொடுக்க நீர்க்கட்டு நீங்கும்.*

### மருதிலை கற்கம்

*பாரும் பித்த வெடி வந்து நேர்ந்தால்*
*ஈரும் மருதுயிலையை யரைத்துமே*
*கூறுநற் பசும் பாலில் கலக்கியே*
*சோறுமுண்ட பின் சுகமாய் குடித்திடே தே.வை*

*பித்த வெடிப்பு கண்டால் மருது இலையை பசும்பாலில் விட்டு அரைத்து கற்கமாக்கி பாலிற் கலக்கி உணவிற்குப் பின் கொடுத்து வர தீரும்.*

### வெள்ளறுகு கற்கம்

*அரிந்திடாய் வெள்ளறுகு எடையோர் பலம்*
*பரிந்திடாமலே பாலுழக்காமதில்*
*தெரிந்திடாயரைத் தேயிருநேரமு*
*முடிந்திடாக் கொள்ளு மூவேழு நாளிதே*

*நாளடா கடும் பத்திய மண்டலம்*
*வேளடாப் பசுவின்பாலோடன்ன முண்*
*டாலடா மேகந்தப்பா தொழிந்திடு*
*மாளடா வெண்ணீருப்பும் புளித்தள்ளே.*

*வெள்ளறுகு 35 கிராம், 325 மிலி பசும்பால் எடுத்துக் கொள்ள வேண்டும். வெள்ளறுகை பால் விட்டரைத்து கற்கமாக்கி எஞ்சிய பாலில் கலக்கி நாள் ஒன்றுக்கு இரு வேளை வீதம் இருபத்தொரு நாட்கள் கொடுக்க மேகம் போகும்.*

*பத்தியம்: பாலும் சோறும் உண்டு புளி, போகம் நீக்க வேண்டும்.*

**கொடிக்கள்ளி கற்கம்**

*கட்டிடுங் கொடிக் கள்ளி துளிர்பலம்*
*கொட்டி டுநற் சலத்திலங்கோர் தினம்*
*விட்டிடுமரைத்தே யிரு நேரமும்*
*மட்டிடுமொரு மண்டலங் கொள்ளிதே*

*கொள்ளும் போது குறுகி பவுத்திரம்*
*முள்ளுஞ்சீழ் முளையடிவேரறுத்திடும்*
*தள்ளும்போது தவளைக் கட்டற்றிடும்.* - *ப.ரா.சே*

*கொடிக்கள்ளி துளிர் 35 கிராம் எடுத்து சுத்த நீர் விட்டு அரைத்து நீரில் கலக்கி காலை, மாலை இருவேளை ஒரு மண்டலம் கொடுக்க பவுத்திரம், சீழ்மூலம் தீரும்.*

**பூண்டு கற்கம்**

*உள்ளியுடன் மிளகுசுக்குக் கல்லுப்போடு*
*ஒருநூறு வெற்றிலையின் காம்புங்கட்டி*
*கள்ளியின்சார் விட்டரைத்துக் காய்ந்துவேப்பங்*
*காயளவு யிருநேரம் ஐந்தாகும்*
*கொள்ளுமிதை யிருபுறமு மிழுத்துக்கொண்டு*
*குத்தியிட்டு அடிவயிறு அண்டம்வீங்கில்*
*உள்ளங்கால் வலிவீக்கம் வாங்குமென்று*
*உண்ணவர்கள் சொல்வார்கள் உண்மைதானே* - *யா.வை.சி*

*வெள்ளைப்பூண்டு, மிளகு, சுக்கு கல்லுப்பு, சம அளவு வெற்றிலைக்காம்பு 100 எண்ணிக்கை, இவைகளை இலைக்கள்ளிச்சாறு விட்டரைத்து வேப்பங்காய் அளவு இருநேரம் 5 நாட்கள் உட்கொள்ள இருபுறமும் இழுத்துக்கொள்ளக்கூடிய அடிவயிற்றுவலி, அண்டவீக்கம், உள்ளங்கால் வலி வீக்கம் தீரும்.*

# உட்களி

*"முந்துறு முட் களிப்பை மூடலுட்களியா மென்னே"*

*- சி. ம. சு.*

இது உள்ளில் களிப்பும், மேலில் சிறு வறட்சியுமடைவதால் இதற்கு இப்பெயர் வழங்கலாயிற்று. இருப்பினும் புறமருந்து முறையில் "களி" என்றதொரு மருந்துமுறை கூறியிருப்பதால் உள்மருந்தாகக் கொள்ளும் களி என்ற வகையில் உட்களி என்றும் வழங்கப்படும்.

இது பச்சரிசியையாவது, புழுங்கலரிசியையாவது மாவரைத்தும், உளுந்தை மாவரைத்தும் உரிய மூலிகை சரக்குகளைச் சேர்த்து எள் நெய் அல்லது பசு நெய்விட்டுக் கிண்டி கைகளில் ஒட்டாப் பக்குவமாய்ச் செய்து எடுத்துக் கொள்வதாம்.

"உணவே மருந்து மருந்தே உணவு" என்ற அடிப்படையில் இம்மருந்து முறை பல வன்நோய்களுக்குரிய மருந்தாக நூற்களில் சொல்லப்பட்டுள்ளது.

இதன் ஆயுட்காலம் 3 மணி நேரம்.

**நன்னாரி உட்களி**

சொன்னதோர் சுளுக்கு வாதம் வரின்
சுகந்த நன்னாரி வேரொரு பலமும்
நன்னு மளிஞ்சிவே ரொரு பலமும்
நன்றாயிடித்து மாவாக்கி
சன்ன கருங்குருவை யரிசி
யரைப்படி தன்னைத் தான் திரித்துச்
சின்னமில்லாமற் பாலை விட்டுத்
திறமாங் களியாய்க் கிண்டிவிடே.

கண்டுங் களியைத் தானெடுத்துக்
கெடியாய்த் தின்றிடும் ஆறிடாமல்
கண்டொரு நாளைக் கிருவேளை
களியைத் தின்று பத்தியமாய்
விண்டே மூநாள் தலைமுழுகு
விலக்கும் புளியுப்பைத் தான்.

*- தே,வை*

நன்னாரி வேர் 35 கிராம், அழிஞ்சில்வேர் 35 கிராம் இரண்டையும் நன்கு உலர்த்தி இடித்துச் சலித்து சூரணமாக்கிக் கொள்ள வேண்டும். ½ படி கருங்குருவை

அரிசியை மாவாக்கி மேற்படி சூரணத்துடன் கலந்து பால் சேர்த்துக் கரைத்து களியாய் கிண்டி ஒரு நாளைக்கு 2 வேளைவீதம் 7 நாட்கள் சாப்பிட்டு 7-ம் நாள் தலை முழுக வேண்டும். களியை ஆறும்முன் சாப்பிட வேண்டும்.

தீரும் நோய்கள்: சுளுக்கு வாதம்

பத்தியம்: புளி, உப்பு

**முருங்கை வேர்ப்பட்டைகளி**

அண்ட வாதமிக வந்தால்
........................................................
........................................................
சிறக்கு முருங்கை வேர்ப்பட்டை
திறமாய் வாங்கி யரைத்துப் பின்பு
நிறக்கும் விளாங்காயளவாக
நேராயுருட்டி வைத்துக் கொண்டு
மறக்கும் கருங் குருவையரிசி
வகையா யரைப்படி மாவு செய்யே

மாவுடனே வேர்ப்பட்டை கற்கம்
வகையாய்ச் சேர்த்துக் களி கிண்டி
மேவும்படி சர்க்கரை தொட்டு
விளறுவாய் சுடச்சுட அருந்திவிடு
தாவு மூன்று நாளிந்தப் படி
சரியாய்க்கிண்டி தின்பாயேல்
நோவும் பறந்திடும் புளியுமுப்பும்
துண்மையாகவே தள்ளிவிடே. - தே.வை

முருங்கை வேர்ப்பட்டையை அரைத்து கற்கமாக்கி விளாங்காய் அளவு உருட்டி ஷு படி கருங்குருவை அரிசியை மாவாக்கி மேற்படி கற்கத்துடன் சேர்த்துக் கரைத்து களியாய் கிண்டி சர்க்கரை சேர்த்து சூடு ஆறவதற்கு முன் சாப்பிட கொடுக்க வேண்டும். இவ்விதம் 3 நாட்கள் கொடுக்க அண்டவாதம் தீரும்.

பத்தியம்: புளி, உப்பு

**விழுதிக் களி**

*எத்திது விழுதியிலை யோர் பலம்*
*செத்திது பச்சரிசியிற் கடுகுடன்*
*கத்திது யிடித்துக் களி கிண்டியுண்*
*மத்திது சந்து வாதமுமில்லையே. - தேவை*

*விழுதியிலை 35 கிராம், பச்சரிசி ௵ படி, கடுகு 35 கிராம் சேர்த்தரைத்து களி கிண்டி கொடுக்க சந்து வாதம் தீரும்.*

**பெருந்தும்பைக் களி**

*எட்டுமே பெருந்தும்பையிலை பறி*
*ஒட்டுமே யரிசியுடன் சேர்த்தரை*
*கட்டுமே யெள்ளெண்ணெய் களி கிண்டியுண்*
*மட்டுமேக மசையறுங் கண்டிடே. - தேவை*

பெருந்தும்பை இலை ஒரு பிடி பறித்து ¼ படி கருங்குருவை அரிசியுடன் சேர்த்தரைத்து எள் நெய் விட்டுக் கிண்டி கொடுக்க மேக நோய் நீங்கும்.

**அழிஞ்சிப்பட்டை களி**

*முகமாம் நடுக் வாதம் வந்தால்*
*முடிக்கு மருந்தை சொல்கிறேன்*
*தகமாம் அழிஞ்சிற் பட்டைதனை*
*நலமாய்ப் பலமொன்று மாவாக்கிச்*
*சுகமாய் கருங்குறுவையரிசி*
*சூழும்படி தான் மாவாக்கி*
*இகமாயி ரண்டுந்தான் சேர்த்து*
*இதமாய்ச் செய்ய வகை கேளே*

*செய்யுஞ் சட்டியில் பால் விட்டுத்*
*திறமாய் யடுப்பிற் காய வைத்து*
*உய்யும் படியாய் மாவிட்டு*
*உருளக் கிண்டியாறு முன்னே*
*நெய்யும் பனைவெல்லமும் கூட்டி*
*நேராயுண்ணக் கொடுத்துவிடு*
*வைய மதிக்க நடுக்கு வாதம்*
*மாறியோடிப் பறந்திடுமே*

அழிஞ்சிப்பட்டை 35 கிராம் இடித்து சூரணமாக்கி ¼ படி கருங்குருவை அரிசியை மாவாக்கி இரண்டையும் சேர்த்துக் கொள்ள வேண்டும். ஒரு சட்டியில் பால்விட்டு காய்ந்தவுடன் மாவை சிறிது சிறிதாக போட்டுக் கிண்டி ஆறும்முன் பனைவெல்லமும், நெய்யும் சேர்த்துக் கிண்டி எடுத்துக் கொண்டு உண்ணக் கொடுக்க நடுக்கு வாதம் தீரும்.

**தாளிக் களி**

*......................... நறுந் தாளிச் சாறு வாங்கி*
*அழகிய தோர் குறுவை நெல்லரிசி கூட்டி*
*யாட்டியே வெல்லமோடு ஆட்டு நெய்யே*
*நெய்விட்டுக் கிளறியே தின்னும் போது*
*நேராகக் கல்லடைப்பு வீக்கம் நீங்கும்* - *போ.700*

நறுந்தாளி சாறுவிட்டு கருங்குருவை அரிசியை ஆட்டி வெல்லம் சேர்த்து நெய்விட்டுக் கிண்டி கொடுக்க கல்லடைப்பு, வீக்கம் தீரும்.

# அடை

*"பல்வகை மாவரைத்துப்*
*பரப்பியே தட்டிக் கையால்*
*புல்லியே நெய்யைப் பூசிப்*
*போட்டது வெந்தெடுத்தல்*
*நல்லடை"*

*- சி.ம.சு.*

*உளுந்து போன்ற தானியங்களுடன் அரிசி, பல வகைச் சரக்குகளைச் சேர்த்து மாவாக்கிப் பிசைந்து, அடையாகத் தட்டி, நெய் தடவி சுட்டெடுத்தல்.*

*பிற்கால நூல்களில் இம்முறையே வறட்டி எனும் தலைப்பில் பேசப்பட்டுள்ளது.*

"உணவே மருந்து மருந்தே உணவு" *என்ற அடிப்படையில் இம்மருந்து முறையை* பிரயோகிக்க வேண்டும்.

இதன் சீரணக்காலம் — *20 நாழிகை*
இம்மருந்தின் ஆயுட்காலம் — *3 மணிநேரம்*

## காஞ்சொரி அடை

*மஞ்சள்கறி காஞ்சொறி மெய்வாய்த்த புழுக்கரிசி*
*அஞ்சுமா வாக்கி யடை தட்டி — யஞ்சு நாள்*
*கூட்டு யுணவறுமேற் கொண்ட சளியுடனே*
*மாறாது மீறு மிருமல்.*

- தே.வெ

*மஞ்சள், மிளகு, காஞ்சொறி வேர், பெருங்காயம், புழுங்கலரிசி ஐந்தையும் கூட்டி அரைத்து மாவாக்கி அடையாகத் தட்டி அளவாக ஐந்து நாட்கள் உண்ணக் கொடுக்க சளியுடன் சேர்ந்து வரும் மீறிய இருமல் நோய் நீங்கும்.*

## பிரண்டை அடை

*கருங்குருவை சேரொன்று பாணியிட்டுக்*
*கருத்துறவே ஊறவைத்து யெடுத்து அம்மி*
*நெருங்கயிட்டு நற்பிரண்டையிடையே சேர்த்து*
*நிலைபெறவே அரைத்து அடை பண்ணிப் பின்பு*

உருகவதை முத்தெண்ணெய் சட்டியிட்டு
உறுதி பெற முன்னடையை வேகவைத்துத்
திரும்பதிரி நாட்கொள்ள ஆணிமூலஞ்
சீரில்லா மூலமெல்லாத் தீருந்தானே - ப.ரா.சே

கருங்குருவை அரிசி — 280 கிராம் நீர்விட்டு ஊறவைத்து சமஅளவு பிரண்டை தண்டு சேர்த்து அரைத்து அடையாகத் தட்டி ஆமணக்கு நெய்யிலிட்டு சுட்டு 3 நாட்கள் கொள்ள அனைத்து மூலம் தீரும்.

**விராலி அடை**

பாடும் நீரினில் ரத்தம் விழுந்திடில்
கூடும் பச்சரிசியி னறுபலம்
சாடும் விராலி யிலையின் துளிர்கூட்டி
நாடு மூன்று நாள் நயந்து கொடுத்திடே - பு.வை

210 கிராம் கருங்குருவை பச்சரிசியை விராலி இலை தளிர் கூட்டி அரைத்து, அடையாகத் தட்டி நெய்விட்டுச் சுட்டு மூன்று நாட்கள் உண்ணக் கொடுக்க நீரினில் ரத்தம் வீழ்தல் தீரும்.

**ஓம அடை**

துடிமிகுந்த வசம தாகத்தையே
சொற்சம்பிரப் பழச்சாற்றை வார்த்தரைத்
தடையுந் தட்டியே யுச்சித மாகிய
வரலி நெய்யைக் கரண்டியினில் ஊத்தியே
தடையிலா மலெரித்து வெந்தபின்
தானெடுத்துண்ணு காலையு மந்தியும்
விடும் வயிற்றில் கழின்மை நன்மையாம் - பு.வை

35 கிராம் ஓமத்தை, பழச்சாறு விட்டரைத்து அடையாகத் தட்டி நெய்விட்டு சுட்டு வெந்த பின் எடுத்து ஒரு நாளைக்கு 2 வேளை காலை, மாலை உண்ணக் கொடுக்க கழிச்சல் தீரும்.

# சூரணங்கள்

### சூரணவிதி

பஞ்ச பூத சம்பந்தமான உலர்ந்த வேர், பட்டை, கிழங்கு, கட்டை, பிசின், இலை, பூ, கனி, வித்து முதலியவற்றையும் காரசாரத் திரவியங்களையும் இடித்து மெல்லிய தூய்மையான துணியில் சலித்து எடுத்துக் கொள்வது.

### இடிக்கும் முறை

சூரணத்திற்காகும் சரக்குகளைச் சிறுசிறு துண்டுகளாக நறுக்கி ரவியிலேனும், நிழலிலேனும் உலர்த்தித் தனித்தனியே இடிக்க வேண்டும்.

வறுக்க வேண்டிய இடத்தில் அனைத்துத் திரவியங்களையும் சேர்த்து வறுக்கக்கூடாது. ஏனெனில் பெருந்திரவியங்கள் வறுபடுமுன் சிறு திரவியங்கள் தீய்ந்து விடும்.

கறுக்கிச் சேர்க்க வேண்டிய இடத்தில் சரக்குகளைச் சாம்பலாகப் பூக்க விடாமல் கருக்க வேண்டும்.

சூரணத்தில், கடைச்சரக்குகளுடன் எண்ணெய் வித்துகள் கலந்திருப்பின் எண்ணெய் வித்துக்களைத் தனியாக இடித்துச் சேர்க்க வேண்டும்.

சூரணத்தை பசும்பால் தெளித்துப் பிசைந்து ஒரு சட்டியில் பாலும் நீரும் கலந்து எடுத்து அதன் வாய்க்கு வேடு கட்டி மேற்படி பால் பிசைந்த சூரணத்தைப் பரப்பி மேற்சட்டி மூடி வெந்தெடுத்து வெயிலில் உலர்த்தி பொடித்துக் கொள்ள சுத்தியாம்.

துவர்ப்புச் சுவையுடைய கடுக்காய் போன்றவற்றின் சூரணங்களை உரலில் இடித்துக் காற்றுப் புகாவண்ணம் பதம் கெடாது மூடி வைத்தலே சுத்தியாகும்.

சீரணக்காலம் — 12 நாழிகை

சூரணத்தின் ஆயுட்காலம் 3 மாதங்கள் ஆகும்.

அனுபானம் கொடுக்கப்படாத நிலையில் நோய்களுக்கு ஏற்ப மருத்துவன் நிர்மாணித்துக் கொள்ள வேண்டும்.

### ஓரிலைத்தாமரைவேர் சூரணம்

ஓரிலைத் தாமரைவேரு கதிரிலிட்டு
உலர்த்தியே யிடித்துப் பொடியாக்கி வைத்து
சாரியிதை மூவிரற்றூ ளெடுத்துக் கொண்டு
சரியிடையா யாவினெய்யிற் குழைத்து வுண்ண

*பாரிலிரு மண்டலமே கொண்டாயானால்*
*பகர்ந்த பித்தப் பாண்டு காமாலை சோகை*
*ஊரிலில்லாதோடுமென்று யாக்கோபு வுரைசெய்தாரே.*

*- யா.வை.சி*

ஓரிலைத் தாமரை வேரை உலர்த்தி இடித்து வஸ்திரகாயஞ் செய்து எடுத்துக்கொள்ள வேண்டும்.

*அளவு: 1 முதல் 2 கிராம் வரை*

*அனுபானம்: பசு நெய்*

*திறன் அளவு: 2 வேளை வீதம் 80 நாட்கள்*

*தீரும் நோய்: பித்தப்பாண்டு, காமாலை சோகை*

**கரிசாலை சூரணம்**

*கரிசலாங்கண்ணி கறி சுக்கு மேனி*
*பிரசந்தனிலே பிசறி — யருணுதயம்*
*மேய்ப்போது மாத முண வேதாகம சாத்திரம்*
*வாய் வாயாகுந் தெத்துவாய் - தே.வெ*

*கரிசாலை, மிளகு, சுக்கு, குப்பைமேனி சம அளவு எடுத்து உலர்த்தி சூரணித்துக் கொள்ளவேண்டும்.*

*அளவு: 1-2 கிராம் இருவேளை 40 நாட்கள்*

*அனுபானம்: தேன்*

*சூரியன் உதயமாகும் நேரம் கொடுத்துவர தெத்து வாய் நீங்கி வேதாகம சாத்திரங்களை சிக்கற ஓதும் வாயாகும் என்பதாம்.*

**முருங்கைத் தோல் சூரணம்**

*கிழவியென்ற முருங்கைத்தோல் பொடியதாக்கிக்*
*கிரகித்துக் காயமெட்டிலொன்று சேர்த்து*
*பழையபடி பொடித்து ரவி காயவைத்துப்*
*பதிவான வெருகடி தூள் கொண்டு பாரு*

*வளமான வாதம் பெருவயிறு சோகை*
*வதைக்கின்ற சூலை பிணி மாண்டுபோகும்*

இளவயதில் வந்தபிணி தீருமென்று
இருந்துரைத்தார் யாக்கோபு இதமாய்தானே - யா.வை.சி

முருங்கைப் பட்டையை மேற் புறணி போக்கி உலர்த்தி இடித்து 1/8 பங்கு பெருங்காயம் சேர்த்து இடித்து சலித்து எடுத்துக் கொள்ள வேண்டும்.

அளவு: 2 முதல் 5 கிராம் வரை

தீரும் நோய்கள்: வாதம், பெருவயிறு, சூலை ஆகியவை தீரும்.

**அமுக்கராச் சூரணம்**

கிராம்புசிறு நாகப்பூ வோடேல மிளகு
கொடியான திப்பிலியும் வேர்க்கொம்பினோடு
திராமசுவ கத்தமுட னொன்றி ரண்டு
செய்நாலு மிருநாலு நான்குநா னாலென்
எட்டுடெட்டு மேயுலர்த்தி யிளவறுப் பாய்ப்பொடி
ஈரெண் சீனியிட் டிடவி தற்கு
அஷ்டகுன் மம்பிலி கங்குத்து வாயு
ஆமேக வெட்டை பிரமியம் விக்கல் பாண்டு
இரைப்பிளைப் போடுசய ரோகம்மன வெரிவு
இடைகரங் கால்சிரம் வறட்சியொடு வீயு
மெய்பெருக வெழுத்தல் யிடுங்கிட்டோ முஞ்சிலேத்மம்
வீட்டோடு மேயசுவ கந்தாதி யிதுவே

- அ.வை.கா

கிராம்பு 1 பங்கு, சிறுநாகப்பூ 2 பங்கு, ஏலம் 4 பங்கு, மிளகு 8 பங்கு, திப்பிலி 16 பங்கு, சுக்கு 32 பங்கு, அமுக்கரா 64 பங்கு, சர்க்கரை 128 பங்கு, சர்க்கரை நீங்கலாக மற்றவைகளை முறைப்படி சுத்தித்து தனித்தனியே பொடித்து எல்லாவற்றையும் ஒன்று படக் கலந்து, பிறகு சர்க்கரையையும் சேர்த்துக் கலந்து எடுத்துக்கொள்ள வேண்டும்.

அளவு: குறிக்கப்படவில்லையாதலால்: 1&2 கிராம் கொடுக்கலாம்.

அனுபானம்: நோய்களுக்கேற்றவாறு மருத்துவன் நிர்மாணித்துக் கொள்ளவேண்டும்.

தீரும் நோய்கள்: எண் வகைக் குன்மம், இடப்பாட்டுஈரல் நோய், குத்துவாய்வு, வெட்டை, பிரமியம், விக்கல், பாண்டு, இரைப்பு, இளைப்பு, சயம், வறட்சி, கைகால் எரிவு தீரும். உடல் பருக்கும். இதனை அஸ்வகந்திச் சூரணம் எனவும் சொல்வர்.

### ஏலாதி சூரணம்

கொள்ளவே யேலாதிச் சூர ணங்கேள்
குணமான லவங்கமொன்று மிளகி ரண்டு
விள்ளவே நாகம்நாலு தாளிச மெட்டு
விதமான கூகைநீறு பதினாறாகும்
தள்ளவே சுக்கதுதான் முப்பத் திரண்டு
நலமான யேலமது வறுபத்து நாலு
கள்ளவே சர்க்கரைதான் சமனாய்க் கூட்டிக்
கலந்துபுதுக் கலசமதில் பதனம் பண்ணே
பண்ணவே வெருகடித்து ளிருநே ரங்கொள்
பறக்குமடா பித்தமொடு வாதம் வாய்வு
தன்னவே கிரந்திரண மரிகி ரந்தி
தளமான மேலூறல் சொரிசி ரங்கு
நண்ணவே சில்விடங்க ளாடா தோடும்
நலமான குட்டமொடு குறைநோய்
பெண்ணவே பெரும்பா டெலும்புருக்கி
பின்பாரா தோடுமின்ன மொன்று கேளே.

- சி.வை.தி

கிராம்பு 1 பங்கு, மிளகு 2 பங்கு, நாகப்பூ 4 பங்கு, தாளீசம் 8 பங்கு, கூகைநீறு 16 பங்கு, சுக்கு 32 பங்கு, ஏலக்காய் 64 பங்கு எல்லாம் சேர்ந்த அளவு சர்க்கரை அதாவது 127 பங்கு.

சர்க்கரை நீங்கலாக மற்றவைகளை சுத்தித்துப் பொடித்து, எல்லாவற்றையும் சர்க்கரையுடன் சேர்த்து ஒன்றபடக் கலந்து, புதுக்கலசத்தில் பத்திரப்படுத்தவும்.

அளவு: 1-2 கிராம் இருநேரம்

அனுபானம்: நோய்களுக்கு ஏற்றவாறு மருத்துவன் நிர்மாணித்துக் கொள்ளவேண்டும்.

தீரும் நோய்: பித்தவாயு, வாயு, கிரந்தி, விரணம், அரிகிரந்தி, சில்விஷம், குட்டம், குறைநோய், பெரும்பாடு, எலும்புருக்கி, இவைகள் தீரும்.

### நிலவாகைச் சூரணம்

நலமாகச் சூரணமொன்று சொல்லக் கேளு
நன்றான நிலவாகை சுக்குங் கூட்டிப்
பிலமாக மிளகுவாய் விளங்க மோமம்
பேராக வகைக்கொரு பலமே தூக்கி

சிலமாக ரவிமுகந்த னிலுலரப் போட்டுச்
சிதறாம லிடித்துச்சூ ரணந்தான் செய்து
கலமாச் சர்க்கரை தான் சமனாய்க் கூட்டித்
தவறாம லிருநேரங் கொண்டாற் கேளே
கேளப்பா வாயுவென்ற தெல்லாம் போகும்
கெடியான பித்தமெல்லாங் கீழ்நோக் கிப்போம்
வாளப்பா உட்டிணநோ யெல்லாந் தீரும்
வளமானபொருமலோடு விம்மல் தீரும்
நாளப்பா சேத்துமநோ யெல்லாம் தீரும்
நலமான விக்கலோடு வாந்தி தீரும்
தாளப்ப வுடம்பெரிவு சுவாச காசந்
தவறுண்டு போகுமடா சாற்றக் கேளே - சி.வை.தி

நிலவாகை, சுக்கு, மிளகு, வாய்விளங்கம், ஓமம் வகைக்கு 35 கிராம் எடுத்து, வெய்யிலில் உலர்த்தி இடித்துச் சூரணம் செய்து சமன் அளவு சர்க்கரை கலந்து எடுத்துக்கொள்ள வேண்டும்.

அளவு: 1&5கிராம்

தீரும்நோய்கள்: வாய்வு, பித்தம், உஷ்ண நோய், பொருமல், விம்மல், சேத்துமநோய், விக்கல், வாந்தி, உடம்பெரிவு, சுவாசகாச தீரும்.

**மயிலிறகாதி சூரணம்**

எட்டுத்திப்பிலி ஈரைந்து சீரகம்
கட்டுத் தேனிற் கலந்துண்ண விக்கலும்
விட்டுப் போகும் விடாவிடில் போத்தகஞ்
சுட்டுப் போடு நான் தேரனு மல்லனே - தே.கா

திப்பிலி - 8 பங்கு
சீரகம் - 10 பங்கு

இடித்து சூரணித்த சூரணத்தின் எடைக்கு மயிலிறகு சுட்ட சாம்பல் சேர்த்து கலந்து வஸ்திரகாயம் செய்து எடுத்துக்கொள்ள வேண்டும்.

அளவு: ½ முதல் 1 கிராம் வரை

அனுபானம் : தேன்

தீரும் நோய்கள்: விக்கல்

**மகா சீரகச் சூரணம்**

*நீக்கிடுஞ் சூரணம் நெருங்கிய சீரகம்*
*ஓங்கு மேல முறையு மதுரமும்*
*தீங்கில்லா பழச்சாறதின் னூரவை*
*யாங்குமே நிழல் பதமா யுலர்த்திடே*
*உலர்த்திச் சீனியு மொன்றாய்ச் சமனிடை*
*கலர்த்தி மண்டலங் காலை யருந்திட*
*பிலர்த்த பித்தம் பிரண்டுமே யோடிடும்*
*கலர்த்த காங்கை யலறிடுங் கண்டிடே* - *தே.வை*

*சீரகம், ஏலம், அதிமதுரம் ஆகியவை சம எடை எடுத்து பழச்சாற்றில் ஊறவைத்து நிழலில் உலர்த்தி சூரணித்து சர்க்கரை சம அளவு கலந்து கொள்ள வேண்டும்.*

*அளவு: ½ முதல் 1 கிராம் வரை காலை ஒருவேளை*

*அனுபானம்: தண்ணீர்*

*நாள் அளவு: 40 நாட்கள்*

*தீரும் நோய்கள்: பித்தம், வெப்ப நோய்*

**கடுக்காய் சூரணம்**

*இலவங்கம் சிறுநாகப்பூ வோடு கருஞ்சீரக நோய்*
*விலகு வேர்க் கொம்பினோடு மிளகு திப்பிலி கடுக்காய்*
*நலமுறை யொன்றிரண்டு மூன்று நான்கைத் தாறேழாம்*
*அலகுசேர் கழஞ்சு தூக்கி யாட்டியே தூளதாக்கே*
*கல்லக் காரத்திலாதல் கற்கண்டு தூளிலாதல்*
*நல்லவிச் சூரணத்தை நாடொறுஞ் சேர்த்தருந்தில்*
*புல்லிய விருமல்தீரும் பொருத்துவா யக்கரம் போம்*
*சொல்லிதன்பேர் கடுக்காய்ச் சூரணமென்பர் மாதே* - *அ.சா*

*இலவங்கம் - 1 பங்கு, சிறுநாகப்பூ - 2 பங்கு, கருஞ்சீரகம் - 3 பங்கு, சுக்கு - 4 பங்கு, மிளகு - 5 பங்கு, திப்பிலி - 6 பங்கு, கடுக்காய்த் தோல் - 7 பங்கு, வீதம் எடுத்து உலர்த்தி இடித்து சலித்து சூரணித்துக் கொள்ள வேண்டும்.*

*அளவு: ½ முதல் 1 கிராம் வரை*

*அனுபானம்: கற்கண்டு, சர்க்கரை*

*தீரும் நோய்கள்: சிணுக்கிருமல், அக்கரம் ஆகியவை தீரும்.*

**குக்கிற் சூரணம்**

*"குக்கினற் சுத்திசெய்து கொள்ளுக பலந்தானைந்து*
*திப்பிலி பறங்கிபபட்டை சேர் துடி கறுவா வொன்று*
*முப்பல மவற்றினோடு முப்பலை யரைப் பலத்தான்*
*அப்படி வறுத்துத் தூளாயது கொளப் பவுத்திரம் போம்."* *-ப.ரா.சே*

குக்கில் சுத்தி செய்தது - 175 கிராம், திப்பிலி, பரங்கிப்பட்டை, ஏலம், கருவாப்பட்டைவகைக்கு -105 கிராம், கடுக்காய்த்தோல் - 17, 5 கிராம் நெல்லிவற்றல் - 17.5 கிராம், தான்றிக்காய் தோல் - 17.5 கிராம்.

கடைச் சரக்குகளை இள வறுப்பாக வறுத்து இடித்துச் சூரணித்து அத்துடன் குக்கிலைப் பொடித்து சேர்த்துக் கொள்ள வேண்டும்.

அளவு: 1 முதல் 2 கிராம் வரை

அனுபானம்: பால், நெய்

தீரும் நோய்கள்: பவுத்திரம்

## பிட்டு

"....மாவைத் தண்ணீர்
நாட்டியே சீலை கட்டி
வல்லவா மாவையிட்டு
மலர்வித்தல் பிட்டதாமே!"

- சி.ம.சு.

அரிசி மாவுடன் மூலிகைச் சரக்குகளைச் சூரணித்துச் சேர்த்து, குறிப்பிட்ட நீர்ப் பொருளை ஒரு பானையிலிட்டு அதற்கு வேடுகட்டி அதில் உரிய மாவைப் பரப்பி மேற்சட்டி மூடி வெந்து எடுத்தல் பிட்டாம்.

வேட்டில் பரப்பிய மாவைக் கையில் எடுத்து உருட்ட உருண்டால் வெந்த பதமென இறக்க வேண்டும்.

இதன் ஆயுட்காலம் 3 மாதங்கள்.

### நுணா பிட்டு

தெரிந்த மஞ்சனத்தியிலை யென்பதும்
பரித்து போட்டது பாலிடத்து நீர்த்துளி
சொரிந்து மாச்சீலை சுற்றிக் குருவைமா
வரித்துப் பிட்டு வேக வைத்துப் பாங்கிடே

பாங்கு யெள்ளெண்ணெய் பனைவட்டொடு
ஆங்கு செய்து நாளிரு நேரமும்
வாங்குருளையினி வாதந் தெரிந்திடு
நீங்கி வுப்பு நிறுத்தி நிலை கொளே

நுணா இலை 280 கிராம் எடுத்துச்சூரணித்து கருங்குருவை அரிசி மாகலந்து ஒரு பாண்டத்தில் பாலும், நீரும் கலந்து விட்டு வேடுகட்டி மேற்படி கருங்குருவை அரிசி மா பரப்பி மூடி பிட்டவியல் செய்து வெந்தபின் எடுத்து பனைவெல்லம், எள்நெய் சேர்த்து ஒரு நாளைக்கு 2 வேளை வீதம் 6 நாட்கள் கொடுக்க வாத நோய் தீரும்

பத்தியம்: உப்பு நீக்க வேண்டும்.

### ஆவிரைப் பிட்டு

மலை சுமந்த மென்கொடியும் வன்குறுவை மாவும்
அலர் சிவந்த வாவரையின் தூரும் - உலை வைத்துப்
பிட்டவித்துத்தின்னப் பெரும்பிளவை நீர்வரண்டு
விட்டோடிப் போமென விள். - ப.ரா.சே

மலைதாங்கிப்பூண்டு சமூலம், ஆவிரை வேர் இலைகளை உலர்த்தி இடித்து சூரணித்து கருங்குருவை மாவுடன் சேர்த்து பிசறி பிட்டாகச் செய்து கொடுக்க பெரும்பிளவை ஆறும்.

**வேங்கைப் பிட்டு**

*வேங்கை மரத் தோலுடனே மென் குருவை நெல்மாவை*
*யாங்கதனைப் பிட்டாக வாங்கிடே - பாங்குடனே*
*எண்ணெய்தனில் சேர்த்தருந்த யென்று முளைமாந்தை யற்றுப்*
*புன்னிருமல் சீயொடுவும் போம் - ப.ரா.சே*

வேங்கை மரப்பட்டையை இடித்து வஸ்திரகாயம் செய்து கொள்ள வேண்டும். கருங்குருவை அரிசியை ஊறவைத்து இடித்து மாவாக்கி சூரணத்தையும் கலந்து ,நீருள்ள சட்டியில் வேடுகட்டி அதன் மேல் வைத்து அவித்து பிட்டுப் பதம் வந்ததும் இறக்கி என் நெய் சேர்த்துக்கொடுக்க உளைமாந்தை தீரும்.

## வடகம்

வாயிலிட்டுச் சுவைத்து உட்கொள்ளும் வகையில் செய்து கொள்ளும் மருந்து முறை.

குறிப்பிட்ட சரக்குகளை இடித்து சலித்து அத்துடன் குறிப்பிடப்பட்டுள்ள வெல்லத்தை கலந்து பிசறி வேடுகட்டு வேகவைத்துப் பின் இடித்து வேண்டிய அளவில் உருட்டி உலர்த்திக் கொள்ள வேண்டியது.

இதன் ஆயுட்காலம் 3 மாதங்கள்.

## வடக வகைகள்

### தாளிசபத்திரி வடகம்

"ஒப்பில்லாத தாளிசபத்திரியாம் வடக
முத்தமனே வகை கேளு தாளிசபத்திரி
எய்ப்பில்லாக் கழஞ்சியொரு முப்பத்தியொன்று
யிதற்கிசைந்த திரிகடுகு திரிபலையு மேலம்
செப்பினால் சாதிக்காய் பத்திரியுங் கிராம்பு
செவியமொடு யிலவங்கப் பட்டையிலை கூட்டே
கூட்டடா மதுரமொடு வாய்விடங்க மோமம் குரோசாணி
சிறுநாகஞ் சீரகமிரண்டரத்தை
கட்டடா வால் மிளகு மக்கிரா காரம்
கொத்தமல்லி தேசாவரங் கூகை நீறும்
கூட்டடா சிறுதேக்கு வமுக்கிறா வேரும்
கூறிய பேரிந்து முந்திரியாம் பழமும்
கூட்டடா வகையொன்று கழஞ்சுயொன்று
குமுறவே காய வைத்திடித்துத் தூளாக்கிடே

தூளாக்கு தாழிதனிலாவின் பாலப்பா
தோன்றவேரெண்டுபடி வேடு கட்டி
தூளாக்கி வைத்த பொடி புட்டவியல் வைத்து
சூட்டுடனே தேன்வார்த்து வாட்டியுண்டைக் கட்டு
தூளாக்கி பிரமாணக் கொட்டைப் பாக்களவு
சூட்சமா யுருட்டியது பூத கலத்திட்டு
தூளாக்கிப் படி யந்தி சந்தியி லோருண்டை

சுகமாக நொறுக்கியே மென்று தின்னப் போமோ
தின்னப் போம் காசமொடு சயத்தி னோடிருமல்
தீராத விஷமெனுஞ் சுவாச காசந்
திண்ணப் போமந்தார காசம் வலுக்காசஞ்
சிலேற்பனத்தில் வரு தொண்ணுற்றாறு ரோகங்கள்
தின்னப் போங்குளிமங்கள் நீர்க்கட்டு வாந்தி
தேகத்திலழல் காந்தல் நெஞ்செரிப்புத் தாகம்
திண்ணப் போஞ்சுரவீறு மக்கினியின் மந்தத்
தெளியாமூன்று வகையிளைப்புந் தீர்த்திடுமே.

தீர்த்திடுமே யிரத்த பித்தம் வாயினால் கக்கல்
செய்கிறாணி மூல ரத்த மலக் கழிச்சல் போகுந்
தீர்ந்திடுமே பத்தியங்கள்புளி புகைனிப்புங் கைப்புத்
தீண்டா மாங்கிஷங்கள்பச்சையொன்று மாகா
தீர்த்திடுமே தாதுநட்டம் மேக வகைக் கட்டி
சித்தியாம் வெள்ளாட்டுப்பால் தான் கூட்டத்
தீர்ந்திடுமே."

தாளிசபத்திரி - 158.1 கிராம் (31 கழஞ்சு), சுக்கு, மிளகு, திப்பிலி, கடுக்காய்த்தோல், நெல்லிவற்றல், தான்றிக்காய் தோல், ஏலம், சாதிக்காய், சாதிப்பத்திரி, கிராம்பு, செவ்வியம், இலவங்கப்பட்டை, அதிமதுரம், வாய்விளங்கம், ஓமம், குறோசாணி ஓமம், சிறுநாகப்பூ, சீரகம், பெருஞ்சீரகம், சிற்றரத்தை, பேரரத்தை, வால்மிளகு, அக்கராகாரம், கொத்தமல்லி, தெசாவரம், கூகைநீறு, சிறுதேக்கு, அமுக்கரா, பேரிச்சு, உலர்ந்த திராட்சை வகைக்கு 5.1 கிராம் வீதம் எடுத்து உலர்த்தி அனைத்து சரக்குகளையும் இடித்து சூரணித்துக் கொள்ள வேண்டும்.

ஒரு சட்டியில் 2.6 லிட் (2 படி) பசும்பால்விட்டு வேடுகட்டி அதில் மேற்படி சூரணத்தை வைத்து பிட்டவியல் செய்து சூட்டுடனே உரலிலிட்டு தேன் விட்டடித்து கொட்டைப் பாக்களவு உருண்டைகளாக செய்து உலர்த்தி வைத்துக் கொள்ள வேண்டும்.

அளவு: காலை, மாலை 1 உருண்டை வீதம் கொடுக்க வேண்டும்.

தீரும் நோய்கள்: காசம், சயம், சுவாசகாசம், மந்தாரகாசம், 96 கப நோய்கள், குன்மம், நீர்க்கட்டு, வாந்தி, அழல், நெஞ்செரிவு, தாகம், அக்கினி மந்தம், இளைப்பு, இரத்த பித்தம், வாந்தி, கிராணி, இரத்தக் கழிச்சல் தீரும்

பத்தியம்: புளி, புகை, மாமிசம் நீக்க வேண்டும்.

### தாளிச வடகம்

*அரத்தையொடு இலவங்கம் இலவங்கப்பத்திரி*
*அதிமதுரந்திரி கடுகு லவங்கப்பட்டை*
*உரைத்தியிரு சீரகமும் திரிபலமும்*
*உயர்ந்த தாளிச மேல முத்தக்காசு*
*பகுத்த சடாமாஞ்சி யிலாமிச்சை வேரும்*
*சிறுநாக கேசரமுந் திப்பிலி மூலந்தான் சமனாய்*
*வரைத்தக் கிராகாரமுடன் சர்க்கரையுஞ் சமனாய்*
*வடகங் கழற்சிப் பிரமாணமுண்டை செய்யே*
*செய்தபின்பு தேன தனால் நெய்யாயாதல்*
*திகழ் வெந்நீராலிரதத் திதமாய்க் கொள்ளில்*
*எய்திடும் நோய்களைக் கேளாயிலீளை யிசைந்த*
*அத்தி சுரமாலை புளித் தேப்பந்தான்*
*பைய அசீரண வாயுவுடம் பெரித்தல்*
*பல மூலக் கடுப்புவுடனே பறந்து போமே.*

இலவங்கம், இலவங்கப்பத்திரி, அதிமதுரம், திரிகடுகு, இலவங்கப்பட்டை, சீரகம், பெருஞ்சீரகம், திரிபலை, தாளிசபத்திரி, ஏலம், கோரைக்கிழங்கு, சடாமாஞ்சில், விலாமிச்சை வேர், நாகப்பூ, திப்பிலி மூலம், அக்கராகாரம் இவைகளைச் சமனாய்ச் சேர்த்து இடித்து சமஅளவு சர்க்கரை கூட்டி கழற்சிக்காய் அளவு வடகம் செய்து உலர்த்திக்கொள்ள வேண்டும்.

*அளவு: 1 & 2 வடகம்*

*அனுபானம்: தேன், நெய், வெந்நீர்,*

*தீரும் நோய்கள்: இருமல், கபம், என்பு சுரம், புளித்தேப்பம், செரியாமை, வாயு, உடலெரிவு, மூலக்கடுப்பு தீரும்.*

### பிரண்டை வடகம்

*தப்புறு பிரண்டை சதுரக் கள்ளிச் சாரடைகுப்பை மேனிச் சாறு*
*முப்புடனே யரிசி யிரு நாழி யேலமிளகு சுக்குடனே*
*தப்பிட வரைத்தங் கிருபது வடகஞ் சதிரா ஆவிநெய்யுடனே*
*யுப்பற வறுத்துத் தின்பீராகில் ஓடியொளிக்கும் குன்மமுமே.*
*- செ.ரா.சே*

இரு நாழி புதிய பச்சரிசியை நன்கு கழுவி, பிரண்டைச் சாறு, சதுரக் கள்ளிச்சாறு, சாரணைச்சாறு, குப்பைமேனிச்சாறு, சம அளவு கலந்து, அரிசியை ஊற வைத்து நன்கு அரைத்து தக்கபடி உப்பு கூட்டி அதில் ஏலம், மிளகு, சுக்கு இவைகளை

திட்டமுடன் கூட்டி வேக வைத்து வடகம் செய்து வெயிலில் உலர்த்தி எடுத்துக் கொள்ள வேண்டும்.

நெய்யில் வறுத்துக் கொடுக்க குன்மம் தீரும்.

**வச்சிரவல்லி வடகம்**

*நிச்சயமா யுப்பு கறி நேர் மாடஞ் சீரகஞ் சேர்*
*வச்சிரவல்லி வடகத்தை — உச்சிதமாய் உண்ண*
*வசீரணம் போ மோயா விருமலறும்*
*புண்ணுமுதலானவும் போம் போம்.* - *தே.வெ*

*பிரண்டையுடன் உப்பு, மிளகு இவ்விரண்டின் அளவு உளுந்து, சீரகம் சேர்த்து அரைத்து வடகமாக உருட்டி காய வைத்துக் கொள்ள வேண்டும்.*

*அளவு: 1 & 2 வடகம்*

*தீரும் நோய்கள்: அசீரணம், ஓயாத இருமல், தீராத புண்கள் தீரும்.*

**சாரக்குலாதி வடகம்**

*மீறியதோர் பெருங்காயம் கழஞ்சொன்று*
*பேரான சீரகமோ கழஞ்சு ரெண்டு*
*தேறியதோர் வாய்விளங்கம் கழஞ்சு மூன்று*
*செப்பரிய கொத்துமல்லி கழஞ்சு மூன்று*
*ஆறியதோர் செவ்வியமைந்து சுக்குமாறு*
*அப்பனே மிளகேழு திப்பிலி யெண்கழஞ்சே*
*கழஞ்சு வொன்பதாங் கோட்டங் கடுக்காய்பத்து*
*கடுஞ்சித்ர மூலமது பதினொன்றாகும்*
*விழஞ்சு யீராறு மடா வோமந்தானு*
*மிதமாகச் சூரணஞ் செய்யிதற்கு ரெட்டி*
*தழைஞ்சு வெல்லஞ் சேர்த்து நீ வுரலிலிட்டுத்*
*தானிடித்து மைபோலே சாற்றக்கேளு*
*குழைஞ்சு பின்னை காய் போலுருட்டிக் கொண்டு*
*கடசாமலந்தி சந்தி கொடுத்திடாயே*
*கொடுத்திடவே வாய்வென்ற விருபத்தாறும்*
*குண்ணவே வேர் பறிக்குங் குன்மமெட்டும்*

எடுத்திடவே மார்படைக்கும் ருத்திரவாய்வு
என்ன சொல்வேன் தமரகமுமேகும்பாரு
அடுத்திடவே பத்தியந்தானிச்சா பத்தியம்
ஆகாது வாய்வென்ற பதார்த்த மெல்லாம்

*- அகத்தியர் வல்லாதி 600*

| | |
|---|---|
| பெருங்காயம் | — 1 பங்கு |
| வாய்விடங்கம் | — 3 பங்கு |
| கொத்துமல்லி | — 4 பங்கு |
| செவ்வியம் | — 5 பங்கு |
| சுக்கு | — 6 பங்கு |
| மிளகு | — 7 பங்கு |
| திப்பிலி | — 8 பங்கு |
| கோட்டம் | — 9 பங்கு |
| கடுக்காய் | — 10 பங்கு |
| சித்திரமூலம் | — 11 பங்கு |
| ஓமம் | — 12 பங்கு |

வீதம் எடுத்து சுத்தித்து உரலில் இடித்து சூரணித்து சூரணத்தின் எடைக்கு கரும்பு வெல்லம் சேர்த்து உரலில் நன்கு இடித்து புன்னைக்காய் அளவு வடகமாகச் செய்து உலர்த்திக் கொள்ள வேண்டும்.

அளவு: 1 வடகம் இரண்டு வேளை

தீரும் நோய்கள்: வாய்வு, தமரகவாயு, குன்மம்.

# வெண்ணெய்

நீரில் கரையும் தன்மை இல்லாத பிசின் போன்ற மருந்து சரக்குகளை உள்மருந்தாகப் பயன்படுத்தும் வகையில் செய்து கொள்ளும் மருந்து முறை.

குங்கிலியம் போன்ற சரக்குகளை பசுநெய் அல்லது தாவர நெய்களுடன் உருக்கி குறிப்பிடப்பட்ட திரவப் பொருளில் ஊற்றி மத்திட்டுக் கடைந்து எடுத்துக் கொள்ள வேண்டியது.

நெய்யுடன் கலந்து உருக்கி நீரிலிட்டுக் கடையும் பொழுது நீர் அணுக்களுடனும் காற்றணுக்களுடனும் கலந்து பிசின் பொருளானது எளிதில் உட்கொள்ளத்தக்க வகையிலும், எளிதில் சீரணிக்கத் தக்க வகையிலும் மென்மைத் தன்மையை அடைகிறது.

***This product is natural emulsifier.An emulsion is a dispersion of droplets of immiscible liquid in a continuous phase.Here the resinSHOREA robusta is being emulcified with oil and water.*

அன்றியும் மூலிகை, தாது சரக்குகளை வெண்ணெய் சேர்த்து அரைத்துக் கொள்வதும் இப்பிரிவில் அடங்கும்.

இதன் ஆயுட்காலம் — 3 மாதங்கள்.

**குங்கிலிய வெண்ணெய்**

அருந்தும் வெள்ளை கண்டவர்க்கு மருந்துகேளு
ஆனவெள்ளைக் குங்கிலியம் பலந்தானைந்து
திருந்தவே பொடியாக்கி வைத்துக் கொண்டு
திறமான யெண்ணெய் சட்டி யடுப்பிலேற்றி
பொருந்துநல் லெண்ணெய்யுழக் கதிலே விட்டு
புகையாமற் கொதித்துவரிற் பொடியைத் தூவி
வருந்தியே கிண்டிடவே பாகு சேரில்
மறுசட்டிக் குள்நாழி தண்ணீர் வையே

வையவே தண்ணீரதனிற் பாகை ஊற்றி
மைந்தனே பிசைந்திடுவாய் மைபோல் நன்றாய்
பையவே திரட்டியதை யெடுத்துக் கொண்டு
பதமான இளநீரிற் போட்டா யானால்
துய்யவே கையினாற் பிசையும்போது
தூய்மையுள்ள வெண்ணெயாய்த் துலங்கு நன்றாய்

மெய்யாக வெண்ணெய்தனை யெடுத்து வைத்து
விதமான ஏலரிசி பொடித்துப் போடே
போட்டு நீ யொன்றாக லேகித் தப்பா பொருந்தவே
புன்னைக்காயளவு கொண்டால்
வாட்டமில்லா மேகவெள்ளை நீர்க்கடுப்பு
மகத்தான வுட்காங்கை வயிறெரிவு
மூட்டியதோர் முகவெரிவு கைகால் காந்தல்
முறிந்தோடு மிந்த முறை முயற்சி செய்தால் - அ.வை.600

வெள்ளைக்குங்கிலியம் 175 கிராம் நன்றாகப் பொடித்து ஒரு எண்ணெய்ச் சட்டியை அடுப்பிலேற்றி, அதில் எள்நெய் 500 மி.லி ஊற்றி, சிறு தீயில் இலேசாக எரித்துப் புகையாமற் கொதித்து வரும்பொழுது மேற்படி பொடியை தூவி நன்றாகக் கிண்டிப் பாகாக வரும்பொழுது, ஒரு சட்டியில் படி தண்ணீர் ஊற்றி அதில் குங்கிலியப்பாகை ஊற்றிக் கையினால் நன்றாகப் பிசைய, வெண்ணெய், போலாகும். இதைத் திரட்டி எடுத்து வேறொரு பாத்திரத்தில் இளநீர் வைத்திருந்து அதில் போட்டுக் கையினால் பிசைய தூய்மையுள்ள வெண்ணெய் போலாகும். இதனை வழித்து தண்ணீர் உள்ள ஒரு பாத்திரத்தில் சேகரித்துக் கொள்ளவேண்டும்.

ஏலரிசியைப் பொடித்துச் சேர்த்து பின் 5 கிராம் அளவு இரண்டு வேளை கொடுக்க வெள்ளை, மேகவெள்ளை, நீர்க்கடுப்பு, உட்காங்கை, வயிற்றெரிச்சல், முகஎரிவு, கைகால் காந்தல் இவைகள் தீரும்.

## திருகுகள்ளி வெண்ணெய்

அரிய பசும்பாலிலான திருகு கள்ளி
யுரி பாற்சேர் காய்ச்சி யொன்றாய் — வருதிரியில்
மத்திட்டுத் தான் கடைந்து வந்த வெண்ணெய் கொண்டு விட
உற்ற வலி குன்ம மோடும். - ப.ரா.சே

பசும்பால், திருகுகள்ளிப்பால் சேர்த்து காய்ச்சி
பிறை குற்றி மத்திட்டு கடைய வெண்ணெய் திரளும்.
வெண்ணெயை உட் கொள்ள வலி குன்மம் தீரும்

அளவு: 10 கிராம்

## வில்வ வெண்ணெய்

ஆகுவாகனன் மெச்சும் சாறெடுத்து
அவன் பிதாவிடை தாரங்கிருதம் ரெட்டி
வாகுபெறு மலைபார்க்க மொழியைச் சேர்க்க
வசமான கற்கண்டா மதனைச் சேர்க்க

*பாகு பெற மத்திக்க வெண்ணெயாகும்*
*பாங்காகத் தானருந்த பிணிகள் யாவும்*
*ஏகுதற்கு நாளொன்றுக் கிருநேரம் நீ*
*எலுமிச்சங் காயளவு உருட்டிக் கொள்ள*
*கொள்ளப்பா தேசிக்காயளவு வீதங்*
*குணமுடனே மூன்று நாளாறுவேளை*
*விள்ளப்பா வெட்டையோடு மேகம் போகும்*
*மேலான கிரந்தி சொரி சிரங்கு போகுங்*
*கள்ளமுள்ள மூலச் சூடதுவும் போகும்* - *யா.வை.சி*

*(ஆகு வாகனன் மெச்சும் சாறு - ஐங்கரன் மன மகிழும் வில்வ இலைச்சாறு*

*அவன பிதாவிடை - சிவ பெருமான் வாகனமாகிய ரிஷபம்*

*தாரமென்பது ரிஷபத்தின் மனைவியாகிய - பசு*

| | |
|---|---|
| *வாகுபெறு மலை* | — *கல்* |
| *பார்க்க என்பது & கண்டு* | — *கல்கண்டு* |
| *வில்வ இலைசாறு* | — *100 மி.லி* |
| *பசுநெய்* | — *200 மி.லி* |
| *கற்கண்டு* | — *300 கிராம்* |

*அனைத்தையும் ஒன்று சேர்த்து கல்வத்திலிட்டு நன்கு அரைக்க வெண்ணெய் போலாகும்.*

*அளவு: எலுமிச்சங்காயளவு — 2 வேளை வீதம் 3 நாள்*

*தீரும் நோய்கள்: வெள்ளை, வெட்டை, மேகம், சொரி சிரங்கு, கிரந்தி, மூலச்சூடு தீரும்.*

**இந்துப்பு வெண்ணெய்**

*துள்ள ஆ வெண்ணெய் தன்னைத் துவக்குறக் கழுவிக் கொண்டு*
*வெய்ய சயிந்தந் தன்னைவிரைத் தரைத்ததனிற் கூட்டிப்*
*பைய விடியுங் காலைப் பருகிடில் பித்த சூலம்*
*உய்ய வேறில்லை யென்று உடலை விட்டோடுங் காணே*

- *ப.ரா.சே.*

*பசு வெண்ணெய் நீரிலிட்டு நன்கு கழுவி இந்துப்பு கூட்டி சம அளவுசேர்த்து அரைத்துக் காலையில் கொடுக்க பித்த சூலை தீரும்.*

பசு வெண்ணெய்,இந்துப்பு அளவினை நோயின்தன்மைக்கு ஏற்ப மருத்துவன் நிர்மாணித்துக்கொள்ள வேண்டும்.

**பூர வெண்ணெய்**

பொய்யாதையா புகலுங் குருமொழி
அய்யா புற்று அகல அறைவே வொருமருந்
தையா பூரமுந் தாங்கும் படிகாரம்
மெய்யா காரமும் விரும்புஞ் சமனெடே
எடுத்து வெண்ணையி லெழிலாய ரைத்துமே
அடுத்து மூன்று நாளன்பாகக் கொண்டிடில்
கடுத்த புற்றுங் கருதும ரோசிகம்
விடுத்துப் போமென விளம்பினர் தேரனே.

- தே.வை

பூரம், படிகாரம், வெங்காரம், ஆகியவை சம எடை எடுத்துக் கொள்ள வேண்டும் வெங்காரத்தை பொரித்து மூன்று சரக்குகளையும் கல்வத்திலிட்டு தனித்தனியாக அரைத்து பின் ஒன்று சேர்த்து அரைத்து மூன்றின் எடைக்கு பசு வெண்ணெய் சேர்த்தரைத்து எடுத்து கொள்ள வேண்டும்.

அளவு: 200 முதல் 500 மி.கி

இரு வேளை வீதம் 3 நாள் கொடுக்க வேண்டும்.

தீரும் நோய்கள்: புற்று, அரோசிகம்.

# மணப்பாகு

பாகு, பானகம் என வேறு பெயர்களாலும் நூற்களில் பேசப்படுகிறது.

உரிய குடிநீர் அல்லது சாறு இவற்றுடன் சர்க்கரை அல்லது கற்கண்டு சேர்த்துக் காய்ச்சிப் பாகுபதத்தில் எடுத்துக் கொள்ளும் மருந்து முறை.

உரிய நீர்ப்பொருளுடன் சர்க்கரை கலந்து காய்ச்சுங்கால் பாகை நீரிலிட அமிழ்ந்தும், பரவாத நிலையிலும், ஒரு வெள்ளைத் தாளில் ஒரு சொட்டு விட அது ஊறாமலும், பரவாமலும் இருப்பின் பதமென உணர்ந்து இறக்கி வைத்துக்கொள்ள வேண்டும். இறக்கியவுடன் வேறு பாத்திரத்தில் மாற்றிக் கொள்ள வேண்டும். இல்லாவிட்டால் காய்ச்சிய பாத்திரத்தில் உள்ள சூட்டினால் மேலும் பாகு முறுகிவிடும்.

மணப்பாகில் சேர்க்கக் கூடிய சர்க்கரையானது புளிப்பான பழரசமாயின் 2 அல்லது 3 பங்கும், இனிப்புள்ள பழரசங்கட்குச் சம அளவும், கடைச்சரக்குகளின் குடிநீருக்கு இருபங்கும் இருக்க வேண்டும்.

உட்கொள்ளுங்கால் மணப்பாகிற்கு ஒன்றுக்கு 4 பங்கு உரிய அனுபான திரவத்தில் கரைத்துக் கொள்ள வேண்டும்.

*விள் மணப்பாகு நெய் ரசாயனமிவை*

*நால் மேவு மறு திங்கள்.............*

*இதன் ஆயுட்காலம் ஆறு மாதங்களாகும்*

*இதன் சீரண காலம் — 7 நாழிகை.*

*மணப்பாகு பதம் தப்பினால் செய்ய வேண்டியது.*

மணப்பாகு காய்ச்சுங்கால் பாகு முறுகிவிட்டால் நீரோ, வெந்நீரோ விட்டு கலக்கி வைத்துக் கொள்ள கெட்டு விடும்.

ஆனால் நீரை வாலையிலிட்டு வடித்து, அந்த நீரைச் சிறிது சிறிதாக முறுகிய மணப்பாகிற்கு விட்டு பாகுபதம் வந்ததும் நிறுத்திக் கொண்டு பக்குவப்படுத்திக் கொள்ள உரிய ஆயுட்காலம் வரை கெடாது. இவையாவும் கண்ணுசாமிப்பிள்ளை அவர்களின் நூற்களில் காணலாம்.

*புன் பிணியா கும்பகையைப் போராடி வென்றல்யா*
*வென்ப தொழிய விளைபாறித்-தன்பவன*
*மானவுடலி லனுதினமு மாந்துருசிப்*
*பானகநன்மைக் கிருக்கப் பாய்.* - தே.வெ

*புன்பிணிகளை வென்று நீக்கும். இனிவெல்லுதற்குரிய நோய்கள் யாவுள்ளனவென்று இளைப்பாறி நன்மைக் கிருப்பிடமாக அமைந்துதவும்.சுவையாக அருந்தும் தன்மையால் பானகமானது நன்மைக்குப் பள்ளிகொள்ளும் பாய் போன்றதுஎன தேரையர் நூல் கூறும்.*

**ஆடாதோடை மணப்பாகு**

*சுத்தமான ஆடாதொடையிலை 700 கிராம் சிறுக அரிந்து, 5600 மி.லி நீர்விட்டு 1400 மி.லிட்டராகச் சுண்ட காய்ச்சிய பின் வடிகட்டி 805 கிராம் வெல்லம் கூட்டிக் காய்ச்சிப் பதத்தில் எடுத்துக் கொள்ள வேண்டும்.*

*அளவு: 10 முதல் 15 கிராம்,*

*அனுபானம்: காய்ந்தாறிய நீர் இரண்டு பங்கு சேர்த்துக் கலக்கிக் கொள்ள வேண்டும்.*

*தீரும் நோய்கள்: கபாதிக்கம், வாததோஷம், இருமல், பற்பல சுரம் வயிற்றுநோய் ஆகிய இவைகளை நீக்கும்.*

**மாதுளை மணப்பாகு**

*கற்கண்டும் பன்னீர் கனிமா துளைரசமும்*
*நற்றேனுங் கூட்டியே நாட்டுவாய் — சொற்பமல்ல*
*பாண்டு வெளுத்தலோடு பாதங் கரமெரிதல்*
*மாண்டுபோ மென்றார் மகிழ் - தே. கா.*

*கற்கண்டு, பன்னீர், மாதுளை இரசம், தேன் சம அளவு எடுத்து ஒன்றாகக் கூட்டிக் கற்கண்டு கரைந்த பின் வடிகட்டி அடுப்பேற்றிக் காய்ச்ச வேண்டும். பாகுபதம் வந்தவுடன் இறக்கி ஆறியபின் பாத்திரத்தில் சேகரித்துக் கொள்ள வேண்டும்.*

*அளவு: 35கிராம்*

*தீரும் நோய்கள்: பாண்டு, வெளுப்பு நோய், கைகால் எரிவு, வாந்தி இவைகள் தீரும்.*

**சதாவேரி மணப்பாகு**

*தண்ணீர் மிட்டான் கிழங்கும் பழத்தின் சாறுந்*
*தனித்தனியே உழக்கு அதிமதுர மேலம்*
*எண்ணியிரு காசிடையுங் கரைத்துக் கொண்டு*
*இதற்கு நேர் சர்க்கரையுங் கலந்து ஒன்றாய்*
*பண்ணியே பதமெனக் காய்ச்சி*
*போதகத்தை மனத்திருத்தி*

*உண்ணிடவே மலசலமும் நீங்கி வாதம்*
*ஓடுமென்றே யாகோபு உரைத்திட்டாரே*

*- யா.வை.சி.*

*தண்ணீர்விட்டான் கிழங்குச் சாறு - 500 மி.லி., எலுமிச்சம் பழத்தின் சாறு - 500 மி.லி., அதிமதுரம், ஏலம் வகைக்கு 24 கிராம் வீதம் எடுத்து, இரண்டு சரக்குகளையும் பொடித்து, மேற்படி சாறுகளில் சேர்த்து மொத்த எடைக்கு கரும்பு வெல்லம் சேர்த்து எரித்து பாகுபதத்தில் இறக்கி கொள்ள வேண்டும்.*

*அளவு:10 மி.லி: 20 மி.லி*

*தீரும் நோய்கள்: வாத நோயில் காணும் மலசலக்கட்டு தீரும்.*

**வில்வ மணப்பாகு**

*வில்வ மரத்தின் வேருடனே விரும்பு மதன் பூப்பழம் பிஞ்சு*
*சொல்லும் பத்திரி காயதுவுஞ் சுகமாய் நெல்லி யதின் வேரும்*
*நல்ல கறிமுல்லை வேரு நயமாய்ப் பலமொன்றை கூட்டி*
*நெல்லிக்காயினுடன் பச்சைப்பயறு நெல்லின் பொரிதானும்*
*தானே வகைக்கோர் படிகூட்டி யுரி செவ்விளநீர் விட்டுத்*
*தேனே போல நாலுமுறை யிடித்துப் பிழிந்து சீரகத்தூள்*
*மானே பலமொன்றையதிற் கரைத்துமன்னு மெலுமிச்சையிற் புளியும்*
*தானேபடி யொன்றது விட்டுக் கருதேனதுவுமரைப் படியே*
*படியே கூட்டிக் காய்ச்சியது பாணிப் பதமாயிறக்கி முறைப்*
*படியே தின்று வரப்பித்தம் பலவும் சத்தி யருவருப்பும்*
*கொடி சேரிடையாய் கிறுகிறுப்புங் சுடறுஞ் சுழற்சி நடுக்கமதும்*
*துடியே நெஞ்சிற் படபடப்புந் தொலைந்துபோகுந் துணிபாமே"*

*- செ.ரா.சே*

*வில்வத்தின் வேர், பூ, பழம், இலை, காய், பிஞ்சு, நெல்லிமரத்தின் வேர், முல்லைவேர், மிளகுவேர் வகைக்கு 35 கிராம், நெல்லிக்காய், பச்சைப்பயறு, நெற்பொரி வகைக்கு 1 படி எடுத்து, 18படி செவ்விளநீர் விட்டு 4 முறை இடித்து எடுத்த சாறு சீரகப் பொடி 35 கிராம், எலுமிச்சம் பழச்சாறு 1 படி, தேன் 650 மி.லி அனைத்தையும் ஒன்று சேர்த்து அடுப்பேற்றி எரித்து பாகு பதத்தில் இறக்கிக் கொள்ள வேண்டும்.*

*அளவு: 15 முதல் 30 மி.லி. வரை*

*தீரும் நோய்கள்: பித்தம்;, வாந்தி, அருவருப்பு, ஓக்காளம், கிறுகிறுப்பு, படபடப்பு ஆகியவை தீரும்.*

**சதாபல மணப்பாகு**

| | | |
|---|---|---|
| எலுமிச்சம்பழச்சாறு | — | 40 பழம் பிழிந்து வரும் அளவு |
| தண்ணீர் | — | 2 படி |
| சர்க்கரை | — | 120 பலம் |
| புதினா இலைச்சாறு | — | 70 கிராம் |

மேற்கண்ட அனைத்தையும் கலந்து அடுப்பேற்றி சிறுதீயாக எரித்து பாகுபதத்தில் இறக்கிக் கொள்ளவேண்டும். - அ.வை.ந.

அளவு: 50 கிராம் முதல் 70 கிராம்

தீரும்நோய்கள்: உடல் சூடு,தாகம் தீரும். செரிப்பை உண்டாக்கும்.

**செம்பரத்தைப்பூ மணப்பாகு**

| | | |
|---|---|---|
| செம்பரத்தம்பூ | — | 30 |
| நெல்லிக்காய்ச்சாறு | — | 200மி.லி |
| எலுமிச்சம் பழம் | — | 8 பிழிந்த ரசம் |
| நாரத்தம்பழச் சாறு | — | 350மி.லி |
| இஞ்சி சாறு | — | 280 மி.லி |
| தாழை விழுதுச்சாறு | — | 50மி.லி |
| கற்கண்டு | — | 420 கிராம் |

பூவின் காம்பு, பிற இதழ்களை நீக்கி பழச்சாற்றில் ஒரு நாள் ஊற வைத்து மறு நாள் பிசைந்து வடிகட்டி, மற்றைய சாறுகளையும் கலந்து கற்கண்டை பொடித்து கரைத்து பாத்திரத்திலிட்டு வெய்யிலில் நீர்த்துவம் சுண்டும் வரை வைத்தெடுக்க வேண்டும்.

அளவு: 4 கிராம் முதல் 5 கிராம் வரை காலை மாலை இருவேளை தீரும் நோய்கள், சீழ்பிரமியம், நீர் பிரமியம், இரத்தப் பிரமியம், நீர்க்கடுப்பு, நீரெரிச்சல், தாகம், அரோசகம் முதலியன தீரும்.

# நெய்

பசு நெய்யை ஆதியாகக் கொண்டு செய்யும் மருந்து முறை.

உரிய திரவப் பொருளுடன் பசு நெய்யைச் சேர்த்துக் கற்க திரவியங்களை அரைத்துச் சேர்த்து எரித்து மெழுகு பதத்தில் வடித்துக் கொள்வது.

*இதன் ஆயுட்காலம் — 6 மாதங்கள்.*

## நெய் வகைகள்

**அறுகன் நெய்**

*அறுகஞ் சாறு நாலாம்படி அதிமதுரந்தானெண் கழஞ்சு*
*நறுநெய் நாழி பால் நாழி நல்ல பாலை முகிழரைத்து*
*குறுக வெந்த நெய் நக்கக் கோடா கோடி யுட்டிணங்கள்*
*வெறுமை கொண்ட வேசியர் போல் விட்டுப் போகுங் கண்டிரே*
*- தே.வை*

*வெள்ளருகின்சாறு 8 லிட்டர், ஆவின் நெய் 2 லிட்டர் ஆவின் பால் 2 லிட்டர் இவற்றை சேர்த்து கலந்து, அதில் அதிமதுரத்தூள் 42.5 கிராம் பால் விட்டு நன்கு அரைத்து கலக்கி காய்ச்சி பதத்தில் நெய்யை வடிகட்டிக் கொள்ள வேண்டும்.*

*அளவு: ½ முதல் 1 கரண்டி அளவு*

*தீரும் நோய்: உட்டிணப் பிணிகள்*

**அமுக்கரா நெய்**

*"கூட்டப்பா மருந்து வெள்ளை யமுக்கிராவேர்*
*கூசாதே வகைக்கிரண்டு கழஞ்சு வீதம்*
*ஆட்டப்பா வாவின் பால் விட்டரைத்து*
*அப்படியே நெய்தனிலே கரைத்து விட்டு*
*மூட்டப்பா வடுப்பேற்றிக் கமலமாக*
*நாட்டப்பா வடிவுகொண்டு பரணி செய்து*
*நலமாக விரு நேரங்கழஞ்சு கொள்ளே"*

*"கொள்ளவே பெரும்பாண்டு வெலும்புருக்கி*
*கூறான பிரமியங்கள் கடுப்புமூலம்*

விள்ளவே கிராணி வகை யெல்லாந் தீரும்
விதமான சுக்கிலந் தானிறுகும் பாரு
கள்ளவே கமடவெளுப்பு கைகால்
காந்தல் கனமான குடியெரிப்பு நீர்க்கடுப்பு
நல்லவே தீருமடா பத்தியங்காரே
நலமாகச் சீரகக் கியாழங் கொள்ளே - அ.வை.கா

வெள்ளைக்குங்கிலியம், அமுக்கராவேர் வகைக்கு 10.2 கிராம் எடுத்து பொடித்து பசும்பால் விட்டரைத்து நெய்யில் கரைத்து அடுப்பேற்றி கமலாக்கினியாய் எரித்து மெழுகு பதத்தில் வடித்துக் கொள்ள வேண்டும்.

அளவு: 2 முதல் 3 கிராம்

தீரும் நோய்: பெரும்பாடு, என்புருக்கி, பிரமியம், மூலம்,ஆசனக்கடுப்பு, கை, கால் காந்தல் தீரும். நீர்த்த விந்து இறுகும்.

பத்தியம்: இச்சா பத்தியம்

**பொன்னாங்காணி கிருதம்**

கொள்ளவே கிருதமொன்று சொல்லக்கேளு
குறிப்பான காணிச்சாறு படிதானொன்று
நள்ளவே பொற்கையாஞ் சாறுபடியொன்று
நலமான பழச்சாறு யரைகால்விட்டு
விள்ளவே யாவினெய்ப் படிதானொன்று
விருகான வாவின்பால் படிதானொன்று
கொள்ளவே மதுரமொடு பலந்தான்ரெண்டு
தெளிவாக வாவின்பால் விட்டுஆட்டே

ஆட்டியே நெய்க்குளே கரைத்துவிட்டு
அடுப்பேற்றி மெழுகு பதமானவாறே
நீட்டியே சாதிக்காய் சாதிபத்திரி
நினைவாகக் கோரோசனம் கற்கண்டப்பா
நாட்டியே கழஞ்சுநிறை பொடித்துப்போட்டு
நலமாகக் கிண்டி வைத்துக் கரண்டிவீதம்
மூட்டியே யிருநேரங் கொண்டாயானால்
முக்கியமாய்த் தீருமடா மூலச்சூடே

சூட்டுடனே யுஷ்ணநோ யெல்லாந்தீரும்
சுகமாக மேலெரிவு கைகால்காந்தல்
நாட்டுடனே யுலத்துகின்ற மேகந்தீரும்
நணுகாது வயிற்றிலுள்ள யெரிவெல்லாம்
வாட்டிடவே நேத்திரமெல்லாம் குளிச்சியாகும்
வளமாகும் வாய்நாற்றம் விட்டுப் போகும்
தீட்டுடனே யிறங்குகின்ற பிரமியந்தான்
தீருமடா.................................. - அ.வை.ர.கா

| | | |
|---|---|---|
| பொன்னாங்காணிச்சாறு | — | 1.3லிட் |
| பொற்கையான் சாறு | — | 1.3 லிட் |
| பழச்சாறு | — | 650 மிலி |
| பசுநெய் | — | 1.3 லிட் |
| பசும்பால் | — | 1.3 லிட், |
| அதிமதுரம் | — | 70 கிராம் |

அதிமதுரத்தை பசும்பால் விட்டரைத்து கற்கமாக்கி அனைத்தையும் ஒன்று சேர்த்து அடுப்பேற்றி காய்ச்சி மெழுகு பதத்தில் வடித்து, அதனுடன் சாதிக்காய் சாதிப்பத்திரி, கோரோசனை, கற்கண்டு வகைக்கு 5 கிராம் பொடித்து சேர்த்து, கிண்டி எடுத்துக் கொள்ள வேண்டும்.

அளவு: 5 முதல் 10 மி.லி — 2 வேளை

தீரும் நோய்கள்: மூலச்சூடு, கைகால் காந்தல், மேகம், வாய் நாற்றம், குன்மம் தீரும், கண் குளிர்ச்சி ஆகும்.

### கடுக்காய் நெய்

தானென்ற கடுக்காய் நெய் சாற்றக்கேளு
தங்கம் போல் வரிக்கடுக்காய் நூறு வாங்கி
ஏனென்ற கீழ்க்காய் நெல்லியது
மிருபதடா பல மிடித்துப் பாண்டத் திட்டு
வானென்ற தூணி நீர் விட்டுக் காய்ச்சி
மைந்தனே ரண்டுபடி வடித்துவிட்டு
தேனென்ற ஆவினெய்படி தான் விட்டு
சிறப்பான செண்பகப் பூ யேலந்தானே
ஏலமொடு சிவதைவேர் சுக்கு மஞ்சள்
இதமான சீரகமுங் கடகரோகினி

சீலமோடு கடுக்காய் திப்பிலி வகைக்குத்
திறமாகப் பலமரைதானரைத்துப் போடு
பாலிரண்டு படி விட்டுச் சிறு தீயிட்டுப்
பதத்தில் வடித்திரு கழஞ்சி பருகக்கேளு
தூலமெனும் வீக்கமொடு பித்த சோகை
சோபமுட னெறியக்கினி மந்தம் போமே

*- போ.700*

கடுக்காய் தோல் 100, கீழாநெல்லி சமூலம் — 700 கிராம் இரண்டையும் இடித்து 16 படி நீர் விட்டுக்காய்ச்சி 1/8 பங்காக வற்றவைத்து எடுத்துக் கொண்ட குடிநீர் 2 படி

பசுநெய் — 1 படி,

பசும்பால் — 1 படி,

செண்பகப்பூ,
ஏலம்,
சிவதைவேர்,
சுக்கு,
மஞ்சள்,
சீரகம்,
கடுகுரோகிணி,
கடுக்காய்தோல்,
திப்பிலி வகைக்கு 17.5 கிராம்

எடுத்து அரைத்து கற்கமாக்கிக் கொண்டு அனைத்தையும் ஒன்று கலந்து சட்டியிலிட்டு அடுப்பேற்றி சிறு தீயில் எரித்து மெழுகுபதத்தில் நெய்யை வடித்து கொள்ள வேண்டும்.

அளவு: 10. கிராம்

தீரும் நோய்: அதிதூலம், சோகை, அக்கினிமந்தம், உடல்காங்கை, தீரும்.

# இரசாயணம்

*சரக்குகளைச் சூரணித்து சர்க்கரை, நெய்,தேன் சேர்த்துப் பிசறி எடுத்துக் கொள்வது.*

*ஆயுட்காலம் — 6 மாதங்கள்*

**குப்பைமேனி இரசாயணம்**

*பூனையது வணங்கியிலை பலமோபத்து*
*புகல்கருத்த சீரகமவ் விடையே சேர்த்து*
*பானுவிலே காயவைத்துப் பெடியாய்ப்பண்ணிப்*
*பதிவான சருக்கரையும் பாதி சேர்த்து*
*தேனையதி லுடனிடடுப் பத்துமேழு*
*தினமுண்ண மெய்யினுட யெரிவும் நீங்கும்*
*ஞானமிகும் புத்தியுண்டு கன்மந்தீரும்*
*நலமான யாகோபு நவின்றார்தானே*

*- யா.வை.சி.*

*குப்பைமேனி இலை — 350 கிராம், கருஞ்சீரகம் — 350 கிராம், இரண்டையும் வெய்யிலில் உலர்த்தி இடித்து சூரணித்துக் கொள்ள வேண்டும். சூரணத்தின் எடைக்கு பாதி சர்க்கரை சேர்த்துப் பிசறி பின் சர்க்கரை எடைக்குப்பாதி அளவு தேன் சேர்த்துப் பிசறி எடுத்துக் கொள்ள வேண்டும்.*

*அளவு: 1 முதல் 2 கிராம் வரை பதினேழு நாட்கள்*

*தீரும் நோய்கள்: உட்டிண நோய், உடம்பெரிவு தீரும்.*

**சாதிக்காய் இரசாயணம்**

*இல்லையென்று மயங்காதே யின்ன மொன்று*
*என்மகனே சாதிக்காய் சாதிப்பத்திரி*
*வல்லாரையொன்று கிராம்பு சிறு நாகப்பூவும்*
*வகையான அமுக்கரா பறங்கிப்பட்டை*
*கொல்லையென்று சந்தனமுங் கொடிவேலிவேரும்*
*கூர்மையுடன் பச்சைக் கர்ப்பூர மொன்றாய்க்*
*கலவையென்று நினையாதே காற்பலமாய் வாங்கித்*
*தான் பொடித்துச் சரியெடைதான் சீனி கூட்டே*

*கூட்டியே பசுநெய்யில் பிசைந்து மைந்தா*
*குணமான பீங்கானில் வைத்துக் கொண்டு*
*தாட்டியே பாக்களவு யிரண்டு வேளை*
*நன்மையுடனிருபது நாள் கொள்ளும் போது*
*தாட்டிகமாய் மேகநோய் நீங்குமப்பா*

*- அ.ப.பூ பக் 54.*

சாதிக்காய், சாதிப்பத்திரி, கிராம்பு சிறுநாகப்பூ, அமுக்கரா பறங்கிப்பட்டை, சந்தணம் கொடிவேலிவேர், பச்சைகற்பூரம், வகைக்கு 10 கிராம் வீதம் எடுத்து இடித்து சூரணித்து சமஎடை சர்க்கரைசேர்த்து பசுநெய் தேவையான அளவு விட்டு பிசைந்து எடுத்துக் கொள்ள வேண்டும்.

அளவு: பாக்களவு - இரண்டுவேளை இருபது நாட்கள்

தீரும் நோய்: மேகநோய்

**கொன்றை இரசாயணம்**

மேனியிலைப் பூக்கொன்றை கையான் பாதிரி
மிக்கயெடு நால்சரக்கு மிடையே சேர்த்து
வாவிதுகள் கதிரவன் முன்காயவைத்து
வடியிடித்துச் சர்க்கரை நெய்சேர்த்து கிண்டி
தேனதனில் மண்டலமு மூவிரல் வீதம்
செலுத்திடவும் புத்தியுண்டாம்
அரிவிலத்தில் தேகமது பொன் போலாகும்

*- யா.வை.சி.*

குப்பைமேனியிலை, கொன்றையிலை, கையான் இலை,பாதிரியிலை சம எடை எடுத்து சூரணித்து உலர்த்தி இடித்து சூரணத்தின் எடைக்கு சர்க்கரை ,நெய் சேர்த்துப் பிசறிக் கொள்ள வேண்டும்.

அளவு: 2 முதல் 5 கிராம் வரை ஒரு மண்டலம்

அனுபானம்: தேன்,

தீரும் நோய்கள்: புத்தி தெளிவுண்டாகும்.

**இஞ்சி இரசாயணம்**

*திரி முற் பவத்துரி போக்கித் தறிதொடி தீந்தொகைத்துப்*
*பெரி பொரி பஞ்சாக்கினியிலொன் றுங்கபத தெண்விஜ*

*சரியெரிந் திட்டிடி யுண்பொடி மூவிரற் சத்தி முதல்*
*எரிவனன் மந்தமும் பித்தப்பிணியுமிடருறுமே.*

*- தே.பா.தி.*

| | | |
|---|---|---|
| *சீரகம்* | — | *1 பங்கு* |
| *இஞ்சி* | — | *2 பங்கு* |
| *சர்க்கரை* | — | *3 பங்கு* |

இஞ்சியை தோல் நீக்கி சுத்தித்து சிறு சிறு துண்டுகளாக நறுக்கி நெய் விட்டு நன்கு சிவந்த நிறத்தில் வறுத்துச் சூரணித்துக் கொள்ள வேண்டும். சீரகத்தை சுத்தித்து இள வறுப்பாக வறுத்து சூரணித்து அத்துடன் மேற்படி இஞ்சி சூரணத்தையும், சர்க்கரையையும் கலந்து நன்கு பிசறி எடுத்துக் கொள்ள வேண்டும்.

*அளவு: 500 மி.கி. முதல் 1 கிராம் வரை.*

அனுபானம்: நீர், வெந்நீர்

தீரும் நோய்கள்: செரியாமை, மந்தம்.

# இளக முறை

இளகிய பதத்தில் இருப்பதால் 'இளகம்" என காரணப் பெயரோடு வழங்கும் மருந்து முறை.

தனி மருந்தாகவும், பல மருந்துகட்கு அனுபானமாகவும் அநேக இளகமுறை நூற்களில் சொல்லப்பட்டுள்ளது. 'லேஹியம்" என்ற வடமொழிச் சொல்லாகவும் வழக்கில் உள்ளது.

## இளகம் செய்முறை விதி

*(அ) ..................................................................லேகிய*
*விபரமும் கூறுவன் மித்திர குணத்துடன்*
*கபமுறக் கேண்மதி சூத்திரப் படியே*
*...................................................................................*
*மீதமுறு மிரண்டுகூ றெனக்குடி நீர்முறை*
*புரிந்த மேற்சரக்கெனும் பொருள்வகைப் பொடியெலா*
*முறைமையிற் றிவகை மூட்டுநே ருருவகை*
*பதவகை யிவைவழாப் பாண்டிதத்துடன் சமைத்*
*திதமுற லேகிய வினம் எழ.......................................*

என்பதில் இளகத்திற்காகும் சரக்கினங்கள் குடிநீர் முறையென்றும் மேல்சரக்கு முறை என்றும் இருவகையாகப் பிரிக்கப்படும். இங்கு குடிநீர் எனப் பேசப்படுவது நீர், பால், குடிநீர், சாறு முதலாகிய திரவப்பொருளையும் மேல் சரக்கு எனப்படுவது சூரணச் சரக்குகளையும் குறிக்கும். எரிக்குங்கால் முத்தீ வகைகளையும் முறைப்படி எரித்துக் கொள்ள வேண்டும்.

ஒரு பெரிய சட்டிதனில் வெல்லமும் பாலும் இட்டு, அன்றி சொல்லப்பட்டுள்ள நீர்ப் பொருளும், வெல்லமும் சேர்த்து அடுப்பேற்றி எரித்து நீர் சுண்டி கையில் ஒட்டிக் கொண்டு வழியும் பாகத்தை அறிந்து சட்டியை இறக்கி சூரணத்தை இட்டுக் கிளறி நன்கு துழாவி வர இளகம் பிறக்கும் என்பதாம்.

## இளகப் பக்குவமுறை

1. இளகம் பக்குவமாகையில் அதை எடுக்கும் போது நூல்போல் நீண்டு நெகிழ்ந்து வருவதும்.

2. நீர்விட்டால் மூழ்கிப் போவதும்.

3. கைகளில் உருட்டுங்கால் சிதறிப்போகாமல் திரண்டு நிற்பதும் பக்குவ பாகங்களாம்.

## செய்முறையில் கவனிக்க வேண்டியவை

இளகத்தில் சேர்க்கப்படும் நெய், தேன் சம அளவாக இருத்தல் கூடாது. நெய்க்குப் பாதி அளவே தேன் சேர்த்தல் வேண்டும்.

கிளறிய இளகம் நன்கு ஆறிய பின்னே பக்குவப்படுத்திக் கொள்ள வேண்டும்.

இளகம் சூட்டுடன் இருக்குங்கால் நெய்யையும் சூடு சற்று ஆறிய பின் தேனையும் விட்டுக் கிளற வேண்டும்.

மருந்தின் ஆயுட்காலத்தை நிர்ணயிக்கும் பொருட்டு பாகு செய்து சூரணமிட்டு இளகிய பதத்தில் எடுத்துக் கொள்வது மட்டுமே இளகம் என்பதாம். இவை தவிர பால், வெல்லம், நெய், தேன் சேர்ப்பினும் வேறு பக்குவமுறையில் உதாரணமாக அரைத்தோ அல்லது பிசறியோ இளகிய நிலையில் இருந்தாலும் அதை இளகம் என்று கொள்ளலாகாது.

## இளகத்தின் ஆயுட்காலம்

*விள் மணப்பாகு நெய் ரசாயண மிளக*
*நால் மேவுமறு திங்கள்........................*
*ஆறு திங்கள் ஆயுட்காலமாகும்.*

*- கு.தா.சீ.வ*

இதன் சீரணகாலம்

*சூரணந் தைல மிலேகியங்*
*கிருதஞ் சொற்பனிரண்டென்னச்*
*சேருநாழிகையாம்.....................!*

*- சு.ஆ.வே.பொ.ல*

## பஞ்சதீபாக்கினி இலேகியம்

*பாரப்பா பஞ்சதீ பாக்னி யென்னப்*
*பகர்கின்ற லேகியந்தான் சொல்லக் கேளாய்*
*ஆரப்பா திரிகடுகு ஏலம் சீரம்*
*அப்பனே வகையொன்று பலந்தா னொன்று*
*பேரப்பா விளவறுப் பாய்ச் சூரணித்துப்*
*பெரிதான வாவின்பால் படியிரண்டு*
*சேரப்பா பனைவெல்லம் பலந்தா னெட்டு*
*சிறப்பாகக் கரைத்ததிலே பாகு செய்யே*
*செய்யப்பா சூரணத்தைத் தூவிக் கிண்டு*

திறமான தேனெய்தா னுரியு ழக்கு
கய்யப்பா விட்டதிலே கிண்டிக் கிண்டிக்
கருவாக மெழுகுபத மாக வாங்கி
மய்யப்பா பாக்கள விருநேரந்தான்
மைந்தனே மண்டலந்தான் கொண்டாயானால்
கய்யப்பா தீருகின்ற வியாதி கேளாய்
கருவான வாய்வோடு வாதமாமே
ஆமப்பா வுஷ்ணங்கள் பித்த வாயு
அப்பனே சரீரத்தி வுளைவு குத்து
போமப்பா வலிகடுப்பு வெரிச்சல் பேதி
பொருமலுடன் வாயுவென்ற கிராணி தீரும்
வேமப்பா வத்திசுர மத்திவெட்டை
விருதான வாந்தியெல்லாம் விழலாய்ப் போகும்.

*- அ.வை.ர.சு*

திரிகடுகு, ஏலம், சீரகம், இவை வகைக்கு 35 கிராம் இவைகளை முறைப்படி சுத்தித்து, இளவறுப்பாய் வறுத்துச் சூரணித்து, 2.8 லிட்டர் பசுவின் பாலில் 280 கிராம் பனைவெல்லம் சேர்த்துக் கரைத்து வடிகட்டி, அடுப்பிலிட்டுக் கொதிக்க வைத்து, பாகு பதம் வந்தபின், சிறிது சிறிதாக சூரணத்தைத் தூவிக் கிண்டிக் கொண்டே, நெய் 1400 மி.லி சேர்த்துக் கிண்டி இறக்கி, சற்று சூடு ஆறியபின் 700 மி.லி தேன் சேர்த்துக் கிளறி, இளக பதமாகச் செய்து கொள்ளவும்.

அளவு: 3 - 6 கிராம், இருவேளை, 1 மண்டலம்.

தீரும் நோய்கள்: வாய்வு, வாதம், உஷ்ணம், பித்தவாயு, உடல் உளைவு, உடல்குத்து, வலி, கடுப்பு, எரிச்சல், பேதி, பொருமல், வாதக்கிராணி, அஸ்திசுரம், அஸ்திவெட்டை, வாந்தி, முதலியவைகள், தீரும்.

**கேசரி இலேகியம்**

எலுமிச்சம் பழம் 200, நாட்டுச் சர்க்கரை 7 கிலோ மிளகு 210 கிராம், சீரகம் 210 கிராம், கோஷ்டம், சுக்கு, தாளீசம், திப்பிலி, சாதிக்காய், சாதிப்பத்தரி, இவை வகைக்கு 33.6 கிராம், நெய் 280 கிராம் எடுத்துக் கொள்க. பிறகு எலுமிச்சம் பழத்தை வதக்கிச் சாறு பிழிந்து சர்க்கரையை அதிற் கலந்து கரைத்து வடிகட்டி, அடுப்பேற்றி, பாகுபதம் வந்தவுடன் இறக்கி, சூரணித்தக் கடைச்சரக்குகளைச் சிறிது சிறிதாக்ப் போட்டுக் கிளரி, பிறகு நெய் சேர்த்து கிண்ட வேண்டும்.

அளவு: 4 முதல் 8 கிராம்

தீரும் நோய்கள்: பித்தம், வாயு, வயிற்றுவலி, முதலியன.

**தூதுவளை இலேகியம்**

பூரணமா மின்ன மொரு லேகியங்கள்
புலத்தியனே நானூரலீற்றிற் புனிதமாகக்
காரணமா முருங்கைப்பூ தூதுளையின் பூவும்
கணக்காக வகைக்கு நாற் பலம் நிறுத்துக்
காரணியிற் சதாவேரிகிழங்கு மூன்றும்
துருவான நன்னாரி பலமிரண்டும்
காரணமாய் நிலப்பனையு நெருஞ்சிமுள்ளும்
கருவான வகைக்குமொரு பலமாய்க்கூட்டே
கூட்டியே சூரணித்துப் பசுவின் பால்தான்
குறுணியிலே போட்டுமே குழம்புபோலே
காட்டியே வற்றிவரும் போதுமைந்தா
கருவான சீனிபலம் பன்னிரண்டும் போட்டு
நாட்டியே கிளறயிலே பசுவின் நெய்தான்
நலமாகப் படியரை தேனுழக்கு விட்டுக்
கெட்டியாய் லேகியம் போற்கிண்டி வாங்கிக்
கிருபையுள்ள கணபதிக்குப் பூசை செய்யே
செய்துமே தான்றிக்காயளவு கொள்ளத்
தீருகிற வியாதிதனைத் திறமாய்க் கேளு
எய்துகின்ற பிரமிய மேக நோயும்
துன்பமுள்ள என்புருக்கிப் பிரமேகந்தான்
பெய்துமே மண்டலத்திற் றீர்ந்துதாது
பெலமுண்டா மிந்திரிய பலமுண்டாகும்
செய்துமே லேகியத்தில் மேக நோய்கள்
தீருமடா பத்தியமோ இல்லை பாரே

- அ.ப.பூ

| | |
|---|---|
| முருங்கைப்பூ | - 140 கிராம், |
| தூதுளம் பூ | - 140 கிராம், |
| சதாவேரிகிழங்கு | - 105 கிராம், |
| நன்னாரி | - 70 கிராம், |
| நிலப்பனை கிழங்கு | - 35 கிராம், |
| நெருஞ்சில் முள் | - 35 கிராம். |

அனைத்தையும் உலர்த்தி சூரணித்துக் கொள்ள வேண்டும்.

*சர்க்கரை — 420 கிராம், பால் — 1½ படி சேர்த்து அடுப்பேற்றி எரித்து, பாகு பதத்தில் இறக்கி, சூரணத்தை தூவிக் கிளறி நெய் 1 லிட்டர் விட்டு நன்கு கிளறி தேன் 500 மி.லி விட்டு நன்கு கிளிறி எடுத்து கொள்ள வேண்டும்.*

*அளவு: 5 கிராம் முதல் 10 கிராம் வரை 40 நாட்கள்*

*தீரும் நோய்: பிரமியம், என்புருக்கி, பிரமேகம், மேகநோய்கள் தீரும். தாது விருத்தியாம்.*

**துளசி லேகியம்**

*கொள்ளவே சொல்லுகிறேன் துளசிதன்னை*
*கூறாகச் சாறுபலம் ஒன்றுவாங்கி*
*அள்ளவே பனைவெல்லம் பலந்தானாலு*
*ஆகிவிட்டுப் பாகுபெறக் காச்சுக்காச்சு*
*துள்ளவே திரிகடுகு மதுரம் ஓமம்*
*குறுக்கான கார்கோ லரிசிகெந்தி*
*வள்ளவே பறங்கியுட பட்டையோடு*
*வாய்விளங்கம் கோட்டமொடு வகைதானொன்றே*
*வகையொன்று பலவீதமாக வாங்கி*
*வாகாக சூரணித்துப் பாகிற்கிண்டி*
*தகையாதே நறுநெய்தான் படிகால்விட்டுச்*
*சாரமுள்ள தேன்தான் அரைகால்படி விட்டு*
*துகையாக மெழுகுபதந் தன்னிலேதான்*
*தோன்றவே வழித்து வைப்பாய் பீங்கானுள்ளே*
*பகையான நோய்களென்னும் பதினெட்டுக்குட்டம்*
*பறக்குமடா லேகியங் கண்பார்க்கு முன்னே அ.வை.கா*

*துளசிசாறு — 35 கிராம்,*

*பனைவெல்லம் — 140 கிராம், சேர்த்து காய்ச்சி பாகு பதத்தில் இறக்கி, திரிகடுகு, ஓமம், அதிமதுரம், கார்போகரிசி, கந்தகம், பறங்கிப்பட்டை, வாய்விடங்கம், கோட்டம் வகைக்கு 35 கிராம் எடுத்து சூரணித்து பாகில் தூவி கிளறி, 500 கிராம் நெய் சேர்த்துக் கிண்டி பின் 250 கிராம் தேன் விட்டு நன்கு கிளறி எடுத்துக்கொள்ள வேண்டும்.*

*அளவு: 1 முதல் 2 கிராம்*

*தீரும் நோய்கள்: பதினெட்டு குட்டம்.*

# தைலம்

**இயல்**

உரிய குடிநீர் அல்லது சாற்றுடன் நெய் வகைகளைச் சேர்த்துக் காய்ச்சிக் கொள்வது தைலம் என்பதாம். பலவகை வித்துக்கள், கட்டைகள், உயிர்ப்பொருட்கள் ஆகியவற்றினின்று பன்னிரெண்டு வகை செய் முறைகளின் மூலம் பிரித்தெடுப்பதே நெய் என உரைப்பது ஆகும். இவை தனித்தேனும், பிற மருந்து முறைகளிலும் பயன்படும்.தைலம் எனும் மருந்துமுறைகட்கு இவ்வகை நெய்களேஅடிப்படைப்பொருளாகும். இத்தைலமானது ஐவகை மருத்துவ முறைகளில் அடங்கும். அவை

1. முடித்தைலம்
2. குடித்தைலம்
3. பிடித்தைலம்
4. சிலைத்தைலம்
5. துளைத்தைலம்

என்பனவாம்.

காய்ச்சும் முறையால் தைலம் பெருந்தைலம், சிறுதைலம் என இருவகைப்படும். அவ்விரு முறைகட்கு ஏற்றவாறு பக்குவ பாகங்களும் வெவ்வேறாகும்.

பெருந்தைலத்திற்குப் பாகவிதியானது மூவகைப்படும். அவை...

1. தைலம் காய்ச்சும் காலத்தில் கற்கத்தை அகப்பையால் எடுத்துப் பார்க்க கற்கம் விரல்களால் திரட்ட முடியாத நிலையில் மெழுகு பதமாயிருக்கில் அது மிருதுபாகம் எனவும்.

2. கற்கத்தை திரட்டும் போது சிறிது பிசுபிசுப்புடன் விரல்களில் ஒட்டக்கூடியதாயிருந்தால் சிக்குபாகம் எனவும்,

3. கற்கத்தை விரல்களால் திரட்டும் போது சிதறிக் கருநிறமானால் மணற்பதமெனவும் கூறப்பட்டுள்ளது.

இம்மூன்று பாகங்களும் முறையே வாத, பித்த, கப நோய்களுக்காம்.

இவ்வாறுள்ள மூவித பாகத்திற்குள் மிருது பாகத்திற்கு முன்பாகமும், மணற்பாகத்திற்குப் பின்பாகமும் பொல்லாங்கையே விளைக்கும். ஆகையால் பயன்படுத்துக் கூடாது.

இதில் துளைத் தைலமானது மிருது பாகத்திலும், பிடித்தைலம் மணற் பதத்திலும் குடித்தைலம் சிக்கு பதத்திலும் காய்ச்சிக் கொள்ள வேண்டும்.

அரைத்துத் தட்டிய அடைவகைகள், இலைவகைகள், தூள் வகைகள், மெழுகாதிகள், கற்கமில்லாத நீர்த்தன்மை வகைகள் ஆகியவை கலந்து அப்போதே காய்ச்சிக் கொள்கிற சிறிய தைலமுறைகட்கெல்லாம் தைலம் காய்ச்சிய முடிவில் ஒவ்வொன்றும் முறையே தைலத்தில் இட்ட சரக்குகள் வேகவும், பொரியவும், நிறம் தைலத்தில் உண்டாகவும், மணம் உண்டாகவும், திரிச்சீலையால் தொட்டு விளக்கில் காட்டினால் சிடு சிடுப்பு இல்லாமையும் பக்குவ பாகங்களாம்.

## காய்ச்சும் விதி

உலோகக் கடங்களைத் தவிர்த்து மண்கடங்களே சிறப்புடையதாம்.

ஒரு தைலம் காய்ச்சிய பாண்டத்தில் பிரிதொரு தைலம் காய்ச்சக் கூடாது.

ஏலம், சந்தனம், புனுகு, அகில், மரு, தக்கோலம், மஞ்சள், பச்சைகற்பூரம், போன்ற வாசனைத் திரவியங்களைத் தயிலம் இறக்கிய பின் சேர்க்க வேண்டும்.

## தைலங்களின் சுத்தி முறை

1. மெல்லிய தூள்களைப் போட்டு அத்தூளின் நிறம் தோன்றப் பார்த்து அப்போதே செய்யக்கூடிய சிறுதைல வகைகளில், முடித்தைலத்தை அழுத்தித் தேய்ப்பதுவே சுத்தியாகும்.

2. குடிப்பதற்கேனும், மூழ்குவதற்கேனும் அடைதட்டிப் போட்டுக் காய்ச்சிக் கொள்ளும் தைல வகைகளில் அதன் சுடுகை ஆறுவதே சுத்தி.

3. குடிநீர், ரசம், பால் இவற்றைச் சேர்த்துக் காய்ச்சும் தைலங்களை ஒன்று முதல் மூன்று நாள் வரை பயன்படுத்தாது வைத்திருப்பதே அதன் சுத்தி.

4. சிறு தைல முறைகளன்றி மிகுந்த கற்காதிகள் சேர்த்து செய்யப்படும் பெருந்தைல வகைகள் யாவற்றையும் 3 நாள் முதல் 1 மண்டலம் கறுப்பு நெற்குள் புதைத்து வைத்தெடுப்பதே சுத்தி.

மேற்படி சுத்தி முறைகளுள் நெற்புடச் சுத்தியே சிறப்புடையதாகக் கொள்ளப்படுகிறது.

# தைல வகைகள்

## குடித்தைலம்

கரிசாலைத் தைலம்

தேகராசச்சுரதந் தில்லியம் நேர்நேர் கூட்டிப்
பாகமுறக் காய்ச்சிப் பருகுவார் — காகமுணுங்
காசத்தைக் காணார் அக்காசத்தைக் காணுவாரிப்
பிருங்கராசத்தைக் காணார். - தே.தை.வ.சு

மஞ்சள்கரிசாலைசமூலம் இடித்துப் பிழிந்த சாற்றுடன் சம அளவு, எள் நெய் சேர்த்து காய்ச்சி தைலத்தை திரியில் தோய்த்து விளக்கில் காட்ட சிடு சிடுப்பின்றி சுடர் விட்டு எரியும் பக்குவத்தில் வடித்துக் கொள்ள வேண்டும்.

அளவு: 5 முதல் 15 மி.லி

அனுபானம்: பசும்பால்

தீரும் நோய்கள்: சளியை துப்பச் செய்கின்ற இருமல்

**சிவனார் வேம்பு குழித் தைலம்**

சங்கம் வேர் பூவரசன் சாற்றச் சிவன் வேம்பு
பொங்கமுடன் வாலுழுவை போட்டு சமன் இங்குக்
குழித்தைலமா யிறக்கிக் கொள்ளரைக் காசு
அழிமேகப் புற்றொழியுமாம்.

- பு.வை.500

சங்கன் வேர், பூவரசம்பட்டை, சிவனார் வேம்பு, வாலுழுவை அரிசி சம எடை எடுத்து நன்கு உலர்த்தி, இடித்து குழித்தைல கருவியிலிட்டு தைலம் வடித்துக் கொள்ள வேண்டும்.

அளவு: (½ காசெடை) 6 கிராம்

தீரும் நோய்கள்: மேகம், புற்று

**சித்திரமூலத்தைலம்**

ஆறாத சூட்டுக்கு யெண்ணெய் சொல்வேன்
அடவான எள்ளெண்ணெய் ஆவினெய்யும்
கூராத வகைவகைக்குப் படிதான் பாதி
கொடிதான சித்தருடமூலப்பட்டை
நேராத பலமொன்று நீர்விட்டாட்டி
நேராகஎண்ணெயிலே கலக்கிப்போட்டு
மீறாத மெழுகு பதந்தன்னிலிறக்கி
மிஞ்சாமல் துட்டெடைதான் கொண்டு பாரே
பாரேநீ நாற்பது நாள் கொண்டபோது
பாங்கான சூடெங்கே மேகமெங்கே
வீரேநீ விப்புருதி கண்டமாலை
விதமான புண்புரைகள் சிரங்கு தீரும்
தீரேநீ வாயுவொடு சூலைகுத்து

*திறமான செங்கிரந்தி தடிப்பு மாறும்*
*சேரேநீ பத்தியந்தானிதற்கோயில்லை*
*செயலான போகருட கடாட்சந்தானே.*

*- பு.வை.500*

எள்நெய், பசுநெய் வகைக்கு 500மி.லி எடுத்துச்சேர்த்து அதில் சித்திரமூலவேர் பட்டை 35 கிராம் எடுத்து நீர் விட்டரைத்துக்கலக்கிக் காய்ச்ச வேண்டும். மெழுகு பதத்தில் வடித்துக் கொள்ளவேண்டும்.

*அளவு: 500 மி.கி 40 நாட்கள்*

*தீரும் நோய்கள்: உட்டிணப்பிணிகள், விப்புருதி, கண்டமாலை, புண், சிரங்கு தீரும்.*

**குளிர்ச்சி தைலம்**

*முத்தெண் ணெய் படியொன்று சட்டியிட்டு*
*முனிவாக யிதனிடைக்குப் பழத்தின் சாறு*
*சித்தம் வைத்துக் குமரிச்சார் படிதானொன்று*
*சிறுகடுக்காய் பலம் ரெண்டு அம்மியிட்டு*
*நத்தியரை யெண்ணெய் தனில் குழப்பிக் காய்ச்சி*
*நலமாக மெழுகு பதம் வடித்துக் கால் சேர்*
*நிதமொரு கரண்டியுண்ணத் தீரும் வியாதி*
..........................................................................................
*காலெரிவு கையெரிவு காந்தல் போகும்*
*கண்குளிரும் உந்தியது குளிர்ச்சியாகும்*
*சீலமுடன் வெட்டை நீர் குத்தல் போகும்*
*சினம் போகும் உஷ்ணமுடன் வறட்சி தாகம்*
*காலமொடு மேனியது குளர்ச்சி காணும்*
*நாடுமுனே விந்திருகும் ..........................................*

| | |
|---|---|
| *ஆமணக்கு நெய்* | *- 2 லிட்டர்,* |
| *பழச்சாறு* | *- 2 லிட்டர்* |
| *குமரிச்சாறு* | *- 2 லிட்டர்* |

மூன்றையும் ஒன்றாகக் கலந்து கடுக்காய் பிஞ்சு 70 கிராம் எடுத்து நன்கு அரைத்து மேற்படி நெய், சாறு கலவையில் கரைத்து அடுப்பேற்றி எரித்து மெழுகு பதத்தில் வடித்து கொள்ள வேண்டும்.

*அளவு: 30 கிராம் முதல் 50 கிராம் வரை*

திரும் நோய்: கை, கால் எரிவு, நீர்ச் சுருக்கு, வெட்டை, உடல் வெப்பம், தாகம் தீரும்.

**வல்லாதித்தைலம்**

*தானானவல்லாதிதைலமொன்றுதயவாக*
*சேங்கொட்டைஅழிஞ்சிக்கொட்டை*
*மானானபூவந்திகொட்டையோடுமைந்தனே*
*யெட்டியுடக்கொட்டைதானும்*
*வானானவேம்பின்புண்ணாக்குங்கூட*
*வகையானசிவன்வேம்பு*
*இவையெல்லாஞ்சரியெடையாய்த்தூக்கி*
*கனிவானகன்னியுடசாற்றில்போடே*

*போடேநீயொருநாள்தானூறவைத்துப்*
*பொங்கமுடனிருநாள்தானெடுத்துலர்த்தி*
*ஆடேநீகுழித்தைலமாக வாங்கிஅப்பனே*
*காசிடைதான் கொண்டாயானால்*
*நாடேநீ பனைவெல்லந் தன்னிற்கொள்ளு*
*நாயகனேசூலைபதினெட்டுந்தீரும்*
*வாடேநீ போகாமல் மண்டலங்கால்கொள்ள*
*மைந்தனே பத்தியந்தானொன்றாகாதே.*

*- பு.வை.500*

சுத்தித்த சேங்கொட்டை
அழிஞ்சிக்கொட்டை
பூவந்திக்கொட்டை
சுத்தித்த எட்டிக்கொட்டை
வேப்பம்புண்ணாக்கு

சிவனார்வேம்பு யாவும் சம எடை எடுத்து இடித்து கற்றாழைச்சாற்றில் ஒரு நாளூறவைத்து எடுத்து இரண்டுநாட்கள் வெய்யிலில் உலர்த்திக் கொள்ளவேண்டும். நன்கு உலர்ந்தபின் குழித்தைலக்கருவியிலிட்டு தைலம் வடித்துக் கொள்ளவேண்டும்.

அளவு: காசிடை

நாளளவு: 10 நாட்கள்

அனுபானம்: பனைவெல்லம்

தீரும்நோய்கள்: பதினெட்டுசூலை

# முடித்தைலம்

## ஆவிரை பஞ்சாங்க தைலம்

உண்மையாக வுரைக்கின்றேன் மாந்தர்க்கு
தண்மையான தனிப் பஞ்சமாவாரை
வெண்மையான விரும்பும் பசும்பாலில்
விரும்பியரைத்துச்சமனெள்ளெண்ணைகூட்டி
திண்மையதாகத் தெளி வுறக் காய்ச்சித்
தீச்சிடாமல் தெளியப் பதம்வடி
மூச்சிடாமல் முழுக ஓர் மண்டலம்
பேச்சுமே பிணி புகல வகலுமே
அகலுமேக மறையும் மந்தாரம் போம்
புகரு மீகா பொருமலிரைப்புடன்
நிகலும் வெட்டை கொடிய சயரோகம்
சகல நோய்களும் தாண்டிப் பறக்கும் - *ப.ரா.சே*

ஆவிரை பஞ்சாங்கம் - எடுத்து, இடித்து பசும்பால் விட்டு அரைத்து, அதற்கு சம எடை எள்நெய் சேர்த்து காய்ச்சி, ஒரு மண்டலம் தலை முழுக மேகம், மந்தார காசம், இரைப்பு, சயம் தீரும்.

## சவுரித்தைலம்

கேளப்பா சவுரியுடப்பழச்சாறு நாழி
கிருபையுடன் பொடுதலையின்சாறு நாழி
.கேளப்பா பசுவிடப்பால் தானாழி
விதமான மிளகு பலம்நல்லெண்ணெய்நாழி
தாளப்பாகலக்கியதை மெழுகுபோல் தான்
வடித்த யெண்ணெய் தலைமுழுகும்போது
கேளப்பா மிளகு நீருங் கூட்டியே
சாதமுண்ணு போகம் நீக்கே
நீக்கவே தீருகிறவியாதிகேளு
நிலையானகபாலவலிகபாலக்குத்து
போக்குமேபீநிசங்கள்மண்டைச்சூலை
பொல்லாதநேத்திரத்தின் மாசிதீரும்
வாக்குமே நீர்க்கடுப்புமேகச்சூடு
வாங்குமடாதைலமது வாரந்தோறும்
தாக்குமேதவறாமல் மூழ்கிவாநீ
தன்மையுள்ள நோய்களெல்லாம் தவறிப்போமே.

- *அ.ப.பூ 400*

*சவுரிப்பழச்சாறு*

*பொடுதலைச்சாறு*

*பசும்பால்*

*எள்நெய்: வகைக்கு 2லிட்டர் எடுத்துக்கலந்து அதில் மிளகு 35 கிராம் எடுத்து அரைத்துக் கரைத்து காய்ச்சி மெழுகு பதத்தில் வடித்து எடுத்துக் கொள்ள வேண்டும். வாரம் ஒரு முறை தேய்த்து தலைமுழுகிவர கபாலவலி, கபாலக்குத்து பீநிசங்கள், மண்டைச்சூலை, கண்புகைச்சல், நீர்க்கடுப்பு மேகச்சூடுதீரும். தலைமுழுகும் நாளில் மிளகுரசம் சேர்த்துக்கொள்ளவேண்டும்.*

**கீழாநெல்லித்தைலம்**

*கொள்ளுமாந்தர்க்குறிக்குமொருபாகம்*
*வி்ள்ளுன்கீழ்க்காயினெல்லிசமூலமாம்*
*துள்ளக்கியாழந்துடிப்பாகச்செய்திடு*
*எள்ளுமெண்ணெயெழிலாகக்காய்ச்சிடே*
*காச்சிமண்டலங்கருதிமுழுகிடில்*
*போச்சுவியாதி புகலுங்கண்புகைச்சல்*
*மிச்சுபித்தம்விளம்புந்தசவாய்வு*
*ஆச்சுதயிலமரையவிசைந்ததே.* - *தே.வை*

*கீழாநெல்லிசமூலம் எடுத்து சுத்தித்து இடித்து அதனெடைக்கு எட்டு பங்கு நீர் விட்டுக்காய்ச்சி எட்டில் ஒருபங்காக வற்றவைத்து வடித்து அதன் எடைக்கு சமஎடை எள்நெய் சேர்த்து காய்ச்சி பதத்தில் வடித்து எடுத்துக்கொள்ள வேண்டும். 40 நாட்கள் தலையில் தேய்த்து முழுகிவரச் செய்ய கண்புகைச்சல், பித்தம், தசவாய்வு தீரும்.*

## பிடித் தைலம்

**சிற்சுடர் தைலம்**

வேப்ப நெய், எள் நெய் இரண்டும் வகைக்கு 175 கிராம் வீதம் எடுத்துக் கலந்து வைத்துக் கொள்ள வேண்டும்.

நெல்லிக்காய் கந்தகம், பெருங்காயம் இவ்விரண்டும் வகைக்கு 140 கிராம், உரித்த பூண்டு 280 கிராம் எடுத்து மூன்று சரக்கினையும் நன்கு அரைத்து 10 அங்குலம் நீளம், 4 அங்குலம் அகலமும் உள்ள வெள்ளைச் சீலையில் தடவி கொள்ளவேண்டும். உலர்ந்த மூன்று நல்வேளைவேரை ஒன்றாகச் சேர்த்துக் கட்டி அதன்மேல் மருந்து தடவிய சீலையை ஏழு சுற்று வரும்படிச் சுற்றி சுடர் தைல கருவியில்கட்டிக் கொண்டு, கலந்து வைத்துள்ள நெய்யில் தோய்த்து நெருப்பிட்டு, அடியில் பாத்திரம் வைத்து, மேற்படி நெய்யைச் சிறுகச் சிறுக விட்டு வர தைலம் வடியும். இவ்விதம் மீண்டும் மடக்கி எரிக்க சுடராக வடியுங்கால் தைலத்தை சேகரித்துக்கொள்ள வேண்டும்.

தேகத்தில் தடவிப் பிடிக்க இசிவு தீரும்.

- *தே.தை.வ.சு.*

## மயனத் தைலம்

*சித்தக மனற்கலுப் பயிரோம மரிசனந்தேம்பிசா சேழு முறையே*
*சேர்தொடிசதுப்பதி ற்றஃதஃ ததிற்பாதிசெப்பரைக் கால ரைக்கா*
*லொத்த தொகை யிற்பாதி யிவைகளை நெடுங்கடத்துள்ளடைத் தொரு கலசமே*
*லுறவைத்து மண்ணிட்டு நூல்வரிந் தெழுசீலையொவ்வப் புரிந்தி ரண்டின்*
*சுத்தமத் தியமீது கீழ்பெரிது சிறிதாய்த்துவாரமிட்டுயர்வழியின் வாய்த்*
*தூ மமே காவண முலோட்டமொடு கோமயந்தோயப் பொதிந்தி வணமே*
*சத்தமுறு முத்தான மிட்டதோ முகவழிதனிற்பாத் திரஞ்சேர்த்ததுதா*
*சனனையங் குலவவிடு முச்சாம மாவியொடுதைலம் பிறந்தி ழியுமே*

## மகிமை

*இழியுமிந்த வள்ளியத்தாந் தைலப் பேரை*
*யியம்புங்கா லர்த்தாங்க மிசிவு வீக்கம்*
*வழியுமுதி ரங்கொடுக்கும் வெட்டுக் காயம்*
*வளியதைப்பு நரித் தலையின் வாய்வு சந்நி*
*அழியுமட வார்குறியாண் குறித்த ளர்ச்சி*
*யத்திசந்தி தசைநரம்பிற் கிளைத்த வூதை*
*யொழியு மிதைப் பட்டிகட்டிற் கைகால் சோர்வு*
*முறங்குவர் கனாப்பொருளா யோதுங் காலே*

*- தே.தை வ சு*

| | | |
|---|---|---|
| மஞ்சள் மெழுகு | - | 1400 கிராம் |
| சக்கிக்கல் | - | 1400 கிராம் |
| உப்பு | - | 1400 கிராம் |
| மணல் | - | 700 கிராம் |
| ஓமம் | - | 175 கிராம் |
| கப்பு மஞ்சள் | - | 175 கிராம் |
| சடாமாஞ்சில் | - | 87.5 கிராம் |

இவைகளை தனித்தனியாக இடிக்க வேண்டியவைகளை இடித்தும், துண்டிக்க வேண்டியவைகளைத் துண்டித்தும் கழுத்து நீண்ட ஒரு பானையில் முறைப்படி அடைத்து, வாய்ப் பொருத்தமான மற்றொரு சிறு கலசத்தைக் கவிழ்த்து மூடி, பொருத்துவாய் மறைய அரைத்த களிமண்ணால் பூசி, நூல்கயிற்றால் வரிந்துக் கட்டி, அதன் மேல் ஏழு சீலை மண் செய்து, இவ்விரண்டு கடத்தில், பெரிய கடத்தின் நடுமையத்தில் மேற்புறம் பெரிதாகவும், சிறு கடத்தின் கீழ்ப்புறம் சிறிதாகவும் துவாரங்கள் இட்டு, பெரிய கடத்தின் மேல் துவாரத்தில் புகை வெளிவரா வண்ணம் ஒருமண் ஓட்டுத் துண்டினால் துளையை மறைத்து, அதன் மீது பசுச்சாணத்தை அப்பி, கடத்தை ஒரு பக்கம் சரிந்த வண்ணம் அடுப்பில் வைத்து கீழ்த்துவார வழியில் ஒரு பாத்திரத்தை

வைத்து, தீமூட்டி மூன்று சாமம் நன்றாக எரிக்கில், புகையடன் கூடிய தைலம் இறங்கும்.

இதை மேற்பூச்சாக உபயோகிக்க, அர்த்தாங்க வாத நோய், குழந்தைகளுக்குண்டாகும் இசிவுகள், வீக்கங்கள், இரத்தம் ஒழுகுகின்ற வெட்டுக்காயம், நோயுடன் கூடிய அண்ட வீக்கம், நரித்தலைவாதம், சன்னிவாதம், பெண்குறித்தளர்ச்சி, ஆண்குறித்துவளல், கீல், எலும்பு, தசை, நரம்பு, இவைகளைப் பற்றிய வாய்வு முதலியவை நீங்கிப் போம், இதை பட்டிகட்டினால் கைகால்களில் உண்டாகின்ற சோர்வு தீரும்.

## ஆலகாலவிஷ தைலம்

ஆமணக்கு நெய் 350 கிராம், கொட்டைப்பாக்குச் சீவலைப்போல் சீவிய வத்சநாபியின் சீவல் 280 கிராம் சேர்த்து அடுப்பிலிட்டு சிவக்கும்படி எரித்து வஸ்திரத்தால் வடிக்கட்டி வைத்துக் கொள்ள வேண்டும்.

இதைச் சரீரத்தில் பூசிப்பிடித்து வர இசிவு என்கிற நோய்கள் முழுதும் விலகும். இதனன்றியும் பாதத்திலும்,தேகத்திலும் கண்டுகண்டாக அடிபருத்து எழும்புகின்ற திரிதோஷ வீக்கங்களின் மேல் மாவிலங்கின் இலையில் இதனை தோய்த்துப் போட்டு அவ்விலையை வதக்கி அவைகளின் மேல் பரப்பி வெள்ளை வஸ்திரத்தினால் மூன்று கட்டுக்கட்டி அவிழ்க்க நிச்சயமாக நீங்கும். இதுவே ஆலகாலவிஷ தைலமாகும்.

- தே.தை.வ.சு

## முகவாதத்திற்கு தைலம்

செய்யக் கேளு முகவாதந்
தீர மருந்து தானுரைப்பேன்
உய்யும் நல்லெண்ணெய் புங்கெண்ணெய்
உரமிகு வேப்பெண்ணெய் மூன்றிலும்
நய்யும் வகைக்குக் காற்படியாய்
னெய்யாய்ச் சட்டி தனில்விட்டு
வேண்டு மருந்தை நீ கேளே
மருந்து நிலைவாகை யசுவகெந்தி
வாகாய் வேலிப் பருத்தியிலை
தெரிந்தே மூன்றும் வகைவகையாய்
திருந்த வடித்தரைப் படியாக்கி
பெருந்தும் வசம்பு கருஞ்சீரகம்
பேராய்க் கெந்தகம் வெள்ளுள்ளியுந்
திருந்த மூன்று வராகனெடை
சேரும் வகைகளை வாங்கிவிடே
வாங்கிப் பச்சிலைச் சாறு விட்டு
வகையா யரைத்துத் தானெடுத்து

ஓங்கி யாவுஞ் சட்டியிட்டு
ஒழுங்காய்த் தானெடுத்து அடுப்பேற்றி
பாங்காய்த் தீபம் போலெரித்துப்
பதமாய் காய்ச்சி யிறக்கியேதான்
சாங்க முடனே பூசிவர
தாங்கா முகவா தமும்போமே

*- யா.வை.சி.*

| | | |
|---|---|---|
| எள்நெய் | - | 500 மி.லி |
| புங்கநெய் | - | 500 மி.லி |
| வேப்பநெய் | - | 500 மி.லி |
| நிலவாகை சாறு | - | 1 லிட் |
| அமுக்கிரா சாறு | - | 1 லிட் |
| வேலிப்பருத்தி சாறு | - | 1 லிட்டர், |
| வசம்பு | - | 16 கிராம் |
| கருஞ்சீரகம் | - | 16கிராம் |
| கந்தகம் | - | 16 கிராம் |
| பூண்டு | - | 16 கிராம் |

கடைச் சரக்குகளை மேற்படி சாறுவிட்டு அரைத்து, எஞ்சிய சாற்றில் கரைத்து, நெய் வகைகளையும் ஒன்றாக கலந்து அடுப்பேற்றி தீபாக்கினியாக எரித்து மெழுகு பதத்தில் வடித்து பூசி வர முகவாதம் தீரும்.

## மனோசிலை தைலம்

தானையா மயிற் பீலி பலந்தான் ரெண்டு
தான்போட்டு சட்டியிலே கருக்கி கொண்டு
வானையா மனோசிலைதான் வராகன் பத்து
வறமாகத் தான் போட்டு உருகும் போது
சேனையா வேப்பெண்ணெய் படிதான் விட்டு
செயலாகத் தானெடுத்து எரித்துக் கொண்டு
மானையா பூசியல்லோ பிடிக்கும் போது
மைந்தனே குடைச்சல் முதல் குத்து போமே

*- தே.வை*

| | | |
|---|---|---|
| மயிற்பீலி | — | 70 கிராம் |
| மனோ சிலை | — | 42 கிராம் |
| வேப்பநெய் | — | 2 லிட்டர். |

மயிற்பீலியை சட்டியிலிட்டு கருக்கி, அத்துடன் மனோசிலையைப் பொடித்து போட்டு உருகும் சமயம் வேப்பநெய் விட்டு எரித்து எடுத்துக் கொள்ள வேண்டும்.

பிடி தைலமாக பயன்படுத்த வாத குடைச்சல், வலி, தீரும்.

## மத்தன் தைலம்

| | | |
|---|---|---|
| ஊமத்தை இலைச்சாறு | — | 100 மி.லி |
| தேங்காய் நெய் | — | 100 மி.லி |
| மயில்துத்தம் | — | 10 கிராம் |

மயில்துத்தத்தை நன்கு - பொடித்து ஊமத்தை சாற்றில் கரைத்து தேங்காய் நெய்யை கலந்து அடுப்பேற்றி சிறுதீயில் எரிக்க வேண்டும். தைலம் நீர்வற்றிய பின் ஒரு குச்சியில் தோய்த்து நெருப்பில் காட்ட சுடர்விட்டெரிந்தால் பதமென தைலத்தை இறக்கி வடிகட்டிக் கொள்ள வேண்டும்.

ஆறாதபுண், புரை, துர்மாமிசவளர்ச்சியுள்ள புண் இவைகட்கு போட இவை ஆறும்.

## விரணப்பூச்சுத் தைலம்

அரத்தம்பூ விலைவேம் பாடலதிமது ரஞ் செஞ் சத்தம்
உலர்ந்த நற் புளியங் கொட்டைத் தோலுறு கைப்புக் கோட்டம்
இரத்த நல் சாத்திரவேதி யிவையொரு நிறையிற் கொண்டு
தரித்திடு தேங்காயெண்ணெய் தனிற் காய்ச்ச சுட்ட புண் போம்

- ப.ரா.சே

செம்பரத்தம் பூ, இலை
வேம்பாடம்பட்டை
அதிமதுரம்
செஞ்சந்தனம்
புளியங்கொட்டைத்தோல்
கோட்டம்
சாத்திரபேதி

ஆகியவைகளை சம அளவு எடுத்து அரைத்து, அவ்வெடைக்கு தேங்காய் நெய் எடுத்து அதிற் கலந்து காய்ச்சி வடித்துக் கொள்ள வேண்டும்.

சீலையில் நனைத்துப் போட சுட்ட புண் ஆறும்.

## பத்திரசார விரணப் பூச்சுத் தைலம்

எண்ணா மவிப்படிநே ரேமபுட்பி வேம்பூனான்
றிண்ணா யுருவிசீ வந்திபரி-புண்ணாற்றுஞ்
சிந்தமந் தாரமெட்டுஞ் சேகுரியிலைச்சாறட்
டெந்தமந்த வீரப்புண்ணுவில்

- தே.தை.வ.சு.

| | | |
|---|---|---|
| நல்லெண்ணெய் | — | 650 மி.லி |
| ஆவாரைச்சாறு | — | 650 மி.லி |
| வேம்பு இலைச்சாறு | — | 650 மி.லி |
| ஊனான்இலைச்சாறு | — | 650 மி.லி |
| நாயுருவி இலைச்சாறு | — | 650 மி.லி |
| வெட்பாலை இலைச்சாறு | — | 650 மி.லி |
| பருத்தி இலைச்சாறு | — | 650 மி.லி |
| புளி இலைச்சாறு | — | 650 மி.லி |
| தூதுளை இலைச்சாறு | — | 650 மி.லி |

வீதம் சேர்த்து ஒரு பாத்திரத்திலிட்டு எரித்து ஒரு திரியில் தோய்த்து நெருப்பில் காட்ட சிடுசிடுப்பின்றி சுடர் விட்டு எரியும் பதத்தில் வடித்து எடுத்துக்கொள்ள வேண்டும்.

தைலத்தை விரணங்களின் மேல் பூசி மறுநாள் அரசம்பட்டைக் கஷாயத்தினால் கழுவவேண்டும். இவ்வாறே போதுமான நாளளவுஞ் செய்யில் சவ்வினால் வாய்மூடிக் கொண்டு ஆறாமலிருக்கிற சகல புண்களும் ஆறிப்போம்.

## துளைத் தைலம்

### கோட்டத் தைலம்

போமென்ற பீனிசங்கள் தீர்வதற்குப்
புகலுவேனசிய மொன்று கோஷ்ட மேலும்
ஆமென்ற குங்குமப்பூ லவங்கபட்டை
யதிமதுரம் கருஞ்சீரகமிலவங்கப் பத்திரி
தானெற விராகனிடை யொன்று தாக்கித்
தனிப் பசுவின் பாலரைகால் படி விட்டாட்டி
ஓமென்ற மாதுளம் பூச்சாறவ் வீத
முத்தமனே பசுவினெய்படி ரைகால் வாரே
வாரப்பா யெரி மெழுகு பதமதானால்
வாங்கியே நசிய மிடு பீனிச முமோராறுஞ்
சேரப்பா பித்தத்தின் தலைக்குத்தெல்லாஞ்
தீருமே கண்சிவப்பு நயனவாதம்
பாரப்பா நீர்பில்லம் விழியினீர்ப் பாய்ச்சல்
பறக்குமடாசிறுசூடாந் தாரைவிட்டால்
நேரப்பா தேன் கலந்து விட்டு வார் நீ
நேரறிந்து வயித்தியந்தா னிலைக்கச் செய்யே

| | | |
|---|---|---|
| பசுவின்பால் | — | 200.மி.லி |
| மாதுளம் பூச்சாறு | — | 200 மி.லி |
| பசுநெய் | — | 200 மி.லி |

கோட்டம்
ஏலம்
குங்குமப்பூ
இலவங்கப்பட்டை
அதிமதுரம்
கருஞ்சீரகம்
இலவங்கத்திரி

வகைக்கு 4, 2 கிராம் எடுத்து பொடித்து பசுவின்பால் விட்டு நன்கு அரைத்து அத்துடன் எஞ்சிய பால், மாதுளம் பூச்சாறு, பசுநெய் கலந்து அடுப்பேற்றி சிறுதீயில் காய்ச்சி மெழுகு பதத்தில் வடித்து கொள்ள வேண்டும்.

மூக்கில் நசிய மிட்டு வர பீனிசங்கள், பித்தத்தினால் வரும் தலைவலி, கண்சிவப்பு தீரும்.

**புரைத்தைலம்**

பாரேதான்நொச்சிவேர் அழிஞ்சிவேர்
பண்பான விழுதிவேர் சமனாய்ப்போட்டு
சீரேதான்குழித்தைலமாக வாங்கி
சிறப்பாகப்புரைகளுக்குவிட்டபோது
கூரேதான்விப்புருதி கண்டமாலை
குறிப்பானஅரையாப்புக்கன்னப்புற்று
நேரேதான் தொடைவாழையோடு
நேரானப் பிளவையொடுதீரும்பாரே. - பு.வை.500

நொச்சிவேர்
அழிஞ்சிவேர்
விழுதிவேர்

சம எடை எடுத்து உலர்த்தி குழித் தைலம் எடுத்துக்கொள்ள வேண்டும்.

புரைப்புண்களுக்கு விட்டு வரவிப்புருதி, கண்டமாலை, அரையாப்பு, கன்னப்புற்று, தொடைவாழை, பிளவை தீரும்.

**தைவேளை தைலம்**

தைவேளை சமூலச்சாறு - 50 மி.லி, எள்நெய் - 50 மி.லி, கலந்து காய்ச்சி பதத்தில் வடித்துக் கொள்ள வேண்டும்.

1-2 துளி காதில் விட்டு வர நீர் எழுச்சி, சீழ் எழுச்சி தீரும்.

**காது வலித் தைலம்**

| | |
|---|---|
| வசம்பு | — 10 கிராம் |
| பெருங்காயம் | — 10 கிராம் |
| உரித்த பூண்டு | — 10 கிராம் |
| வேப்பநெய் | — 120 கிராம் |

வசம்பு பெருங்காயத்தை சூரணித்து அத்துடன் பூண்டு சேர்த்து நீர் விட்டரைத்து கற்கமாக்கி வேப்ப நெய்யில் கரைத்து அடுப்பேற்றி சிறுதீயில் எரித்து மணற்பதத்தில் வடித்து கொள்ள வேண்டும்.

அளவு: 1 முதல் 2 துளி இரு வேளை காதிலிட்டுவர காதுவலி, எழுச்சி, தீரும்.

# மாத்திரைகள்

மூலிகை, தாது சரக்குகளை உரிய திரவப் பொருள் விட்டு அரைத்து உரிய பிரமாண அளவுகளில் உருட்டி நிழலிலோ அன்றி வெயிலிலோ உலர்த்தி எடுத்துக் கொள்ள வேண்டும்.

இதன் ஆயுட்காலம் — 1 ஆண்டு

**இராமபாண மாத்திரை**

பொலிவான வெள்ளையுடன் காவிக்கல்லு
ஆமேநீ சரியெடையாய்நிறுத்துக்கொண்டு
அப்பனேவெற்றிலையின்சாற்றாலாட்டி
தாமேநீநாழிகையேழரையுமானால்
தயவாக மிளகதுபோலுண்டைசெய்து
வாமேநீ சுக்குடைக்கியாழந்தன்னில்
வளமாக மூன்றுநாள் கொடுத்திடாயே
கொடுத்தவுடன் சுரங்களெல்லாமோடிப்போகும்
கொற்றவனேயேழாநாள் நீரை வாரு
அடுத்தவுடன்சிறுகீரைமிளகுநீலி
அப்பனே வைத்துக்கொடுப்பாய்நீயுங்
கொடுத்தவுடனேழாநாள்புளியைக்கூட்டு
கழிவில்லாசுரவையதுகாணாதப்பா
தொடுத்தவுடன்சுரக்குளிகைராமபாணந்
துளபமணிமார்பருடசரமுமாமே. - பு.வை.500

சுத்தித்த வெள்ளைப்பாடாணம்,காவிக்கல் சமஎடை எடுத்து வெற்றிலைச்சாற்றால் மூன்று நாட்கள் அரைத்து மிளகு அளவு மாத்திரை உருட்டிவெய்யிலில் உலர்த்தி எடுத்துக்கொள்ளவேண்டும்.

அளவு: 1 மாத்திரை: 3 நாட்கள்

அனுபானம்: சுக்குக்குடிநீர், 7ம் நாள் சிறுகீரை, மிளகு,நீலி சேர்த்துக்குடிநீர் கொடுக்கவேண்டும்.

**பொரிகார மாத்திரை**

பொரிகார மைங்கழுஞ்சு சீனக்காரம்
மதனுட நிகழு வெங் காரநவச்சார மிந்துப்

*பரிதான சவர்கார மஞ்சளின் மா கழுநீரி*
*லதனுடனே வெள்ளரியின் பருப்பி தெல்லாம்*
*சரியாக வொருகழஞ்சு கல்வத்திட்டுச்*
*சாற்றிய செவ்விள நீரின் முருங்கையிலை யவித்த நீரே*
*நீரிதல்லா லறைக்கீரை யவித்த நீரில்*
*நிகழ்த்து வெந்நீர் தனிலாதல் கரைத்துகுன்றி கொள்ளில்*
*சாறுகின்ற சலமறிப்புக் கிரிச்சிரனங்கள்*
*சாற்றுயதுன் மாங்கிசத்தின் வளர்ச்சி யோடே*
*சேருமரி சலமதுவு மிலிங்க சூலை*
*செறுத்த கல்லடைப்புநீர் கடுப்புத்தானும்*
*தீருமென வாயுண் மறை யுணர்ந்த மேலோர்*
*செப்பினர்..........................................................................."*

*- ப.ரா.சே*

*பொரிகாரம் — 7.5 கிராம்*

*சீனாக்காரம், வெண்காரம், நவாச்சாரம், இந்துப்பு, சவர்க்காரம், மஞ்சள், சீதேவிசெங்கழுநீர், வெள்ளரிவித்து வகைக்கு 5.1 கிராம் வீதம் சேர்த்து அரைத்து பின் செவ்விளநீர் விட்டரைத்து குன்றி போல உருட்டி உலர்த்திக் கொள்ள வேண்டும்.*

*அனுபானம்: இளநீர், முருங்கையிலை குடிநீர், அரைக்கீரை குடிநீர், வெந்நீர்.*

*தீரும்நோய்கள்: மூத்திர கிரிச்சரம், நீர்க்கட்டு, சதையடைப்பு, நீரடைப்பு, கல்லடைப்பு, இலிங்க சூலை.*

**பால சஞ்சீவி மாத்திரை**

*திரிகடுகு வெங்காரஞ் சாதி லிங்கஞ்*
*சிறந்திடவே யைம்மருந்துஞ் சமன தாக*
*நெறிபடவே யெலுமிச்சம் பழத்தின் சாற்றால்*
*நெகிழவரைத் தொருசாம நிறைய நாகக்*
*குறியுடனே யுண்டைதனைப் பயற்றிற் பாதி*
*குளிர்நிழ றனிலுலர்த்திக் குழவிக் கீய*
*மறிபடவே பாலசஞ் சீவி யென்று*
*வகுத்துரைத்தார் மலைமுனிவர் மண்ணுளோர்க்கே*
*மலைமுனிவர் தானுரைத்த வகையே தென்னில்*
*மாந்தகண சுரதோடம் வயிற்றி னோட்டம்*
*கொலை செய்யும் பித்தமுத லிருமல் வாந்தி*
*குலைந்திடு நோய்யுள்ளதுவுங் குடிதான் போக*

நிலைபெறவே பத்திரியைப் பிட்ட தாக்கி
நீர்வாங்கித் திரிகடுகு கற்கமாக்கி
உலையுயர்த்த கியாழமதில் கற்க மோடு
உண்டையொன்று தானெடுத்தீய்ந்தி டாயே
உரைத்திடுமே புறவிருமல் கணநா முள்ளு
உவந்த கோரோசனமு மொக்கக் கூட்டிக்
கரைத்திடுங்கா விரத்தகண மூலங் கண்டால்
கடுகவே சாதிக்காய் புளியந் தோடு
அரைத்திடுமே யுண்டையொன்று சுக்குங் கூட்டி
யருந்திடவே வில்வப்பழச் சதைக்குள் வைத்து
வரைத்திடுமென் றருள்முனிவர் விபரஞ் சொன்ன
பாலசஞ் சீவியென்றே வகுக்க லாமே
வருக்குங்கால் பத்திரிதன் வகையைக் கேளு
மணித்துளசி செம்முள்ளி யாடா தோடை
பருந்திடுவாய் தூதுவளை விட்ணு காந்தி
பண்புசெறி கண்டங்கத் தரியி னோடு
நிகழ்ந்திடுமே வெதுப்படக்கி பேய்ப்பு டோலும்
நின்றசங்க னிலைநொச்சில் நிறைதான் கூட்டிச்
செருத்திடுமே சுவாசசுர கணதோ டங்கள்
தெரிந்துரைத்தார் மாமுனிசஞ் சீவி யென்றே.

- *சி.வை.தி*

திரிகடுகு, வெங்காரம், இலிங்கம் சம எடையாக எடுத்து முறைப்படி சுத்தித்து கலவத்திலிட்டுப் பொடித்து, பழச்சாற்றால் 3 மணி நேரம் நன்றாக அரைத்து, பாசிபயற்றில் பாதியிருக்கும் படியாக உருட்டி நிழலில் உலர்த்தி எடுத்துக்கொள்ள வேண்டும்.

*அளவு: 1 & 2 மாத்திரை*

குழந்தைகளுக்கு உண்டாகும் மாந்தம், கணம், சுரதோடம், வயிற்றோட்டம், பித்த இருமல், வாந்தி இவைகளுக்கு மாசிப் பத்திரி, பிட்டவியல் சுரசத்தில், திரிகடுகு, சேர்த்து மாத்திரையுடன் கொடுக்கத் தீரும்.

சுரம், இருமல் கணம், நாமுள் இவைகளுக்கு கோரோசனத்தைக் கூட்டிகொடுக்கத் தீரும்.

இரத்த கணம், மூலம் இவைகட்குச் சாதிக்காய், புளியம் வித்துத்தோல், சுக்கு, வில்வப் பழச்சதை இவைகளில் கொடுக்கத் தீரும்.

மணித்துளசி, செம்முள்ளி, ஆடாதோடை, தூதுவளை, விஷ்ணுகாந்தி, கண்டங்கத்திரி, வெதுப்படக்கி, பேய்புடல், சங்கனிலை, நொச்சி இவைகளின் சாறுகளைச் சமமாகக் கூட்டிய அளவுடன் மாத்திரை சேர்த்துக் கொடுக்கச் சுவாச சுரம், கணதோஷங்கள் தீரும்.

## கோடாசிலை மாத்திரை

வழங்குகோ டாசிலை மாத்திரைகந்தகம்
பழஞ்சிலை யிரண்டு நேர்பாதி திரிபலை
வேலிப்பருத்தி நீர் விட்டரைத்தப்பயறுபடி
மேலொத்த மாத்திரை வெய்யிலிலுலர்த்திவெந்
சிரி லுரைத்துண நீங்கிடும் வாத நோய்
மாரிலுண பரும் வாத கயமரும்
பேராண்மை யாக்கை பெறவுரந் தந்திடும்.

- தே.கா

மனோசிலை

கந்தகம்: வகைக்கு ஒருபங்கு

திரிபலை: 1/2 பங்கு

எடுத்து அனைத்தையும் ஒன்றுசேர்த்து நன்கு அரைத்து பின் வேலிப்பருத்திச்சாறு விட்டு நன்கு அரைத்து மாத்திரை உருட்டும் பக்குவத்தில் வழித்து பயறளவாக உருட்டி வெய்யிலில் உலர்த்திக் கொள்ள வேண்டும்.

அளவு: 1 & 2 மாத்திரை வெந்நீரில் கொள்ள வாதநோயும் நீரில் கொள்ள வாதகபநோயும் நீங்கும். உடலுக்கு நல்ல வலுவைத்தரும்.

## பிரமானந்த பைரவ மாத்திரை

"டங்க ணம்பரை நாத காண்டீபம்
தாரமாம் விட நாகரம்
தங்களுக்கெடை தான்நி றைச்சரி
ஜாதி லிங்கமோ டேழுமே
அங்கதுள் விட மாற்றி யல்லோநீ
ராட்ட நற்றின மாமணி
சங்க ரித்திடு மிஞ்சி நீர்மது
சாற்றச் சந்நிசு ரங்களே."

- சி.வை.தி

பொரித்தவெங்காரம்
சுத்தித்தகந்தகம்
சுத்தித்த மனோசிலை
சுத்தித்த அரிதாரம்
சுத்தித்த நாபி
சுக்கு
வகைக்கு 1 பங்கு
சுத்தித்த இலிங்கம் 6 பங்கு

எடுத்து இஞ்சிச்சாறு விட்டு ஒரு நாள் அரைத்து 65 மி.லி அளவு மாத்திரைகள் செய்து நிழலில் உலர்த்த எடுத்துக் கொள்ள வேண்டும். அனுபானம்: தேன், இஞ்சிச்சாறு

தீரும்நோய்கள்: சன்னி, சுரங்கள் தீரும்.

**வசந்த குசுமாகரம் மாத்திரை**

வனி டங்கண மலரம் பொலி வகை யக்கர மதுரம்
இன கஃசெடை யிடுவச்சல மணி காஷ்மீர மீசன்
தனி நிட்கம தளதள விஞ்சறல் சனுபாலரை சதுநாள்
பனி யின்பய றளவா மதுபகல் முன்பனிபிணியே
பிணியெ னத்தெறி பேசு நூற்சுரம்
தணியு மேகப காச தாகநீர்
துணிய மூத்திரம் தும்ம லேப்பமும்
அணுகிடாதிதை யன்பொ டுண்ணவே.

- சி.வை.தி

சுத்தித்த இலிங்கம்
பொரித்த வெங்காரம்
இலவங்கம்
திப்பிலி
கோஷ்டம்
அக்கராகாரம்
அதிமதுரம், வகைக்கு 8.75 கிராம்
கோரோசனம்
குங்குமப்பூ

பச்சைக் கற்பூரம் வகைக்கு 4.2 கிராம் எடுத்து, சூரணம் செய்ய வேண்டிய சரக்குகளை சூரணித்துப் பின் தாதுச்சரக்குகளை கல்வத்திலிட்டுப் பொடித்து அனைத்தையும் சேர்த்து இஞ்சிச்சாறு விட்டு இரண்டு நாளும், தாய்ப்பால் விட்டு இரண்டு நாளும்

நன்றாக அரைத்து 65 மி.கி அளவு உருட்டி நிழலிலுலர்த்த வேண்டும்.

அனுபானம்: தேன், தாய்ப்பால்

தீரும்நோய்கள்: சுரங்கள், கபகாசம், தாகம், சிறுநீர் நோய், தும்மல், ஏப்பம் இவைகள் தீரும்.

**சுவாச குடோரி மாத்திரை**

வெள்ளெருக்கம் பூமிளகு வேண்டிச் சரிநிறையைத்
தள்ளா தரைத்துத் தனிக்குன்றி — விள்ளொன்று
தாளிசபத்திரிக் குடிநீர் தாக்கச்சு வாசமுடன்
கேளிருமல் காசமிலை கூறு. - சி.வை.தி.

வெள்ளெருக்கம்பூ, மிளகு இவற்றைச் சரி நிறையாகக்கொண்டு கல்வத்திலிட்டு நன்றாக அரைத்து குன்றி அளவுமாத்திரை செய்து, நிழலில் உலர்த்திக் கொள்ளவேண்டும்.

அளவு: ஒன்று அல்லது இரண்டு மாத்திரை
அனுபானம்: தாளிசபத்திரிக் குடிநீர்
தீரும்நோய்கள்: சுவாசம், இருமல், காசம் தீரும்.

**திரிதோட மாத்திரை**

மிளகுநால் வீரமொன்று வீழ்ந்தரையக் காய்நீர்
மிளகளவா யுண்டை விரவித் தளராமல்
முத்தோட முண்டானால் முட்டொன்று தக்கப்படி
முத்தோட மாத்திரையா முன். - சி.வை.தி

சுத்தித்த வீரம் — 1 பங்கு

மிளகு 4 பங்கு, எடுத்து கல்வத்திட்டு மிளகுக் குடிநீரினால் நன்றாக அரைத்து, மிளகு அளவு மாத்திரைகள் செய்து நிழலில் உலர்த்தவும்.

அளவு: 1 & 2 மாத்திரை

அனுபானம் தேன், வெந்நீர், சுரக்குடிநீர்

தீரும்நோய்கள்: சன்னி, குளிர்சுரம், கபசுரம் இவைகள் தீரும்.

குறிப்பு: இம்மாத்திரை செய்து ஒரு திங்கள் பழகிய பிறகே பயன்படுத்துவது நலம்

பத்தியம்: உப்பு நீக்கிய கஞ்சியைப் பயன்படுத்த வேண்டும்.

# கடுகு

உரிய சாறு அல்லது குடிநீருடன் கற்க திரவியங்கள் மற்றும் நெய்வகைகளைக் கலந்து காய்ச்சி கடுகு பக்குவத்தில் இறக்கி கடுகுடன் சேர்த்து நெய்யை உட்கொள்ளும் மருந்து முறை.

இதன் ஆயுட்காலம் — 1 ஆண்டு

**கார்ப்பாசக் கடுகு**

கார்ப்பாசிக் கொட்டையின்பால் குருணிகொண்டு
கன்னலெனுஞ் சக்கரைச் சேருகூட்டி
நேர்ப்பாக அளவிட்டுப் பாகதாக்கி
நெய்நாழி நல்லெண்ணெய் நாழிரெண்டும்
சேர்ப்பாக மெழுகுபத மாக்கிக் கொண்டு
தினங்கரண்டி கடுகெண்ணெயுண்டாயானால்
நேர்பாகும் வெகுமூத்திர மெரிவுதானும்
நிற்குமென முன்னோர்கள் நிகழ்த்தினாரே.

- யா.வை.சி

பருத்திக் கொட்டைபால், 8 படி கரும்பு சர்க்கரை — 280 கிராம் சேர்த்து அடுப்பேற்றி பாகு பதத்தில் பசுநெய் — 2 லிட்டர், எள்நெய் 2 லிட்டர் சேர்த்து காய்ச்சி மெழுகு பதத்தில் இறக்கி கொள்ள வேண்டும்.

அளவு: 5 முதல் 10 மி.லி. வரை

தீரும் நோய்கள்: அதிமூத்திரம், நீர் எரிச்சல், தாகம்.

**நெய்கடுகு**

கூட்டடா நெய்க் கடுகொன்று கேளு
கூறான சாரணையின் சாறுபடி யொன்றுவிட்டு
பூட்டடா விலைக்கள்ளிப்பால் படி காலாகப்
புகழான பசுவினெய்படி காலாகும்
நாட்டடா கோவினீர் படிரண்டாகும்
நன்றாக வொன்றாக அடுப்பிலேற்றே
ஏற்றியே கடுகு பதமாக வாங்கியெடுத்து
வெருகடி கொள்ள தீரும் நோய் கேள்

மாற்றுமே நீராம்பல் பேராம்பலோடு வயிற்றில்
வந்த நோயெல்லாம் வாங்கிப் போகும்.

- அ.வை.கா

| | | |
|---|---|---|
| சாரணைச்சாறு | — | 2.லிட் |
| இலைக்கள்ளிப்பால் | — | 500 மி.லி |
| பசுநெய் | — | 500 மி.லி |
| பசுநீர் | — | 4 லிட் |

அனைத்தையும் ஒன்றாக கலந்து அடுப்பேற்றி எரித்து கடுகு பதத்தில் இறக்கி கடுகு எண்ணெயுடன்சேர்த்துக் கொடுக்க வேண்டும்.

அளவு: 2 மி.லி முதல் 5 மி.லி வரை

தீரும் நோய்கள்: நீராம்பல், பேராம்பல், வயிற்றுநோய்.

**நாவல் கடுகு**

"மாங்கொட்டை திப்பிலி பொடுதலைக் காய் களிப்பாக்கு
வகையரைப் பலமாம் மரிச மொருபலமு
னெங்குறு நாவனிலைச் சாறு நாழியுடனரைத்து
இதுவுருட்டிக் கரையாமல் எருமை மோருறி
வாங்கியது நல்லெண்ணை நாழியது கூட்டி
மறுவிட யெரித்து கடுகு பாக்களவு
தாங்கொள்ள நாலு காசிடையு மெண்ணெய்
தள்ளி விடு சீழ்மூல மெள்ள வது கெடுமே."

மாங்கொட்டை பருப்பு
திப்பலி
பொடுதலைக்காய்
களிப்பாக்கு வகைக்கு 17.5 கிராம்,

மிளகு: 35 கிராம் இவற்றை நாவலிலைச்சாறு விட்டு நன்றாக அரைத்து நாவலிலைச்சாறு 1.3 லிட்டர்

எருமை மோர் 1.3 லிட்டர்

என் நெய் 1.3லிட்டர் கலந்து கரைத்து அடுப்பேற்றி எரித்து கடுகு பக்குவத்தில் இறக்கி கொள்ள வேண்டும்.

ஒரு வேளைக்கு கடுகு பாக்களவும், எண்ணெய் 16.8 கிராம் வீதம் கொடுத்து வர சீழ் மூலம் தீரும்.

## பக்குவம்

மூலிகை, தாது சரக்குகளை அரைத்து, எலுமிச்சம்பழம், குமட்டிப்பழம் போன்றவற்றின் உள் அடைத்து சீலை செய்து பூமிபுடம் வைத்து எடுப்பதுவும், உப்புகளில் சரக்குகளை ஊற வைத்து எடுப்பதுவும், பக்குவம் என்றே குறிப்பிடப்பட்டுள்ளது. இதுவே ஊறுகாய் என்றும் பல நூற்களில் பேசப்படுகிறது.காடியில் பக்குவப் படுத்தும் முறைகளும் நூற்களில் குறிப்பிடப்பட்டுள்ளது.

இதன் ஆயுட்காலம் — 1 ஆண்டு

### இந்துப்பு பக்குவம்

எலுமிச்சங் கனியதனை நாலாய்கீறி
யிந்துப்பு மிளகு கடுகு சுக்கு
வரப்பொடியுஞ் சமனாய் கொண்டு
எலுமிச்சங் கனியதனிலுட் பொதிந்தே
ரவிமுகத்தில் வைத்தெடுத்து நேரமொன்றுக்
கலைவின்றி யொருகீறு தின்னமாறு
மகலாத பாண்டு காமாலைதானே.

இந்துப்பு, மிளகு, பூண்டு, கடுகு, சுக்கு, சுத்தித்த அயப்பொடி சமஎடை எடுத்து கரிசாலைச் சாறு விட்டு நன்கு அரைத்து, எலுமிச்சம் பழத்தை நான்காய் கீறி அதற்குள் கற்கத்தை அடைத்துக்கொள்ள வேண்டும்.இவ்விதம் எஞ்சிய கற்கத்தையும்,தேவையான எலுமிச்சம் பழத்துள் அடைத்து, ஒரு மண்டலம் சூரிய புடம் வைத்து எடுத்துக் கொள்ள வேண்டும்.

அளவு: 1 கீற்று — ஒரு வேளை

தீரும் நோய்கள்: பாண்டு, காமாலை

### நெல்லிக்காய் பக்குவம்

நெல்லிக்காய் — 2 படி

தேன் — 1050 கிராம்

சீரகம் — 350 கிராம்

சர்க்கரை — 1750 கிராம், எடுத்துக் கொள்ள வேண்டும்.

நெல்லிக்காயை ஈச்சமுள் கத்தையினால் குத்தி சுண்ணாம்புத் தெளிநீரில் மூன்று மணி நேரம் ஊற வைத்து அடுப்பேற்றி இளஞ்சூடுண்டாகக் காய்ச்சி இறக்கி ஆற விட்டு குளிர்ந்த நீரினால் கழுவி மெல்லிய துணியினால் ஈரமில்லாமல் துடைத்து

ஒரு மண் பாத்திரத்தில் போட்டு, சீரகத்தை சூரணித்துச் சேர்த்து, தேனையும், சர்க்கரையும் சேர்த்து பாத்திரத்தின் வாயை மூடி சீலைமண் செய்து 40 நாள் புதைத்து வைத்தெடுக்க வேண்டும்.

அளவு: 25 கிராம் முதல் 30 கிராம், காலை மாலை இருவேளை

தீரும் நோய்கள்: பித்தம், அஸ்தி சுரம், கைகால் எரிச்சல் தீரும். கண் குளிரும்.

**சாரணை பக்குவம்**

சாற்றிடு நல்லூ றுகாய் பாண்டு வீக்கஞ்
சலி கெடுக்குங் காமாலை சோபை போகத்
தேற்றமுறு சாரணவேர் சித்திர மூலஞ்
செய்ய நாயுருவி கரிசாலை நீர்முள்ளி
தோற்று மிவை வேரிரு சீரகங் கடுக்காய்
சொற்காந்த முள்ளி மிளகசமதாகம்
நாற்றமுறும் நெல்லி கெந்தி
கடுகு மிந்துப்பு கிட்டமுறு
மரபொடி முக்கழஞ்சு கூட்டிக்
விளர் கையான்ற கரைச் சாற்றாலரைத்து
நண்டமறு தெலுமிச்சம் பழத்தைக் கீறி
நவின் மருந்தையுட் பொதிந்தோர் கலையந்தன்னில்
இட்டதன் மேல் நல்லெண்ணெய் தானும் விட்டே
யேழு நாளடுப்பில் புதைத்தெடுத்துக்
கட்டமற வே தின்னத் தீருங் கண்டீர்.

- ப.ரா.சே.

சாரணைவேர்
சித்தரமூலம்
நாயுருவி வேர்
கரிசாலை
நீர்முள்ளி
கருஞ்சீரகம்
சீரகம்
கடுக்காய்தோல்
காந்தம்
உரித்த பூண்டு
மிளகு

ஓமம்
சுத்தித்தகந்தி
கடுகு
இந்துப்பு

சுத்தித்த அயப்பொடி: வகைக்கு 15.3 கிராம், எடுத்து பொடித்து, பொற்றிலைகையான் சாறு விட்டு அரைத்து 6 எலுமிச்சம் பழத்தை நான்காய் கீறி அதில் முன் கற்கத்தைப் பொதிந்து ஒரு கலையத்துள் வைத்து, பழம் மூழ்கும் மட்டும் எள் நெய் நிரம்ப விட்டு 7 நாள் புதைத்து வைத்து பின் எடுத்துக்கொள்ள வேண்டும்.

அளவு: 1 பிளவு — இரு வேளை

தீரும் நோய்: பாண்டு, சோகை, காமாலை

**அயசம்பீர கற்பம்**

ஆட்டுக் துகள்கறி திரிதொடிபப்பத் தரைய யெண்ணருணக்
காட்டுக்கனியுள்வை யைம்பூ தத்தொரு கலமுள்ளிடு திலநெய்
கூட்டுத் தொகை முற்கடத்திடு சில்லிடு குழையிடு மண்டலமே
ஓட்டுப்பிளவொன் றிருபோ துணுபாண் டோடுசோபையுமறுமே.

- கு.தா.சி

சுத்தித்த அயப்பொடி
மிளகு
பூண்டு வகைக்கு — 17.5 கிராம்
எலுமிச்சம் பழம் — 40எண்

முதலில் அயப்பொடி, மிளகை சேர்த்து நன்கு அரைத்து அத்துடன் உரித்த பூண்டையும் சேர்த்து அரைத்து, எலுமிச்சம் பழங்களை கீறி அதற்குள் கற்கத்தை 40 பங்காக பிரித்து பொதிந்து ஒரு கலயத்துள் அடுக்கி பழம் மூழ்கு மட்டும் 1750 கிராம் எள்நெய் வார்த்து மேலோடு மூடி உரிய சீலைமண் செய்து பூமியில் 40 நாட்கள் புதைத்துவைக்க வேண்டும். பின் எடுத்து கொள்ள வேண்டும்.

அளவு: ஒரு பிளவு இரண்டு வேளை

தீரும் நோய்கள்: பாண்டு, சோகை

**குமட்டி பக்குவம்**

"காணவே குமட்டிகாயை வாங்கிக்
கத்திகொண்டுபதினாறு கீற்றாய்க் கீறி
காணவே ஐந்து வகை லவணமூட்டிக்

கலசத்திலிட்டடைத்து ஆவிற்கொட்டந் (பசுகொட்டி)
தோணவே புதைத்ததன் பின்னதிலே
சரக்குடனே பட்சமொடு சென்று வாங்கு
ஆணவே நாளொன்றுக்கொரு கீற்றப்பா
அருந்தி பத்தியமா யிருந்திடாயே
இருந்திட மகோதரமும் விஷநீர் சோபை
இனிதான சலக்கோவைப் பற்கௌசி
அருந்தியே யிவையெல்லாஞ் தீருஞ் சொன்னேன்."

பஞ்சலவணத்தை சமஅளவு எடுத்து அரைத்து குமட்டிக்காயை 16 பங்காக கீறி அதனுள் அடைத்து, கலயத்திலிட்டு மூடி பசுகொட்டடியில் 40 நாட்கள் புதைத்து வைத்தெடுக்க வேண்டும்.

அளவு: 1 கீற்று

தீரும் நோய்: மகோதரம், விஷநீர்க்கோவை, கவிசை.

பத்தியம்: இச்சா பத்தியம்.

# தேனூறல்

பலவகைச் சரக்குகளைப் புதிய தேனில் ஊற வைத்து எடுத்துக் கொள்வது.

நெல்லி, அகத்தி, கண்டங்கத்திரி, தூதுவேளை போன்றவற்றின் உலர்ந்த பழவகைகள், இலவங்கம், இஞ்சி இவற்றைத் தேனில் ஊறவைத்து தினமுறையாக உண்டு வர இம்மருத்துவமுறை மிகச் சிறப்புடையது.

இதன் ஆயுட்காலம் — ஓர் ஆண்டு.

**இலவங்கத் தேனூறல்**

"லவங்கத்தான் மிகச்சீர் வரும்"

பச்சை இலவங்கத்தை வேக வைத்து நீரை இறுத்து விட்டு குளிர்ந்த நீரால் கழுவித் துடைத்து இரண்டு பங்கு தேனைக் காய்ச்சி ஒரு பாத்திரத்தில் போட்டு மூடி 40 நாள் வெய்யிலில் வைத்து எடுக்க வேண்டும்.

1 முதல் 21 நாள் வரை ஒவ்வொன்றாக அதிகப் படுத்தி பின் குறைத்து உண்டு வர மூர்ச்சை ரோகம், கிராணி போகும்.

**இஞ்சி தேனூறல்**

இஞ்சியை தோல்சீவி கழுவித் துடைத்து சிறு சிறு கீற்றுகளாக வெட்டி தேனில் ஊறவைத்து எடுத்துக் கொள்ள வேண்டும்.

1 முதல் 2 கீற்று வரை அதிகாலையில் வெறும் வயிற்றில் உண்டு வர அசீரணம், செரியாமை, புளியேப்பம் தீரும்.

**கடுக்காய்த் தேனூறல்**

"ஏங்க லொடுங்குஞ் கடுக்காயுணே"

பச்சைக் கடுக்காய் பிஞ்சை ஈச்சமுள் கத்தையினால் குத்தி கழுவி துடைத்து ஒரு பாண்டத் திலிட்டு இரண்டு பங்கு தேனைக் காய்ச்சி ஊற்றி 1 நாள் பக்குவப் படுத்திக் கொள்ள வேண்டும். மறுநாள் முதல் (5.25 கி) வீதம் கொள்ள அசாத்திய வாத நோய்க் கூட்டத்தைப் போக்கி உடலை பாதுகாக்கும் என்பதாம்.

**கண்டங்கத்திரி தேனூறல்**

கண்டங் கத்திரி பழத்தை கழுவி துடைத்து பாத்திரத்திலிட்டு மூழ்குமட்டும் தேன் விட்டு ஊறவைத்து நன்கு ஊறிய பின் எடுத்துக் கொள்ள வேண்டும்.

வேளைக்கு ஒரு பழம் வீதம் கொடுத்துவர ஈளை, இருமல், நாட்பட்ட கோழை, இரைப்பு தீரும்.

### அத்திக் காய் தேனூறல்

அத்திக்காயை கழுவி துடைத்து தட்டி உலர்த்தி மூழ்கு மட்டும் தேன் ஊற்றி ஊறவைத்து தினம் ஒரு காய் வீதம் தேனுடன் உண்டு வர கற்பமாகும்.

# தீ நீர்

**வேறு பெயர்கள்**

1. புகை நீர்
2. தீ நீர்
3. துருதி

**இயல்**

மூலிகைச் சரக்குகளையேனும், தாதுசரக்ககளையேனும்நீர்விட்டோ அன்றி நீர் விடாமலோ எரித்துப் புகை உண்டாக்கி, புகையைக் குளிர வைத்து பெறப்படுகின்ற நீர் வடிவில்பெறப்படும் மருந்து முறை.

மூலிகை இனங்களை எரித்துப் பெறப்படுகையில் தீநீர் எனவும், காரசாரங்களை எரித்துப் பெறப்படுகையில் திராவகம், புகைநீர் எனவும் பேசுதல் வழக்கிலுள்ளது.

**தீநீர்க் கருவி**

வாலைச் சட்டி, பானை ஆகிய இரு கருவிகள் இணைந்து அமைவது தீநீர்க் கருவி. இது மண்ணாலும், உலோகங்களாலும் செய்யப்படுகிறது.

மூலிகை இனங்களைக் கொண்டு தீநீர் வடிக்கையில் மண் மற்றும் உலோகக் கருவிகளையும், உப்புக்களைக் கொண்டு தீநீர் வடிக்கையில் மண் கருவிகளையும் பயன்படுத்திக் கொள்ள வேண்டும்.

மூலிகைகளைக் கொண்டு தீநீர் வடிக்கையில் ஊற்றிய நீரின் அளவில் முதல் இரு பங்கு நீரை பெற்றுக்கொள்ள வேண்டும். கடை நீரை நீக்கிவிட வேண்டும்.

உப்புக்களை கொண்டு வடிக்கும் நீரில் முதலில் வடியும் நீரை நீக்கி பின் வடியும் நீரைப் பெற்றுக்கொள்ள வேண்டும் என்பது பொது விதியாகும்.

தீநீர் முறைகளில் அனுபானங்கள் கொடுக்கப்படவில்லையாதலால் பொது அனுபானமாக நீரைக்கொள்ளலாம்.

ஆயுட்காலம்: ஒரு ஆண்டு

"இஞ்சி திராவகம்
நல்லிஞ்சி தூக்கொன்று யிடித்துச் சாறு
நலமாகப் படியெட்டுக் கடத்திலிட்டு
மெல்லவே ஓமமிடு நீரில் நேராய்

விதமாக வாலையிட்டு வடித்து உண்ணக்
கொடுமையுள்ள வாயுமுதல் வெப்பும் போகும்
மெல்லவே பிணியெல்லா மகன்றுபோகும்
மேதினியில் யாகோபு விளம்பினாரே."

- ஷீ.யா.வை.சி.

இஞ்சி தோல் சீவி இடித்து சாறுபிழிந்து 10.4லிட் சாறு கடத்திலிட்டு அத்துடன் ஓமம் எட்டுபடி சேர்த்து வாலைச்சட்டியை கடத்தின்வாயில் பொருந்த வைத்து சீலை மண் செய்து கடத்தை அடுப்பேற்றி எரித்து தீநீர் இறக்கிக் கொள்ள வேண்டும்.

*அளவு: 5 மி.லி முதல் 15 மி.லி*

திரும் நோய்கள்: வாயு, வெப்பு, குன்மம்.

**சுண்டைவற்றல் திராவகம்**

*சுண்டைவற்றல் மாம்பருப்பு கருவேப்பிலை*
*சுக்கோ டோமம் நெல்லிக்காய் வற்றல்தானும்*
*பண்டைவெந் தயமொடு வகைக்குச் சேரு*
*பாவகமாய் வார்த்தெருமைப் பாலிலாட்டிக்*
*கண்டுதயிர் மிதக்கவிட்டுத் திரிநா ளூறில்*
*கனமான வாலையிட்டுப் புகைநீர் வாங்கி*
*உண்டால் நீ கிராணியெல்லாங் கடலேபுக்கும்*
*உற்றுணர்ந்து யாகோபு உரைத்தார் தாமே.*

*- யா.வை.சி*

*சுண்டைவற்றல்*
*மாம்பருப்பு*
*கருவேப்பிலை*
*சுக்கு*
*ஓமம்*
*நெல்லிவற்றல்*

வெந்தயம்: வகைக்கு 280 கிராம் எடுத்து சூரணித்து எருமைப்பால் விட்டு ஆட்டி, எருமைத் தயிர் மூழுகும்படி விட்டு 3 நாட்கள் ஊறவைத்து வாலைச்சட்டியை கடத்தின்வாயில் பொருந்த வைத்து சீலை மண் செய்து கடத்தை அடுப்பேற்றி எரித்து திராவகம் வடித்து கொள்ள வேண்டும்.

*அளவு: 5 முதல் 25 மி.லி*

தீரும் நோய்: கிராணி

**திரிகடுகு திராவகம்**

*திரிகடுகு ஏலஞ்சீ ரகமும் ஓமம்*
*சேரநிரை வகைக்கொன்று அம்மியிட்டுக்*
*குரிமடியப் பொடியாக்கிச் சாலிலிட்டுக்*
*குற்றமறப் பாணியது மிதக்கவிட்டுக்*
*பரிவாகத்திரிநாளில் வாலைமூடிப்*
*பக்குவமாய்ப் புகைநீரை வாங்கி நீயும்*
*பிரியமுடனுட் கொண்டுவர உஷ்ணவாய்வு*
*சேரிய சயமிருமல் போகுந்தானே.*

*- யா.வை.சி*

*சுக்கு*
*மிளகு*
*திப்பிலி*
*ஏலம்*
*சீரகம்*

*ஓமம்: வகைக்கு 280 கிராம் எடுத்து பொடித்து, மூழ்கும் வரை நீர் ஊற்றி மூன்று நாள் ஊறவைத்து வாலை மூடி,சீலை மண் செய்து, எரித்து திராவகம் வடித்து கொள்ள வேண்டும்.*

*அளவு: 10.மி.லி*

*தீரும் நோய்கள்: உஷ்ண வாயு, சயநோயில் காணும் இருமல் தீரும்.*

**சேங்கொட்டைத் திராவகம்**

*சேரிரண்டு சேங்கொட்டை இடித்துச் சாலில்*
*செலம்பதக்கு விட்டரையும் கலந்துமூடி*
*ஊறியநாள் ரெண்டதன்பின்வாலைவைத்து*
*சீராகவாங்கி யிதைக் குப்பியிட்டுத்*
*தினங்கொண்டால் வாதபித்த யெரிவுசோபம்*
*நீரிழிவு வயிற்றிரைச்சல் நீங்காத்தாகம்*
*நிறுத்துமென்று யாகோபு நிசஞ்சென்னாரே.*

*- யா.வை.சி*

*சேராங்கொட்டை 560 கிராம் இடித்து ஒரு பானையிலிட்டு 21.5 லிட்டர் நீர்விட்டு 2 நாள் ஊறவைத்து பானையின்வாய்க்கு வாலையைப் பொருத்தி, சீலை மண்செய்து எரித்து, வடியும் திராவகத்தை சேகரித்துக் கொள்ள வேண்டும்.*

*அளவு: 2 மி.லி முதல் 5 மி.லி வரை*

*தீரும் நோய்கள்: வாதபித்த எரிவு, நீரிழிவு, வயிற்றிரைச்சல், நீங்காத்தாகம் தீரும்.*

**சந்தனத் திராவகம்**

*சந்தனமும் வெட்டிவேர் ஏலஞ்சோம்பு*
*சமனிடித்துப் பொடியாக்கிச் சாலிலிட்டு*
*சிந்திவிடும் நீர்பதக்கு இருநாளூறில்*
*செலுத்திவிடு வாலையில் திராவகத்தை*
*கந்தர்பச்சைக் கற்பூரம் பொடித்துப் போடு*
*காசிக்குப்பி தனிலடைத்து உண்டாயானால்*
*விந்திறுகிக் குளிர்ந்துவிடுந் தாபசோபம்*
*வெதுப்படங்கித் தன்னுடம்பு வலுக்குந்தானே.*

*- யா.வை.சி*

| | | |
|---|---|---|
| *சந்தனம்* | — | *280 கிராம்* |
| *வெட்டிவேர்* | — | *280 கிராம்* |
| *சோம்பு* | — | *280 கிராம்* |

*ஏலம்: 280 கிராம் எடுத்து இடித்து பானையிலிட்டு 21.5 லிட்டர் நீர்விட்டு 2 நாள் ஊறவைத்து பானையின்வாய்க்கு வாலையைப் பொருத்தி, சீலை மண்செய்து எரித்து, திராவகம் வடித்து அதில் பச்சை கற்பூரம் பொடித்து சேர்த்துக் கொள்ள வேண்டும்.*

*பச்கைற்பூரம் அளவு கொடுக்கப்படவில்லையாதலால் மருத்துவன் நிர்மாணித்துக்கொள்ள வேண்டும்.*

*அளவு: 5மி.லி முதல் 15 மி.லி வரை*

*தீரும் நோய்கள்: உட்டிண ரோகம்.*

## மெழுகு

தாதுச் சரக்குகள், மூலிகைச் சரக்குகள் இவற்றை உரிய திரவப் பொருள் விட்டு அரைத்தோ, சுருக்குக் கொடுத்தோ, மெழுகு பக்குவத்தில் எடுத்துக் கொள்ளும் மருந்து முறை.

இம் மருந்து முறையின் ஆயுட்காலம் 5 ஆண்டுகள்.

### எட்டிப்பழ மெழுகு

ஒப்பும் தோஷ சகல விஷங்கட்கு
ஒப்பும் எட்டிப் பழந்தன்னை வாங்கியே
துப்பும் வேப்பெண்ணைச் சரிசமமாய் கூட்டியே
கப்பு மெழுகு போல் காய்ச்சி வடித்திடே
வடித்துமே செப்பில் வாகாக முடியே
துடித்த விஷங்கள் தீண்டின பேருக்கு
வெடித்து தூதுளங்காய ளவாகவே
நடித்திரு போதுண்ண வல்விஷந்தீருமே.

- தே.வை

### எட்டிப்பழச்சதை

வேப்பநெய் சம அளவு எடுத்துக்கலந்து அடுப்பேற்றிக் காய்ச்சி மெழுகு பக்குவத்தில்எடுத்துக் கொள்ள வேண்டும்.

அளவு: தூதுளங்காயளவு

தீரும்நோய்கள்: கடிவிடம்

### காக்கைவலி மெழுகு

அறையுங் காக்கை யலரும் வலிகட்கு
நிறையு மேலம் நெருங்கு நேர்வாளமும்
குறையும் லிங்கங் குறிக்குஞ் சவ்வீரமாம்
வறையும் நன் மிளகு சமன் தூக்கிடே.
தூக்கி யொன்றாய் துவளப் பொடித்துமே
தாக்கிக் கல்வந் தனியக் கலந்துமே
போக்கில்லாமல் புகனுநற்றேனதில்
வாக்குத் தப்பால் வாகா யரைத்திடே

அரைத்த மெழுகு வறியதோர் குன்றியதாய்
நிரைத்த மண்டல நேரா யிருவேளை
பரைத்து பத்தியம் பாங்காயருந்திடில்
கரைத்துமே வலி காக்கை தானோடுமே

ஓடும் பத்திய மொருங்கும் பயற்
தேடும் வவ்வாறு தேர்ந்த முதலை
கடுமே புறா காடை சுறாவுமுள்
கோடுமே கருங்கோழி யருந்திடே தே.வை

ஏலாசி

சுத்தித்த நேர்வாளம்

சுத்தித்த லிங்கம்

சுத்தித்த வீரம்

மிளகு சம எடை எடுத்து கல்வத்திலிட்டு நன்கு பொடித்து தேன்விட்டு அரைத்து மெழுகு பதத்தில் வழித்துக் கொள்ள வேண்டும்.

அளவு: குன்றி எடை, இருவேளை ஒரு மண்டலம்.

தீரும் நோய்: காக்கை வலி

பத்தியம்: வவ்வால், முதலை, புறா, காடை, சுறா, கருங்கோழி உண்ணலாம்.

**இடிவல்லாதி மெழுகு**

ஒன்றான வல்லாதி சொல்லக் கேளு
உத்தமனே சேங்கொட்டை பலந்தான் பத்து
நன்றாக மூக்குவெட்டிச்சாணப் பாலில்
நலமாக மூன்றுநாள் ஊறவைத்து
அன்றான கல்லுரலிற் றானே போட்டு
அப்பனே யெள்ளதனை யிடித்துப் போட்டு
கன்றான கொப்பரைத்தேங் காயி ரண்டு
கனிவாகத் தானிடித்து நினைவாய்ப் போடே.

போடே நீ பறங்கியுட பட்டை யப்பா
பொங்கமுட னமுக்கரா சித்திர மூலம்
காடேநீ கத்தூரி மஞ்சளோடு

குணமான கருஞ்சீரம்வா லுழுவை யோடு
தேடேநீ குரோசானி யோ மத் தோடு
தெளிவான வெற்றிலையின் காம்பு தானும்
நாடேநீ கடுக்காயுந் திப்பிலி தானும்
நலமான கோட்டமும் வகைக்குக் கேளே.
கேளேதான் வகைக்கோர் பலமாய்த் தூக்கி
கெணிதமுடன் சூரணமாய்ச் செய்து கொண்டு
வாளேதான் கல்லுரலில் மயனம் போல
வகையாக யிடித்ததனைச் சொல்லக் கேளு
ஆளேதான் ரசகர்ப் பூர மப்பா
அடைவாக வராகனைந்து பொடித்துப் போட்டு
சாடேதான் பனைவெல்லம் பலந்தா னைந்து
சார்வாகப் போட்டிடிப்பாய் தயவாய்த் தானே.
தானென்ன வல்லாதி அந்தி சந்தி
தயவாக வெருகடிமண் டலமே கொள்ள
வானென்ற குஷ்டமொடு கிரந்தி சூலை
வகையாக அரையாப்பு மேக மெல்லாம்
கோனென்ற குன்மமெட்டுஞ் சுக்கில வாய்வு
குணமில்லா ரணமேகங் கிரந்தி தீரும்
ஏனென்ற பத்தியந்தா னிச்சா பத்தியம்
இதமான உப்புமுதல் வறுத்துக் கூட்டே.
கூட்டப்பா தயிர்மோரு நெய்யுமாகும்
குணமான துவரையுட பருப்பு மாகும்
நாட்டப்பா பாசியென்ற பயறு மாகும்
நலமான வல்லாரை பொன்னாங் காணி
ஆட்டப்பா மச்சமென்ற பதார்த்தந் தள்ளு
அடைவாக மற்றெல்லா மாகும் பாரு
ஆட்டப்பா விளக்கெண்ணெய் தேய்த்து மூழ்கு
அடைவாகச் சந்திரன் போல் தேகந் தானே.

- *பு.வை*

பறங்கிப்பட்டை, அமுக்கறா, சித்திரமூலவேர்ப் பட்டை, கஸ்தூரி மஞ்சள், கருஞ்சீரகம், வாலுளுவை, குரோசானி ஓமம், வெற்றிலைகாம்பு, கடுக்காய்த்தோல், திப்பிலி, கோஷ்டம் வகைக்கு 35 கிராம் எடுத்து, நன்றாக இடித்து சலித்து எடுத்துக்கொள்ளவேண்டும்.

350 கிராம் சேங்கொட்டை மூக்கை வெட்டிச் சாணிப் பாலில் 3 நாள் ஊறவைத்துக் கழுவி எடுக்கச் சுத்தியாகும்.

இதனைக் கல்லுரலில் நன்கு போட்டு இடித்து, அத்துடன் 350 கிராம் எள்ளை சேர்த்து இடித்துப்பின், கொப்பரைத் தேங்காய் 2 சேர்த்துப் பூணில்லாவுலக்கையால் நன்றாக இடித்து, பிறகு மேற்படி சூரணம்சேர்த்து மெழுகு போல் ஆகும் வரை நன்றாக இடித்து, 17.5 கிராம் இரசகற்பூரத்தை நன்கு அரைத்து அதில் சேர்த்து பிறகு பனைவெல்லம் 175 கிராம் சேர்த்து, உறவாகும்படி இடித்து எடுத்துக்கொள்ள வேண்டும்.

அளவு: 500 மி.கி காலை,மாலை இருவேளையாக ஒரு மண்டலம்.

அனுபானம்: பனை வெல்லம்

தீரும் நோய்கள்: குஷ்டம், கிரந்தி, சூலை, அரையாப்பு, மேகம், எண்வகை குன்மம், சுக்கிலவாய்வு, இரண மேகம்.

பத்தியம்: இச்சாபத்தியம்;, வறுத்த உப்பு, தயிர், மோர், நெய், துவரை, பாசிப்பயிறு, ஆரைக்கீரை, பென்னாங்காணிக்கீரை இவைகள் ஆகும், மீன் ஆகாது.

ஐந்து நாட் கொருமுறை மருந்தை நிறுத்தி மறுபத்தியம் வைத்து, விளக்கெண்ணெயில் தலை மூழ்கிய பிறகே, மறுமுறை மருந்தை ஆரம்பிக்க வேண்டும்.

# குழம்பு

மூலிகை அல்லது தாது சரக்குகளைத் திரவப்பொருள் விட்டு அரைத்துக் காய்ச்சியோ, காய்ச்சாமலோ குழகுழப்பான பக்குவத்தில் எடுத்துக் கொள்ளும் மருந்து முறை.

இம் மருந்து முறையின் ஆயுட்காலம் 5 ஆண்டுகள்.

## குழம்பு வகை

**சாதிசம்பீரக் குழம்பு**

பாசனத்தி லேயிரண்டு பாத வாலு கம்மதைத்
தேச னம்மு னீரதாக்கு தெள்ளு தரத மாம்மரம்
வாச நன்மெய்ச் சம்ப மாது வண்ண நீர்பெய் பசுமாய்ப்
பேச நீர்சேர் பதமதாக்கு பெரிய சாதிக் குழம்பிதே.

வேந்தர் வாணர் முதலினர்க்கு விள்ளு மக்கு ழும்புசெய்
மாந்த பேதி வெப்புமூர்ச்சை வமன பித்த தாகமும்
சாந்த விந்து தேகவெண்மை சற்று மங்கியின்மையும்
பாந்தள் வாயின் தேரையென்னப் பாறுமீளகு கெண்முனே.

முதலில் சுத்தித்த இலிங்கம் 35 கிராம் நன்றாகப்பொடித்து, எலுமிச்சம் பழச்சாறு 525 கிராமில் கரைத்து வைத்துக்கொள்ள வேண்டும்.

ஒரு அகன்ற மண் அகலுக்குத் துளசிச் சாற்றைப் பூசி இவ் வகலை ஒரு அடுப்பின் மீது வைத்துச் சிறுதீயால் எரிக்க வேண்டும்.அச் சமயத்தில், கற்பூரம் 8.75 கிராம். பொடித்துப் போட்டு உருகும் போது, இலிங்கம் கலந்த எலுமிச்சம் பழச்சாற்றை அகலில் சிறிது சிறிதாக விட்டுத் துழாவி குழம்பு பக்குவமடையும் சமயம் வழித்தெடுத்துப் பத்திரபடுத்த வேண்டும்.

30, 60, 90, 120 மி.கி அளவு நோய் வன்மைக்குத் தக்கவாறு ஒரு நாளைக்கு 3 அல்லது 4 வேளை தரலாம்.

வாந்தி, விக்கல், தாகம், பாண்டு, குழந்தைகட்கு உண்டாகும் மாந்தபேதி, வெப்பு, மூர்ச்சை இவைகள் தீரும்.

- சி.வை.தி

## பாடாணக் குழம்பு

வெள்ளையோடு மனோசிலையும் பெருங்காய
மேன்மையாய் வகைக்கு அரைக் கழஞ்சு கூட்டுத்
தள்ளையென்று நேர்வாளஞ் சுத்தி செய்து
தருவாகக் கழஞ்சுதுவுமோ ரொன்றாய்
வள்ளலே கல்வத்திட் டெருக்கம் பாலால்
மாட்டியரை ஒரு சாமமெழுகு போலே
துள்ளவே பின்பு நிம்ப நெய்தான் விட்டுத்
துரசாக ஒரு சாமமரைத்துக் கேளே
அரைத்து மதைக் கொம்புசிமிழ் தன்னில் வைத்து
அப்பனே விஷந்தீண்டி வந்த பேர்க்கு
திறத்துடனே பயறளவு வெற்றிலை யிலீய்ந்து
தீர்க்கமுடன் கடிவாயிற் கொஞ்சம் பூசப்
பறந்து விடுஞ்சகல விஷங்களும் தீருமென்று
பாடினதோர் தென்மொழி நூல்பாகமப்பா
உரைத்து விட்டேன் பத்தியந் தான்பசுமோரும்

சுத்தித்தவெள்ளைப்பாடாணம்

சுத்தித்த மனோசிலை

பெருங்காயம் — வகைக்கு 3 கிராம்

சுத்தித்த நேர்வாளம் &&9 கிராம்எடுத்து, அனைத்தையும் கல்வத்திலிட்டு எருக்கம் பால் விட்டு ஒரு சாமம் அரைத்து எடுத்துக் கொள்ள வேண்டும்.

அளவு: பயறளவு (65 மிகி)

அனுபானம்: வெற்றிலை

தீரும் நோய்: கடிவிடம் கடிவாயில் குழம்பைவெளிப்பிரயோகமாக பூசவும் வேண்டும்.

பத்தியம்: பசு மோர்

## சாம்பிராணிக் குழம்பு

கணபதிமுன் தூபமதைக் கல்வத்திலரைத்து
கரும்புரச மிடைசேர்த்து அரைத்துக் கொண்டு
பணவிடைதான் நுனிநாவில் தடவிப் பாரு

பஞ்சிலிட்ட தீப்போலே விக்கல்தானும்
சென்மமதிலே ஓடிவிடும் ஓடாவிட்டால்
திரும்பதிரி நாட்கொள்ளச் சணத்திற்புக்குங்
குணமதனை யறிந்துகொள்ளு மென்று சொல்லிக்
குற்றமில்லா யாகோபு கூறினாரே.

- *யா.வை.சி*

சாம்பிராணியை கல்வத்திலிட்டு பொடித்து, கரும்புசாறு விட்டு அரைத்து குழம்புப் பக்குவத்தில் எடுத்துக் கொள்ள வேண்டும்.

அளவு: பணவெடை (488 மி கி)

தீரும்நோய்: நுனிநாவில் தடவ விக்கல் தீரும், தீராவிட்டால் 3 நாள் கொடுக்க தீரும்.

**கொமட்டிக் குழம்பு**

கொம்மட்டிக்காய்ச் சாறு
சம்பீர பழச்சாறு
வெள்ளுள்ளிசாறு
நொச்சிச்சாறு
இஞ்சிச்சாறு வகைக்கு 1 படி எடுத்து ஒன்றாய்க் காய்ச்சி குழம்பு பதம் வருகையில்,
சுத்தித்தசூதம்
சுத்தித்த இலிங்கம்
சுத்தித்தகாந்தம்
பெருங்காயம்
இந்துப்பு
ஓமம்
வெங்காரம்
கடுகு
மஞ்சள்
வெந்தயம்
மிளகு

சுத்தித்தநேர்வாளம்: வகைக்கு 16 கிராம் வீதம்எடுத்து கல்வத்திலிட்டு நன்கு அரைத்து மேற்படி குழம்பில் சேர்த்து அடி பற்றாமல் கிண்டி பழம்புளி போல் காணும் பக்குவத்தில் இறக்கி எடுத்துக் கொள்ள வேண்டும்.

அளவு: தூதுளங்காய் அளவு

அனுபானம்: பனைவெல்லம், கரும்பு வெல்லம்.

நோயாளியின் உடல் வன்மைக்கு தக்க நாளளவில் கொடுக்க குன்மம், பெருவயிறு, நீராமை, மகோதரம், பிலிகை, கவிசை தீரும்.

- பரா.சே.உ.ரோ

**நாவற்குழம்பு**

முற்றியநாவற்பட்டை முறித்திடித்து மாவாய்
வற்றிடாக்குளத்துநீரும் வகையெட்டுக்கொத்தாய் விட்டு
பற்றியேயவித்திட்டூறிப் பதத்தினிற் பிளிந்தநீரில்
உற்றிடும் காந்தம்கழஞ்சரைப் பொடியோர்பத்தே

பத்திருகழஞ்சுமொன்றாய் பட்டைநீர்தனிலரைத்து
ஒத்ததோர்குழம்பாய்க்காய்ச்சி யுகந்தபாக்களவோர்நேரஞ்
சுத்தமாமெருமைதன்னிற் தோற்றிடுந்தயிரிற் கொள்ளில்
மெத்துநீர்க்கழிச்சலெல்லாம் விட்டகன்றோடுமென்றார்.

- செ.ரா.சே.

முற்றியநாவற்பட்டையை இடித்து எட்டுபங்கு நீர் விட்டு ஊறவைத்து பின் வேகவைத்து குடிநீர் வடித்துக்கொள்ள வேண்டும், சுத்தித்தகாந்தம் சுத்தித்த அயப்பொடி — வகைக்கு 50.5 கிராம் எடுத்து கல்வத்திலிட்டு நன்கு அரைத்து, பின் மேற்படி நாவற்பட்டைநீர்விட்டு நன்கு அரைத்து எஞ்சியநீரில் கரைத்து அடுப்பேற்றி எரித்து குழம்பு பக்குவத்திலெடுத்துக் கொள்ளவேண்டும்.

அளவு: 5 கிராம் ஒருவேளை

தீரும்நோய்: நீர்க்கழிச்சல்

**கடுக்காய்க்குழம்பு**

குறுணிகோமூத்திரத்தில் குறித்தநேர்வாளம்பத்தைப்
புறணிபோக்கிச்சுத்தித்துப் பூர்த்தியாயரைத்துக்காய்ச்சி
உறுகொதி பதத்திற்சுக்கு உயர்பத்துக்கடுக்காயோடு
திறமுள்ளி இருபான்றேடிச்சிதைத் திடித்தெடுத்துக்கொள்ளே

கொண்டதிலிட்டுக்காய்ச்சிக்குழம்பைப்பன்னைந்துநாட்கு
உண்டுவா ஒரேநேரம் ஒருபாக்கினளவதாக
அண்டிய மகோதரங்கள் அடுத்திடுபுறநீர்க்கோவை
பண்டுறு கதிரைக்கண்ட பனியெனப் பறந்துபோமே. - செ.ரா.சே

சுத்தித்த நேர்வாளம்பத்து எடுத்து அரைத்து பதினெட்டுப் படி பசு நீரில் நன்கு கரைத்துக்காய்ச்ச வேண்டும்.கொதித்து வரும் சமயம் சுக்கு35 கிராம்,உள்ளி 35 கிராம், 10 கடுக்காய்தோல் அரைத்துச்சேர்த்து குழம்பு பக்குவத்தில் எடுத்துக்கொள்ள வேண்டும்.

அளவு: பாக்களவு ஒரு நாளைக்கு ஒரு வேளை மட்டும்

நாளளவு: 15 நாட்கள்

தீரும் நோய்கள்: மகோதரம், சோபை.

# பதங்கம்

*சரக்குகளை எரித்து ஆவியாக்கி உறையச் செய்து மீண்டும் திடப் பொருளாகவே பெறும் முறை. இதற்கு பயன்படும் கருவி — பதங்கக் கருவி.*

*இதிலிட்டு எரிக்கப்படும் சரக்குகள் எரிந்து லேசத்துவ நிலையை அடைந்து கருவியின் மேற்புறம் ஒட்டிக் கொள்ளும். இவ்விதம் ஒட்டிக் கொள்வதே மருந்தாகக் கொள்ளப்படுகிறது.*

**பதங்கக் கருவியின் அளவுமுறை**

*6" உயரம் வாய்ப் புறத்தில் 7" குறுக்களவு, 30" சுற்றளவு உள்ளதாய் ஒரு மண்பாண்டம் அமைத்துக் கொள்ள வேண்டும். அதே அளவாக மற்றொரு பாண்டமும் அமைத்துக் கொள்ள வேண்டும்.*

*செய்முறைகளில் கருவிகள் 3 வித முறையாக அமைத்துக் கொள்ளும் முறை கூறப்பட்டுள்ளது.*

**கருவிகள் அமைத்தல்: முதல் முறை**

*சரக்குகளை முறைப்படி பக்குவம் செய்து கீழ்பாண்டத்தில் இட்டு மேல் பாண்டம் கவிழ்த்து மூடி சந்துவாய்க்கு குறிப்பிடப்பட்ட சீலை மண்செய்து அடுப்பேற்றி எரித்து எடுப்பது. மேற்பாண்டத்தின் மேற்புறம் குளிர்ந்த நீரில் நனைத்த சீலையை மடித்துப்போட்டு அடிக்கடி நனைத்து வருதல் வேண்டும். இது கீழிருந்து மேலாக ஆவி எழச் செய்யும் முறை.*

**கருவிகள் அமைத்தல்: இரண்டாவது முறை**

*சரக்குகளை முறைப்படி பக்குவம் செய்து மேற்பாண்டத்தின் உட்புறம் பூசி, கீழ் பாத்திரத்தின் மேல் கவிழ்த்து மூடி சீலைமண் செய்து, சேறு அடங்கிய குழியில் கீழ்பாத்திரத்தைப் புதைத்து மேல் பாத்திரத்தின் மேல் எருவடுக்கி எரிக்க கீழ் பாத்திரத்தில் பதங்கம் படியும். இது கீழ் முகமாக ஆவியெழச் செய்யும் முறை.*

**கருவிகள் அமைத்தல்: மூன்றாவது முறை**

*ஒரு பாத்திரத்தின் மேல் மற்றொரு பாத்திரம் கவிழ்க்காமல் அடுக்கி வைத்து அமைத்துக் கொள்வது. கீழ் பாத்திரத்தில் உரிய சரக்குகளை இட்டு அதன்மேல் மேல் பாண்டத்தை வைத்து மேற்பாண்டத்தின் அடிப்புறத்திற்கும் கீழ்பாண்டத்தின் வாய்க்கும் இடையே சத்துகள் இல்லாது சீலை மண்செய்து உலர்த்தி அடிப்பாண்டத்தை அடுப்பேற்றி எரிக்க வேண்டும்.*

*மேற்பாண்டத்தில் நீரை ஊற்றிக்கொள்ள வேண்டும்.*

பதங்கமானது மேற்பாண்டத்தின் அடிப்புறம் ஒட்டிக்கொள்ளும்.
பதங்கத்தின் ஆயுட்காலம்: 10 ஆண்டுகள்

**அப்பிரகப் பதங்கம்**

வச்சிரத்தின் அப்பிரகம் பலமும் நாலு
வைத்திடுநீ கல்வமிட்டு வீரங்காலாம்
உச்சிதமாய்ப் பாணிவிட்டரைக்க வெண்ணெய்
ஊறுதிபெற முச்சாமஞ் சென்றபின்பு
உச்சிமடக்கதிரில் வைத்து மூடிநன்றாய்
முளையவிட்டு கடத்திவிட்டு மேலே மூடு
தச்செயலாய் சீலைமண்ணைத் தெரித்து வாங்கே

அடுப்பில்வைத்து யெரிசாமஞ் சென்ற பின்பு
அதையெடுத்து பிரித்துபார் பதங்கங்காணும்
எடுத்தவழி பணவீதம் வெல்லந்தன்னில்
இட்டிடவே திரிநாளில் எரிசோகை
அடுத்துவருங் காமாலை பாண்டுகுன்மம்
அழிம்பான மகோதரமும் சூலைரோகம்
எடுத்துவிடுஞ் சூதகத்தின் வாய்வு மந்தம்
இதமாகும் யாகோபு இயம்பினாரே
உதரகட்டி நின்ற உதிரந்தன்னை
உறுதியாயுடைப்பிக்கும் ஆம்பற்கட்டி
நிதமுண்ணும் அன்னத்தைச் செரிக்கப் பண்ணும்
நிலையில்லா தோடிவிடும் ருத்ரவாய்வு
பதகரத்தின் நரம்பிறுகும் முறுக்குமேறும்
பகுமைதரு முடல்வலுக்கும் சயமும் போகும்
சதமுமிதை அந்திசந்தி உண்ணச் சொன்னார்
தவறாமல் யாகோபு சாற்றினாரே.

- *யா.வை.சி*

சுத்தித்த கிருஷ்ண அப்பிரகம் — 140 கிராம்,சுத்தித்த வீரம் 8.75 கிராம் சேர்த்து கல்வத்திலிட்டு நீர்விட்டு 9 மணி நேரம் அரைக்க வெண்ணெய் போலாகும். அதை வழித்து வெயிலில் உலர்த்தி பதங்க கருவிலிட்டு 3 மணி நேரம் எரிக்க பதங்கம் ஏறும். அதை வழித்து எடுத்துக்கொள்ள வேண்டும்.

அளவு: பணவெடை (488 மி.கி)

அனுபானம்: வெல்லம்

தீரும் நோய்: பேதி, சோகை, காமாலை, பாண்டு, குன்மம், மகோதரம், சூலை, சூதக வாயு.

**பறங்கிப்பட்டை பதங்கம்**

பாரேதான் பறங்கியுட பட்டையப்பா
பாங்காக பலமைந்து நிறுத்திக் கொண்டு
சேரேதான் பொடிப் பொடியாய்க் கண்டமாக்கி
சிறப்பாக வேசரியின் லத்திச் சாற்றில்
வீரேதான் பிசறியதை யுலர்த்திவைத்து
விதமாக மேனிச்சார் பொடுதலைச்சார்
கூரேதான் கையான் சார் குப்பிச்சாறும்
குணமான பசுவின் பாலின்னங் கேளே

கேளே நீ வெவ்வேறே யுலர்த்திக் கொண்டு
கெணிதமுடன் கந்தகமும் பலந்தானொன்று
வாளே நீ ரசமைந்து லிங்கமைந்து
வகையாக பொடி பண்ணிமூன்றும்போடு
வீளே நீ மறுசட்டி தமர்கள் போட்டு
விதமாகச்சட்டிவாய் தன்னில் மூட்டி
சூளே நீ பட்டையைத்தான் மேலே வைத்து
சுகமாக மறுசட்டி கொண்டு மூடே
மூடியே மண்சீலை வலுக்கச் செய்து
முசியாமல் தானெரிப்பாய் சாம மொன்று
ஆடியே யாறவிட் டெடுத்துலர்த்தி
அப்பாலே சூரணமாய்ச் செய்து கொண்டு
நாடியே கழஞ்சி யொன்று கொண்டாயானால்
நலமாக மேகவகை யிருபத்தொன்றும்
ஓடியே போகுமடா சூலையெல்லாம்
உத்தமனே கருங்கிரந்தி தீருந்தானே
தீருமே கைக் கருப்பு வெள்ளைத் தானும்
திறமான பிடிப்பு வகை ரணங்கள் யாவும்
ஆருமே ரணங்கள் வகை சிரங்கு குட்டம்

அப்பனே செந்தாழைத் தடிப்புந்திரும்
கூறுமே வாய்நாற்றம் தந்தச்சூலை
குணமாக மண்டலந்தான் தின்றால் தீரும்
பாருமே பத்தியந்தானி தற்கோயில்லை
பண்பாக போகருட கடாட்சந்தானே.

- *பு.வை.500*

*பறங்கிப்பட்டை — 175 எடுத்து பாக்குபோல் உடைத்து கழுதை லத்திசாற்றில் பிசரி* உலர்த்த வேண்டும். இவ்வாறே குப்பை மேனிச்சாறு ,பொடுதலைச்சாறு ,கையான் *சாறு, சங்கன்குப்பிசாறு, பசுவின் பால் — இவற்றில் தனித்தனியே பாவனை செய்து.* உலர்த்தி கொள்ள வேண்டும்.

*கந்தகம் — 35 கிராம், இரசம் — 175 கிராம், இலிங்கம் — 175 கிராம், மூன்றையும் முறைப்படி அரைத்து ஒரு சட்டியிலிட்டு சட்டி வாய்க்கு பொருத்தமாக துளைகளுள்ள மண் தட்டு (உலைமூடி) வைத்து அதில் பாவனை செய்த பறங்கிப்பட்டையை பரப்பி மேற் சட்டி கொண்டு மூடி சீலைமண் செய்து உலர்த்தி அடுப்பிலேற்றி 3 மணி* நேரம் எரித்து ஆறவிட்டு சீலையை பிரித்து பறங்கி பட்டையை பொடித்து வஸ்திர காயம் செய்து கொள்ள வேண்டும்.

*அளவு: 130 மி.கி — 400 மி.கி வரை*

*அனுபானம்: பால், பனை வெல்லம்*

*தீரும் நோய்: மேகசூலை, குட்டரோகம், கை கருப்பு, கருங்கிரந்தி வெண்குட்டம்,* இரணங்கள், சிரங்கு, வாய்நாற்றம், தந்தச்சூலை தீரும்.

*ஆயட்காலம்: 10 ஆண்டுகள்*

**இரசப் பதங்கம்**

சுத்தித்தஇரசம் தேவையான அளவு எடுத்து வெடியுப்பு திராவகம் விட்டரைத்து வில்லை தட்டி காய வைத்துக் கொள்ளவேண்டும்.

ஒரு பங்கு, உப்பும், ஒரு பங்கு செங்கல் தூளும் கலந்து ஒரு சட்டியில் பாதி கொட்டி அதின் நடுவில் மேற்படி வில்லையை வைத்து மேற்சட்டி மூடி சீலை செய்து அடுப்பேற்றி எரிக்க வேண்டும். ஆறியபின் பிரித்து மேற்சட்டியில் ஒட்டியுள்ள பதங்கத்தை வழித்து மீண்டும் வெடியுப்பு திராவகம் விட்டு அரைத்து முன் போல் எரிக்க வேண்டும். இவ்விதம் பதங்கம் மேற்சட்டியில் ஏறாது அடியில் தங்கு மட்டும் எரிக்க வேண்டும். பின் எடுத்து அரைத்துக்கொள்ள வேண்டும்.

*அளவு: 5 மி.கி முதல் 10 மி.கி வரை*

அனுபானம்: பனை வெல்லம்

தீரும் நோய்: மேகம், குட்டம், வாத நோய், தீரும்.

பத்தியம்: இச்சாபத்தியம்

ஆயுட்காலம்: *10* ஆண்டுகள்.

# செந்தூர முறை

சிவந்த நிறத்தை உடையதால் செந்தூரம் என்பதாம். சிவந்த நிறம் என்பதில் அலரிப் பூப்போலும், முருக்கம் பூப் போலும் எனப் பலவகை சிவப்பு நிறம் குறிப்பிடப்பட்டுள்ளது. தாதுச்சரக்குகளை சிவந்த நிறத்தில் மாற்றியமைக்கும் அரிய வேதியல் முறை.சிவந்த நிறமுண்டாவதிற்கானவேதியல் மாற்றங்கள் இன்றளவும் அறியப்பட முடிவதில்லை.". செந்தூரத்தாதி கந்தகம்" என்பதால் செந்தூரசெய்முறைகளில் கந்தகம் முதன்மை சரக்காகக் கொள்ளப்படுகிறது.

செந்தூரம் செய்முறையில் 4 வகைப்படும்.

அரைப்புச் செந்தூரம்
எரிப்புச் செந்தூரம்
வறுப்புச் செந்தூரம்
புடச் செந்தூரம்
அரைப்புச் செந்தூரம்

சரக்குகளை உரிய சாறு முதலாகிய நீர்ப்பொருள் விட்டு உரிய காலம் வரை அரைத்து எடுத்துக் கொள்வது.

**எரிப்புச் செந்தூரம்**

சரக்குகளை உரிய முறைப்படி எரித்து எடுத்துக் கொள்வது. இது மூன்று வகைப்படும்.

1. சட்டி எரிப்புச் செந்தூரம்
2. ஊது முறைச் செந்தூரம்
3. குப்பி எரிப்புச் செந்தூரம்

**சட்டி எரிப்புச் செந்தூரம்**

இரு சட்டிகளை வாய் பொருந்த உரசி சேர்த்து, எரிக்க வேண்டிய சரக்குகளைக் கீழ்சட்டியில் வைத்து மேற்சட்டி மூடி உரிய காலம் வரை உரிய அக்கினியில் எரித்து எடுப்பதாம்.

**ஊது முறைச் செந்தூரம்**

மருந்து சரக்குகளை உரிய மூசையிலிட்டு மூடி சீலை செய்து உலையிலிட்டு ஊதி எடுத்துக்கொள்வது.

**குப்பி எரிப்புச் செந்தூரம்**

இம்முறையில் சரக்குகளைச் சீலை செய்யப்பட்ட குப்பிக்குள் அடைத்து வாலுகா எந்திரத்தில் வைத்து குறிப்பிட்ட காலம் எரித்து எடுத்துக்கொள்வது.

## புடச் செந்தூரம்

இது நான்கு வகைப்படும்.

1. குழிகளில் எருவடுக்கி அதில் மருந்துகள் அடங்கிய மூசை அல்லது அகலை வைத்துப் புடமிட்டு எடுப்பது. இது புடச் செந்தூரம்.

2. சரக்குகளைப் பக்குவப்படுத்தி குறிப்பிட்ட கால அளவு உரிய நிலத்தில் புதைத்துப் பக்குவப்படுத்துவது. இதுவும் குழிப்புடச் செந்தூரம் என நூற்களில் கூறப்படுகிறது.

3. சரக்குகளைப் பக்குவப்படுத்தி சூரிய ஒளியில் வைத்து சிவக்கச் செய்வது. இது சூரிய புடச் செந்தூரம் என உரைக்கப்படுகிறது.

4. புடமிட வேண்டிய சரக்குகளை மணற்குள் புதைத்து எருவடுக்கிப் புடமிடுவது. இது வாலுகாபுடம் அல்லது மணல் மறைவு புடச் செந்தூரம் எனக் கூறப்படுகிறது.

## செந்தூரத்திற்கென பொதுவான அனுபானம்

*....................................செந்தூரப் பெருமை தன்னை*
*சாத்துகிறேன் மாணாக்கன் பிழைக்க வென்று*
*மானேகேள் வனுபான மினம றிந்து*
*துலங்காமல் மானிடர்கள் கொள்வ தற்கு*
*தேனேதான் பசுவெண்ணை நெய்யு மாகும்*
*தேற்றமுடன் பாலாகுஞ் சூரணந்தான்*
*ஊனான லேகியங்கள் கிருத மாகும்*
*வுத்தமனே இஞ்சிரசம் முலைப்பா லாகுமே*
*ஆமேதான் சர்க்கரையு மெழுகு மாகும்*
*அப்பனே யிந்தவித அனுபா னங்கள்*
*நாமேதான் சொன்னபடி சிகிட்சை செய்தால்*
*நாடாது தேகம்வலு பிணிகள் போகும்!*

## செந்தூரம் நன்கு முடிந்ததிற்கான சோதனை

*“தரைதனிலே வயித்தியர்க ளறிய வேண்டுந்*
*தானதிலே மாவிடைச்செந் தூரம் போடே*
*போட்டதின்மே லரிசியிரு வுழுந்து போடு*
*புதையாது செந்தூரந்தான் மிதக்கும் பாரு”*

*- போகர் 700 — பாடல் 69 — 70*

**ஆயுட்காலம்**

'குருதி பொடி யெழுபானோ டைந்தாண்டு"

என்பதில் 75 ஆண்டுகள் வன்மை உடையது.

## அரைப்பு செந்தூரம்

**அயச் செந்தூரம்**

நல்லிரும்பு அரப்பொடியைக் காந்தத் தாலே
நாடியேயெடுத்தனைக் கல்வத்திட்டு
சொல்லினிய சம்புமர முத்தப்பட்டை
துவைக்கவருஞ் சாறுவிட்டுச் சாம மூன்று
மெல்லியதாய் நவநீத மாகு மட்டும்
விடாதரைத்து உலர்த்தியதை வைத்துக்கொண்டு
சொல்லுமனுப்பானத்தோ டயப்பாண்டு
சுகமுஷ்ணம் குன்மமுடன் சொஸ்தமாமே.

காந்தத்தால் அயப்பொடியை ஆய்ந்து எடுத்து, சுத்தித்து கல்வத்திட்டு நாவல் மரப்பட்டைச் சாறுவிட்டு ஒன்பது மணி நேரம் நன்கு வெண்ணெய் போல் அரைத்து உலர்த்திப் பொடித்து வைத்துக் கொள்ள வேண்டும்.

அளவு: அரிசியெடை (65 மி.கி) உற்ற அனுபானத்தோடு கொடுக்க பாண்டு, உட்டிணம், குன்மம் தீரும்.

**எரிப்புச்செந்தூரம்**

அயலோகச் செந்தூரம்

சாற்றக் கேள் அயலோகச் செந்தூரத்தைத்
தான்கேளு அரப்பொடியைப் பலந்தான் வாங்கி
மாற்றில்லா நெத்தான தேங்காய் நெய்யில்
மண்டலம் வைத்திருந் தெடுத்தக்கால் சுத்தியாச்சு
நாற்றமுடனூறலும் போம் கருப்புமாகும்
நற்றான அரப்பொடிக்கிச் சரியாய் கெந்தி
போற்றியப் பழச்சாறாலரைத்து வாங்கி
புதுச்சட்டி தன்னில் வைத்து ஓடுமூடே
மூடியே சீலை செய்து சாமம் நாலு
முடங்காமல் தீயெரித்து யெடுத்துப்பாரு

*வாடியே திரியாதே பித்த நோய்கள்*
*மாண்டுபோமிஞ்சிச் சாற்றில் மண்டலமே கொண்டால்.*

அயப்பொடியை தேங்காய் நெய்யில் போட்டு 40 நாட்கள் வைத்து எடுக்க சுத்தியாகும். பின் அதற்கு சரியெடை கந்தகம் கூட்டி பழச்சாறுவிட்டு அரைத்து வில்லை செய்துலர்த்தி புதுச் சட்டியிலிட்டு மேல்மூடி சீலை மண் செய்து 12 மணி நேரம் எரித்து எடுக்க செந்தூரமாகும்.

அளவு: 250 மி.கி — 1 மண்டலம்

அனுபானம்: இஞ்சிச்சாறு

தீரும் நோய்கள்: பித்த நோய்கள்

**கெந்தகச் செந்தூரம்**

*பறக்கவே கெந்தக செந்தூரங் கேளு*
*பருநெல்லி கெந்தி பலம் நாலரைதான் கேளு*
*திறக்கவே அயப்பொடி யொன்றரைப்பலந்தான் சேர்த்து நீ*
*சுண்ணாம்புத் தண்ணீர் விட்டு*
*திறக்கவே ஏழு நாளரைத்து ஒன்றாய்*
*நிகழ்த்தரிய சட்டியிலே போட்டு நீ தான்*
*மறக்காமல் எரித்து வரச் செந்தூரமாகும்*
*மகிமையென்ன வனுபானம் வெட்பாலையின்*
*வல்லரிசி வராகமாங் கியாழத்தூட்டு*
*மகிமையென்ன பச்சரிசி கழுநீரால்*
*மகத்தாம் தேனிலும் பாலிலும் ஆகும்*
*மகிமையென்ன இப்படியே யறிந்து போட*
*வகுத்தான சூலை பதினெட்டும் போகும்*
*மகிமையென்ற கிராணி வகையாறுந் தீரும்*
*மயங்குமடா காமாலை சோகை பாண்டு.*

- அ.ப.பூ

கந்தகம் பலம் (157.5 கிராம்), அயப்பொடி — 52.5 கிராம், சேர்த்து பொடித்து சுண்ணாம்பு நீர்விட்டு 7 நாள் அரைத்து உலர்த்தி சட்டியிலிட்டு மூடி சீலை மண் செய்துலர்த்தி எரிக்க செந்தூரமாகும்.

அளவு: 100 மி.கி

அனுபானம்: வெட்பாலை அரிசிக்குடிநீர், பச்சரிசி கழுநீர், தேன், பால்,

தீரும் நோய்: சூலை, கிராணி காமாலை, சோகை, பாண்டு.

## குழிப்புடச் செந்தூரம்

அன்னபேதிச் செந்தூரம்

வடதிசையிற் பிறந்துவந்த அன்னபேதி
வாங்கிஒரு சேருதன்னைப் பழச்சார்விட்டுக்
குடக்கல்லி லரைத்துவட்டுக் காயவைத்துக்
குருக ஒருபுடம்போடச் செந்தூரிக்கும்

உடலறிந்து அனுப்பானந் தன்னிலீய
உதிரத்திற் பிறந்தமகா குன்ம மெட்டும்
விடைபெற்றுக் கொண்டு செல்லும் மற்றரோகம்
வின்பாக விதுசெலுத்தும் விசையதாமே.

- *யா.வை.சி*

அன்னபேதி 280 கிராம் எடுத்து பழச்சாறு விட்டரைத்து வில்லை செய்துலர்த்தி ஓட்டிலிட்டு ஒரு மூடி சீலைமண் செய்துலர்த்தி குக்குட புடமிட சிவக்கும்.

நோய்குத் தக்க அனுபானம் அறிந்து கொடுக்க குன்மம் தீரும்.

அனுபானம் இன்னதென குறிப்பிடாத நிலையில்மருத்துவன் நிர்மாணித்துக் கொள்ளவேண்டும்.

## துரிசி செந்தூரம்

வாங்கிப்போந் துரிசிசெந்தூ ரத்தைக் கேளு
வாகான அயப்பொடிதான் பலந்தானொன்று
தேங்கிப்போங் கெந்தகந்தான்பலந்தானொன்று
திறமாக வதன்பின்பு செப்பக்கேளு
தாங்கிபோந் துரிசுமதிற் பலந்தானொன்று
சாதகமாய் பழச்சாற்றில் தினம்ரெண்டாட்டு
ஓங்கியதோர் வீரமது கழஞ்சியொன்று
உத்தமனே அரைத்ததனை வில்லைகட்டே
கட்டியே ரவிதனியே யுலந்தபின்பு
கனபுடமே போடப்பா மயங்க வேண்டாம்
ஓட்டியே ஆறினபின் செந்தூரந்தா
னுண்மையாந் திரிகடுகில் குன்றியிடை கூட்டி
அட்டியாய் மண்டலந்தான் கொள்ளும்போது

ஆச்சரியங் குன்மமென்ற தெல்லாம் போகும்
சுட்டியே கெற்பத்தில் தோஷம்போகுந்
துடியான கிறாணியெல்லாஞ் சூட்டப்போமே.

அயப்பொடி — 35 கிராம், கந்தகம் — 35 கிராம், துருசு — 35 கிராம் அனைத்தையும் சேர்த்து பழச்சாறுவிட்டு 2 நாள் அரைக்க வேண்டும். பின் 3ம் நாள் வீரம் 5 கிராம் சேர்த்து அரைத்து வில்லை செய்து வெய்யிலில் வைத்துஉலர்த்தி ஓட்டிலிட்டு ஓடு மூடி சீலைமண் செய்துலர்த்தி கனபுடமிட செந்தூரம் ஆகும். புடம் ஆறியபின் பிரித்து வில்லையை அரைத்து எடுத்துக் கொள்ள வேண்டும்.

அளவு: 120 மி.கி, 1 மண்டலம்

அனுபானம்: திரிகடுகு

தீரும் நோய்: குன்மம், கொ்ப்பதோடம், கிராணி.

**அயமணிக்கலாப செந்தூரம்**

தானான அயமணிக்கலாபஞ் சொல்வேன்
சாற்றுகிறேன் மானிடர்கள் பிழைக்கவென்று
கோனான செந்தூரம் அயப்பொடியுங்காந்தம்
குணமான அரிதாரம் ரசமுமாகும்
தேனான மேனிச்சாற் குமரிச்சாற்றால்
தெளிவாக ஆறுநாள் அரைத்துமேதான்
பானாகப்பில்லை செய்து ரவியுலர்த்திப்
பாங்காக ஏழுசீலை செய்திடாயே
செய்துமே கெசப்புடமே போட்டால்
சீரான செந்தூரம் என்ன சொல்வேன்
நைந்துமே அருண செந்தூரமாகும்
நலமான செந்தூரம் பதம்பண்ணு
நெய்துமே லேகியத்தில் தேனிற் கொள்ள
குடிவிட்டுப் போகுமடா வியாதியாவும்
நமனதுமே இம்மருந்து சுருக்குமெத்தப்
பாடுகிறேன் நந்தீசர் பாதங்காப்பே
காப்பான பாண்டுவுடன் சோகை போகும்
கருவான மகோதரம் பீலி போகும்
தோப்பான கவுசையொடு ரத்தக்கட்டி
தேர்வான நீராம்பற்கட்டி போகும்

வேம்பான சூதகத்தின்வாயு போகும்
விதமான குன்மம் போகும்
தீப்பான திரேகமது சட்டை தள்ளும்.

- அ.வை.கா

அயப்பொடி, காந்தம், தாளகம், ரசம் சம எடை எடுத்து முறைப்படி சுத்தித்து கல்வத்தில் இட்டு அரைத்து பின் குப்பைமேனிச் சாற்றால் 6 நாள் அரைத்து வில்லை செய்து உலர்த்தி ஓட்டிலிட்டு ஓடு மூடி7 சீலைமண் செய்துலர்த்தி கசபுடமிட்டு எடுக்க செந்தூரம் ஆகும்.

அளவு: (குன்றி) 130 மி.கி

அனுபானம்: தேன், லேகியம்

தீரும் நோய்கள்: பாண்டு, சோகை, மகோதரம், கவிசை, நீராம்பற்கட்டி, சூதக வாயு தீரும்.

## உமிபுடச் செந்தூரம்

### உப்புச் செந்தூரம்

பாருப்பு தன்னையறிந்து வாங்கிக்கல்வம்
பாய்ச்சியரை மேனிச்சார் புடமூன்றிட்டால்
சிறு சேருப்பு சிவப்பாகச் செந்தூ ரிக்கும்
சிவப்பாக சாதிலிங்கஞ் சமனாய்ச் சேர்த்துச்
சாறுவிட்டு உமிப்புடத்திற் போட்டு வாங்கிச்
சமமாகப் பணவிடையே தேனிற்கொள்ளத்
தீருமது மூலமதிற் சீதக்கிராணி
திடமாக யாகோபு செப்பினாரே.

- யா.வை.சி

கறியுப்பை வாங்கி குப்பை மேனிச்சாறு விட்டரைத்து வில்லை செய்துலர்த்தி புடமிடவேண்டும். இவ்விதம் 3 புடமிட்ட பின் சுத்தித்த சாதிலிங்கம் சமனாய் சேர்த்து மேற்படி சாறுவிட்டரைத்து உமிப்புட மிட சிவக்கும்.

அளவு: 500 மி.கி

அனுபானம்: தேன்

தீரும் நோய்: கிராணி வகை.

## மணல் மறைவுபுடம்

### அயகெந்தி செந்தூரம்

ரசமரைக்கால் இந்துப்புக் காலாகும்
நல்ல அர பொடியுமரை கெந்தியொன்று
பசுங்குமரி அன்னமிட்டு அரைத்து நையப்
பழுத்துலர்ந்த தேங்காயினோடு கண்திறந்
துள்ளடைத்து மணற்புடத்தில் வைத்து வில்லை
தினங்குன்றி வெற்றிலையில் தின்பாயானால்
இசிவு வலி குன்ம மகா ரோகமெல்லாம் இருந்த
விடந் தெரியாம லேகுந்தானே

சுத்தித்தரசம் — 1/8 பங்கு

இந்துப்பு — 1/4 பங்கு

சுத்தித்த அயப்பொடி — 1/2 பங்கு

சுத்தித்த கந்தகம்: 1 பங்கு முதலில் ரசத்தையும் கந்தகத்தையும் கல்வத்திலிட்டு நன்கு அரைத்து அத்துடன் அயப்பொடி, இந்துப்பு சேர்த்து நன்கு அரைத்துப் பின் கற்றாழை சோறிட்டு அரைத்து கொப்பரை தேங்காயின் கண்ணை திறந்து மருந்தை உள்ளடைத்து கண்ணை அடைப்பான் கொண்டு மூடி சீலைமண் செய்து மணல்புடத்தில் வைத்து ஓடு கருகியதும் பிரித்து அரைத்து எடுத்துக் கொள்ள வேண்டும்.

அளவு: 120 கிராம்

அனுபானம்: வெற்றிலை

தீரும் நோய்: இசிவு, வலிகுன்மம்

## தானியப் புடச் செந்தூரம்

### தாமிர காந்த செந்தூரம்

தாம்பூரங் காந்தம்ரெண்டும் பொடியாக்கிச்
சமன்சேர்த்து வாய்குவிந்த கலையத்தேத்தி
நிம்பப் பழச்சாறு மிதக்கவிட்டு
நீங்காமற் சில்லிட்டுச் சீலை செய்து
மேம்பாட்டாய் நெற்குழியில் நடுவேவைத்து
மெத்திட்டுச் சாக்கதனை நிழலிலிட்டுப்

போம்படியே மண்டலஞ்சென் றெடுத்துப் பார்க்கப்
புட்டுப்போற் செந்தூர மாகுந்தானே
ஆமிதனைப் பொடித்து நன்றாய்ப் பதனஞ் செய்து
அனுப்பான விதத்தில் நீ யிந்தாயானால்
போமினியுந் தீர்த்து விடும் வாதசூலை
பொல்லாத குன்மமெட்டும் மேகவாய்வும்
தீமையுறும் பீசமண்ட வாதவீக்கஞ்
சேருகட்டுங் குடல் வாதமெல்லாம் யேகும்
மாமுனிவரெடுத்துரைத்த செந்தூரத்தை
வழுத்தினார் யாகோபு மகிமைபாரே.

- *யா.வை.சி*

சுத்தித்த செம்பு, சுத்தித்த காந்தம் இரண்டையும் சம அளவு எடுத்து நன்கு அரைத்து பொடியாக்கி ஒரு கலயத்திலிட்டு பழச்சாறு மூழ்க விட்டு ஓடுமூடி சீலை செய்து நெற்குழியின் நடுவில் வைத்து மண்டலம் சென்று எடுக்க செந்தூரமாகும்.

அளவு: 100 — 200 மி.கி

தீரும் நோய்கள்: வாதசூலை, குன்மம், அண்ட வீக்கம், குடல் வாதம் தீரும்.

## சூரிய புடச் செந்தூரம்

### திரிலோக செந்தூரம்

கனகமடாதிரி லோகசெந்தூரங் கேள்
வாச்சென்ற அயப்பொடியு முருக்குச் சிட்டம்
வகை வகைக்குச் சுத்தி செய்த பலந்தானொன்றே
ஒன்றாகக் கல்வத்திலிட்டு மைந்தா
உறுநாவற்பட்டை யிடசாற்றால் சாமம்
அன்றாக ஆட்டி ரவிபுடமாய் வைத்து
ஐந்து முறையிந்தவண்ணம் பாகஞ்செய்து
குன்றா தேயே ரண்டிலை பொதிந்து
கூறுகிறே ணெய்ப் பாண்டத்திலிட்டு மூடு
நன்றாக செந்தூர மருணன் போலாம்
நாயகனே செப்பதினில் வைத்துமூடே
மூடியே பணவெடை செந்தூரந் தேனில்
உண்ணசுத்தப்பாண்டு காமாலை சோகை
நாடியதோர் பெருவயிறுபிறவிப்பாண்டு
நலமான உப்பிசநோய் கிராணியாறும்

நீடியதோர் சலகழிச்சல் நீரின்கோவை
நில்லாது இளைப்பிரும லீளைக்காசம்
வாடியே சயதோச விஷக்கடிக்கள் வாயும்
வாய்க் கசப்பும் வாந்தி போமே

அயப்பொடி, உருக்கு, சிட்டம் வகைக்கு ஒரு பலம் (35 கிராம்) சுத்தி செய்து கல்வத்திலிட்டு நாவற்பட்டை சாற்றால் ஒரு சாமம் அரைத்து வில்லை செய்து வெயிலில் வைக்க வேண்டும். இவ்விதம் 5 முறை செய்ய நல்ல சிவந்த நிற செந்தூரம் ஆகும். ஆமணக்கிலையில் பொதிந்து வைத்துக் கொள்ள வேண்டும்.

அளவு: 500 மி.கி

அனுபானம்: தேன்

தீரும் நோய்கள்: பாண்டு, சோபை, காமாலை, பெருவயிறு, உப்பிசநோய், இருமல், பிறவிப்பாண்டு, ஈளை, காசம்.

**காந்த செந்தூரம்**

காந்தமது இடித்தபொடி பலமும் பத்து
கல்வமிட்டு நிம்பகனிச் சாற்றாலாட்டிச்
சாந்தபடி மூன்று நாளரைத்து வாங்கிச்
சங்கரன்மகன் தாள் போற்றிப் புடத்தில் வைக்க
மாந்தகுண மதிற்பிறந்து வெந்து ஆறும்
மறுபடியு முன்போல அரைத்துக் கொண்டு
சேர்நதரவி புடத்தில் வைக்கச் சிவப்பாகும்
சிறந்த செந்தூரமிதைச் செலுத்தக்கேளே
செலுத்துமிதை அனுப்பானந் தேகங்கண்டு
தேனிலரைக் காசிடையுந் தின்றாயானால்
பெலத்தமகா ரோகமஷ்ட குன்மமெல்லாம்
பேதலித்து விடைகேட்டுப் பின்கொண்டோடும்
வலுத்த பெலமுண்டாகு மிறுகுந்தேகம்
வாதபித்த சிலேட்டுமங்கள் விலகுந்தேக
பசுமான செந்தூர மிதுதானப்பா
பகரரிது தரும்சகலருக்கும் பலனைத்தானே.

- பு.வை

சுத்தித்தகாந்தத்தை பொடித்து பழச்சாறு விட்டு 3 நாள் அரைத்து வில்லை செய்து

உலர்த்தி ஓட்டிலிட்டு ஓடுமூடி சீலைமண் செய்து புடமிட வேண்டும். புடம் பிரித்து மீண்டும் பழச்சாறு விட்டு அரைத்து சூரிய புடத்தில் வைக்க செந்தூரமாகும்.

அளவு: (½ காசிஎடை) 100 மி.கி — 200 மி.கி

அனுபானம்: அட்டகுன்மம் போக்கும். உடல் பலமுண்டாகும், முக்குற்றங்கள் தன்னிலைப்படும்.

**சுயமாக்கினிச் செந்தூரம்**

| | |
|---|---|
| சுத்தித்த அயப்பொடி | — 52.5 கிராம் |
| சுத்தித்த காந்தம் | — 52.5 கிராம் |
| சுத்தித்த இரசம் | — 16.8 கிராம் |
| சுத்தித்த கந்தகம் | — 21 கிராம் |
| பழச்சாறு | — தேவையான அளவு |
| ஆற்றுத்தும்மட்டிச்சாறு | — தேவையான அளவு |

இரத்தையும், கந்தகத்தையும் சேர்த்தரைத்து பின் மற்ற சரக்குகளையும் சேர்த்து ஒரு மணி நேரம் நன்கு அரைத்து பின் எலுமிச்சம் பழச்சாற்றை விட்டு 12 மணிநேரம் அரைத்து உலர்த்தி பின் கும்மட்டிக்காய் சாற்றை சிறுக, சிறுக விட்டு அரைத்து இவ்விதம் நன்கு சிவக்கும் மட்டும் மேற்படி இரண்டு சாற்றிலும் அரைத்து சூரியப்புடம் வைக்க வேண்டும்.பின் நன்கு அரைத்து எடுத்துக்கொள்ளவேண்டும்.

அளவு: 100மி.கி

அனுபானம்: தேன்

தீரும்நோய்கள்: சோகை, பாண்டு, அரையாப்பு, கவிசை தீரும்.

## பற்பமுறை

இரசாதி பாடாணம், சொர்ணாதி லோகம் அல்லது உபரசத்தை யேனும் மூலிகைச்சாறு, செயநீர் அல்லது திராவகம் முதலியவைகளைக் கொண்டு புடத்திலிட்டாவது வேறு வகையிலாவது வெண்மையாக்கி எடுக்கும் முறை 'பற்பம்" ஆகும்.

*பற்பம் செய்முறை பல வகையாகும். அவை,*

*குழிப்புட முறை*
*மணற்புட முறை*
*பதங்க முறை*
*எரிப்பு முறை*
*ஊது முறை*
*அரைப்பு முறை*
*எனப்படும்.*

**பொது அனுபானம்**

*"..........................பற்பமதை யுண்ணக் கேளு*
*கருவான லேகியங் கிருத மாகும்*
*தோணவே நெய் வெண்ணெயாகும்*
*தோற்றமுடன் யிஞ்சிரசம் முலைப்பா லாகும்*
*பேணவே யிந்தவித வனுபானங்கள்."*

*- போகர் 700*

**பற்பத்தின் ஆயுட்காலம்**

*நீறுகட்டு உருக்கு களங்கு*
*நானூறு..........................................*

*என்பதில் பற்பத்தின் ஆயுட்காலம் 100 ஆண்டுகள் என்பதாம்.*

**சீரணக் காலம்**

*'சேரு சிந்தூரம் பற்பஞ் சீரண மரைச் சாமத்தில்"*

*— பற்பத்தின் சீரணக் காலம் ஒன்றரை மணிநேரம்*

*- சு.ஆ.பொ.ல, பா — 99*

**நன்கு முடிந்த பற்பத்தின் சோதனைமுறை**

1. நன்கு முடிந்த பற்பத்தினை நீரிலிட அது மிதக்க வேண்டும். அதன் மீது தானியத்தை வைத்தால் அமிழ்ந்து போகக் கூடாது.

2. விரல்களால் எடுத்துத் தோய்த்துப் பார்க்க இரேகைகளுள் படிந்திருக்க வேண்டும்.

3. அனுபானத்திரவியங்களோடு ஒன்றாகக் கலந்து விட வேண்டும்.

**அயபற்பம்**

வாழ்த்துகிறேனின்ன மொரு பற்பங்கேளு
மைந்தனே அயமதனைப் பொடிதான் செய்து
சேர்த்துவா யெலுமிச்சம் பழச்சார் விட்டுத்
திறமாக அரைத்துமே எடுத்துக் கொண்டு
பார்த்துமே பதம்பார்த்து புடமிட்டு
பாங்காக மறுபடியும் எடுத்துக்கொண்டு
மாற்றுவாய் வாலைக்குப் பூசைபண்ணி
மைந்தனே நாவலுடச் சாற்றிலாட்டே
ஆட்டியபின் சொல்லுகிறேன் கேளுகேளு
அப்பனே காரமடா வராகனெட்டு
நேட்டமாய் மேனியுட சாறுங்கூட்டி
நிசமாக தானரைத்து வில்லை பண்ணி
திட்டமுடன் ரவிதனிலே காயவைத்து
தீர்க்கமுடன் மண்சீலை வலுவாய் செய்து
மூட்டுவாய் மயிற்புடத்தில் நீறிப்போச்சு
முத்துபோல் பற்பமடா வெள்ளையாச்சே
ஆச்சப்பா பற்பத்தையெடுத்துக்கொண்டு
அப்பனே அனுபானம் சொல்லக்கேளு
வீச்சப்பா நெய்யிலே கொள்ளும்போது
மெய்யிலுள்ள மேகமெல்லா மிரண்டுபோகும்
போச்சப்பா பாண்டுமுதல் யீளைபோகும்
பொல்லாத கடிவிஷங்கள் விஷநீர் தீரும்
பாச்சப்பா சர்க்கரையில் கொள்ளும் போது
பரிவான கடிவிஷங்கள்பறந்து போமே.

அயப்பொடி 35 கிராம் எடுத்து பழச்சாறு விட்டு அரைத்து வில்லை செய்து உலர்த்தி ஓட்டிலிட்டு சீலை மண் செய்து உலர்த்தி 50 எருவில் புடமிட்டு, ஆறிய பின்பு பிரித்து நாவல்பட்டை சாற்றில் அரைத்து அத்துடன் வெங்காரம் (33.6 கி)

சேர்த்து குப்பைமேனிச் சாறு விட்டு அரைத்து வில்லை செய்து உலர்த்தி ஓட்டிலிட்டு சீலை மண் செய்து உலர்த்தி 50 எருவில்புடமிட பற்பமாகும்.

அளவு: 100 முதல் 200 மி.கி

அனுபானம் மற்றும் தீரும் நோய்கள்

நெய்யில் கொடுக்க மேகம், பாண்டு, ஈளை தீரும்,

சர்க்கரையில் கொள்ள கடிவிடம் தீரும்.

**மான்கொம்பு பற்பம்**

அறையு மானினழகிய பற்பங்கேள்
விறையுமே பழச்சாற்றால ரைத்துமே
நிறையுமே ரவித் தீரவே காய்ந்தபின்
முறையுங் குக்குட முற்றும் பொதிந்திடே
பொதிந்து தீயைப் பொருத்தப் புகட்டியே
வதிந்து மாயனை வாழ்த்தி யெடுத்திடு
சதிந்து பற்பந் தனிய நறு நெய்யில்
முதிர்ந்து மண்டல முற்றும் பொருமலிரைப்புகள்
நசித்த மேனி நவிலு மிருமலும்
கசித்த ரோகங் கதறியே நீங்கிடும்
பசித்த பற்பம் பகர்ந்தனர் தேறனே

- தே.வை

மான்கொம்பை சுத்தித்து பொடித்துப் பழச்சாறு விட்டு அரைத்து வில்லை செய்துலர்த்தி ஓட்டிலிட்டு ஒரு மூடி சீலைமண் செய்து உலர்த்தி குக்குட புடமிட பற்பமாகும்.

அனுபானம்: நெய்

அளவு: 100 மி.கி முதல் 200 மி.கி வரை 40 நாட்கள்

தீரும் நோய்கள்: பொருமல், இரைப்பு, இருமல்.

**கறியுப்பு பற்பம்**

கலைந்து மின்ன னொரு பற்பங்கேளு
கறியுப்பு பலமொன்று வாங்கி மைந்தா
சலந்தனிலே வாழுகின்ற குழித்தாமரையைத்
திறமாகத் தான்பிடுங்கிச் சாற்றாலாட்டி

உலர்த்திடவே சாமமது காய்ந்ததானால்
உத்தமமே என்ன சொல்வேன் மருந்தின் வேகம்
மலர்ந்திடவே வில்லைபண்ணி உலர்த்திக் கொண்டு
மைந்தனே யிலைரைத்து மேலே பூசே
பூசியபின் சீலைமண் மூன்றுஞ்செய்து
புகழாக மயிற்புடத்தில் கட்டிப்போகும்
மாசில்லா யின்னமொரு புடமே போட
நேசமாய் பற்பத்தை யெடுத்துக் கொண்டு
நெய்யிலே கொண்டிடவே மகோதரம் போகும்
மோசமில்லை சர்க்கரையிற் கொள்ளும் போது
முறைசுரமும் விட்டுவிடுங் கெண்டைபோமே.

— தே.வை.

கறியுப்பு (35 கி) எடுத்து குழித்தாமரைச் சாறு விட்டு மூன்று மணி நேரம்அரைத்து ,வில்லை செய்துலர்த்தி உலர்ந்த பின் குழித்தாமரை இலை கற்கத்தால் வில்லைக்கு கவசம் செய்து உலர்த்தி ஓட்டிலிட்டு ஓடுமூடி மூன்று சீலைமண் செய்து உலர்த்தி 50 எருவில் புடமிட்டு, பின் மீண்டும் ஒரு முறை புடமிட பற்பமாகும்.

அளவு: 100 மி.கி

அனுபானம் மற்றும் தீரும் நோய்:

நெய்யில் கொள்ள மகோதரமும்

சர்க்கரையில் கொள்ள முறைசுரமும் தீரும்

## மனோசிலை பற்பம்

"மாண்டுபோ மின்னமோரு பற்பங்கேளு
மைந்தனே மனோசிலைதான் பலமோர்வாங்கி
நீண்டதோர் சதாவேலிக் கிழங்கு பலமொன்று
நேரான அட்டுப்பு பலமோவொன்று
மைந்தனே இவையெல்லா மொன்றாய் சேர்த்து
உண்டிடவே யரைத்துவிடு செம்பீர்க்கஞ்சாற்றால்
உத்தமனே சொல்லுகிறே னுறுதியாமே.
உறுதியாய் முச்சாமமரைத்து வாங்கி
வூட்டப்பா பின்பதுதான் வில்லைபண்ணி
திருந்தவே ரவியிலே யுலர்ந்தபின்பு
சீக்கிரமாய் சீலைமண் ரண்டுங்கூட்டி

பொருந்தவே புவனபரதன் தாள்பணிந்து
பூட்டவே நோய்களெல்லாம் பறந்தே போகும்
கருதிவிடு வாலைக்குப் பூசை பண்ணு
கண்டுவிடு மயிற்புடத்தில் பற்பமாச்சே
ஆச்சப்பா வனுபானம் நெய்யிற் கொள்ள
அரைகடிகள் புண்புரைகள் கண்டவீக்கம்
போச்சப்பா தேனிலே கொள்ளும் போது
புகழான பீனிசங்கள் திரண்டவாய்வு
மூச்சப்பா கெண்டைவலி சுரோணிதங்கள்
முனையான நீர்ப்பாய்ச்சல் பிரண்டேயோடும்
வாச்சப்பா சர்க்கரையில் கொள்ளும் போது
மைந்தனே வயிற்றிலுள்ள கெண்டை போமே"

*மனோசிலை — 35 கிராம்*

*தண்ணீர்விட்டான் கிழங்கு — 35 கிராம்*

*அட்டுப்பு — 35 கிராம்& அனைத்தையும் பொடித்து செம்பீர்க்கஞ்சாறு விட்டு 3 சாமம் அரைத்து வில்லை செய்து உலர்த்தி ஓட்டிலிட்டு ஓடுமூடி சீலைமண் செய்து உலர்த்தி புடமிட பற்பமாகும்.*

*அளவு: 10 மி.கி. — 50 மி.கி.*

*அனுபானம் மற்றும் தீரும் நோய்:*

1. *நெய்யில் கொள்ள — புண், புரை, வீக்கம், கடிவிடம்*
2. *தேனிற்கொள்ள பீனிசம், வாயு, கெண்டைவலி, சுரோணிதம், நீர்க்கோவை*
3. *சர்க்கரையில் கொள்ள — வயிற்றுக்கெண்டை நோய் இவை போம்.*

**வெள்ளை குங்கிலிய பற்பம்**

"வெண்குந்திச் சுண்ணாம்பு வடிதான் கட்டி
வெளிறுமந்த நீரிலிட்டுக் குழம்பதாக்கி
வண்ணானுக்கிட்ட துணி யதனிற்நேறா யூற்று
மயங்காமற் காய்ந்தபின்பு அகலில் மூடி
கண்ணாகப் புடம் போட்டு யெடுத்துக் கொண்டு
காலிபசு நெய்யுடனே கலந்துட் கொண்டால்
புண்ணாரும் சிறுநீரு கட்டல்
போக்கி விக்கு மேகமினிப் போகுந்தானே"

சுண்ணாம்பை நீர்விட்டுக் கரைத்து வடிகட்டி அதில்
வெள்ளை குங்கிலியத்தை இட்டு அடுப்பேற்றி எரித்து
குழம்பாக்கி வெள்ளை சீலையில் வடிகட்டி, காயவைத்து
ஒரு அகலில் இட்டு மேல்அகல் கொண்டு மூடிசீலைமண்
செய்துலர்த்தி 10 எருவில் புடமிட பற்பமாகும்.

*அளவு: 500 மி.கி.*

*அனுபானம்: பசுநெய்*

*தீரும் நோய்கள்: நீரருகல், நீர்கட்டு, மேகம்.*

**பொரிகார பற்பம்**

"விரைத்திடும் பொரிகாரத்தின் கட்டியாய் விரைத்து வாங்கி
உரைத்திடு சங்கைநீத்தி யரைத்ததை குகையுண்டாக்கி
நிரைத்த சில்லதனால் செய்து நீ பொரிகாரம் வைத்து
வகுத்திடு சீலை செய்து குக்குடம் வைத்திடாயே
வைத்திடக் காரம்நீறும் வளமிதுக்கனுபானங்கேள்
நெய்த்திட்டத் தேனில் கொண்டால் நீர்க்கடுப்புடனே மாறும்
மெத்தநீர் விட்டுப் பாயும் மிசைந்த கல்லடைப்பு தீரும்
உத்திடுஞ் சதையடைப்புதுறைந்த நீர்த்தோசம் போமே."

சங்கை நீற்றி நீர்விட்டு அரைத்து குகையும், மேற் சில்லும் செய்து உலர்த்தி குகைக்குள் வெண்காரக் கட்டி வைத்து மேற்சில்லுமூடி சீலை செய்து குக்குட புடம் வைத்து புடம் ஆறிய பின் பிரித்து வில்லையை நன்கு அரைத்து எடுத்துக்கொள்ள வேண்டும்.

*அளவு: 250 மி.கி. முதல் 500 மி.கி.*

*அனுபானம்: தேன்*

*தீரும் நோய்கள்: நீர்க்கடுப்பு, கல்லடைப்பு, நீர்தோஷம், சதையடைப்பு தீரும்.*

**கற்பூர சிலாசத்து பற்பம்**

"ஆமேதான் கற்பூர சிலாசத்தைத்தான்
அப்பனே என்சீடா அறிவுடன்கேளாய்நீ
நாமேதான் கற்பூர சிலாசத்தப்பா
நாயகனே பலமொன்று கெந்தகந்தான்
தாமேதான் பலமொன்று கற்சுண்ணம்

தயங்காதே அரைப்பலந்தான் கூடச் சேர்த்து
ஆமேதா னரைத்தொன்றாய் ஓட்டில்வைத்து
ஆகாகா கொளுத்தியபின் சொல்லக்கேளே
கேளடா நிம்பபழத்தின்சாற்றாலாட்டிக்
கெடியான சலாசத்துக் கவசஞ்செய்து
நாளடா போக்காது புடமோகேளு
நவிலுவேன் குக்குடத்தில் நீறிப்போகும்
வானடா பணவிடைதான் நவநீதத்தில்
வகைபெறுவே மண்டலந்தான் காலதாகும்
பானடா உண்டுவர மேகங்காந்தல்
பறக்குமே பற்பத்தின் மகிமையாலே
பற்பத்தி னுப்பானஞ் சொல்லக்கேளு
பகருகின்ற கலியாணப் பூசனிக்காய்
அற்புதனே நாலிலொன்று எடுத்துக் கொண்டு
அறைந்தபற்பம் பணவிடைதான் சீனியோடு
கற்பமாய்க் கலந்துண அதுவேளை
கலக்கமில்லை பித்தமது நாற்பதும்போம்
உற்பனமாய் நீரிழிவு கண்டபேர்க்கு
ஓடுமே வாழையென்ற பழத்தில்தானே
தானான மண்டலந்தான் பழத்திற் கொள்ள
தடையில்லை நீரிழிவு திமேகம்போம்
பானான நவநீதந் தன்னிற் கொண்டால்
பறக்குமே நீரடைப்பு சதையடைப்பு
தேனான மேகவெள்ளை யோடுதானும்
தேங்குகின்ற கல்லடைப்பு சொல்லாதோடும்
மானான தேகமது குளிர்ந்துகாணும்
மகிதலத்தி லிம்முறைதான் மெத்தநன்றே"

— அ.கு.

கந்தகம் — 35 கிராம், கற்சுண்ணாம்பு — 17.5 கிராம் இரண்டையும் சேர்த்து அரைத்து சட்டியிலிட்டு அடுப்பேற்றி எரிக்க, எரிந்து அடங்கும். அச்சாம்பலை பழச்சாறுவிட்டு அரைத்துக் கொள்ள வேண்டும். கற்பூரசிலாசத்து 35 கிராம் எடுத்து சுத்தித்து மேற்படி கலவையை கவசித்து உலர்த்தி ஒரு அகலில் இட்டு மேல்அகல் கொண்டு மூடி குக்குட புடமிட பற்பம் ஆகும்.

அளவு: 500 மி.கி. 1 மண்டலம்

அனுபானம் மற்றும் தீரும் நோய்கள்

1. வெண்ணெய்யில் கொள்ள மேகம், கிரிச்சரம், நீரடைப்பு, கல்லடைப்பு

2. கல்யாணபூசணிக்காய் சாறு, சர்க்கரையோடு பற்பங்கொள்ள பித்தம் தீரும்.

3. வாழைப்பழத்தில் கொள்ள மதுமேகம் தீரும். தேகம் குளிர்ச்சியாகும்

## கற்பூர சிலாசத்து பற்பம்

மறைக்குங் கற்பூரசத்து பலம் வாங்கி
நிறைக்குஞ் செருப்படை நேர்ந்த சாற்றிலரை
முறைதப்பாமலே மூன்றுசீலை செய்யே
செய்துக் குக்குடஞ் சிறந்த புடமிடே
எய்து பற்பமெழிலுறு வட்டம்போல்
கொய்துமேநிறங்குறித்திடும் பற்பத்தை
நைதுவெண்ணையில்நயந்துவருந்திடே
அருந்திடப் பித்தமறிய கடுப்புகள்
குருத்திடும்வெள்ளைகுறிக்கும்பிரமேகமும்
திருந்துமேயுடல் செறிந்துமேயோடிடும்
வருந்து பற்பம்வகையாவுண்டிடே.

- தே.வை.

கற்பூர சிலாசத்து 35 கிராம்எடுத்து முறைப்படி சுத்தித்து பொடித்து சிறுசெருப்படைச் சாறுவிட்டு மூன்றுமணிநேரம் அரைத்து வில்லைசெய்து

உலர்த்திமண் அகலில்வைத்து மேலகல்கொண்டு மூடி மூன்று சீலை மண் செய்து உலர்த்தி குக்குடபுடமிட வேண்டும்.புடம் ஆறியபின் பிரித்து வில்லையை அரைத்து எடுத்துக்கொள்ள வேண்டும்.

அளவு: 500 மிகி

அனுபானம்: வெண்ணெய்

தீரும் நோய்கள்: பித்தம்,வெள்ளை, பிரமேகம்

## நண்டுக்கல் பற்பம்

அலவன் சிலைத்துக ளாக்கு முபாய மறைகுவன்யான்
நிலப்பூ வொடுசுதை பாண்டத்தி லிட்டபின் நீரைவிடும்
துலவக் கலக்கித் தெளிவினைக் கல்லினை யுள்ளிட்டு
நிலவிடத் தீயி லொருசாம மேயெரி நீர்சுண்டுமே
சுண்டிய பின்னதைத் தண்ணீறிற் றூய்மையாய்ச் சுத்திசெய்து
மண்டிட முள்ளங்கிச் சாற்றா லரைத்து வழித்துலர்த்திப்

*பண்டிடு பாடாண பேதியிற் றானும் பரிதியில்லை*
*யுண்டிடு நீர்க்கல் லடைப்புநீர்க்க கட்டிவை யோடிடுமே.*

நண்டுக்கல்லை எடுத்து அந்த எடைக்கு பூநீறும் கற்சுண்ணாம்பும் கரைத்து தெளிநீர் வாங்கி அதில் நண்டுக்கல்லை இட்டு நீர் சுண்டும் வரை எரிந்து பின் நல்லநீரில் கழுவி எடுக்க சுத்தியாகும். இதனை முள்ளங்கி சாறுவிட்டரைத்து உலர்த்தி, பின் சிறுகண்பீளைச் சாறுவிட்டரைத்து உலர்த்தி நன்கு அரைத்து எடுத்துக் கொள்ள வேண்டும்.

*அளவு: 100 மி.கி. — முதல் 200 மி.கி. வரை*

*அனுபானம்: நீர்பெருக்கி குடிநீர், நீர், முள்ளங்கிசாறு*

*தீரும் நோய்: கல்லடைப்பு, நீர்க்கட்டு, நீரடைப்பு.*

# கட்டு முறை

நெருப்பிற்கு புகைந்து ஓடும் சரக்குகளை நெருப்பிற்கு ஓடாமல் நிறுத்தி முடிக்கும் மருத்துவ முறை 'கட்டு" எனப்படுகிறது.

இது பாடாணங்களைத் தனித்தனியேனும், இரண்டு முதற் கலந்தேனும், உலோகங் களையேனும், சில சரக்குகளைச் சேர்த்திறக்கப்பட்ட புகை நீராலாவது, செயநீராலாவது, இலைச் சாறுகளாலாவது, குடிநீர்களாலாவது, தேனிலாவது, முலைப்பாலிலாவது, சில சரக்குகள் சேர்த்த குழிப்புட நெய்யிலாவது, தனிச்சரக்கு குழிப்புட நெய்யிலாவது சுருக்குக் கொடுத்து கட்டிக் கொள்வதும் கட்டாகும்.

சில சரக்குகளைத் தனியாகவாவது, பற்ப செந்தூரங்களாய்ச் செய்தாவது கூட்டிச் சாறுகளாலேனும், முலைப்பாலாலேனும் அரைத்து உருட்டிக்கொள்ளுவதும் கட்டாகும்.

களிம்புள்ள உலோகங்களினின்று களிம்பு முதலிய குற்றங்களை நீக்கிப் பிறகு புடமிட்டு இறுகும்படி செய்தலும் கட்டாகும்.

**கட்டின் வேறு பெயர்கள்**

மாத்திரைக் கல், உரை மருந்து, கட்டுமானம்

**கட்டுமருந்தின் ஆயுட்காலம்**

நீறுகட்டு, உருக்கு, களங்கு நானூறு..........................

என்பதில் இதன் ஆயுட்காலம் 100 ஆண்டுகள்.

**கட்டு மருந்தின் வகைகள்**

கட்டு மருந்தானது செய்யப்படுகின்ற முறையைக் கொண்டு 4 வகைப்படுகின்றது.

1. அரைப்புக் கட்டு
2. எரிப்புக் கட்டு
3. புடக் கட்டு
4. சுருக்குக் கட்டு

ஈதன்றியும் கட்டப்படுகின்ற கட்டானது ஒரு சரக்கினின்று பெறப்பட்டதாக இருந்தால் "தனிக்கட்டு" என்றும், பல மூலச் சரக்குகள் சேர்த்து ஒரே கட்டாக கட்டப்பட்டிருந்தால் "கலப்புக் கட்டு" அல்லது "கூட்டுக் கட்டு" என்றும் வழக்கில்அழைக்கப்படுகிறது.

**1. அரைப்புக் கட்டு**

கட்ட வேண்டிய சரக்கினைச் சுத்தி செய்து, சில சாறுகளாலும், குழித்தைலம், செயநீர், மற்றும் கட்டுச் சரக்குகளைக் கொண்டு அரைத்து உருட்டிக் கட்டிக்கொள்வது.

(உ.ம்) இரசக் கட்டு

**2. எரிப்புக் கட்டு**

கட்ட வேண்டிய சரக்கினைக் குறிப்பிட்ட சில சரக்குகளை அரைத்துத் துணியில் தடவி அத்துணியால் அக்கட்டுச் சரக்கினைப் பொதிந்து சுற்றிச் சீலை மண் செய்து எரித்து எடுத்துக் கொள்ளும் முறை.

**3. புடக்கட்டு**

சரக்குகளைக் கட்டும் செயநீர், திராவகம் போன்றவற்றில் ஒன்றாலோ பலவாலோ அரைத்துப் புடமிட்டுக் கட்டிக்கொள்ளும்முறை.

**4. சுருக்குக் கட்டு**

கட்ட வேண்டிய சரக்கிற்குச் சில குறிப்பிட்ட மூலிகைச் சாறு, குடிநீர், தாய்ப்பால் போன்றவற்றில் ஒன்றையோ, பலவற்றையோ சரக்கு புகையாமல் சுருக்கிட்டுக் கட்டிக் கொள்ளும் முறை.

**சுருக்கிடும் முறை**

**இயல்**

சுருக்கிட வேண்டிய சரக்குகளை உரிய மண் அல்லது உலோகப் பாத்திரத்தில் வைத்து நெருப்பிலிட்டு உரிய நீர்ப்பொருளைச் சிறிது சிறிதாக விட்டுக் காரமேற்றி பக்குவமாக்கும் முறை.

**அடுப்பு வகை**

"..........................கரி கொண்டு கும்மட்டி செலுத்துமதே"

என்பதால் கும்மட்டி அடுப்பில் கரி சேர்த்து அனலுண்டாக்கி அதில் வைத்து மட்டுமே சுருக்கிட வேண்டும் என்பதாம்.

**சுருக்கிடும் முறை**

"...................................கருக்கிடுங்கால்
...................................துவட்டு பஞ்சி
விசவாக......................இயல் பதுவாய்
வசமாய்த் துளித்துளி வந்நியிட்டுது

வலுவாய்த் திரும்பித் திரும்பித்
துளித்துளி விட்டதிற் மேற்
றளுக்கு வாராது நவரெங்கும் சுருக்கிடவும்!"

- ச.மு.நி.

என்பதில் சுருக்கிட வேண்டிய சரக்குகளில் உரிய நீர்ப் பொருளை பஞ்சில் தோய்த்து, துளித்துளியாக விட்டு திருப்பிக் கொடுக்க வேண்டும்.

நீர்ப் பொருளின்றி பொடியாய் வைத்து சரக்குகளின் மேல் தூவி பிரட்டிக் கொடுத்து பக்குவம் செய்முறை கிராசம் என்பதாம்.

இவ்விரு முறையில் சரக்குகள் காரமேற்றப்பட்டு பக்குவமடையும். இம்முறையில் சரக்குகளைக் கட்டவும், சுத்திக்கவும் செய்யலாம்.

கட்டு மருந்துகளை உரைக்கப் பயன்படுத்தப்படுபவை

1. சிறு கல்வம்
2. கருங்கல் தட்டு
3. தங்கம் உரைத்து சோதிக்கும் கல்

இம்மூன்றிலும் "தங்கம் உரைத்து சோதிக்கும் கல்லே" உருகிக் கட்டிய கட்டுகளை உரைக்க சிறப்பானவை.

## கட்டு மருந்து உரைக்கும் மாத்திரையளவு

ஓர் உரைப்பிலிருந்து ஐந்து உரைப்பு வரையிலும், ஒரு பொழுதிலிருந்து ஐந்து நாட்கள் வரையிலும் உரைப்பு மாத்திரை அளவு கூறப்பட்டுள்ளது.

இது நோயின் அளவைக் கொண்டும், நோயாளியின் வன்மை மென்மைகளுக்குத் தக்கவாறும் அமையும்.

## லிங்கக் கட்டு I (புடக்கட்டு)

"கருவான பிரமதண்டுச் சாறுவாங்கி
கவனமுடன் சரித்துப் பிழிந்து கொண்டு
பருவான லிங்கமது பலமும் வாங்கி
பாகமுடன் சுருக்கதுதான் தாக்கிப் பாரே
தாக்கினபின் கட்டிதனை யெடுத்துப் பாரு
தகைமையுள்ள கட்டியது யிறுகிக்கட்டும்
நோக்கமுடன் பின்னுமந்த நுணுக்கமுள்ள
மூலிதனைக் கவசஞ் செய்து
பாக்கவே சீலையது வலுவாய்ச் செய்து

பாகமுடன் ரவிதன்னிலே காயவைத்து
சேர்க்கமின்றி திரியாமல் மைந்தா கேளு
சுந்தரனே மணல் மறைவில் புடத்தை போடே
போடவே புடமதுவு மாறிப்பாரு
பொங்கமுடன் கட்டியது வுருக்குப் போலாம்
நீடவே கட்டிதனைப் பதனம் பண்ணு"
'கூறவே முடியாது லிங்கப் போக்கு
கொற்றவனே என்புசுரம் சன்னிவாதம்
தீரவே வனுபானம் தன்னிலீய தசைகெட்டு
யிசைகெட்டு தியங்கியோடும்
மாறலெனு முறைக் காய்ச்சல்
மதிகெட்டோடு மயங்காதே மூன்று நாளருந்திப்பாரு
ஊறவே மேகமென்ற நீரும் போகு"

- *அ.வை.கா*

*(1 பலம்) 35 கிராம் லிங்கக் கட்டியை இரும்பு சட்டியிலிட்டு அடுப்பின் மீது வைத்து பிரமதண்டு சாற்றால் எட்டு சாமம் சுருக்கிடும் முறைப்படி சுருக்கிட்டு பின் பிரமதண்டு இலையை அரைத்து கவசித்து உலர்த்தி மணல் மறைவில் புடமிட கட்டும். 3 நாள் உரிய அனுபானத்தி லிழைத்துக் கொடுக்க சன்னி, சுரம், முறைசுரம், மேகம் தீரும்.*

அனுபானம் கொடுக்கப்படவில்லையாதலால் நோய்க்கேற்றவாறு மருத்துவன் நிர்மாணித்துக் கொள்ள வேண்டும்.

## லிங்கக்கட்டு II (கிராசக்கட்டு)

"நச்சரவம் பேதிகண்ட வுடனேலிங்கம்
நாட்டியெடு விராகனிடை ரெண்டுநாற்றம்
உச்சிதமாய் படிதிரண்டு பொடித்து ஓட்டில்
உறுதிபெற உருக்குமுகம் வன்னிபோட்டு
மெச்சவதை பிரட்டியெடு கட்டிப்போகும்
மேனியுடபாலிலே உரைத்து உண்ண
தற்செயலாய்ப் பேதிநீங்கும் தாகசோபம்
தானடங்கு மென்று சொன்னார் யாகோபுதானே."

- *யா. வை.சி*

| | | |
|---|---|---|
| சுத்தித்த லிங்கம் | — | 4. 2 கிராம் |
| கந்தகம் | — | 8. 4 கிராம் |

*கந்தகத்தை பொடித்து ஓட்டிலிட்டு கரி அடுப்பிலிட்டு எரிக்க உருகும். உருகியதும் இலிங்கத்தைப் போட்டுப் புரட்டிக் கொடுக்க கட்டாகும்.*

*குப்பைமேனிச் சாற்றில் உரைத்து கொடுக்க ஊழிநோயில் காணும் பேதி, தாகம் தீரும்.*

## இலிங்கக் கட்டு (புடக்கட்டு)

*சுத்திக்கப்பட்ட இலிங்கத்திற்கு ஆலம் விழுது, வெள்ளை பூண்டு சம எடை எடுத்து புல்லாமணக்கு சாறு விட்டு அரைத்து, கவசம் செய்து உலர்த்தி, ஓட்டிலிட்டு ஒரு மூடி சீலைமண் செய்து 50 வரட்டியில் புடமிட கட்டும்.*

*அளவு: மூன்று உரை*

## அனுபானம் மற்றும் தீரும் நோய்கள்:

1. *தேனில் கொடுக்க சன்னி, மூர்ச்சை, கிரந்தி, விடக்கடி தீரும்*
2. *இஞ்சிச் சாற்றில் கொடுக்க வயிற்றெரிவு, நெஞ்சடைப்பு, வாயு தீரும்*
3. *வெல்லத்துடன் கொடுக்க மேகசூலை, வாதசூலை தீரும்.*

# உருக்கினம்

இது பாடாணங்களையாவது உலோகங்களையாவது சத்துரு மித்துரு சரக்குகளை கூட்டி மூசையிலிட்டாவது, அன்றி உரிய உலோக பாத்திரத்திலிட்டு எரித்தாவது அன்றி ஊதியாவது இளகச் செய்து ஆறவிட்டு எடுப்பது.

உலோகங்களை உருக்கும் பொருட்டு அக்கினியிலிட்டு ஊதும் பொழுது உருக்கப்படும் உலோகத்திற்குச் சமமான நிறமுள்ளதாய் சுவாலை தோன்றுமாயின் அப்பொழுது உலோகம் உருகித் திரவ நிலையிலுள்ளது என்பது பொருளாம்.

**உருக்கு**

**கார உருக்கு**

*"கார மொன்றைரையுமாகும்*
*பண்பான சங்கைவீரம் ஒன்றே காலாம்*
*நாடியே கௌரியது ஒன்றேயாகும்*
*நலமான வெள்ளையது முக்கால் சேரு*
*அப்பனே பொடிசெய்து வுருக்கி வாரு*
*சாடியே திரிகடுகு பொடியுந் தேனும்*
*கொடுப்பாயே பணவெடைதான் நோய்கள் போமே*
*பொல்லாத நெஞ்சடைப்பு பிரமை மூர்ச்சை*
*தாமே நீசய ரோகம் வாந்தி வெப்பம்*
*தயவில்லா சுரங்களொடு தொண்டை கம்மல்*
*ஆமே நீ விஷபாகங் காமாலை சோகை*
*அப்பனே சன்னியொடு வலிப்புந் தீரும்."*

*அரிதாரம் - 1½ சவ்வீரம் - 1¼, கௌரி - 1,*

*வெள்ளைபாடாணம் — 3/4, லிங்கம் — ½ பங்கு வீதம் எடுத்து அனைத்தையும் பொடித்து உருக்கி எடுத்துக் கொள்ள வேண்டும்.*

*அனுபானம்: திரிகடுகு, தேன்*

*தீரும் நோய்கள்: வாயுரோகம், குன்மம், நெஞ்சடைப்பு, பிரமை, மூர்ச்சை, சயரோகம், வாந்தி, ஏப்பம், சுரம், சன்னி, வலிப்பு, சுரநோய்கள் தீரும்.*

**கந்தி உருக்கு**

*சுத்தித்த நெல்லிக்காய் கந்தகம் — 4 கிராம்*
*சுத்தித்த இரசகற்பூரம் — 8 கிராம்*
*சுத்தித்த இலிங்கம் — 8 கிராம்*

மூன்றையும் நன்கு பொடித்துக்கொள்ளவேண்டும். புது மண் அகலை கரி நெருப்பில் வைத்து சூடாகியதும் அதில் மேற்படி பொடியை போட்டு உருகி சேர்ந்ததும் புகையாமல் இறக்கி ஆறியதும் பொடித்துக்கொள்ள வேண்டும்.

*அளவு: 50 மி.கி. 200 மி.கி. வரை*

*அனுபானம்: நெய் — தேன்*

தீரும் நோய்கள்: மூலம்.

# களங்கு

உபரசங்களினின்று சத்தெடுத்து அத்துடன் தங்கம், நாகம், காரீயம் முதலான உலோகங்கள் சேர்த்து புடமிட்டெடுத்துக்கொள்ளும் முறை. உயர்ந்த வகை மருந்துகளில் ஒன்றாக கூறப்பட்டுள்ளது. அனுபவத்தால் மட்டுமே அறியக்கூடியது.

பல அரிய நோய்களை நீக்கவும், கற்ப மருந்தாகவும் கூறப்பட்டுள்ளது.

"..........மயில் கழுத்து நிறம் போலாம்" — என்றும்
'மாதுளம் பூ நிறம் போலாம்" — என்றும்

பல நிறங்கள் கூறப்பட்டிருப்பதில் செய்முறை ஒவ்வொன்றிற்கும் என குறிப்பிட்ட நிறங்களை அறிந்து மருந்து முடித்தல் வேண்டும்.

இதன் ஆயுட்காலம் — 100 ஆண்டுகள்.

**கல்நார் சத்துக்களங்கு**

"தானென்ற களங்குதான் ஒன்றுகோடி
சத்துதானே பலமொன்று நிறுத்துக்கொண்டு
வேனென்ற தங்கமது நாலுக்கொன்று
மிடுக்கான காரீயம் சூதம் கெந்தி
கோனென்ற தங்கத்தின் எடைதான் கூட்டி
குகையிலிட்டு வுருக்கியேதான் கோலாலாட்டி
ஊனென்ற ஓட்டிலே சாய்த்திட்டாக்கால்தான்
உயர்ந்து நிறம் மயில்கழுத்தாம் களங்குமாமே
மயில் கழுத்து நிறமான களங்குதன்னை
.......................................................................................
.......................................................................................
.................................................................உள்ளே கொள்ளு
பணவெடைதான் தேன் தன்னில் அனுபானத்தோடு
அயில் கழுத்துக் கருங்காலிப் போலாந்தேகம்"

கல்நாரின் சத்தினூடே கணக்குந்தானே

கல்நார் சத்து — 223—ம் பக்கம் கூறப்பட்டுள்ளது

| | |
|---|---|
| கல்நார் சத்து | — 1 பலம் (35 கி) |
| தங்கம் | — பலம் 8.75 கி |
| காரியம் | — பலம் 8.75 கி |
| சூதம் | — பலம் 8.75 கி |

கந்தகம் — பலம் 8.75 கி

அனைத்தையும் சேர்த்து அரைத்து குகையிலிட்டு உருக்கி எடுக்க களங்காகும்.

அளவு: 488 மி.கி.

அனுபானம்: தேன்

தீரும் நோய்: நரை திரை மாறும். நோயற்றுப்போம்.

**பவழக்களங்கு**

அணியெடுத்துச் சத்துக்கு நாலிலொன்று
அடைவாகப் பொன் சேர்த்து நாகங்கூட்டி
தனியெடுத்து வுருகையிலே சூதந்தன்னை
தாக்கான நாகத்தில் தொந்தித்தீவாய்
கெனியெடுத்து கந்தகத்தை யுருக்கு முகத்தில்
கொடுத்திடவே களங்காகும்

களங்கத்தை பொற்றலையில் சாற்றாலாட்டி
கனபுடமாய் மூன்று புடம் போட்டெடுக்க
வளங்கத்தை மாதுளம் பூ நிறம் போலாகும்
வகையாக பணவெடைதான் தேனிலுண்ணு
பிளங்கத்தைச் சிங்கத்தின் பலமுண்டாமே.

பவழச்சத்து முறை போகர் 7000 3ம் ஆயிரத்தில் 169-ம் பக்கம் கூறப்பட்டுள்ளது

| | | |
|---|---|---|
| பவழச்சத்து | — | 1 பங்கு |
| தங்கம் | — | ¼ பங்கு |
| நாகம் | — | ¼ பங்கு |
| கந்தகம் | — | ¼ பங்கு |
| ரசம் | — | ¼ பங்கு |

பவழச்சத்து, தங்கம், நாகம் கூட்டி மூசையிலிட்டு உருக்கி உருக்கு முகத்தில் ரசம் சேர்த்து பின் கந்தகத்தை பொடித்துச் சேர்த்து உருக்கி எடுக்க வேண்டும். இதை கரிசாலை சாறு விட்டரைத்து 3 புடம் போட களங்காம்.

அளவு: பணவெடை

அனுபானம்: தேன்

தீரும் நோய்: காய கற்பமாய் உடலை நிலைக்கப்பண்ணும்.

# சுண்ணம்

தாதுச் சரக்குகளை முறைப்படி நூற்களில் கூறியுள்ள நீர்ப்பொருள் நூற்களில் கூறியுள்ள நீர்ப்பொருள் கொண்டு அரைத்து உரிய செய்முறைப்படி சுண்ணச் சத்தாக்கிக் கொள்ளும் முறை.

இருவகை செய்முறைகள் கூறப்பட்டுள்ளது.

1. ஊது முறைச் சுண்ணம்
2. புடச் சுண்ணம்

ஊது முறையில் உலையும், துருத்தியும் வங்க நாளமும் பிரதானக் கருவிகளாம்.

புட முறையில் குழிப்புடமே பிரதானமாம். மஞ்சளிலிட்டால் சிவப்பதே இதன் அடையாளம் ஆகும்.

இவையன்றி பலவகை செயநீர் முறைகளில் எரித்துச் சுண்ணாம்பாக்கிச் செயநீர் பெறும் முறைகளும் உண்டு.

இதன் ஆயுட்காலம் — 500 ஆண்டுகள்.

## கல்நார் சுண்ணம்

"வெற்பதனி லுற்பவித்த கல்நார் தன்னை
வெள்ளையா யெடுத்துவந்து பலமும் நாலு
உற்பனமா யுவர்மண்ணு சுண்ணம் நேரே
உடன்கரைத்துப் பாணிபடியிட்டுக்காய்ச்சித்
கற்பனையாய்க் குழம்புபத மிறக்கி வைத்துக்
கல்நார்விட்டரைத்து வில்லை காயவைத்து
சொற்படியே புடத்திலிடு சுண்ணமாகும்
சொல்லரிது யாகோபு சொன்னார்தானே"

"முட்டோடே குலைந்த பல் தன்னிலே தான்
முக்கியமாய்த் தேய்த்துப் பார்க்க முன்னே
நாட்டிலே பல்லிறுகித் தந்த வாய்வு
நலமான பற்குத்து அரணையெல்லாம்
காட்டிவிடு கதிர்கண்ட பனிபோலாகும்
காரணமாய்த் தந்தவலி கடலேபுக்கும்" - யா.வை.சி

சுத்தித்த வெள்ளை கல்நார் — 140 கிராம்
கற்சுண்ணம் — 140 கிராம்
பூநீறு — 140 கிராம்

கற்சுண்ணத்தையும் பூநீரையும் கரைத்து வடிகட்டி காய்ச்சி குழம்பு பக்குவத்தில் இறக்கிக் கொள்ள வேண்டும். கல்நாரை கல்வத்திலிட்டு பொடித்து மேற்படி குழம்பு விட்டரைத்து வில்லை செய்து உலர்த்தி ஓட்டிலிட்டு ஓடுமூடி சீலைமண் செய்துலர்த்தி புடமிட சுண்ணமாகும். பல்லில் தேய்த்து வர பல்லசைவு, பற்குத்து, பல்அறணை, பல்வலி தீரும்.

**அயச்சுண்ணம்**

"நல்லிரும்பு ஓரிடையாங் காந்தம் நேராய்
நாடியரை வாழையுட கிழங்குச் சாற்றால்
மெல்லவே வில்லைகதிர் முன்னேவைத்து
மேன்மை பெற சரவுலையில் வைத்து ஊது
முல்லைமலர் போலாகும் நிறமுந்தானும்
மூவாறு தரந்தனிலே முத்துப் போலாம்
வல்லமையாய் பொன்பணம் போலுண்டுபாரு
வையகத்தில் யாகோபு வகை சொன்னாரே
இரும்பு வெள்ளை திரிகடுகிலிரு நேரங்கொள்
எடுத்த பிணி தசவாய்வு யோங்கியே ஓடும்
துரும்பு போலிருந்த வுடல் தூணதாகும்
துப்புரவாய் விந்துகட்டுந்தாது வெல்லாம்
விரும்பியதற்கு மிருகண்ணும் சிவப்பாய் காணும்
வெற்றி தரு முடலழுத்த மிகவுண்டாகும்
நரம்புகரம் மலர்வாச மேனியாகும்
நாதாந்த யாகோபு நாடினாரே

- யா.வை.சி.

இரும்பு அரப்பொடி, காந்தம் சம எடை எடுத்து வாழைக் கிழங்கு சாற்றால் அரைத்து வில்லை செய்துலர்த்தி மூசையிலிட்டு ஊதி எடுக்க சுண்ணமாம். இவ்விதம் நன்கு சுண்ணமாகும் வரை ஊதி எடுக்க வேண்டும்.

அளவு: 500 மி.கி.

அனுபானம்: திரிகடுகு சூரணம்

தீரும் நோய்கள்: வாதரோகம், பாண்டு தீரும். உடல் உரமாகும். விந்து கட்டும். இரத்த விருத்தி ஆகும்.

## பலகரை சுண்ணம்

"சாகரத்தின் மலந்தன்னைக் கல்வத்திலிட்டுத்
தாக்கியரைத்தூ திடவே சுண்ணமாகும்
வேகமறச் சோகிதனை முன்போலூது
விதமாக ரெண்டு சுண்ணமிடையே சேர்த்துப்
பாகமாயரைந் தன்னந்தன்னாலாட்டி
பதியயெடு கதிரில் வைத்துப் புடமு மூன்று
ஆகமாயிட்டுத் துட்டெடையுள்ளே கொள்ள
அருள் பெருகுஞ் சயகாச மேகுந்தானே"

சாகரத்தின மலம் — கடல் நுரை

கடல் நுரையை பொடித்து மூசையிலிட்டு ஊதியெடுக்க சுண்ணமாகும். அவ்வாறே பலகறையை மூசையிலிட்டு ஊதியெடுக்க சுண்ணமாகும்.

இரண்டையும் சமஅளவு எடுத்து கல்வத்திலிட்டு கற்றாழைச்சாறு விட்டரைத்து வில்லை செய்துலர்த்தி ஓட்டிலிட்டு ஓடு மூடி சீலைமண் செய்துலர்த்தி குக்குட புடமிடவேண்டும். இவ்விதம் மூன்று முறை புடமிட சுண்ணமாகும்.

அளவு: 488 மி.கி.

அனுபானம்: நீர், பால்

தீரும் நோய்கள்: கபம், காசம்.

## பவளச் சுண்ணம்

"தோடைப்பூவு மெடுத்திடு நன்றாய்
வேடுகட்டி யவித்திடு
தொக்கவே யதைப் பிழிந்து நன்றாய்
மிக்க வகையும் வைத்திடு
கோடைப் பவளச் சேரெடு அதையிரண்டு
சாமவகை யாயரைத்தூ திடக்
கொடுமையாகவே சுண்ணமாகும்
கடுமையாய்ப் பண வெடையெடு
ஓடையிருமற் சயமு மோடும்
பாடையிலது ஏகிடும்
ஏக்கவே தேனென்ற தானதையெடு
மிக்கையாக உண்டிடு

பேடையாசிணுக் கிருமலுஞ்
சாடையாயதை யொழித்திடும்
பித்தமுமது அடிபடுமென
நித்தமுமுண்ணும் பள்ளிரே"

ஆடாதோடை பூவை வேடுகட்டி பிட்டுபோல் அவித்து பிழிந்து சாறு எடுத்துக் கொண்டு பவளத்தை சுத்தித்து மேற்படி சாறுவிட்டு ஆறுமணி நேரம் அரைத்து வில்லை செய்துலர்த்தி குகையிலிட்டு மேற்சில்லுமூடி குகை பழுக்க ஊதி எடுக்க சுண்ணமாகும்.

அளவு: 260 மி.கி. முதல் 520 மி.கி. வரை

அனுபானம்: வெண்ணெய், நெய், தேன்

தீரும் நோய்கள்: இருமல், சயம், காசம், சிணுக்கிருமல், கபரோகங்கள், பித்த நோய்கள்.

# கற்பம்

கற்பாந்த காலம் உடலை நிலைத்திட செய்யும் படியாகிய மருந்து முறைகள்.

இதன் ஆயுட் காலத்தை நோக்குங்கால் "கற்பந் சத்து குரு குளிகை மிக்க ஆயுள்" என்பதனாலும், மூலிகையிலான மருந்து வகைகள் குறுகிய ஆயுட் காலத்தை உடையதாகையாலும் தாதுச் சரக்குகளாலாகிய மருந்து முறை மட்டுமே. "அகமருந்து 32" தலைப்பில் கற்பம் சத்து, குரு, குளிகை என குறிப்பிடப்பட்டுள்ளது.

மருத்துவ நூற்களில் கற்பம் என்ற தலைப்பின் கீழ் சொல்லப்படும் மருந்து முறைகளை நோக்கின் அது செந்தூரமாகவோ பற்பமாகவோ, சுண்ணமாகவோ இருக்கிறது. இம்முறைகளில் தாதுக்கள் நேரடியாக பெரும்பாலும் பயன்படுத்தப்படவில்லை.

உபசரங்களினின்று பெறப்படும் சத்துக்களால் செய்யப்படும் மருந்து முறைகளே கற்பம் என்ற தலைப்பில் கூறப்பட்டுள்ளது. இதன் தலைப்பின் கீழ் கூறப்படும் மருத்துமுறைகளின் மருத்துவ குணத்தை நோக்குங்கால் இவை பெரும்பாலும் நரைதிரையின்மைக்கே சொல்லப்பட்டுள்ளது. இத்தாதுக்களின் சத்துமுறைகளே கற்பம், குரு, குளிகை இவற்றிற்கு மூலச்சரக்காக உள்ளது.

தாதுக்களின் சத்துக்களால், முடிக்கப்படுவதால் இதன் ஆயுட்காலம் நீடிக்கப்பட்டுள்ளதாக கொள்ளலாம். இதில் உடற்கு ஆதாரமான உலோகங்களும், இரசமுமே பிரதானச் சரக்காகக் கொண்டு அநேக வகை செந்தூரமும், சுண்ணமும் கற்பங்களாக கூறப் பட்டுள்ளது.

குருமுறையன்றி இம்முறைகள் பயிற்றுவிக்கப் பல நடைமுறைச் சிக்கல்கள் உண்டு. இருப்பினும், நூல் முழுமைபெறவும் கற்பம், சத்து, குரு, குளிகை என்ற தலைப்பில் சில எடுத்துக்காட்டுகள் கொடுக்கப்பட்டுள்ளன.

## உலோக கற்பம்

.............................................கற்பமது மற்றோபாகம்
ஒரு களஞ்சு தங்கமப்பா யீயம் ரெண்டு
மண்டலத்தில் உருக்கியதை குழிக்கல்லிலிட்டு
அண்டர் புகழ் ரசமுமொரு களஞ்சு சேர்த்து
அரைத்திடுவாய் சரிகந்தி மல்லிச் சாற்றால்
கண்டாயோ நாகமல்லி சாற்றாலாட்டி
காற்றாட நிழலிலுலர்த்தி குப்பிக்கேற்றே
குப்பிக்குச் சீலை செய்து வாலுகையிலேற்றி

தப்பில்லாமல் கமலம் போலெரித்து வாங்கி
கனலாறச் செந்தூரம் முருக்கம்பூப்போல்

நன்றாக குன்றியிடை நெய்யிலுண்ணே
உண்ணவே நரைதிரை மாறிப் போச்சு
ஒரு கோடி சதுர் யுகமு மிருக்குந் தேகம்.

தங்கம் — 5.1 கிராம்
வெள்ளீயம் — 5.1 கிராம்
நாகம் — 5.1 கிராம்

அனைத்தையும் சேர்த்து உருக்கி ரசம் 5.1 கிராம் சேர்த்து வெட்டையாக்கி, அரைத்து அவ்வெடைக்கு கந்தகம் சேர்த்து அனைத்தையும் கல்வத்திலிட்டு பொடித்து நாகமல்லிச் சாற்றால் அரைத்து நிழலில் உலர்த்தி காசிக் குப்பியிலிட்டு வாலுகா எந்திரத்திலிட்டு எரிக்க வேண்டும். சலாகையிட்டு பார்க்க சலாகை நுனி சிவந்தால் பதமென இறக்கி ஆறவிட்டு எடுத்துக் கொள்ள வேண்டும்.

அளவு: குன்றியெடை

அனுபானம்: நெய்

தீரும் நோய்: நரைதிரை மாறும். உடல் நிலைத்திருக்கும்

ஆயுட்காலம்: மிக்க ஆயுள்.

**காந்த கற்பம்**

காந்தமா மிரு களஞ்சி களஞ்சி தங்கம்
கருத்துடனே நாகமொரு களஞ்சிசேரு
சாந்தமா மூன்று மொன்றாய் உருக்கி வாங்கி
தயவுடனே ரசங்களஞ்சி ஐந்தும் குழிக்கல்லிட்டு
இனிதான சரி கந்தி கூடச் சேர்த்து
ஆய்ந்த புகழ் பொற்கையான் சாறுவிட்டு
ஆறுசாமமரைத்து அதை நிழலிலுலர்த்தே
நிழலிலுலர்த்தி குப்பியிலே அடைத்து வைத்து
நீயேழு சீலை செய்து வாலுகை யிலேத்தி
வளமாகக் கமலம் போல் சாமமாறு
.................................................................................
.................................................................................
குன்றியிடை தேனிலுண்ண நரைதிரை போம்
பழுத்ததுவுங் காயாகும் பிஞ்சுமாகும்
பலநினவு தள்ளியப்பா உண்டுதேரே
உண்டுவிடு கற்பமிது.

— அ.ப.கா.வை(கற்ப காண்டம்)

| | | |
|---|---|---|
| காந்தம் | — | 10.2 கிராம் |
| தங்கம் | — | 5.1 கிராம் |
| நாகம் | — | 5.1 கிராம் |

மூன்று உலோகங்களையும் மூசையிலிட்டு உருக்கி ரசம் 5.1 கிராம் சேர்த்து கல்வத்திலிட்டு அரைத்து சரி எடை கந்தகம் சேர்த்து கரிசாலை சாறுவிட்டு 18 மணி நேரம் நன்கு அரைத்து நிழலில் உலர்த்தி காசிக் குப்பியிலிட்டு வாலுகா எந்திரத்தில் வைத்து 18 மணி நேரம் கமலாக்கினியாக எரித்து எடுக்க வேண்டும்.

*அளவு: குன்றி எடை (130 மி.கி.)*

*அனுபானம்: தேன்*

*தீரும் நோய்: நரைதிரை மாறும். நோயணுகாது.*

*ஆயுட் காலம்: மிக்க ஆயுள்*

**அப்பிரக சத்து செந்தூரம்**

**(கற்பம்)**

கூனென்ற சத்தெடுத்துக் குகையில் வைத்துக்
குமுறி நின்று வுருகையிலே தங்கம் போடு
நானென்ற நான்குக்கே ஒன்று போடு
நாகத்தைச் சுத்திசெய்து ரெண்டுபோடு
வேனென்ற சூதமது நாக வெடைபோடு
வீரமிட்டு கந்தியிட்டு ரெண்டுக்கொன்றே
ஒன்றாக பொடியாக்கியதை கரந்தைச் சாற்றில்
ஊறவரைத்துக் காசியென்ற மேருக்கிட்டு
நன்றாக அறுசாமம் எரித்த பின்பு
நாட்டியேசி லாகையிட்டுப் பதத்தைப் பாரு
மன்றாகக் கரகரத்து மாதுளம்பூப் போலாம்
பத்தாக பணவெடைதான் பாலிலுண்ணு
பறந்தோடும் மண்டலத்தில் காய சித்தி
உத்தாகப் பத்தியமாய் உண்டு வந்தால்
ஒளியுண்டாம் நரையெல்லாம் உதிர்ந்து போகும்

- *போ7000 3—ம்ஆயிரம்*

## கல்நார் சத்து செந்தூரம்

## (கற்பம்)

நாதமதின் சத்தொரு பலந்தான் தூக்கி
நாலிலொன்று தங்கமிட்டு ருக்கி யாட்டு
பூதமதின் பொன்னெடைக்கு நாகம் போடு
பிரண்டும துருகையிலே சூதம் போடு
சூதமதின் எடைக்கொக்க கெந்தி போடு
சுழன்றுருகில் தாளகமும், சிலையும் போடு
ஏதமாமித் தனையும்பொற் றலையின் சாற்றால்
இழுத்தரைத்துப் பொடியாக்கிக் குப்பிக்கேற்றே

யேற்றியே பன்னிரெண்டு சாமந் தீதான்
எரித்திடவே அருணன்போல சிவந்து போகும்
போற்றியே யீசானன் பூசை செய்து
புகழாக மண்டலந்தான் தேனிலுண்ண
மாற்றியே சடமிறுகி மதன்போ லாவாய்
மகத்தான நரையெல்லாம் கருவண்டாகும்
நீற்றியே பத்தியத்தை விட்டி டாதே
நித்தியமும் மறவாதே வாசி மாட்டே.

| | | |
|---|---|---|
| கல்நார் சத்து | — | 35 கிராம் |
| தங்கம் | — | 8.75 கிராம் |
| நாகம் | — | 8.75 கிராம் |

சேர்த்து உருக்கி உருகியதும் ரசம் 8.75 கிராம் சேர்த்து பின்கந்தகம் 8.75 கிராம் சேர்த்து பின் தாளகம் 8.75 கிராம் மனோசிலை 8.75 கிராம் சேர்த்து பின் கரிசாலை சாறுவிட்டரைத்து குப்பியிலிட்டு வாலுகையிலேற்றி 36 மணி நேரம் எரிக்க சிவக்கும்.

அளவு: பணவெடை

அனுபானம்: தேன்

தீரும் நோய்: நரைதிரை மாறும்.

# சத்து முறை

மூலிகை அல்லது உலோகத்தின் சத்து, அன்றியும் வாத முறைப்படி உபரசம், பாடாணம், உலோகம் முதலிய தாதுக்களினின்று எடுக்கும் சாரம்.

மூலிகை இனங்களின் பாகத்தை உரிய முறைப்படி எரித்துச் சாம்பலாக்கி நீர்விட்டு அரைத்துத் தெளிவை வாங்கிக் காய்ச்சி எடுத்துக்கொள்வது.

ஆனால் தாது சரக்குகளை உருக்கிச் சத்தெடுக்க "குடோரி" என்பது ஆதி சரக்குகளில் ஒன்றாகச் சொல்லப்படுகிறது.

இது ஒரு வைப்பு மருந்து முறை.

இது பலவகைகளாக நூலில் பேசப்படுகிறது. அவை

1. குடோரி
2. வாதக் குடோரி
3. வீரக் குடோரி
4. காரக் குடோரி
5. திசைகாரக் குடோரி

என்பதாம். சத்துகள் என்பது உபரசங்களை ஆதியாகக் கொண்டு பெறப்படுபவை. இவ்வகைச் சத்துகளை மீண்டும் பற்பம், செந்தூரம், சுண்ணம், களங்குகளாக முடிக்கும் முறை சிறப்பாக, காய கற்பமாக சொல்லப்பட்டுள்ளது.

உபரசங்களினின்று சத்தெடுக்குங்கால், உரிய குடோரி வகைகளைச் சேர்த்து உருக்க சத்து வெளிப்படும். அதனைப் பிரித்து மீண்டும் குடோரி இட்டு உருக்கி, நூலில் சொல்லியுள்ள முறையில் உருக்கி சத்து எடுத்துக்கொள்ள வேண்டியது. பின் சத்துகளைத் தூய்மை செய்து மருந்து முறைகளாக முடித்துக் கொள்ள வேண்டும்.

உருக்கி எடுத்த இவ்வகைச் சத்துகளையும் தூய்மை செய்யும் முறையைக் கூறுங்கால்.

"சத்தெல்லாம் பொறுக்கிக் கொண்டு
உயர்கின்ற மித்திரனில் உருக்கிச் சாய்ப்பாய்"

எனக் குறிப்பிடப்பட்டுள்ளது. இதில் மித்திரம் என்பது ஒரு வகைக் கலவை. இவைபற்றிய விளக்கங்கள் மருந்து செய் இயலும் கலையும் எனும் நூலில் கொடுக்கப்பட்டுள்ளது.

**கல்நார் சத்து**

"தாரமான சத்ததுவுஞ் சொல்லக் கேளு
தனிரெண்டு பத்துபலம் கல்நார் தன்னைப்
போரமாகப் பொடியாக்கிக் கொள்ளுச் சாற்றில்
பொட்டணமாய்க் கிழிகட்டி யெரித்துக் கொண்டு
காரமாகக் காயவிட்டுக் கல்வத் திட்டு
காரமென்ற குடோரியது பலர்தான் போடே.

பலம்போடு திசைகாரக் குடோரி தானும்
பாங்கான வீரமொரு பலந்தான் போடு
குலம்போக மித்திரத்தை விரவிக் கொண்டு
குகையிலிட்டு முன்போலே வுருக்கித் தீரு
தலம்போடு சத்தெல்லாம் உருக்கிக் கொண்டு
தாக்கியேதான் கறடெடுத்தைந்து தரமூது
உலம்போடு சத்தெல்லாம் ஒன்றாய்ச் சேர்த்து
உருக்கியேதான் மித்திரனில் சாய்த்திடாயே."

*- போகர் 7000*

350 கிராம் கல்நாரை பொடித்து ஒரு துணியில் முடித்து கொள்ளுச்சாற்றில் இட்டு ஒரு சாமம் எரித்து காய வைத்து காரகுடோரி, திசைகார குடோரி, வீரகுடோரி வகைக்கு ஒரு பலமிட்டு (3.5 கிராம்) 35 கிராம் மித்திரனையும் சோத்து மூசையிலிட்டு உருக்க சத்து பிரியும். அதனை பிரித்து எடுத்து பின் காரமிட்டு மீண்டும் மூசையிலிட்டு உருக்க சத்து பிரியும். இவ்விதம் அனைத்து சத்தினையும் பிரித்து சேர்த்து உருக்கி மித்திரனில் சாய்த்து எடுத்துக் கொள்ள வேண்டும்.

**முத்துச் சத்து**

வெள்ளை நிறமான முத்து பலந்தான் பத்து
நேராக முத்தெருக்கன் செவிச்சாறு தன்னில்
மூன்று நாட்கள் ஊறவிட்டு மோரால் கழுவி
பேறாக வெடியுப்புச் செய்நீ ராலே
பிலத்தரைத்துச் சவ்வீரம் பலமு மொன்று
கூறாக வாதமென்ற குடோரி யொன்று
குண்டுமணி பருப்பதுவும் பலமுமொன்றே

பருப்பதுவும் பலமுமொன்று சார மொன்று
பாங்காக விதையெல்லாம் நேக ரைத்து
முருப்பதுவும் சுத்தித்த முத்து கூட்டி

முத்தெருக்கன் செவிச்சாறு விட்டரைத்து
நெருப்பதுவும் யிட்டுமேதான் புடத்தைப் போடு
நேராக குகையிலிட்டு உருக்கி னாக்கால்
தருப்பதுவும் சத்ததுவாஞ் சிவந்தி றங்கும்
சத்தெல்லாம் பொறுக்கியேதான் பின்னு மூதே

பின்னுமதே கரடெடுத்து வூதச் சத்தாம்
பொறுக்கியுமே கரடெடுத்து பின்னு மூது
அன்னமதே ஐந்துமுறை யுருக்கிப் பின்பு
ஆராய்ந்து சத்தெல்லாம் பொருக்கிக் கொண்டு
உன்னுமதே வுருக்கியேமித் திரனில் சாய்த்து.

*- போகர் 7000*

வெள்ளை நிறத்தில் குற்றமற்ற முத்துக்கள் 350 கிராம் எடுத்து முத்தெருக்கன் செவிச்சாறுவிட்டு மூன்று நாள் ஊறவைத்து பின் மோர்விட்டுக் கழுவிக்கொள்ள வேண்டும். பின் வீரகுடோரி, வாதகுடோரி, குண்டுமணி பருப்பு, வெண்காரம் வகைக்கு 35 கிராம் வீதம்எடுத்து வெடியுப்பு செய்நீர், சேர்த்தரைத்து அத்துடன் சுத்தித்த முத்தையும் சேர்த்து முத்தெருக்கன் செவிச்சாறு விட்டு அரைத்து வில்லை செய்துலர்த்தி புடமிடவேண்டும். பின் வில்லையை பொடித்து குகையிலிட்டு ஊத சத்து பிறக்கும். சத்தினை பொறுக்கிக் கொண்டு பின் மீண்டும் 5 முறை ஊதி சத்தை யெல்லாம் பொறுக்கி, உருக்கி மித்திரனில் சாய்த்து சுத்தித்துக் கொள்ளவேண்டும்.

## சிலாசத்துச் சத்து

போமென்ற சிலாசத்து சத்து கேளு
பொடியாக நறுக்கியேதான் கொதிக்க வைத்து
வாமென்ற அமுரிதன்னில் கொதிக்க வைத்து
வளமான காடியிலே கொதிக்க வைத்துத்
தேமென்ற கல்வத்தி லிதனை யிட்டு
திசைகாரக் குடோரியொரு பலமும் போடு
காமென்றகா ரக்குடோரி யொருபலந்தான்
கனமான வீரமொரு பலந்தான் போடே

போட்டரைத்து வெடியுப்பு நீரினாலே
புகழாய்ப்பின் மித்திரத்தை விருவிக் கொண்டு
வீட்டரைத்து மெல்லியதாய் வில்லை கட்டி
விளங்கவொரு புடம்போட் டெடுத்துக்கொண்டு
கூட்டரைத்துக் குகையிலிட்டு குமுறவூதி
கொட்டியபின் சத்தெல்லாம் பொறுக்கிக்கொண்டு

காட்டரைத்துக் கரடெல்லாம் பொடித்து வூது
கனமாக வூதிடவே சத்து மாமே.

சத்தெடுத்து வேறுவைத்துக் கரடு தன்னைத்
தளராதே ஐந்துமுறை பொடித்து வூது
முத்தெடுத்தெல் லாந்தானும் ஒன்றாகச் சேர்த்து
முனையான காரமிட்டு ருக்கிக் கொண்டு
பத்தெடுத்து மித்திரனில் சாய்த்து பின்பு
பதினைந்து திறஞ்சாய்க்கப் பாந்த மாகும்.

*- போகர் 7000*

சிலாசத்தை 350 கிராம் எடுத்து ஒன்றிரண்டாக பொடித்து அமுரிநீரிலிட்டு கொதிக்க வைத்துப்பின் காடிநீரிலிட்டு கொதிக்க விட்டெடுத்துக் கல்வத்திலிட்டு திசைகாரகுடோரி, வெண்காரக் குடோரி, வீரகுடோரி வகைக்கு 35 கிராம் சேர்தது வெடியுப்புநீர் விட்டரைத்து பின் மித்திரத்தை சேர்த்து அரைத்து சிறுசிறு வில்லைகளாகத் தட்டி உலர்த்தி புடமிட்டு எடுக்க வேண்டும். பின் குகையிலிட்டு ஊத சத்து இறங்கும். சத்தை சேகரித்து பின் மீண்டும் இவ்வாறு 15 முறை செய்து எடுக்க சத்து பிறக்கும்.

# குரு - குளிகை

நவமணிகளை ஆதியாகக் கொண்டு செய்யப்படும் மருந்து முறை. உடலை நீண்ட நாள் நோயின்றி நிலைத்திருக்கச் செய்யும் முறையாகக் கூறப்பட்டுள்ளது. இம்முறைகள் யாவும் போகர் 7000-ல் காணலாம்.

**மாணிக்க ரத்தின குரு**

உற்பத்தி மாணிக்கம் தெரிந்தெடுத்து
உருசியான குதிரைதனின் கோமயத்தில்
முற்பத்தி மூன்றுநாள் தாம் ஊறவைத்து
மீறியதோர் வெந்நீரில் கழுவிப்போட்டு
இற்பத்தி எருக்கம்பால் தன்னில் தானும்
இதமாக மூன்று நாள் பாவனையே செய்து
அற்பத்தி அகலிலிட்டு புடம் மூன்று போட
ஆதியான மாணிக்கம் குருவுமாமே

குருவெடுத்துப் பணவெடைதான் பாலிலுண்ண
கொடிதான் தீபனந்தான் மிகவுண்டாகும்
கருவெடுத்து விந்துவது மிகவே வூறும்
கடிதான பெருக்க முண்டாம் வெப்ப வாதம்
குருவெடுத்து சிலேத்துமத்தைச் சாடிப் போகும்.
..........................................................................................
..........................................................................................
..........................................................................................
காணவுமே உடலதின் குற்றத்தைப் போக்கும்
கடிதான நோயெல்லாம் காணாப் போகும்.

- போகர் 7000

மாணிக்கத்தை குதிரையின் சிறுநீரில் மூன்றுநாள் ஊறவைத்து வெந்நீரில் கழுவி எடுத்து எருக்கம்பாலில் மூன்று நாள் ஊறவைத்து உலர்த்தி அகலிலிட்டு மேலகல் கொண்டு மூடி புடமிட வேண்டும். இவ்விதம் மூன்று முறை புடம் போட்டெடுக்க குருவாகும்.

அளவு: பணவெடை

அனுபானம்: பால்

தீரும் நோய்: முக்குற்றத்தை சமநிலைப்படுத்தும், விந்து நட்டம் தீரும், பசி உண்டாகும், உடலை வன்மைப்படுத்தும்.

**கோமேதகக் குரு**

*..........................கோமேத கந்தனை யெடுத்து*
*புரவியிட கோமயத்தில் மூன்று நாள்தாம்*
*நேமென்று வூறவைத்து நிலக்குமிழ்ச்சாற்றால்*
*நெகிழாதே வூறவைத்து மறுநாள்தானும்*
*காமென்ற கருவூமத்தின் சாற்றில் போடு*
*கனமான வச்சிரமாங் குகையிலிட்டு*
*கூமென்ற மேல்மூடி சீலை செய்து*
*கூசாதே வூதிடவே குருவுமாமே*
*குருவெடுத்துச் சூதத்தில் ஓட்டினாக்கால்*
*குமுரியேதான் வெண்ணையாகுங்..................*
*.......................................................................................*
*.......................................................................................*
*பருவெடுத்துப் பணவெடைதான் பாலிலுண்ணப்*
*பாண்டோடு சோகை போமே பித்த கபமும்*
*திருவெடுத்துச் சுரமொடு அழலை போக்கும்*
*தீபனந்தான் அதிகமாகும் சுவையுண்டாமே."*

*— போகர் 7000*

கோமேதகத்தை குதிரை மூத்திரத்தில் மூன்று நாள் ஊறவைத்துப் பின் நிலக் குமிழ்சாற்றில் ஒரு நாள் ஊற வைத்து பின் மறுநாள் கருவூமத்தின் சாற்றில் ஊறவிட்டெடுத்து வச்சிரக் குகையிலிட்டு மூடி சீலை செய்து குகை பழுக்க ஊதி எடுக்க குருவாகும்.

அளவு: பணவெடை

அனுபானம்: பால்

தீரும் நோய்: சோபை, பித்தகபம், சுரம் தீரும். பசியுண்டாகும். அழலை நீக்கும்.

**குளிகை**

அக மருந்து 32—ல் இறுதியாக சொல்லப்படுவது சித்த மருத்துவத்தின் இரசாயண பிரிவின் முடிவான எல்லை இக்குளிகை முறை. இதற்கு மிகுந்த பிரயாசமும், ஞானமும், அறிவும் மிக்க அவசியம்.

அட்டமாசித்திகளையும் அளிக்க வல்லது என நூற்களில்; குறிப்பிடப்படுவதுமின்றி உடலை கற்பாந்தகாலம் நிலைத்து வைக்கக் கூடியது எனவும் ஏழு உலகங்களையும் அறியதக்க வகையில் உடலை இயக்கும் வன்மையடைந்தது எனவும் சிவபெருமானுக்கு ஒப்பாகவும் சொல்லப்பட்டுள்ளது.

இக்குளிகை முறையை முடிப்பதற்கு உபரசங்களும், இரசமுமே பிரதானச் சரக்காகும்.

இவை 9 வகை சொல்லப்பட்டுள்ளது.

1. சொரூபக் குளிகை
2. காம தேவர் குளிகை
3. மோகினி குளிகை
4. சந்தான குளிகை
5. அட்சய குளிகை
6. ககன குளிகை
7. சகடு குளிகை
8. சத்தபேதி குளிகை
9. பரிசபேதி குளிகை

போகர் 7000 3-ம் ஆயிரத்தில் இக்குளிகைகளின் பயன்கள் சொல்லப்பட்டுள்ளது. ஆனால் செய்முறை கூறப்படவில்லை.

போகர் சத்த காண்டம் எனும் நூலில் இதன் செய்முறை மறைப்பாக கூறப்பட்டுள்ளது. இதன்படி துருசை குரு முடித்து அதனை விராலி இலையில் சேர்த்து சாறு பிழிந்து அதில் ரசத்தை விட்டு வெண்ணையாக்கி இரசவெண்ணையுடன் உலோகங்கள் கூட்டி உருக்கி மணியாக்கிக் கொள்ள வேண்டும். பின் உலோகம், பாடாணம், உபரசம் ஆகியவற்றை சத்தாக முடித்துக் கொண்டு ஒவ்வொரு சத்தாக மேற்படி ரசமணிக்கு சாரணை இட வேண்டும் என்றும் குறிப்பிடப்பட்டுள்ளது. சாரணை என்பது காரமேற்றும் முறை. மணியை உருக்கி அத்துடன் சத்துக்களையும் ஒவ்வொன்றாக உருக்கி சேர்க்கும் முறை. சத்துக்களினால் காரமேற்றும் விகிதத்தைப் பொறுத்து குளிகைக்கு ஒவ்வொரு பெயராக கொடுத்துக் கொண்டு வரப்படுகிறது.

காரமேற்றும் அதன் வீரியத்தைப் பொறுத்து குளிகைகளின் பயன்களும் மாறுபடுகிறது.

இதன் விரிவான விளக்கத்தை மேலும் போகர் சத்த காண்டத்தில் தெரிந்து கொள்ளலாம்.

# புற மருந்து முறைகள்


1. கட்டு 159
2. பற்று 162
3. ஒற்றடம் 169
4. பூச்சு 171
5. வேது 176
6. பொட்டணம் 182
7. தொக்கணம் 184
8. புகை 189
9. மை 198
10. பொடிதிமிர்தல் 203
11. கலிக்கம் 204
12. நசியம் 206
13. ஊதல் 209
14. நாசிகாபரணம் 210
15. களிம்பு 213
16. சீலை 218
17. நீர் 221
18. வர்த்தி 224
19. சுட்டிகை 226
20. சலாகை 231
21. பசை 232
22. களி 238
23. பொடி 238
24. முறிச்சல் 242
25. கீறல் 242
26. காரம் 244
27. அட்டை விடல் 247
28. அறுவை 250
29. கொம்புகட்டல் 254
30. உறிஞ்சல் 255
31. குருதிவாங்கல் 256
32. பீச்சு 260

# கட்டு

கட்டுதல் என்று பொருள்படும் இம்மருத்துவ முறை இரு பிரிவாகும்.

1. நோயுற்ற இடங்களில் மருந்து சரக்குகளை வைத்து கட்டுவது.
2. நோயுள்ள இடங்களுக்கு ஏற்ப சீலையால் கட்டிக் கொள்வது.

இவ்விரு முறைகளிலும் முதல் முறைக்கு சில உதாரணங்கள் கொடுக்கப்பட்டுள்ளது.

இரண்டாவது முறையில் சீலையில் கட்டிக் கொள்வது பாதிக்கப்படும் நோய் நிலைகளில் பயன்படுத்தும் கட்டு முறை ஆகும்.

இம்முறை பழங்காலந்தொட்டே வழக்கில் உள்ளது. கட்டும் சீலையானது உரத்து அசையாவண்ணம் இறுக்கிக் கொள்ளும் வகையில் சீலையில் உளுந்து மாவுடன் கோழி முட்டை வெண்கரு சேர்த்து அரைத்து நோயுள்ள இடத்தில் பூசியும், சீலையில் தடவியும் கட்டும் முறை உள்ளது. இதற்கு புளியம் வித்து சூரணத்துடன் கோழி முட்டை வெண்கரு கலந்தும் பயன்படுத்துவதுண்டு.

மேலும் என்புகளின் பாதிப்புக்கு ஏற்ப மூங்கில் குச்சிகளை தட்டையாக, நீண்ட அளவில் வடிவமைத்து வைத்துக் கட்டிக் கொள்ளும் முறைகளும் இதிலடங்கும். இது கொம்பு கட்டல் எனும் பிரிவில் அடங்கும்.

தற்காலத்தில் அழுத்தம் தரத்தக்க வகையில் ரப்பர் இழைகளுடன் கூடிய *Elastic Bandage* துணிவகைகள் பயன்படுத்தப்படுகிறது.

### கற்றாழைகட்டு

"ஓடுங் கற்றாழை உட் சோறெடுத்துட
நாடு மூவைந்து நாளிரு நேரமும்
தேடு வைத்து ரணத்தின் மேற்கட்டிடில்
நீடு புண் புரை நில்லாதோடுமே."

சோற்றுக் கற்றாழை மடலை தோல் நீக்கி சோற்றை மட்டும் எடுத்து வைத்து ஒரு நாளைக்கு இருவேளை வீதம் மூன்று நாள் வைத்துக் கட்ட ஆறாத ரணம், புரையோடிய ரணம் தீரும்.

### திருகுகள்ளி கட்டு

"எட்டுமே திருகுகள்ளி வேருடன்
வெட்டுமே தணலிலிட்டு வெதுப்புடன்

கட்டுமே பிசைந்து கடிநோய் நிதம்
மட்டுமே குதி வாதமு மேகுமே”

- தே.வை

திருகு கள்ளி வேரை தணலிலிட்டு வெதுப்பி கட்டி வர குதி கால் வலி தீரும்.

**நொச்சிக்கட்டு**

“தீரு முழுங்கால் தனிற்கட்ட
திறமாம் நொச்சி யிலையோடு
நேருகின்ற கல்வாழை
நிகழ்த்தும் வாத மடக்கியிலை
பாரும் வேலிப் பருத்தியிலை
பாங்காயிடித்து முழங்காலின்
நேரும் படிக்குக் கட்டிவிடத்
தெறிவாய் முழங்கால் வலிபோமே”

- யா.வை. 300

நொச்சியிலை, கல்வாழை இலை, வாதமடக்கி இலை ,வேலிப்பருத்தி இலை சம அளவு எடுத்து ஒன்று சேர்த்து இடித்து முழங்காலிற் கட்ட முழங்கால் வலி நீங்கும்.

**சூரியகாந்தி இலைக்கட்டு**

“போமே மண்டைச் சூலை வரிற்
புண்ணும் புழுவும் தலையில் வரும்
தாமே அதற்கு மருந்து தனைச்
சாற்றக் கேளும் ருக்மானே
நாமே சூரிய காந்தியிலை
நன்றாயொருபிடி கொண்டுவந்து
வாமே பாரு சட்டிதனில்
வகையாய்த் தண்ணீர் படிவாரே
வார்த்துச் சட்டிமேற் குச்சிவைத்து
வகையாயிலையை அதிற்பரப்பி
சேர்த்து மறுசட்டி தான் மூடி
திறமாய்த் தீயுந் தானெரித்து
பார்த்து அவிந்த வுடனே நீ
பதமாய்ப் பார்த்து யிலையெடுத்துக்
கார்த்துத் தலைதனிற் றான்பரப்பிக்
கனமாய்த் துணிபோட்டுக் கட்டிவிடே

கட்டியிடு யிதுபோல் மூன்றுநாள்
கணக்காய்ச் செய்ய சூலையுடன்
திட்டமுடனே புண் புழுவுந்
திறமாயோடிப் பறந்துவிடும்
கட்டமுடனே நாலா நாள்
தக்கபடியே காய்ந்து விடும்
இட்டமுடனே சுகமாகும்
இதுதான் நல்ல முறையாமே”

*- யா.வை. 300*

*சூரிய காந்தி இலை 1 பிடி எடுத்துக் கொள்ள வேண்டும். ஒரு சட்டியில் தண்ணீர்விட்டு அதன்மேல் குச்சிகளை பரப்பி குச்சிகளின் மேல் சூரிய காந்தி இலையை பரப்பி மேற்சட்டி கொண்டு மூடி எரித்து சூரியகாந்தி இலை வெந்தவுடன் பிரித்து ஆறியவுடன் இலையை தலைதனிற் பரப்பி துணிவைத்துக் கட்டவேண்டும். இவ்விதம் செய்ய மண்டைச் சூலை, அதில்காணும் புண், புழுக்கள் யாவும் நீங்கும்.*

# பற்று

**இயல்:**

மருந்து சரக்குகளை உரியதிரவத்தில் அரைத்து சூடுண்டாக்கி நோயுற்ற இடங்களில் பூசுவது

'பற்றென்பது சுட்டிகையிலொன்றே"

எனத் தேரையர்தருவில் கூறப்பட்டுள்ளதாகையால் அரைத்து சுட்டிகை போன்று சுட வைத்து பூசிக் கொள்வதே பற்று ஆகும்.

தாபிதத்துடன் கூடிய வீக்கம், வலி இவற்றிற்கு இம்முறை சிறப்புடையது ஆகும்.

**புற்றுமண் பற்று**

"ஏத்திடாயப் புத்திடிமண் பழையன்னம்
ஆத்திடாய்ச் சமன் மை போலரைத்தெடு
காத்திடாய் நீராகாரம் விட்டுக்குழைப்
பார்த்திடாய் கொதிப்பாகெனத் தோக்கிடே
தோக்கு நாளேழ் துடர்ந்திரு நேரமும்
தாக்கு வீக்கந்தரியா விட்டோடிடும்
போக்கு வாய்வு வஸ்து புகையும் புளி
நீக்கும் பத்தியம் நேர் கண்டறிந்திடே."

புற்றுமண், பழைய சோறு நன்குமை போல் அரைத்து நிசி நீர் விட்டு குழப்பி கொதிக்க வைத்து வீக்கத்தில் பற்றிட தீரும்.

புளி, புகை நீக்க வேண்டும்.

**மூசாம்பரப்பற்று**

"அபினி கடுகு பெருங்காயம்
அதிக வாளம் கரும் போளம்
மருவும் எருக்கஞ் சாறுவார்த்து
வாட்டியரைத்து மேற்பூசக்
கடுதுங் கடிகை பிளவைக் கட்டி
கடிய சூலை பவுத்திரமும்
அடியில் வீழ்ந்து மடிந்தேகி
அண்டமழியும் பத்தாமே"

அபின், கடுகு, வாளப்பருப்பு, பெருங்காயம், மூசாம்பரம் இவற்றை கல்வத்திலிட்டு எருக்கன்சாறுவிட்டு 1 மணி நேரம் அரைத்து சுடவைத்து பற்றிட்டு வர பிளவை, கட்டி, பவுத்திரம், வீக்கம் தீரும்.

## கழற்சிப்பற்று

“கழற்காய் வித்தேரண்டக்காய் வித்திரண்டும்
அழற்காயிலைச் சாறுவிட்டாட்டித் தழற்கேற்றிப்
பின்னதை யொற்றந் திரும்பப் பேசாதிட வீங்கும்
உன்னத வண்டங்கள் கரையும்”

கழற்சி பருப்பு, ஆமணக்கின் பருப்பு இரண்டையும் சம அளவு எடுத்து மிளகிலைச் சாற்றால் ஆட்டிக் கொதிக்க வைத்து பற்றிட அண்ட வீக்கம் கரையும்.

## வெடியுப்பு பற்று

“வெடியரி கனமரி வேலிப்பருத்தி
படுபுன லிட்டரை பக்குவமாகக்
காய்ச்சிய குழம்பெனக் கனற்புகையுடனே
சீர்நுதல் களமுரஞ்செவியடி வாகு
புறமிடு பதவரை போக்கறலுடனே
யுறுபிணி யினமெலா மோடுமக் கணமே”

- தே.கா

வெடியுப்பு, மஞ்சள், கொடிவேலி, வேலிப்பருத்திச் சாறுவிட்டரைத்து குழம்பாக்கி சுடவைத்து பொறுக்கத் தக்க சூட்டில் பற்றிட நெற்றி, கழுத்து, மார்பு, கன்னம், தோல் முதுகு இவற்றில் காணும் நோய் நீங்கும்.

## மண் பற்று

“இடை தொடை கடுக்க நொந்து நடைக் கொடாமல்
மிடையது மிகுந்து காட்டி மிக்ககால் திமிர்க்கை யேறில்
திடமுடன் புற்று மண்ணுவதுஞ் செய்யதோர் கரியமண்ணும்
வடிவுறு நண்டு தோண்டுமண்ணுஞ் சுண்ணாம்புங்கூட்டே
சொன்னதோர் கோழிமுட்டைத்துகள் வெள்ளைக் கருவினோடே
உண்ணுமா மணக்கெண்ணெ யூற்றியே கொதிக்க வைத்து
முன்னமே தொடையிற்பூச முளைத்திடும் வாதமெல்லாம்
திண்ணமாயுடல்விட் டோடும் செப்பினார் தெரிந்து கொள்ளே

- ப.ரா.சே.

புற்றுமண், கரியமண், நண்டுக்குழிமண், சுண்ணாம்பு சமஅளவு எடுத்து கோழிமுட்டை வெண்கரு விட்டரைத்து ஆமணக்கெண்ணெய் சேர்த்து கொதிக்க வைத்து தொடையிற் பூச வலி நீங்கும்.

**தேற்றான் பற்று**

*"இல்லவித்தை மாறன்றா ரெண்ணெயுடன் கலந்தால்*
*நல்ல வித்தை நோய்க்கு நமனதுவே—பல்லைக்கும்*
*மாரடைப்புக்கும் பிடிப்பு வாயுவுக்கும் பற்றிடப்போம்*
*நீரிலுந்து மாதகிலில் நீ."*

*- தே.வெ.*

தேற்றான் விதையை பொடி செய்து கொண்டு வேப்பெண்ணெயுடன் கலந்து கொதிப்பித்து பற்றிட வல்லை நோய், மாரடைப்பு, வாயுப்பிடிப்பு ஆகியவை தீரும்.

**உத்தாமணிப் பற்று**

*"சாறு பிழிந்ததில் சாம்பிராணி சுக்கரைத்திட்டு*
*ஆருகிடு பற்றுமை நோய் — நீருக்கும்*
*ஏலத்தி னோடிடு நீரேற்றச் சேட்பமற*
*வேலிப்பருத்தியிலை வேர்"*

*- தே.வெ*

உத்தாமணி இலை, வேரை நறுக்கி சாறு பிழிந்து அத்துடன் சாம்பிராணி, சுக்கு, இரண்டையும் அரைத்து சுடவைத்து சூடாறுமுன் பற்றுப்போட சன்னி நோய் நீங்கும்,

ஏலத்தோடு கூட்டிழைத்து காய்ச்சி பற்றிட நீர்க்கோவை தீரும்.

**ராகிப் பற்று**

*"என்னவே நரித்தலையா முழந்தாட்சூலை*
*ஏகிறிவிட மலையாளியிலையைக் கொண்டு*
*பண்ணவே ராகியொருசிரங்கை வாங்கிப்*
*பண்பாக கரிகி சுக்கு நாற்கழஞ்சு*
*அன்னவே யருளியிலை கூடவைத்து*
*அம்மிப்பாலுண்ணவே யரைத்து நன்றாய்*
*கண்ணவே கொதிப்பித்து பற்றுமேலே போடு"*

ராகி 100 கிராம் எடுத்து சட்டியிலிட்டு கருக்கி சுக்கு 6 கிராம் சேர்த்து மிளகிலை சேர்த்து அரைத்து கொதிக்க வைத்துப் பற்றிட நரித்தலை வீக்கம் தீரும்.

**ஆமணக்கு பற்று**

*"கந்தக் குழலாய் கடுங்கோழைக் கட்டிளகச்*
*சந்தப்பாணத்துமுறை தான்கோளாய் முந்தவே*
*காரெள்ளே ரண்டவிதை காட்டுந்தேங் காய்த்துருவல்*
*மார்பில் வறுத்தரைத் தப்பு"*

*- ப. ரா.சே.*

*கருப்பு எள், ஆமணக்கு வித்து, தேங்காய்துருவல் சமஎடை எடுத்து அரைத்து கொதிக்க வைத்து இளஞ் சூட்டில் மார்பில் பற்றிட கோழைக்கட்டு தீரும்.*

**நீர்முள்ளிபற்று**

*"...............................வீக்கம் போக*
*முறையான நீர்முள்ளி சங்கங்குப்பி*
*அறித்து போங் கருநொச்சி புண்ணாக்கின்மூலம்*
*அப்பனே அமுக்கறா சாறுங்கூட்டி*
*பிரிந்து போங் குக்குடத்தின் அவரைச்சாறும்*
*பண்பாக வகையொன்று படிக்காலாக*
*தெரிந்து போமடுப்பேற்றி வற்றக்காய்ச்சி*
*நேராகப் பூசிடவே வாங்கிப் போமே"*

*நீர்முள்ளி, சங்கங்குப்பி, கருநொச்சி, புண்ணாக்குசமூலம் அமுக்கரா, கோழியவரை இவற்றின் சாறுகள் வகைக்கு கால்படி எடுத்து பாத்திரத்திலிட்டு அடுப்பேற்றிவற்றக் காய்ச்சி வீக்கமுள்ள இடங்களில் பூச வீக்கம் போகும்.*

**கள்ளிப் பற்று**

*"கண்டிடுந் திருகுகள்ளி வேருடன்*
*விண்டிடும் வசம்புள்ளி மிளகொடு*
*கொண்டிடு மரைத்துக் கொதி செய்து பின்*
*வெண்டிடு மெள்ளெண்ணெ யுறவாகவே*
*ஆகவே குழப்பி யதை மெய்யினில்*
*வேகவே துவலையிட்டுப் பூசிடில்*
*போகவே வலி வாதமகன்றிடும்*
*தாக வென்னீரோடன்னமுமே"*

*- ப.ரா.சே*

*திருகு கள்ளி வேர், வசம்பு, வெள்ளைப்பூண்டு, மிளகு சமஅளவு எடுத்து அரைத்து கொதிக்க வைத்து எள்நெய் சேர்த்து குழப்பி பூச வாத நோய் தீரும்.*

# ஒற்றடம்

நெருப்பினால் சூடு உண்டாக்குவது, இம்முறை ஒற்றல் என்றும் கூறப்படும்.

பலவகை மூலிகைகள், தானியங்கள் இவற்றை உரிய முறைப்படி சுட வைத்து துணியிலிட்டு கிழியாகக் கட்டி நோயுள்ள இடங்களில் ஒற்றி, ஒற்றி எடுப்பது ஒற்றடம் ஆகும்.

வெண்கல பாத்திரம், இரும்பு சட்டம், மணல், துணி, மண்பாண்டம் இவற்றை சூடாக்கி நோயுள்ள இடத்தில் வைத்து வைத்து எடுப்பதும் ஒற்றடம்.

ஒற்றட முறையில், ஒற்றடவேண்டிய சரக்குகளை நேரடியாக நெருப்பிலிட்டோ, வறுத்தோ, அவித்தோ பின் துணியில் முடிந்தோ ஒற்றடமிடுவதும், நீரை சுட வைத்து துணியில் தோய்த்தோ அன்றி குப்பிகளில் அடைத்தோ நோயுள்ள இடங்களில் ஒற்றி எடுப்பதும் அடங்கும்.

தற்காலத்தில் ரப்பரினால் செய்யப்பட்ட ஒற்றட பைகள் வழக்கில் உள்ளன.

தாபிதம், வலி, வீக்கம் இவற்றில் இம்முறை நற்பலனைத்தரும்.

**ஒற்றட சரக்குகள்**

"தவிடுப்பெண் ணெய்க் குடுவைச்சாம்பல் சுணஞ்சாந்து
நவிலெழுநா சேரெருக்கு நாடித் — துவள்பருவம்
பார்த்துமெய் நோய்களறப் பற்றப்பையப் பையவைக்க
வூர்க்குளிது காய்ப்பிடஞ்சே யொற்று."

- தே.வெ. பாடல் 630

தவிடு, உப்பு, எண்ணெய்க் குடுவை, எருமுட்டைச் சாம்பல், நீறு செய்த சுண்ணத் தூள், சுண்ணாம்புக் காரை இவற்றுள் ஒன்றைக் கொண்டு ஒற்றடமிடலாம். ஒற்றடமிடும் பொழுது எருக்கிலை பழுப்பை நோயுள்ள இடத்தில் வைத்தும் ஒற்றடமிடலாம்.

**புங்காதி ஒற்றடம்**

"புங்கு சங்கு நிம்பம் புனலிகமுகுங்
கிலுகிலுப்பை கொற்றா
நங்கை கடம்புவுள்ளி
மருள் வசம்பு
யிங்கணவை யுற இடித்து யிதமாக
வறுத்து வொத்திமற் கட்டில்
போங்குடலுற்ற வலி விட்டேகிப்
போ மாரனைப் பாருமிது நீயே"

*புங்கன் சமூலம், சங்கன் சமூலம், நிம்ப இலை, புனலி இலை, கிலுகிலுப்பை, கொற்றான், கடம்பு, உள்ளி, மருள், வசம்பு இவற்றை சமமாக எடுத்து இடித்து வறுத்து துணியில் முடிந்து ஒற்றடமிட குடல் வலி, மார்பு வலி தீரும்.*

**சுடுசோற்று ஒற்றடம்**

*"உட்டணமாகிய நெல் சோறு*
*ஒண் நெய்விட் டெரித்து நல்ல*
*பொட்டணமாக்கி ஒற்றுப் போற்று*
*மிப் பூதலத்தில்*
*திட்டென வருகண் கோபந்தீருமே*
*சிவப் பெரிப்பும்*
*பட்டதோர் வலியும் பீளை நீங்கிடும்*
*பார்க்கில் நன்றே"*

*- அ.ந.வி. 500 பாடல் 422*

*சுடுசோற்றில் நெய்விட்டு பிசறி துணியில் முடிந்து கண்ணைச் சுற்றி ஒற்றடமிட கண் சிவப்பு, எரிச்சல், வலி, பீளை கட்டுதல் தீரும்.*

**புளியிலை ஒற்றடம்**

*"ஆவின்பாலு மிரண்டுபடி அதனிற் புளியிலை யிரண்டுபிடி*
*காவியெழுதுங் கண்மடவீர் கடுகாய் திரளக் காய்ச்சியபின்*
*சீவிச் சிலைதனிலே யிட்டுத் திர பொட்டணந்தான் கட்டி*
*யொத்தக் கூடி வலிக்குங் கண்வலிதான் குணமாங்குணமாமே"*

*- நா.மு.ந.விதி—200*

*இரண்டு படி பசும்பாலில் இரண்டுபிடி புளியிலை சேர்த்துக் காய்ச்சி துணியில் முடிந்து ஒற்றடமிட கண்வலி தீரும்.*

**பழ ஒற்றடம்**

*"கண்ணிலுற்ற நோய்கட் கெல்லாம்*
*மேலாகத் தலையிலுற்ற வலிகட்கெல்லாம்*
*சிந்தையா யெலுமிச்சம்பழ முகத்தைச் சீவியே*
*கதிர் செய்து அயப்பொடித்தூள்*
*அத்தை தானுட் செலுத்தியதன் மேலே*
*அடைவாக சாணதுகிலகிரு கொண்டே பந்தாய்*
*தொத்தை போலே சுருட்டி பந்தாகத் தீமுன்*
*காட்டிப் பின்பு நீ கசக்கிடாயே"*

"கசக்கியே கைகளில் தான்வைத்துக் கொண்டு
கண்களிலே மாறாமலொற்றும் போது
யசக்காக கண்வலிகள் வலிப்புக்குத்து
மாறாத சிவப்போடு மேற்றலையினோயும்
இசைப்பின்னி தான் நிலமிசையற்றுப்போம்"

எலுமிச்சம் பழத்தை சீவித் துளை செய்து அதனுள்
அயப்பொடியை செலுத்தி பின் ஒரு சீலையில் பசுஞ்
சாணத்தை தடவி மேற்படி பழத்திற்கு சுற்றி நெருப்பிலிட்டுச்
சுட்டு சீலையை பிரிந்து பழத்தை கைகளால் கசக்கி
கண்களில் ஒற்றடமிட கண்வலி, தலைவலி தீரும்.

## வாதமடக்கி ஒற்றடம்

"வாதமடக்கியிலை மாவிலங்கை காற்றொட்டி
சீதமடக்கும் சிவனார் வேம்பு — போதிய
நாலுமிடித்தவித்து நன்றாக வொற்றிடவே
காலுறு பன்னோய் போகுங்காண்"

வாதமடக்கி இலை, மாவிலங்கப்பட்டை, காற்றொட்டி இலை, சிவனார்வேம்பு ஆகிய நான்கு சரக்குகளையும் சம அளவு எடுத்து இடித்து அவித்து ஒற்றடமிட கால்வலி தீரும்.

## வேம்பாதி ஒற்றடம்

"வட்ட நொச்சி வேம்பிலையும் புங்கப் பட்டையுடனே
வளர் திருகுகள்ளி வேர் துளிர் கொத்தானும்
திட்டமாய் வறுத்து நன்றாய் வெள்ளை மண்ணுடன் சேர்த்துத்
திறமுடனுடம்பி லொற்று நலமதாயிட
சட்டமாகுந் திமிர்வாதமேல் குத்து முழிகள்
தன்னிடத்திலே திரண்ட நீரை யுண்ணுமே
மட்டில்லாத தமிழ் முனிவர் திட்டமாய் சொன்னபடி
மாநிலத்தில் செய்பிணிகள் தானகலுமே"

- ப.ரா.சே.

நொச்சியிலை, வேம்பிலை, புங்கம்பட்டை, திருகுகள்ளிவேர், திருகுகள்ளி, துளிர் கொத்தானிலை வெண்மணல் சம எடை எடுத்து ஓட்டிலிட்டு வதக்கி துணியில் முடிந்து ஒற்றடமிட திமிர்வாதம், முழங்கால் வாதம், மூட்டு வாதம், குத்து வாதம் தீரும்.

## தழுதாழை ஒற்றடம்

*"தழுதாழை யெருக்கு நொச்சி சாற்றிய வேம்பு நாலும்*
*பழுதற விடித்து நன்றாய் பகர்ந்த வேப்பெண்ணெய் வார்த்து*
*ஒழுகவே விதனங் கொண்ட தலமெலாந் தோயவொற்றில்*
*வழுவிலாக் கண்ட வாதம் போமென வழுத்தினாரே"*

*- ப.ரா.சே.*

தழுதாழை, எருக்கு, நொச்சி, வேம்பு இவற்றின் சிலை சம எடை இடித்து வேப்பநெய் விட்டு வதக்கி வலியுள்ள இடங்களில் ஒற்றடமிட கண்டவாதம் தீரும்.

## பூச்சு

சரக்குகளை அரைத்தாவது, இலை ரசங்களையாவது, தைலங்களையாவது நோயுள்ள இடங்களில் பூசுவது.

நூற்களில் துவாலை என்றும் பேசப்படும்.

இம்முறைக்காகும் மருந்துகளை அவ்வப்போது அரைத்தும், மாத்திரை வடிவிலோ, சூரண வடிவிலோ செய்து உரிய திரவப் பொருளில் கரைத்தும் பயன்படுத்திக் கொள்ளலாம்.

நோய்களுக்கு ஏற்ப பூச்சு மருந்துகளை கூறப்பட்டுள்ள கனத்தில் பூசவேண்டும்.

பலவித வாத நோய், தோல் நோய்களில் இம்முறைகள் நற்பலனைத் தரும்.

**ஆவிரையாதி பூச்சு**

"ஆவரை நெல்லியதனுடன் பூலாவேரும்

கோவதன வெண்ணெய் கூட்டிக் குழைத்துடன் மேலேபூசி

பாலையே கடுப்புமகைப்பும் பறந்துதான் குளிருமென்ன"

ஆவாரை பஞ்சாங்கம், நெல்லிவற்றல், பூலாவேர் சமஅளவு எடுத்து பொடித்து வெண்ணெய் கூட்டி அரைத்து மேற்பூச கடுப்பும், அதைப்பும் தீரும்.

**வேம்பு பூச்சு**

"நிம்பங் கொழுத்து கழற்சிவிரை நிகழ்வெள்ளுள்ளி கடுகுடனே

துன்பத்துடைக்கும் பெருங்காயஞ் சுக்கு மிளகு மிவைசமனாய்

முன்பு சொன்ன விலைச் சாற்றின் முதிரவரைத்துப் பூசிவரின்

சம்பஞ் செய்யும் விரைவாதங் கழலின் வாதங் கலைந்திடுமே"

- ப.ரா.சே

வேப்பங்கொழுந்து, கழற்சிவிரை, வெள்ளபூண்டு, கடுகு, பெருங்காயம், சுக்கு, மிளகு சம அளவாக எடுத்து வேப்பிலைச்சாறு விட்டரைத்து பூச விரைவாதம், கால்வலி தீரும்.

**முருங்கைப் பூச்சு**

"முருங்கை வேர்ப்பட்டை சற்றேமுதிர்ந்த மாவிலிங்கப்பட்டை

ஒருங்குள குளிக்கு மஞ்ச லுறவரைத்துகந்து பூசில்

மருங்கு கை முடக்குவாதம் மருவிய புயத்தின்வாதம்

நெருங்குங் குழலாயிது நிச்சயம் விட்டுப் போமே"

- செ.ரா.சே.

முருங்கைவேர்ப்பட்டை, மாவிலிங்கப்பட்டை, மஞ்சள் சம அளவு எடுத்து அரைத்து பூசிவர கைமுடக்குவாதம், புயத்தின் வாதவலி இவை தீரும்.

**மண் பூச்சு**

"போமே முழங்கால் வலியெடுத்தாற்
புகழாய் மருந்து தனைக்கேளும்
வாமேயிலைக் கள்ளி பாலுதனைக் கேளும்
வகையாய் முழங்கால் தனில் பூசி
தாமே கார்மண்ணைக் கொண்டுவந்து
தயவாய்முழங்கால் தனில்போடு
ஆமே மூன்று நாளிப்படியே
அடைவாய்ச் செய்ய வலி போமே"

*— யா.வை—300 பாடல் 242*

இலைக்கள்ளி பாலை முழங்காலில் பூசி அதன்மேல் புற்றுமண் பூசி வைக்கவேண்டும். இவ்விதம் 3 நாள் செய்ய முழங்கால் வலி போகும்.

**குன்றிப் பூச்சு**

"கூற கால் வலி குறிக்கு மூலிகைகேள்
தீற வெண்குன்றி திறமா மூலியெடே
எடுத்துக் கற்பூர மெழிலான மூலியும்
அடுத்துமே பழச் சாற்றிலரைத்திடு
கொடுத்து யைந்துநாள் மேற்பதம் பூசிட
கடுத்துமே வலி கதறியே யோடுமே
ஒடும் பத்திய முற்ற புளியாகா
தேடும் வெள்ளாட் டிறைச்சி யுப்புக்கண்டம்
நீரும் வெள்ளுள்ளி நேரும் பச்சை பயிர்
கூடும் பத்தியங் குறிக்கவேயுண்டிடே"

*- தே.வை*

வெண்குன்றி, சமூலம், கற்பூரம், சமஎடை எடுத்து பழச்சாறு விட்டரைத்து பூசிவர கால்வலி தீரும்.

இவ்விதம் 5 நாள் செய்ய வேண்டும்.

பத்தியம்: புளி தவிர்க்கவேண்டும். பச்சைபயிர், வெள்ளாட்டிறைச்சி ஆகும்.

**சின்னிப் பூச்சு**

*"ஆவுஞ் சின்னி யிலை வெண்ணொச்சியிலை*
*ஏவு வேப்பிலை சீந்திலிடித்து நீர்*
*மேவு மூன்று நாள் மேற்றுவளை செய்*
*நோவு மாந்தம் நொடிக்குள்ளே நீங்குமே"*

*சின்னி இலை, நொச்சியிலை, வேப்பிலை, சீந்தில் இவற்றை இடித்துப் பிழிந்த சாற்றை வயிற்றில் பூச மாந்தம் தீரும்.*

**சுண்ணப் பூச்சு**

*"சிறு பாகலிலைச் சாறுங் குழை சுண்ணாம்பும்*
*வலிய தொப்பூழ் தனிற் பூச சலமுடைக்கும்"*

*- ப.ரா.சே.*

*மிதிபாகல் இலைச் சாறும், சுண்ணாம்பும் குழைத்து அடி வயிற்றிற் பூசச் சிறுநீரிறங்கும்.*

**வீரகந்திப் பூச்சு**

*"வீரகெந்தி சமனிறு த்துப் பொடியதாக்கி*
*மெதுவனலி லுருக்கியதை யுறவாக்கி*
*தீரமுடன் சுண்ணாம்பு நீர்விட்டாட்டி*
*திரண்டுவருங் கட்டி தன்னி லிருநேரந்தான்*
*சேரயிதைப் பூசியிடு வருத்தம் நீங்கி*
*செனித்தயிடந் தெரியாமற் கரைந்துபோகும்*
*பாரிலுள்ள கட்டியதற் கெல்லாமாகும்*
*பரிட்சைபார் நிசமாகப் பலிக்குந்தானே"*

*- யா.வை.சி.*

*வீரம், கெந்தகம் சம எடை எடுத்து பொடித்து கரி அனலில் வைத்து உருக்கி ஆற வைத்து சுண்ணாம்பு நீர் விட்டு அரைத்து திரண்டுவரும் கட்டிகளில் 2 வேளை பூச கட்டி கரைந்து விடும்.*

**புற்றுச்சோறு பூச்சு**

*"வகையாய் முழங்கால் வாதம் வரின்*
*மகிழ்வாய் வெள்ளைப் பூண்டுடனே*
*திகையாம் புத்தாஞ் சோறுதனைத்*
*திறமாயொரு பலந் தானெடுத்துத்*

துகையா யிலைக் கள்ளி திருகு கள்ளி
சொல்லு மெருக்கிலை மூன்றினிலும்
பகையில் வந்த பாலதனைப்
பாங்காய்த் தனியே யெடுத்துவைத்தே
எடுத்த பால்கள் மூன்றையுமே
இதமாய்ச் சேர்த்து முன்சரக்கைத்
தடுத்த கல்வந்தனிற் போட்டுத்
தானரைத்துடனே வழித்தெடுத்து
விடுத்த முழுங்கால் தனில்பூச
மிகவே வாதம் விட்டோடும்
அடுத்த மூன்று நாளிது போல
அடைவாய் பூசிடத் தீர்ந்திடுமே"

*- யா.வை.300*

வெள்ளைப்பூண்டு — 35 கிராம், புற்றுச்சோறு — 35 கிராம் இரண்டையும் கல்வத்தி லிட்டு, இலைக்கள்ளி பால், திருகுகள்ளி பால், எருக்கம்பால் எடுத்து மூன்றையும் சேர்த்து அரைத்து 3 நாள் பூச முழங்கால் வாதம் தீரும்.

**சூதப்பூச்சு**

"சூதம் இருவி கெந்தகமும்
சுகமாய்க் காயம்வாளமுடன்
ஆதிகரிய போளமுடன்
காளி கரிய சீரகமும்
வாதிலடைக்கும் மேதியின் பால்
வகையாய்க் கட்டி சூலையறும்
பேதி வார்ந்த பிளவைக்கட்டி
விதமாஞ் சூதப் பூச்சாமே"

*- ப.ரா.சே*

சூதம், இருவி, கந்தகம், காயம், வாளப்பருப்பு, மூசாம்பரம், அபின், கருஞ்சீரகம் நன்கு பொடித்து கல்வத்திலிட்டு 3 மணி நேரம் அரைத்து பின் எருமைப்பாலில் ஒரு மணி நேரம் அரைத்து பூச வீக்கம் கரையும்.

**நீர்க்கோவை மாத்திரை**

"கப்பு மஞ்சள் கஸ்தூரி மஞ்சள்
அப்பு காரம் அருஞ்சாம் பிராணி
மிளகு சுக்கு மேவுசா திக்காய்

*கழறு மோமம் மலர் கர்ப்பூரம்*
*பத்தும் ஒன்றொன் றரைபத் தில்லரை*
*பிற்றா மூன்றும் பிரித்தொன் கால்காலை*
*அரைபழச் சாற்கு லளவிரு சாமம்*
*தரையி லிலந்தை விரையன வாக்கி*
*உலர்த்திடு தந்நீ ருயர்முலைப் பாலில்*
*மலர்த்தித் தலையில் தடவிட வாங்கும்*
*தலைவலி சலதோ ஷங்கள்*
*நிலையறு மென்று நிகழ்த்தினர் மாதோ"*

*- சி.வை.தி.*

*கப்பு மஞ்சள் 1 பங்கு, கஸ்தூரி மஞ்சள் 1 பங்கு, பொரிகாரம், சாம்பிராணி, மிளகு, சுக்கு, சாதிக்காய் இவ்வனைத்தையும் வகைக்கு ½ பங்கு, ஓமம், இலவங்கம், கற்பூரம், இம்மூன்றும் வகைக்கு ¼ பங்கு. இவைகளைப் பொடித்துக் கல்வத்திட்டுப் பழச் சாற்றால் 6 மணி நேரம் நன்றாக அரைத்து, 500 மி.கி. அளவு மாத்திரைகள் செய்து, நிழலில் உலர்த்தி, முலைப்பாலில் இழைத்துத். நெற்றியில் பூச தலைவலி, சலதோடம் நீங்கும்.*

**மான்கொம்பு பூச்சு**

*வாங்குஞ் சுயோதனனார்மாலை யிரலைமருப்*
*போங்கு மிதனதனை யொன்றாகத்—தேங்கு*
*வருடைச் சிறுநீரை வார்த்தரைத்துப்பூசக்*
*கரடப்ப மீறானைக் கால். - தே.வெ*

*நந்தியாவர்த்த மலருடன் மான்கொம்புங் கூட்டி இரண்டையும்சேர்த்து ஆட்டுநீரை விட்டரைத்துப் பூசிவர மீறிய யானைக்கால் கரடுகள் நீங்கும்.*

# வேது

ஆவி பிடித்தல் எனவும், வியர்வை சிகிச்சை எனவும் பேசப்படும்.

இம்முறையால் மயிர்கூச்சல், சூலை, உறுப்புகளின் பிடிப்பு போன்ற பல வித நோய்கள் தணியும். உறுப்புகளுக்கு மென்மை தன்மை உண்டாகும்.

இம்முறையால் வாத நோய்கள் நிலைத்திருப்பதில்லை இம்முறை மூன்று முறைகளில் செயல்படுத்தப்படும். இவை உரிய பொருட்களை குடிநீராக வடித்து பக்கத்தில் பிணியாளியை அமரச்செய்து உடல்மூடி வேது பிடிப்பது.

உரிய கல், மூலிகை முதலியவற்றை எரித்து தீயை நீக்கி உரிய திரவப்பொருளை தெளித்து அதினின்று வரும் ஆவியை பிடித்து வியர்வை உண்டாக்குவது.

சரக்குகளை அரைத்து திரியாக்கி கொளுத்தி அதினின்று வரும் புகையை உடல்மூடி படும்படிச் செய்து வியர்வை உண்டாக்குவது.

அன்றியும் சூடு உண்டாக்காமல் வியர்வை உண்டாக்கும் முறையில் கம்பளியால் போர்த்துதல், காற்றோட்டமில்லா அறையில் வைத்தல், வெயிலில் நிற்பது முதலியவை அடங்கும்.

முக்குற்றங்களின் பாதிப்பு ஏற்பட்டுள்ள இடத்திற்கு ஏற்ப மேற்படி முறைகளில் ஒன்றை மருத்துவன் தேர்ந்தெடுத்துக் கொள்ள வேண்டியது.

தொடை இடுக்குகளில் வேது பிடிக்க வேண்டுமாயின் மிக குறைந்த அளவில் செய்யவேண்டும்.

கண், அண்டம், இதயம் இவற்றிற்கு சிறிதளவே வியர்வை சிகிச்சை கொள்ள வேண்டும்.

உடலில் குளிர், வலி நீங்கி உறுப்புகள் மிருதுதன்மை அடைந்தால் சிகிச்சை நன்கு நிறைவேறியது என அறியலாம்.

உடல் முழுவதும் வேது பிடித்துக் கொண்ட நாளில் உடற்பயிற்சி செய்யக்கூடாது.

**வேது சிகிச்சை செய்து கொள்ளக்கூடிய நிலை**

பக்கவாதம், உடல்வலி, இடுப்பில் பிடிப்பு, விதைபருத்தல், நீர்ச்சுருக்கு, புரை நடுக்கம், வீக்கம், சுவாசம், இருமல், நீர்க்கோவை, விக்கல், மலச்சிக்கல் குரல்கம்மல், காதுவலி, வாதத்தினால் ஏற்படும் இசிவு ஆகிய நிலைகளில் வேது செய்து கொள்ளலாம்.

**வேது செய்து கொள்ளத் தகாதவர்**

உடலில் எண்ணெய் பசையற்றவர்காசநோயாளர்
மகோதரம், நீரிழிவு, காமாலைபாண்டு நோயுற்றவர்
கருத்தரித்தவள், மாதவிடாய் கண்டவள், ஈன்றவள்
ஆசனவாய் நெகிழ்ந்து வெளிப்பட்டு அழன்ற நிலையில் உள்ளோர்.
ஆகியோருக்கு வேது செய்தல் கூடாது.

ஆனால் மேற்படி நோயாளர்களுக்கு வியர்வை சிகிச்சை கட்டாயமாக மேற்கொள்ள வேண்டியிருப்பின் மிகமென்மையாகக் கொள்ளல் வேண்டும்.

**வேது பிடிப்பதின் நன்மை**

உடலில் மிருது தன்மை
துவாரங்களின் அடைப்பு நீங்குதல்
பொருத்துகள் அசைவு பெறுதல்
சடராக்கினி வளர்ச்சி
சுறுசுறுப்பு ஆகியவை ஏற்படும்.

**திப்பிலி வேது**

"திப்பிலி மஞ்சளசமதாக மிளகைபொடி
யுஞ்செய் திரியிலேற விது
செப்பிய நிம்ப மருவுநேயமுறு — சுடரிவை
கப்புமுடம் போடரிய தீவிகையையுட்
கொண்டிருந்த பயலு நாழிகை
முகத்திலிருந்தே யுப நாசிகளில் — மழைமாரி
யொப்ப விரண்டு நயன மாமலர்
மத்துளி மிஞ்சி வருக
லாகுமென வுற்ற வுடம்பி லற
லெலாமழியு — மதனாலே
வெப்ப மறும் பாரமு மேறுதலையிற்
பொலியுந் தீவினையு
மாறு மிது மெய்ப் படு மிண்டா
மரிய வேது வேது — தெரிவாயே"

- தே. க.

திப்பிலி, மஞ்சள், ஓமம், மிளகு இவைகளை சமஅளவாக கொண்டு மைபோல் பொடித்து துணியிலிட்டு திரிகளாக்கி, அத்திரியை வேப்ப நெய்யில் தோய்த்து கொளுத்தி உடம்பை போர்வையிட்டு மூடி இரு நாழிகை வரையில் இருக்க இரு

நாசிகளில் இருந்தும், கண்களில் இருந்தும் நீர்விழும். அதனால் வெப்பம் தணிந்து உடலின் பளுவும் தலை நோயும் நீங்கும்.

**செங்கல் வேது**

*"தெள்ளூறு செங்கல் காய்ச்சிச் செம்பு*
*வெங்கலத்திலிட்டு*
*ஒன்றிய மூலைப்பால் தூ வியுகந்ததோர்*
*புகையுங் காட்ட*
*நள்ளிய நயன ரோகம் நற்றலை வலியும் போகும்"*

*- அ.ந.வி. பாடல் 426.*

செங்கல்லை சூடுண்டாக்கி செம்பு அல்லது வெண்கல பாத்திரத்தில் வைத்து தாய்ப்பாலை தெளிக்க வரும் புகையை முகத்தில் மூடி பிடிக்க கண் நோயும், தலை நோயும் தீரும்.

**ஓம வேது**

*"அசமதா கஞ்சுக் கரிசனம ரிசம்*
*முசியா திடித்துடலை மூடி — அசையாமற்*
*தீவிகையிற் றூவுபுகை சேரிதுவு மோரியல்பு*
*மேவு மூபதையென வேது"*

*- தே.வெ. பாடல் 348*

ஓமம், சுக்கு, மஞ்சள், மிளகு இடித்து தூபக்காலில் நெருப்பை வைத்து அதில் மேற்கண்ட தூளைத்தூவி புகை வெளியேறாமல் நோயாளியின் உடலை மூடி புகை பிடிக்க மூலமுளை நீங்கும்.

**திரிபலை வேது**

*"கருவிழி சிவந்து நொந்து கடுப்புகள்தலைக் குடைச்சல்*
*கருகிய கபாலசூலை பெயர்ந்ததோர்காடி தன்னில்*
*திரிபலையிட்டுக் காய்ச்சி செங்கல்வேதுடன் கலந்து*
*மருவிழிய விழியில் கொள்ளமறைந்த கண் தெளிந்து போமே"*

*- அ.ந.வி. 500 பாடல் 427*

காடியில் திரிபலை சூரணத்தை சேர்த்துக்காய்ச்சி அதில் செங்கல்லை சுட்டுப்போட்டு எழும் புகையை விழியில் கொள்ள கண்சிவப்பு, கண்வலி, தலைவலி தீரும்.

**நொச்சி வேது**

“சூடுண்ட விட்டிகையைத் தோய் சிந்து வெந்நீர்
மூடுண்ட மேனியுடன் முன்னுறக்கா யோடுண்ட
நீர்போல் வேர்நீர் பறியு நீக்குணவுடன் புளிப்பு
வேர் போமுன் னாமிதுவே வேது”

- தே.வெ.

நொச்சி தழையை நீர்விட்டுக்காய்ச்சி அதில் செங்கல்லை சுட்டு உடலைமூடி ஆவிபிடிக்க நீர்க்கோவை தீரும்.

**வேப்பம்பட்டை வேது**

“வல்லாயுதங்கள் பட்டார்க்குமங்கா வாவியுடம்புலைந்தாற்கும்
சொல்ல நிம்ப மதிற்றோலுஞ் சுடவே தண்ணீர் தனிலூற்றி
மெல்ல விருத்தி வெச்சனலில் வேது பிடித்துக் குளிப்பாட்ட
நல்லதுதுவு மெனமுன்னோர் நாடியுரைத்தபடியாமே”

- ப. ரா. சே.

வேப்பம் பட்டையை இடித்து நீரில் — போட்டு காய்ச்சி வேது பிடிக்க ஆயுதங்கள் பட்டதனால் வரும் வலி, உடல் அழற்சி தீரும்.

**மஞ்சள் வேது**

“வேது வொன் நதுபுகை வெடி கொளப்பிணியை
மோது மஞ்சளும் புகை முறை கொளலாகு”

- தே. காப்பியம்

தண்ணீரை நன்கு கொதிக்க வைத்து அதில் மஞ்சட்பொடியைத் தூவி அதிலிருந்து வரும் ஆவியை வேது பிடிக்க கப நோய் தீரும்.

**புளியிலை வேது**

“கோசலத்திற் புளியிலையை விரவிக் கொண்டு
கொதிக்க வெந்த வாவியது குதத்தின் மீதே
மாசறவே காட்டிடுகில் வாத மூல
மருவிடும் வாயுக்கள் நாசமாமே”

- ப.ரா.சே.

பசுநீரில் புளியிலையைபோட்டு கொதிக்க வைத்து வரும் ஆவியை மூலத்தில் காட்ட மூலநோய், வாயு தீரும்.

**வல்லாரை வேது**

“பேசுமிளநீரில் வல்லாரை யிட்டுப்
பின் விரவி யவித்தாவி தகையைக் காட்டிடில்
மோசமுறு பித்த நோய் மூலம் போக்கு
முழங்கி விழுங் குருதியறு மொழியுங் காலே”

*- ப.ரா.சே.*

இளநீரில் வல்லாரையை சேர்த்து அவித்து வரும் புகையை பித்த மூலத்தில் காட்ட தீரும். குருதி வழிதல் தீரும்.

**கீழாநெல்லிவேது**

“கூவிய கீழ் காய்நெல்லி காடிநீரிற்
கொதிக்க வைத்த வாவியது குதத்திற்காட்ட
மேவிய சேற்பனமூலஞ் சோகைமூலம்
விலகு........................................................................

*- ப.ரா.சே.*

கீழாநெல்லி சமூலத்தைக்காடி நீரிலிட்டு வேகவைத்து எழும் ஆவியை குதத்தில் படும்படிச் செய்ய சேற்பன மூலம் தீரும்.

# பொட்டணம்

**இயல்**

இது இருமுறையாக நூற்களில் பேசப்படுகிறது.

1) சரக்குகளை பக்குவப்படுத்தி துணியால் முடிந்து நோயுள்ள இடங்களில் வைப்பது.

2) மருந்து சரக்குகளை பொட்டணமாக முடிந்து சூடாக உள்ள தைலம், குடிநீரில் தோய்த்து நோயுள்ள இடங்களில் வைப்பது. இரண்டாம் முறையில் ஒற்றடத்தைப் போல்காணினும் ஒற்றடத்தை விட மாறுபட்டது. எவ்வாறெனில் ஒற்றடத்தில் ஒற்றடமிட வேண்டிய சரக்குகள் நேரடியாக சூடுண்டாக்கப்படும்.

இதில் அவ்வாறன்றி சரக்குகள் பொட்டணமாக்கப்பட்டு சூட்டுப் பொருள்களில் தோய்ந்து வைக்கப்படுகிறது.

**சந்நி வகை பொட்டணம்**

"போகுமடா சந்நிவகைப் பொட்டணத்தைப்
புகலுகிறேன் வெண்ணொச்சியிலையினோடு
போமென்ற முருங்கையிட பட்டைப்பூவும்
புகழாகச் சீந்தியிலை சமனாய்க்கொண்டு
காமென்ற வோமமோடு நவாச்சாரத்தான்
கருஞ்சீரகம் வேப்பரிசி மாவிலிங்கும்
தோமென்ற பட்டையொடு வெள்ளையுள்ளி
சொல்லரிய வெருக்கனோடு பழுப்புமெண்ணே
எண்ணவே தேற்றான் விரைவசம்பு
இடித்தொன்றாய் பொட்டணத்தான் கட்டிவைத்து
தண்ணவே சந்நிவகைபதின் மூன்றிற்கும்
தலைபாரம் படரிவலி சயித்திய நோக்கும்
பூணவே அயக்கரண்டி காயவைத்துப்
பூணவே நிம்ப எண்ணை குத்திக் காய்ச்சி
உண்ணவே பொட்டணத்தைத் தோய்க்கத் தோய்க்க
ஓடாத வலியோடும் புனிதமாமே"

- தே.வை

நொச்சியிலை, முருங்கைப்பட்டை, சீந்திலிலை, ஓமம், நவாச்சாரம், கருஞ்சீரகம், வேப்பம்வித்து, மாவிலங்கப்பட்டை, வெள்ளைப்பூண்டு, எருக்கன் பழுப்பு, தேற்றான் விரை, வசம்பு ஆகியவற்றை இடித்து நன்றாக பொட்டணமாகக் கட்டி வைத்துக்

கொண்டு தேவையான நேரம் அயக்கரண்டியில் வேப்பநெய் விட்டு காய்ச்சி பொட்டணத்தை தோய்த்து வைக்க பிடரி வலி, தலைபாரம், சயித்தியம் ஆகியவை தீரும்.

**சினேக பொட்டணம்**

"வாதந்தனக்கு முன்னோராய்ந்து
மருவிச் சொன்ன வகையது கேள்
வேதத்துள்ள வழியிது காண்
வேறேயல்ல விளம்புகிறேன்
பாதங் கோட்டஞ் சதகுப்பை
பண்ணும் புங்கு மகிழ்வேம்பு
சேதம் புன்னை பருத்திவிரை
சிற்றாமணக் குடனிந்துப்பு
காது மென்னாக் கொள்ளுடனே
காட்டும் நெல்லிக் கடு தான்றி
வேத முருங்கை யகத்தி விரை
மீண்டும் நெற்பொரி சுக்கு
வோதுந் திப்பிலி மிளகுடனே
முடியச் சொன்ன விரையடங்கச்
சேரவறுத்துப் பொடி செய்து
தேங்காய் திருகியுடன் கூட்டி
தேராவாக சினேகப் பொட்டண
மேற்றீர் நிச்சய மானதுவே"

- அ.சாகரம்

செருப்படை, கோட்டம் சதகுப்பை, புங்கு, வேம்பு, புன்னை, பருத்தி வித்து, சிற்றாமணக்கு பருப்பு, இந்துப்பு, எள், கொள், திரிபலை, முருங்கை வித்து, அகத்திவித்து, சுக்கு, நெற்பொரி, திப்பிலி, மிளகு இவற்றை சமஅளவு எடுத்து வறுத்துப் பொடி செய்து தேங்காய் பூ திருகி அத்துடன் சேர்த்து பொட்டணமாகக் கட்டி வைத்து நோயுள்ள இடங்களில் வைக்க வாதநோய் தீரும்.

**கருஞ்சீரக பொட்டணம்**

"அவுரியிலையுங் கருஞ்சீரகமும் நல்ல
வம்மிகளில் நறுக்கியொரு துணியிற் கட்டி
நலமுடைய கையில்வைத்து முகர்ந்து கொள்ள
நசல் செய்யுஞ் தலைவலியு முடனே தீரும்"

அவுரி இலையையுங் கருஞ்சீரகத்தையும் அம்மியிலிட்டு நன்கு அரைத்து துணியிற் பொட்டணமாகக் கட்டி முகர்ந்து கொள்ள தலைவலி தீரும்.

# தொக்கணம்

*மர்த்தனமாகிய தொக்கணத்தின் செயல்வகுப்பேனே—சதா*
*நித்தமும் வாதம் பிணித்த பிணிப்பைச் செகுப்பேனே*
*மல்லகார ரான பிடகர் கையென்கிற வாளாலே—பிணி*
*வல்லியை மெய்யினிற் சேதிப்பராந் திறமை வாளாலே.*

*- தே.த*

வாதத்தால் வந்த நோய்த்துன்பத்தை நீக்கும் மருத்துவமுறையேதொக்கணம் என்பதாம். இதுவே மர்த்தனம் என்றும்பேசப்படும் என்றும், மல்லகர் என அழைக்கப்படும் மருத்துவன் தன் கைகள் என்ற வாளால் உடலில் கொடிபோல் பின்னிப்பிணைந்து இருக்கும்நோய்க்கூட்டத்தை அறுத்து நீக்குவர் என்றும் கூறுகிறார் தேரர்.

வாத முதலிய முக்குற்றக்கலப்பால் உண்டாகும் உடல் வலியை நீக்க உடலைப்பிடிப்பது தொக்கணம் என்பதாம்.

இது வெறுங்கையால் பிடிப்பது, தைலங்களைத் தடவிப்பிடிப்பதும் என இரு வகைப்படும்.

தொக்கண வகை முறைகள்,நிலைகள்,செயல் முறைகள் மட்டுமே நூற்களில் காணலாம். ஆனால் செயல் முறைகள் பற்றிய விளக்கங்கள் நூற்களில் காணப்படவில்லை.எனவே கிடைக்கப்பெற்றதும்,வழக்கில் உள்ள செயல் முறைகள் மட்டும் தொகுக்கப்பட்டுள்ளன.

இதன் செய்முறை ஒன்பது வகைப்படும்:

1. தட்டல்
2. இறுக்கல்
3. பிடித்தல்
4. முறுக்கல்
5. கைகட்டல்
6. அமுத்தல்
7. இழுத்தல்
8. மல்லாத்துதல்
9. அசைத்தல் என்பவையாம்.

இவ்வாறானஒன்பது செயல்முறைகளையும் மந்தம்,மத்திமம், சண்டம் என்ற மூன்று

வேகங்களிலும், நிற்றல், நடத்தல், குந்த வைத்தல், கிடத்தல், சாய்தல் எனும் ஐந்து நிலைகளிலும் செய்யவேண்டும். நோயின் வன்மைக்கு ஏற்ப செயல் முறைகளின் வேகங்களையும், நிலைகளையும் மருத்துவன் நிர்மாணித்துக்கொள்ள வேண்டும்.

**தட்டல்:**

"தட்டுதலென்பதுங் குத்துதலென்பதுந் தானொன்றே" - தே.தரு.

தட்டல் என்பதின் கீழ் தட்டுதல் என்பதும் குத்துதல் என்பதும் ஒன்றே.

மருத்துவன் தன் கைவிரல் நுனிகளைக்கொண்டும், உள்ளங்கைகளைக்கொண்டு நோயாளியின் உடலைத் தட்டும் முறை.

இதில் உள்ளங்கைகளை நன்கு நேராக வைத்தும் *(Flat)*, குவித்து வைத்தும் *(Semi folded)* பயன்படுத்தலாம்.குத்துதல் என்பதின்கீழ் விரல்கள் அனைத்தையும் உள்ளடக்கியவாறு மடக்கி நோயாளியின் உடலில் மடக்கிய விரல் மத்தியினாலும், சுண்டு விரல் பகுதி கீழ் புறம் இருக்கும் படி வைத்தும் செய்யலாம்.

இவ்விரு முறைகளிலும் மருத்துவனின் மணிக்கட்டு வரையிலும் மட்டுமே அசைத்து கையை அசைத்து பிரயோகிக்க வேண்டும்.

இம்முறையை உடம்பின் எல்லாப் பாகத்திலும் செய்யலாம். இதனை மந்தம், மத்திமம், சண்டம் என்ற மூன்று வகையிலும் செய்யலாம். தட்டுதலை நிற்கவைத்தும், நடக்கவைத்தும், குந்தவைத்தும், மல்லாந்து படுக்கவைத்தும், ஒருபக்கம் சரிவாகப்படுக்க வைத்தும் செய்யலாம். நோயின் வன்மைக்கு ஏற்ப நாள்தோறும் தட்டுதலைச் செய்யலாம். ஆயினும் இதனைத் திங்கட்கொருமுறை செய்வதே சிறப்புடையது.

**இறுக்கல்:**

நோயாளியின் உடலில் தசைப்பகுதிகளை மருத்துவன் இறுக்கிப்பிடித்தல். நோய் துன்பத்தின் வன்மைக்கு ஏற்ப மருத்துவன் தன் ஒரு கையாலோ அன்றி இரு கைகளாலோ இறுக்கிப்பிடிப்பதாம்.

இம் முறையை அடிக்கடி செய்தல் கூடாதுதைலங்கள் தடவியும் தடாவாமலும் செய்யலாம்.

இதனை முற்கூறிய நிலைகளில் நடத்தலைத் தவிர்த்து மற்ற நான்கு நிலைகளிலும் செய்யலாம். நீண்ட எலும்புகள் பொருந்திய உறுப்புகளை இறுக்கலாகாது.

**பிடித்தல்:**

உடலின் தசைப்பகுதிகளைப் பாதிப்பிற்கேற்றவாறு மருத்துவன் உரிய அழுத்தத்துடன் ஒரே சீராகப் பிடித்துப் பிடித்து விடுதலாம். *(Catch and release)* மருத்துவன் தன் ஒரு கையாலும், இருகைகளாலும், விரல்களாலும் பாதிப்பிற்கு ஏற்றவாறு பிடித்து விட வேண்டும்.

தைலம் தடவியாவது, தடவாமலாவது பிடிக்கலாம் தட்டுதற்குரிய ஐந்துவித செயல்களிலும் செய்யலாம். இது வாதநோய்க்குப் பொருந்துமெனினும் சிறப்பாகப் பாரிச வாயு, தனுர்வாதம் இவைகட்குப் பொருந்தும்.

**முறுக்கல்:**

நோயாளியின் பாதிக்கப்பட்ட எலும்புகளோடு அமைந்த தசைப்பகுதியில் மருத்துவன் தன் இருகைகளைக் கொண்டு ஒரே சமயத்தில் இரு வேறுதிசைகளில் பிடித்து திருகுதலாம்.

"முறுக்கல் கிடத்த லியங்க லிரண்டிலு மூட்டாதே

பழுவையடைந்த விலாவெனு மத்தியைப் பற்றாதே"

ஐந்து நிலைகளுள் படுக்கும்போதும், நடக்கும்போதும் செய்யலாகாது, பழுஎலும்புகள் பொருந்திய இடங்களிலும் செய்யக் கூடாது.

"..............................................................................................................யவர்

வெறுக்க வரிற் பல நோயுள்ளதாயினு மீட்டாதே"

நோயினருக்கு விருப்பமில்லாமல் செய்யலாகாது. முகமன் வார்த்தைகளைக் கூறித்தைலத்தை தடவி முறுக்கினும் குணமடையாது.

**கைக்கட்டல்:**

நிற்கும் போதும் குந்தியிருக்கும்போதும், மல்லாந்து படுக்கும்போதும். ஒருபக்கம் சரிந்து படுக்கும்போதும் கைகட்டலைச் செய்யலாம். நடக்கும் போது செய்யலாகாது அவ்வாறு செய்யின் பழு எலும்புகள் முறிந்துவிடும். உட்கார்ந்திருக்கையில் செய்வதே மிகவும் சிறப்புடையது. தைலங்களைத் தேய்த்துக் கட்டுதலை செய்தால் நற்பலனைத் தரும். கால்களை முடக்கி வைத்திருக்கும் வாதநோய்களெல்லாம் இதனால் குணமாகும்.

**அழுத்தல்:**

மருத்துவன் தன் விரல்களலாலும், உள்ளங்கைகளாலும் நோய்த்துன்பமுடைய பகுதிகளில் அழுத்திக் கொண்டிருத்தலாம்.

இடுப்பு, பிட்டம், தொடை பகுதிகளில் நன்கு அழுத்தல் செய்யலாம். கணைக்கால், விலாப்பக்கம் இவ்விடங்களில் அழுத்தலாகாது நிற்கும்போதும், குந்தியிருக்கும்போதும் அழுத்தலைச் செய்யலாம்.

இப்பரிகாரம் உள்வீச்சு, புறவீச்சு, பக்க இசிவு முதலிய நோய்களுக்குரியது.

**இழுத்தல்**

இதுவே தடவுதல் என்றும் உருவுதல் என்றும் அறியப்படும். மருத்துவன் தன் இரு கைகளைக்கொண்டு துன்பமுள்ள இடங்களில் தேவையான அழுத்தத்தோடு தடவி விடுதலாம். மந்தம், மத்திமம், சண்டம் என்ற மூன்று நிலைகளில் செய்யலாம்.

மிகுந்ததசைப் பகுதிகளில் கூடுதலானஅழுத்தத்தோடும், மென்மையான தசைப்பகுதி, என்பு பகுதிகளில் அழுத்தம் குறைத்தும் தடவுதல் செய்யவேண்டும். கீழிருந்து மேற்புறமாகவும்,மேலிருந்து கீழ்புறமாகவும்,வட்டத்தடவுதல் என்றும் பல முறைகள் உள்ளன. தைலத்தைப் பூசியே இம்முறையைச் செய்ய வேண்டும்.

"இழுத்தல் கிடத்த விருத்த லிரண்டிற்கு மேதாமே" என்பதில் இழுத்தல் படுத்திருக்கும் நிலையிலும், உடகார்ந்திருக்கும் நிலையிலும் செய்யப்பட வேண்டும். இதனால் நரம்பில் ஊறி வருத்துகின்ற வாயுக்கள்,வலி பிடிப்புகள், சுளுக்குகள் குணமாகும்.

**மல்லாத்துதல்:**

"............................................................................................................

*ஆகிலு மந்த மிடை சண்ட மென்ப தடைவாகமிகு*
*வேகமில்லாமல் மூன்று வரினு மிடைவாக*
*வின்னிலை நாலினில் மண்டலமா வளைவில்லாக மறை*
*சொன்ன செவியளவாக உடல் வளை."*

*மந்தம், மத்திமம், சண்டம் என்ற மூன்று வகையில் அவசரமில்லாமல், மெதுவாக, முன்புறமாகவும், பின்புறமாகவும் மருத்துவன் நோயாளியின் உடலை வில்லைப்போல் வளைத்தலே மல்லாத்துதல் என்பதாம்.*

*நோயாளியை உட்காரவைத்தே செய்தல் வேண்டும். அங்ஙனம் வளைக்குங்கால் கால்கள் செவியில் படுமாறு செய்யவேண்டும். தனுராசனத்தைப் போன்று அமையும் இத்தொக்கணமுறை உடலின் அசைவுத்தன்மையை (Flexibility) மேம்படுத்தும். இதனால் ஐயந்தன்னிலைப்படும். தூலநோயும், மலட்டு நோயும் தீரும்.*

**அசைத்தல்:**

*"அசைத்த லிலக்கண மெத்த வுண்டப்படி யார் செய்வார் சற்றே*
*விசைத்தவறாயிடிலாரிப்படி மிசை யாருய்வார்*
*நடத்தலொன்றன்றிய நாலு நன்றாமே—செயுந்*
*திடத்துட னேயதுசெய்யினும் வன்மைகள் சென்றாமே"*

*அசைத்தலில் இலக்கணம் அதிகம் உண்டென்றும், விசை (force) தவறானால் மிகுந்த குற்றமாகும் என்று கூறிய தேரர் இதற்கு இலக்கணம் வகுக்கவில்லை.*

ஆயினும் நடத்தலின்றி மற்ற நான்கு நிலைகளிலும் செய்யலாம். மந்தம், மத்திமம், சண்டம் எனக்கூறப்படும் வகையில் செய்யலாம். இது தைலத்துடனும், தைலமில்லாமலும் செய்யலாம். இதனால் உடற்கடுப்பு திமிர் ஆகியவை குணமாகும்.

**தொக்கணத்தின் குணங்கள்:**

"தொக்கணத்தி னாலிரத்தத் தோல் ஊணிவைகட்கு
மிக்க சவுக்கியஞ்ச மீரனும்போ — மெய்க்கதிக
புட்டியுறக்கம் புணர்ச்சி யிவைகதிக்கும்
பட்ட அலைச்சலறும் பார்".

'தொக்கணத்தினால் இரத்தம், தோல், தசைகட்கு மிக்க நன்மை உண்டாகும். உடற்கு நல்ல உரம் உண்டாகும். புணர்ச்சியில் விருப்பம் உண்டாகும். அதிக உழைப்பினால் உண்டாகும் ஆயாசம் தீரும். குருவின் கீழ் கற்றுத் தேர்தலே அவசியமாகும்.

# புகை

சரக்குகளை பக்குவப்படுத்தி எரித்தோ அல்லது நெருப்பிலிட்டோ புகை உண்டாக்கி அதனால் நோய் நீக்கும் முறை

இம்முறையானது

1. சுவாசத்தால் உட்கொள்ளும் புகை
2. வாயினால் உட்கொள்ளும் புகை
3. நோயுற்ற இடங்களில் நேரடியாக புகைப் போடக்கூடிய புகை

1. சுவாசத்தால் உட்கொள்ளும் புகை திரியாக்கி கொளுத்தி கொள்வது

2. வாயினால் உட்கொள்ளும் புகை மருந்துகளை சுங்கானில் அடக்கியோ அல்லது சுருட்டி திரியாக செய்தோ புகைத்து உட்கொள்ளுவது,

3. நோயுற்ற இடங்களில் நேரடியாக புகை போடுவதற்கு தூப எந்திரத்தில் கரி நெருப்பிட்டு அதில் மருந்து சரக்குகளை தூவி புகை எழுச் செய்து காட்டுவது, புரையோடிய புண்களில் மருந்துதடவிய திரியை புகைகருவியிலிட்டு புகைஎழச் செய்வது.

வாயினால், மூக்கினால் கொள்ளும் புகைகளில் வர்த்திகளாக செய்து கொள்ள வேண்டியவற்றை வர்த்திகளாக செய்து உலர்த்தி கொள்ளவேண்டும். பின் வர்த்திக் கருவியில் அதனை நுழைத்து புகை பிடிக்க வேண்டும்.

## புகை வர்த்திக்கருவி:

ஆள்காட்டி விரலின் கணுவைப்போல் 40 கணுக்கள் நீளம் உடையதாய் அடிப்பகுதி துவாரம் புகை வர்த்தி செல்லும் அளவிலும், நுனிபாகம் மொச்சை கொட்டை அளவிலும் இருக்க வேண்டும்.

வர்த்தி கருவி கிடைக்காவிடில் நாணல், ஆமணக்கு தண்டு, மூங்கில் இவற்றை பயன்படுத்தலாம்.

## புகை திரி செய்யும் முறை

12 அங்குல ஈர்க்கு ஒன்றை 24 மணி நேரம் நீரில் நனைத்து புகை சிகிச்சைக்குரிய சரக்குகளை அரைத்து 9 அங்குலம் வரை கட்டைவிரல் பருமன் பூசி நிழலில் உலர்த்தி காய்ந்தபின் குச்சியை உருவி வர்த்திக் கருவியில் சொருகி ஒரு முனையில் தீயிட்டு புகை பிடிக்க வேண்டும்.

வாயினால் உட்கொள்ளும் புகையில் 3 முதல் 4 முறை வாய் நிறைய புகை கொண்டு கண்ணீர் சொரியும் வரை உள்ளிழுத்து வெளியிட வேண்டும்.

ஒரு நாளைக்கு ஒரு முறை தான் புகை சிகிச்சை முறை மேற்கொள்ள வேண்டும்.

மூக்கினால் கொள்ளும் முறையில் ஒரு மூக்கு துவாரத்தை அடைத்து மற்றொரு துவாரத்தால் இழுத்து வாயின்வழியாக விடவேண்டும். ஆனால் வாயினால் உள்ளிழுக்கப்பட்ட புகையை வாயினால் மட்டுமே வெளிவிட வேண்டும். மூக்கினால் வெளியிடக்கூடாது. அங்ஙனம் செய்ய கண்நோய் வரும்.

பவுத்திரம், புண், புரைகளில் புகையிட வேண்டியிருப்பின் கொண்டைக் கடலைக் குள்ள சுற்றளவுடன் கொள் நுழையத்தக்க துவாரமுள்ளதாய் 3 கணுக்கள் உடையதாய் வர்த்திக்கருவி அமைக்க வேண்டும்.

ஒவ்வொரு கணுவிலும் சிறு துவாரம் அமைக்க வேண்டும்.

வர்த்திக் கருவியை புரையில் செலுத்தி நடுமையத்திலுள்ள துளையில் வர்த்தியை செருகி ஒரு முனையில் நெருப்பிட பக்கவாட்டு துவாரம் வழியாகவும், முன்புறத்துவாரம் வழியாகவும் புண்களில் புகை பரவும்.

ஆசன வாயில் காணும் நோய், யோனி நோய் இவற்றிற்கு நடுவில் துவாரமுள்ள முக்காலி அமைத்து நோயாளியை அதில் அமரச்செய்து அதனடியில் தூபக்காலை வைத்து மருந்து சரக்குகளை தூவி நோயுள்ள இடங்களில் புகை பரவச் செய்ய வேண்டும்.

## சுவாசிக்கும் புகை

### நவாச்சாரப்புகை

“கண்ட வாயு கடிய ரணங்களும்
ஒண்டிடாம லுடலை விட்டேகுதற்
குண்டுக் கற்சுண்ணங் கொடிய நவச்சாரம்
விண்டுமே கள்ளிப் பாலாலரைத்திடே
அரைத்துச் சீலையி லன்பா யூட்டியே
விரைத்து வெயிலில் விரையுமன் காயவைத்
தரைத்துத் திரித்து முயலுந்திரிதனை
திரைத்து நாசியில் திறமாய் பிடித்திடே
பிடித்தபோது பிடிசூலை மேகமும்
தடித்த ரோகங்கள் நண்ணும் பவுத்திரம்
வடித்த சீழும் வகுக்கும் ரணங்களும்
வெடித்துக் கானக மிரண்டோடிப் போகுமே”

- தே.வை.

கற்சுண்ணம், நவாச்சாரம் சம எடை எடுத்து கள்ளிப்பால் விட்டரைத்து வெள்ளை சீலையில் தடவி திரி போல் சுருட்டி உலர்த்தி ஒருமுனையில் தீ பற்ற வைத்து புகையை மூக்கினால் கொள்ள மேகம், சூலை, பவுத்திரம், ரணம் தீரும்.

## லிங்கப்புகை

ஒருதலை நோய் தீர லிங்கப்புகை

"திரைத்த லிங்கமுந் தேர்ந்த நவாச்சாரம்
கரைத்த பூரமுங் கருது மனோசிலை
அரைத்துமே யெருக்கன் பாலாலாட்டி
ஆட்டியே சாமமன்பாயரைத்திடு
நீட்டுமே சீலை நெடியவே பூசிடு
கூட்டுமே ரவி குலாவி யுலர்ந்தபின்
பூட்டுமே திரி யகலந் திரித்தியே திரித்து ஆக்கிராணம்
சிறக்க பிடித்திடில் தெளிந்த தலைவலி திறமாய் நீங்கும்"

- தே.வை.

லிங்கம், நவாச்சாரம், பூரம், மனோசிலை சமஎடை எடுத்து எருக்கன்பால் விட்டு 3 மணி நேரம் அரைத்து சுத்தமான வெள்ளை துணியில் பூசி திரிபோல் சுருட்டி உலரவிட்டு ஒருபுறம் தீயிட்டு புகை சுவாசிக்க தலைவலி தீரும்.

## சுக்காதிப் புகை

"ஐயவி சரண மசமதா கஞ்சுக்கு
நைய விடுதல்லா நறுக்கியே — துய்ய
நிறங்கொள் கலையூட்டி நீள் புகை மூக்கிற்கொள்ள
உறங்கு வாதம் போகு முன்"

- தே.வெ. பாடல் - 623

கடுகு, பெருங்காயம், ஓமம், சுக்கு ஆகிய நான்கையும் சமமாகக் கொண்டு நையத்தூள் செய்து தூய்மையான வெள்ளைத் துணியில் பரப்பி சுருட்டித்தீயிற் கொளுத்தி மூக்கிற் புகை பிடிக்க உறங்கு வாதம் தீரும்.

## சீரகப்புகை

"மாரடைத்து மூச்சுவராக் கடுநோய்களுக்
காரடத்தினாலே கழலுமோ — சீரகத்தை
அங்கோல வித்தை யரிசனத்தைக் கொண்டு துண்ட
வங்கிற் புகை கொடாமல்"

தே.வெ.

*சீரகம், அழிஞ்சில் வித்து, மஞ்சள் — சம அளவு எடுத்து பொடித்து சீலையில் பரப்பி சுருட்டி திரியாக்கி கொளுத்தி சுவாசத்தால் கொள்ள மாரடைத்து மூச்சுவிட முடியாமல் வருத்துகின்ற நோய்தீரும்.*

**வாயினால் உட்கொள்ளும் புகை**

*லிங்கப்புகை - 2*

*"விளம்பு மின்னமொரு முறைகேட்டிடு*
*தளம்புமே கொழுஞ்சியின் வேர்தன்னிலே*
*குளம்புலிங்கமுங் கூடக்கால் சேர்த்துமே*
*விளம்புஞ் சுங்கானில் வைத்துப்புகையிடே*
*இட்டுமே புகை யிணங்கசுவாசத்தில்*
*கட்டு மூன்று நாளார் வேளைதான் கொள்ளு*
*புட்டுமேபாலுஞ் சோறுமேயுண்டிடு*
*கெட்டுவோடும் ரணங்களின் ரோகமே"*

*கொழுஞ்சிவேர் - 1 பங்கு, லிங்கம் - ¼ பங்கு வேரை வெயிலில் உலர்த்திப் பொடித்து, இரண்டையும் சேர்த்து நன்கு அரைத்து சுங்கான் கருவியிலிட்டு புகையை புகைத்து வாயினால் கொள்ள வேண்டும்.*

*ஒரு நாளைக்கு 2 வேளை வீதம் 3 நாள் புகைக்க வேண்டும்.*

*பத்தியம்: பாற்சோறு மட்டும் உண்ண வேண்டும்.*

*தீரும் நோய்கள்: ஆறாத ரணங்கள்.*

**கொழுஞ்சிப் புகை**

*"ஓடும் ரணங்க ளூற்ற பிணிகட்கு*
*நீடுங் கொழுஞ்சி தேர்ந்த பட்டாவாரை*
*பாடுமோரிலே பாருடனூ றவை*
*சூடும் லிங்கமுஞ் சுங்கானில் பூட்டிடே*
*பூட்டுஞ் சுங்கான் புகை தூளிதம் பொடி*
*நீட்டும் வாசியை நிறுத்திட்டடக்கியே*
*மூட்டுஞ் சுவாச முடுகிப் பிடித்திட*
*தீட்டுமே கானகந் தெளித்தேகுமே*
*தேங்கும் பத்தியந் தெளிர்தயிருண்டிடு*
*ஆங்குமாறா நாளன்மை பருப்போடுண்*
*நீங்குஞ்சூலை நெருங்குமரையாப்பு*
*வாங்குங் கண்ணுவலி பறந்தோடுமே*

ஓடும் லிங்க முறுதி பிளவையாம்
நீடுவே கண்ட மரும் விற்புருதி
கூடுங் கண்ணோசை குறிக்குங்கரப்பனும்
வாடும் பீனிசம் விரைந்தோடிப் போகுமே"

கொளுஞ்சி வேர், ஆவாரைவேர் — சம அளவு எடுத்து மோரில் ஊறவைத்து உலர்த்தி சம எடை இலிங்கம் கலந்து பொடி செய்து சுங்கானிலிட்டு புகை கொள்ள ஆறாத ரணம் அரையாப்பு, பிளவை, விப்புருதி, கரப்பான், பீனிசம் தீரும்.

**அதிமதுராதிப் புகை**

"பகரும் விக்கல் பறக்கும் வழிகேளு
நிகருஞ் சந்தனம் கேளுஞ் சாம்பிராணியும்
நகருமதுரத் தாக்கும் மகிலுடன்
முகருந்தூளாய் முடிந்து எடுத்திடே
எடுத்திடும் புகையேக விக்கலுக்கு
பிடித்திடும்படி மூன்றிருபோழ்தனில்
கெடுத்திடும் விக்கல் கெதிகெட்டு வோடிடும்
வடுத்திருந் தேறன் வாக்கு பொய்யாதிவோ"

- தே.வை.

சந்தனம், சாம்பிராணி, அதிமதுரம், அகில் சமஅளவு எடுத்துப் பொடித்து பொடியை சுங்கானில் இட்டு 6 வேளை மூன்று நாள் புகை பிடிக்க விக்கல் தீரும்.

**சாம்பிராணி புகை**

"விளம்புவேன் விக்கலுக்கோர் முறை சுளுவாய்
தளம்புஞ் சாம்பிராணித் தனிக்காடி சுத்தியாம்
குளம்புஞ் சுக்கானில் குணமாய்ப் பிடித்திட
பளம்பு விக்கலும் பஞ்சு போலோடுமே"

சாம்பிராணியை காடியிலரைத்து உலர்த்தி சுக்கானிலிட்டு புகையை உட்கொள்ள விக்கல் தீரும்.

**தாளகப்புகை**

"இடுக்கனி லிருமி யோங்கி யிரைத்து நீ கிடந்திடாதே
படுக்கரி தாரம் பிச்சி சங்கு தூதளையின் சாற்றில்
கடுக்கெனத் தோய்த்துணர்ந்த புகைதிரி விசேடங்கொள்ளக்
கடுத்து வருமிருமலும் போமிடிக்குடம் பாகுங் காணே"

நன்கு சுத்தித்த அரிதாரத்தை பிச்சி இலைச்சாறு, சங்கிலைச் சாறு, தூதுளை இலைச்சாறு இவற்றால் நன்கு அரைத்துச் சீலையில் தடவி உலர்த்தித் திரியாக்கி கொழுத்தி அப்புகையை வாயினில் கொள்ள இருமல் தணியும்.

**ஆடாதோடை புகை**

"ஆடாதோடை நாரத்தை யணிசேர் நொச்சி னற்சாற்றில்
நீடரி தாரந் தன்னை நேகவரைத்துக் கொண்டு
நாட்டிய சீலை தனிலூட்டி நன்னிழலாலுலர்த்தித் திரியாக்கிக்
கடிய புகையை வாயினிலே கொள்ள இருமல் போய்விடுமே"

ஆடாதோடை, நாரத்தை, நொச்சி, இவற்றின் சாற்றில் தாளகத்தை நன்றாக அரைத்துக்கொண்டு அதைச் சீலையில் தடவி நிழலில் உலர்த்தித் திரியாக்கி கொழுத்தி அப்புகையை வாயினில் கொள்ள இருமல் தணியும்.

**அரிதாரப் புகை**

"இருகுரங்கி னிலைபிடுங்கி உரலிலிட்டு
இடித்தெடுத்துப் பிழிந்துவிடு பீங்கானிட்டுத்
திருமடந்தைக் கல்வமிட்டுச் சாமமாட்டுத்
திட்டமா யரைத்துக் காயவைத்துப்
பருகச் சுங்கானில்வெரு கடிதூளிட்டுப்
பகற்பொழுது மூன்றுநாள் புகையுட்கொள்ளத்
தருகாது சயகாசம் குடிவிட்டேகுஞ்
சாற்றக்கேள் பத்தியந்தான் புளியாகாதே"

- *யா.வை.சி*

தாளகத்தை கல்வத்திலிட்டு முசுமுசுக்கை சாற்றாலரைத்து வெயிலில் உலர்த்தி வெருகடி தூள் சுங்கானிலிட்டு மூன்று நாள் பகற்பொழுது உட்கொள்ள சயம், காசம் தீரும்.

## தூபப்புகை

**சுக்காதிப்புகை**

"சுக்கு மஞ்சள் வசம்புள்ளி துய்ய மிளகு குங்கிலியம்
ஒக்கக் கொண்டு பொடி செய்து யோனியி லெண்ணெய் மேற்பூசி
தக்க வுரலில் தணல் வகுத்துச் சமைந்த பொடியை மேலிட்டு
ஒக்க விருத்திப் புகை காட்ட அல்குல் சூலை யொழிந்திடுமே"

- *ப.ரா.சே*

சுக்கு, மஞ்சள், வசம்பு, தோலுரித்த பூண்டுக்கரிகள், மிளகு, குங்கிலியம் இவைகளை சம எடை எடுத்து உலர்த்தி தூள் செய்து கொள்ளவும். இலகுல சூலை யுற்ற பெண்ணின் அலகுல பாகத்தில் எள் நெய்யைப் பூசி கல்லூரலில் தணல் உண்டாக்கி அதில் மேற்படி தூளையே போட்டு புகை எழும்பும்போது அப்புகை அல்குல் பாகத்தில் படும்படி உரலில்மேலே ஓர் இருக்கையை ஏற்படுத்திக்கொண்டு அமரச்செய்ய வேண்டும் புகை அடங்கினால் மறுபடி மேற்படி தூளைச் சிறுகத் தூவிப் புகை எழுப்பிவரவும். அப்படி புகையிட்டால் அல்குல் சூலை தீரும்.

## கந்தகப்புகை

### புழுவிழ கந்தகப் புகை

*"ஆமிது பிளவைப் புண்ணி லடுத்திடும் புழுக்கள் வீழக்*
*காமுறு நெல்லிக் கெந்தங் கதித்தபொன்னரிதா ரந்தான்*
*நாமுறு வெண்பா ஷாண நலமுறத் தூளா யாட்டி*
*வேமுறு புளிப்பொருக்கிற் புகைத்திடப் புழுக்கள் வீழும்"*

*- ப.ரா.சே.*

நெல்லிக்காய் கந்தகம், தாளகம், வெள்ளைபாடாணம் சம அளவு எடுத்து பொடித்து புளியம் பொருக்கினை சுட்டு தணலுண்டாக்கி அதில் மேற்படி பொடியை தூவி வரும் புகையை அழுகிய ஆறாத புண்களில் காட்ட புழுக்கள் விழுந்து புண் ஆறும்.

### அண்ட வாதத்திற்கு புகை

*(புங்கன் புகை)*

*"புங்கம் விரைக் கழற்பருப்பு யீச்சங் கொட்டை*
*பொடி செய்து புளிமரத்தின் புரணியிட்டு*
*அங்கிதனைச் சட்டியிலே எடுத்துக் கொஞ்சம்*
*அதிலிடுமுன் சூரணத்தைப் புகையை வீசத்*
*தொங்குகின்ற அண்டத்தில் பிடித்தாயானால்*
*தளர்ந்திடுமே அண்டத்தின் வீக்கம் வாடி*
*தங்குகின்ற வலிநீங்கும் மூன்றுநாளில்*
*துலைந்துவிடும் விரைவாதஞ் சூட்டிப்பாரே"*

*- யா.வை.சி.*

புங்கன் வித்து, கழற்சி பருப்பு, ஈச்சங்கொட்டை, பொடிசெய்து புளியம்புரணி தணலாக்கி ஒரு சட்டியிலிட்டு அதில் மேற்படி பொடியைத் தூவி அண்டவீக்கத்தில் காட்ட வீக்கம் வடியும்.

## மை

இது அஞ்சனம் எனவும் வழங்கப்படும். மிகக் குறைந்த அளவில் கண்களின் இடக்கூடிய மென்மையான மருந்து முறை.

செய்முறையால் இது மூன்று வகைப்படும்.

1. லேகியம் போல் கெட்டியாக மிருதுவாக உள்ளது.
2. மாத்திரைகளாக செய்து உலர்த்திக் கொண்டு தேவையான நேரத்தில் உரிய நீர்ப் பொருளில் உரைத்து இடுவது.
3. சூரணமாக உள்ள நிலை

வெவ்வேறு பக்குவநிலையில் இருந்தாலும் நூற்களில்இவை அனைத்தும் அஞ் சனம் என்ற தலைப்பின் கீழே பேசப்பட்டுள்ளது.

இதில் லேகியம் போல் உள்ள மையை மிளகு அளவிலும், ட.ா திரை வடிவில் உள்ளவற்றை வாய்விடங்க அளவில் உரைத்து எடுத்தும், சூரண ,தை இரண்டு சலாகை அளவிலும் கண்களில் இடவேண்டும்.

வெண்கலம், செம்பு, ஸ்படிகம், சங்கு இவற்றால் ஆகிய பாத்திரம் கண் மருந்து செய்ய ஏற்றது.

**கண்மை உரைக்கும் கல்:**

வழுவழுப்புள்ளதாயும் 3 அங்குல அகலம், 5 அங்குல நீளம் உள்ளதாயும், நடுபாகம் ஆழமுள்ளதாயும் இருக்க வேண்டும்.

மையிடுவதற்குஉரிய வகையில் காரியக் கோல்கள் சொல்லப்பட்டுள்ளது.

**காரீயக் கோல்கள் செய்யும் முறை:**

"கருத்துடன் வகுப்புக் கேளாய் கடிய திப்பிலிதேன் நெய்யும்
மருப்புறு காணிக்கீரை மரிசமும் முத்தங்காசு
வெறுப்புறு வெள்ளாட்டின்பால் விரவு கோசலமுங் கொண்டு
பொறுப்புறு திரிபலையும் போதவே அரைத்துக் காய்ச்சே
காய்ச்சிய கஷாயத்தன்னில் கதித்தொரு பலம் காரியம்
உச்சிதமாகவிட்டு ஒன்பது தரமேயுருக்கி
சாச்சுப்பின்னெடுத்துக் கொண்டு சரிபத்தங்கிலமதாக
காச்சிமாயத்திரட்ட காரீயக் கோலதாமே
காரீயக் கோல்கள் தன்னிற்கருது மஞ்சனத்தை வாங்கி
நேரதாய் விழியில் தீட்ட நிலை நில்லா ரோகமாகும்"

திப்பிலி, தேன், பசுநெய், பொன்னாங்காணிக்கீரை, மிளகு, கோரைக்கிழங்கு, வெள்ளாட்டுப்பால், கோமூத்திரம், கடுக்காய்தோல், தான்றிக்காய் தோல், நெல்லிவற்றல் இவற்றையெல்லாம் அரைத்து குடிநீர் வடித்துக் கொண்டு, ஒருபலம் காரீயத்தை உருக்கி மேற்படி குடிநீரில் சாய்க்க வேண்டும். இவ்விதம் 9 தடவை செய்து அதன்பின் அக்காரீயத்தை தட்டி 10 அங்கு நீளமாக கோல்கள் செய்து கொள்ள வேண்டும்.

இவ்வாறு செய்யப்பட்ட கோல்களில் அஞ்சனத்தை எடுத்து கண்ணில் தீட்ட வியாதிகள் தீரும்.

**அஞ்சனக்கோல் அளவும், அமைப்பும்:**

*"அஞ்சன மெழுதுங்கோலின் அளவினை அறியக்கேளாய்*
*சஞ்சலமில்லாச் செம்பு வெள்ளியால் தங்கத்தால்*
*மிஞ்ச நல் விரலாலஞ்சு விரற்கடை மீறிடாமல்*
*கஞ்சமாம் விழியிலாடும் காரீயக் கோல்கணக்கே"*

குற்ற மற்ற செம்பு, வெள்ளி இவற்றால் 5 விரற்கடை நீளத்திற்கு மேற்படாமல் மத்தியில் மேடுவைத்து இரு கடைபுறங்களும் புஷ்பமொக்கைப் போல் திரண்டு மெலிந்தும் இருக்க வேண்டும்.

*ஆயுட்காலம்: இம்முறையில் மருந்துகளின் ஆயுட்காலம் ஓராண்டு.*

*மாத்திரை நிலையில் அஞ்சனம்*

**கற்பூராதி மாத்திரை**

*"செய்ய கற்பூரஞ்சாதி சேர்கடுக்காய் கச்சோலம்*
*மையுறு வெள்ளிலோத்தரம் மருவு பச்சிலையும் கூட்டிக்*
*கையுறு நிம்பஞ்சாற்றில் கலத்தரைத் துண்டை செய்து*
*வெய்யுறுதனப்பால் தன்னில் விரைந்திடக் காசம்போமே"*

*- அ.ந.*

பச்சைக்கற்பூரம், சாதிக்காய், கடுக்காய், கிச்சிலிக் கிழங்கு, வெள்ளிலோத்திரம், பச்சிலை சமஎடை எடுத்து பழச்சாறு விட்டரைத்து மாத்திரையாக திரட்டி நிழலில் உலர்த்திக் கொண்டு தாய்ப்பால் விட்டிழைத்து கண்ணிலிட "கண்காசம்" தீரும்.

**சங்காதி மாத்திரை**

*"சங்கு துருசு தலையோடும் சமனாய் நாலு கழஞ்சதனில்*
*பொங்கு துத்தமிரு கழஞ்சு ஓரிதழ்த்தாமரைவேர் பிடியாம்*
*தாங்கும் பழச்சாறு தனிலரைத்துத் தாம்பிரத்தாற் கயிறு செய்து*
*பொங்கு தனப்பால் தன்னிலிடப் போகு நோய் தொண்ணூற்றாறும்"*

*- அ.ந.*

சங்கு, துருசு, தலையோடு வகைக்கு 21 கிராம் துத்தம் 11 கிராம், ஓரிதழ் தாமரைவேர் ஒருபிடி எடுத்து அனைத்தையும் பழச்சாறு விட்டரைத்து மாத்திரையாக திரட்டி நிழலிலுலர்த்திக் கொண்டு தாய்ப்பாலில் இழைத்து தாம்பிரக்கோலில் எடுத்து அஞ்சனமிட கண்ணோய் 96ம், தீரும்.

**காசமாத்திரை**

"கன வன்மிளகு வேர்க்கொம்பு கடுக்காய் காரம் படியிந்து
மவையும் ஒவ்வோர் கழஞ்சுக்கு மதுரப்பொடிகள் தான் செய்து
புனல் தேன் குழைத்து இடுவீரேல்போகுங் கதிர் முன்பனி போலே
சுணங்கிப்போகுங் கண்ணோவுஞ் சொன்னார் பெரியோர் சொன்னாரே"

மிளகு, சுக்கு, கடுக்காய் தோல், வெங்காரம், படிகாரம், இந்துப்பு இவைகளை சமஎடை எடுத்து பொடித்து நீர்விட்டரைத்து மாத்திரைகளாக செய்து தேனில் இழைத்து கண்ணிலிட கண்ணோய் தீரும்.

## II சூரண நிலையில் அஞ்சனம்

**கண்டரஞ்சனம்**

"கண்டரைப் பொடித்துக் கண்ணில் கடுகெனவெழுதும் போது
முண்டிடும் அடுக்குப் பில்லம் முளையெழுஞ் சுக்கிரரோகம்
கொண்டிடுஞ் சொரியும் பில்லங் குடிகெடும் பற்பரோகம்
அண்டிடுங் கழலைப்பூவும் அகன்றிடு மிதனைச்செய்யே"

- அ.நி.

துருசைப்பொடி செய்து கடுகளவு கண்ணிலிட அடுக்குப் பில்லம், சுக்கிரரோகம், சொரிப்பில்லம், பூ, கழலை தீரும்.

**கற்பூராதி அஞ்சனம்**

"பச்சைக் கற்பூரம் பீதரோகினி மனோ கல் துத்தம்
நச்சிடுத் துருசிந்து நாகருஞ்சோகி பீங்கான்
துச்சிடுங் கோழி முட்டைத்தோடு காக்கணத்தின் மூலம்
வைச்ச வோரிதழின் மூலம் வளர்வெண் சாரடைவேர் சீதை
சிறுகீரை வேரொவ்வொன்று சேர முக்கழஞ்சு கூட்டி
யுறுமெலுமிச்சஞ்சாற்றிலரைத்துண்டை ஓட்டின்மீது
மறுபடி வைத்தெரித்துப் பொடிசெய்து மானே கேளாய்
தெறுகனல் போலெழுந்த வியா தியிலிடவே தீரும்"

பச்சை கற்பூரம், பீதரோகிணி, மனோசிலை, துத்தம், துருசு, இந்துப்பு, சுக்கு, சோகி, பீங்கான், (படிகக்கல்)ச் கோழி முட்டைதோடு, காக்கணவேர், ஓரிதழ்தாமரைவேர், வெண்சாரடைவேர், பொன்னாங்காணிவேர்,

சிறுகீரைவேர் வகைக்கு சமஎடை எடுத்து பழச்சாறு விட்டரைத்து வில்லை செய்து உலர்த்தி புதுச் சட்டியிலிட்டு எரித்து பின்புபொடி செய்து கண்ணிலிட கண்ணோய் தீரும்.

## III மிருது நிலையில் அஞ்சனம்

**கடுக்காய் மை**

“உண்மையாக வுரைக்கின்றேன் மையொன்று
வண்மையான வரப்பூலா பச்சிலை
கண்மையானக் கடுக்காய் மாசிக்காயும்
தண்மையான தோர் தான்றியுஞ் சேர்த்திடே
சேர்த்திடு காசு சிறந்ததோர் கட்டியும்
பார்த்திடும் படிப் பாங்காய விரானேற்
தூர்த்திடும் படி துய்ய வவித்துமே
ஆர்த்திடும் படி அறையப் பிழிந்தடே
பிழிந்துமே கறண்டியில் புனிதமாய்
செழிந்து சீனமாம் சேர்ந்த பொரியதும்
குழிந்தும் காரம் குறிக்கும் வராகன்கால்
சுழிந்து மைபோல் சுறுக்காய் அரைத்தெடே
எடுத்து மையை யிருகண் பொருந்தவே
அடுத்து வைந்து நாளன்பாகப் பூசிடு
தொடுக்கும் புளியன் தேர்ந்த கஷாயத்தில்
கடுக்குங் கண்ணை கழுவி நீபார்த்திடே
பார்க்கும் போது பரவுங்கண்ணீரெங்கே
ஆர்க்கும் போது அடர்ந்த சிவப்பேகும்
ஆர்க்கும் பூளை பொருந்தவே யோடிடும்
தீர்க்கும் தேரையன் தெளிந்தமுறையிதே”

- தே.வை.

வரட்பூலா, மாசிக்காய், பச்சிலை, தான்றிக்காய்தோல், கடுக்காய், காசுக்கட்டி வகைக்கு 5.1 கிராம் வீதம் எடுத்து 1 படி நீர்விட்டு ½ படியாகக் குறுக்கி எடுத்துக் கொண்டு பின் கரண்டியில் சீனாக்காரத்தை இட்டு பொரித்து ¼ வராகன் எடுத்து மேற்படி குடிநீர் விட்டு அரைத்து மையை இரு கண்களிலும் 5 நாள் இட்டு, புளியிலை குடிநீரால் கண்களை கழுவ கண் சிவப்பு, கண்வலி தீரும்.

## இந்துப்பு அஞ்சனம்

"போகும் ரோகினி பொருந்துமிந்துப்புடன்
தாக்கு நந்தியின் பூச்சாற்றாலாரைத்திடு
போக்கில்லாமற் பொருந்து நேத்திராஞ் சனம்
வாக்குத் தப்பாமல் வாகாகப்போட்டிடே
போட்டிடும் பில்லம் புழுவெட்டுத்தானும்
நீட்டிடுங் கண்ணீர் நேருமாணிப்பூவும்
பூட்டிடும் புகை புகலுந்திரைமறை
மூட்டும் பீனிச முகிழப்பறக்குமே"

- தே.வை.

பீத ரோகிணி, இந்துப்பு சம எடை எடுத்து நந்தியாவர்த்த பூச்சாற்றால் மைபோல் அரைத்து கண்களில் இட பில்லம், புழுவெட்டு கண்மறைப்பு, பீனிசம் தீரும்.

# பொடி திமிர்தல்

மருந்து சரக்குகளை சூரணித்து நோயாளியின் உடலில் தேய்த்து உதிர்த்து விடுதல்.

இம்முறை பெரும்பாலும் கப நோய்களிலும், தோல் நோய்களிலும் கையாளப்படுவதாகும்.

**கற்பூரப் பொடி திமிர்தல்**

"ஒடு மாந்த குறையுந் சீதளத்துக்
காடுங் கற்பூரங் கடிய மஞ்சத்தூளாம்
நீருங் கானம் நெருங்கு பழச்சுண்ணம்
போடுமோமம் பொருந்தச் சமன் தூக்கே
தூக்கியொன்றாய்த் துகளப் பொடித்துமே
தாக்கிய பாண்டந் தனிய வறுத்துமே
போக்கில்லாமல் பொருந்தவே தேய்த்திடு"

- தே.வை.

கற்பூரம், மஞ்சள் தூள், காணம், சுண்ணாம்பு, ஓமம் இவைகளை சமஎடை எடுத்து பொடித்து வறுத்து தேய்த்து உதிர்க்க சீதள நோய் தீரும்.

# கலிக்கம்

கண்களுக்கு இடும் மருந்து முறைகளில் ஒன்று. சரக்குகளை இடித்து சாறுபிழிந்தோ, அன்றி சில சரக்குகளை இடித்து துணியில் கோளமாகக் கட்டி உரிய திரவப் பொருளில் ஊறவைத்து கண்களில் பிழிவது கலிக்கம் ஆகும். தீவிர சிகிச்சை பகுதியில் பலன் தரக்கூடிய சிறப்பு முறையாகும்.

கண்களுக்கு இடவேண்டிய கலிக்க மருந்துகளை பஞ்சில் தோய்த்தோ, சலாகையினாலோ கண்களில் இடவேண்டும். கண்களை திறந்து மூக்கின் புறமாயுள்ள அகக்கோணத்தில் முதலில் இடது கண்ணிலும் பின் வலது கண்ணிலுமாக 1 முதல் 5 துளி வரை கண்களில் இட வேண்டும்.

**கலிக்கத்தின் சிறப்பு**

"கலிக்க வகை வாகடர் நோய்த் தளத்தைக்
கெலிக்க வகைகாட்டுங் கேட்டைச் சலிக்க
நொறுக்குஞ் சலப்பிணியை நீக்குங் கபத்தை
அறுக்குஞ் சலக்கரணையாம்"

- தே.வெ.

நோய்ப்பகைப்படையை அழித்து வெற்றிக்கொள்ளச் செய்யவும், நீர்ப்பிணிகளை வற்றியொடுங்கச் செய்வனவும், கபத்தை தீர்ப்பனவும் ஆகிய கலிக்கம் சிறப்புடையதாம்.

இப்பரிகார முறைகட்காகும் மருந்துகளின் ஆயுட்காலம் ஓராண்டு.

**செங்கண்ணுக்குக்கலிக்கம்**

நோக்க மவயத்தி னுட்பமத னான்மனிதர்
தாக்கறிந்து கூருகிருந் தாக்காமல்—யாக்கைமிகக்
கம்பமிலா மற்புரிசெங் கண்ணா னாற்சாந்தி
செம்பருத்திக் காய்ரசமாஞ் செய்.

- தே.வெ.

மக்களுடம் பிற்கமைந்தவுறுப்புகளுள் கண்களே மிக நுட்பமானவையும் இன்றியமையாதவையுமாகையால் அவ்வவர் தேகக்கூறுபாடறிந்து கலிக்கமிடுங்கால் விரல்களின்நகங்கள் கண்ணிற்பட்டு ஊறு செய்யா வகையில் செம்பருத்திக் காயின் சாற்றினைச் சிவப்பேறிய கண்களிற் கலிக்கமாக விடின் கண்சிவப்பு மாறி நல்ல ஒளியுடையனவாகும்.

### வீரபத்திர கலிக்கம்

"பாரப்பா வீர பத்திரகலிக்கங்கேளு
பறக்குமடா பசாசு முதல் சன்னியெல்லாம்
சேரப்பா திரிகடுகு கடுக்கா யிந்து
திறமான பாளமொடு கிறாம்போடேழும்
வேரப்பா வெந்தயச் சாறதனாலாட்டி
வெகுசுறுக்காய் கால் சாமமரைத்துக் கொண்டு
ஆமப்பாமுன் சாற்றால் கலிக்கம் போடே"

சுக்கு, மிளகு, திப்பிலி, கடுக்காய்தோல், இந்துப்பு, நேர்வாளம், கிராம்பு, சம அளவு எடுத்து வெந்தயச் சாற்றாலாட்டி வெந்தய சாற்றிற் கரைத்து கண்ணிற் பிழிய சன்னி நீங்கும்.

### சுக்கு கலிக்கம்

"சொல்லுஞ் சுக்கு மிளகு கிராம்புடன்
வெல்லுந் துவரைப்பருப்பு கால்கூட்டியே
சொல்லு மேனிச்சார் தன்னிலாட்டியே
வில்லுங் கண்ணில் வீசியே போட்டிடே
போட சந்நி முதல் பசாசு வேகும்
நீடாதே மயக்கம் விஷமோடிடும்
ஓடவே கபாலத்தில் சூடுகளும் கூட
கண்டம் விட்ட கன்றேகும் பாரே"

- ப.ரா.சே.

சுக்கு, மிளகு, கிராம்பு வகைக்கு 1 பங்கு துவரைப்பருப்பு ரு பங்கு கூட்டி மேனிச்சாறு விட்டரைத்து கண்ணில் பிழிய மயக்கம், விஷம், கபாலச்சூடு தீரும்.

### மூக்கிரட்டை கலிக்கம்

"......................மொரு கலிக்க...
திறமாய்ச் சொல்ல கேளுமினி
காறா மூக்கரைச் சாரணையைக்
கசக்கித் தனிசார் பிழிந்து கொண்டு
பாரும் எள்ளெண்ணெயிரண்டு துளி
பரிவாய் கையிற்றான் விட்டு
தேருமிரண்டு கையாலே
தீப்போற்றேய்த்து வழிப்பாயே
வழித்து சிப்பியினுள் வைத்துடனே

வகையாயிரண்டு கண்களையும்
விழிக்கச் சொல்லி கலிக்கமதை
விரும்பி நன்றாய் போட்டிடிலோ
பழிக்க வந்திடும் பைத்தியமும்
பாங்கா யோடிப் பறந்துவிடும்"

மூக்கிரட்டை இலையை கழுவி கசக்கி சாறு பிழிந்து ஒரு துளி விட்டு இரண்டு துளி எள்நெய்சேர்த்து கையால் மத்தித்து இரு கண்களிலுமிட பித்தம் தீரும்.

## நசியம்

மூக்குத் துவாரத்தின் வழியாக திரவ ரூபத்தில் உட்செலுத்தும் மருந்து.

நோய்க்குத் தக்கவாறு உரிய பொருட்களை சாறுபிழிந்து திரவமாகவோ, அன்றி கற்கமாக அரைத்து உரிய திரவப் பொருளில் கரைத்து வடித்தோ, சில வகை தைல முறைகளையோ மூக்கிலிடுவது நசியம் ஆகும்.

நசிய முறை கண், காது, மூக்கு ஆகிய இடங்களில் காணும்நோயை நீக்கி கழுத்துக்கு மேல் உள்ள உறுப்புகளுக்கு வலுவையும் உண்டாக்கும்.

நசிய முறைக்காகும் மருந்துகள் சாறு, குடிநீராக இருப்பின் எட்டு துளிகள் உயர்ந்த அளவாயும், 6 துளிகள் மத்திமமாயும் குறைந்த அளவாக 4 துளிகளும் ஆகும்.

நோயாளியின் தலையை அதிக உயரமாயும், அதிக தாழ்வாகவும் இல்லாமல் சற்று பின்பக்கமாக சாய்த்து நடுவிரலால் மூக்கின் நுனியைத்தூக்கி ஆள்காட்டிவிரல், மோதிரவிரல் இவற்றால் முறையே மூக்கின் ஒரு துவாரத்தை மூடி மற்ற துவாரத்தில் வலது கையினால் பஞ்சில் தோய்த்தோ அல்லது குழல் போன்ற நாடிக் கருவியாலோ மருந்தை இட வேண்டும்.

மூக்கிலிட்ட மருந்து தொண்டைக்குள் வந்தவுடன் விழுங்காமல் துப்பச் செய்ய வேண்டும்.

இம்முறை ஏழு வயதிற்கு குறைந்தவர்கட்கும், எண்பது வயதை கடந்தவர்கட்கும் செய்தல் கூடாது.

நசிய மருந்துகளில் சாறு முதலியவை விரைவிலும், எண்ணெய்முறை தாமதமாகவும் பயனளிக்கக்கூடியது. எனவே அவசர சிகிச்சை முறையில் சாறு வகைகளையும், நாட்பட்ட மருத்துவ முறைகளில் எண்ணெய் வகைகளையும் பயன்படுத்த வேண்டும்.

வாத நோய்களுக்கு மாலையிலும், பித்த நோய்கட்கு மதியத்திலும், கபநோய் கட்கு காலையிலும் நசியமிடல் வேண்டும்.

மூக்கிலிடும் மருந்து குறைவாகவோ, அதிகமாகவோ இருக்கக் கூடாது.

மருந்து மிகச் சூடாகவோ, அதிக குளிர்ச்சியாகவோ இருக்கக்கூடாது.

மருந்தை ஒரே தடவையில் முழுமையாக நசியமிடக் கூடாது. அங்ஙனம் செய்தால் தலை நோய், மூச்சு தடை படுதல் தோன்றும்.

நசிய மிடுங்கால் மருந்தின் வேகத்தால் மயக்கம் ஏற்பட்டால் தலை நீங்கலாக மற்ற உறுப்புகளை குளிர்ந்த நீரால் நனைக்க வேண்டும்.

ஆயுட்காலம்: இம்மருத்துவ முறைகட்காக முடித்து வைத்த மருந்துகளின் ஆயுட்காலம் ஓராண்டு.

**தும்பை நசியம்**

"நசியம் பிழிந்து நளிர்சுரத்தில் மூக்கிற்
பொசியும் பலபிணியும் போக்க — விசைசேர்
பராரியென வீரிய மெப்போது மிருக்கும்
துரோண மலரொன்று போதும்"

- தே.வெ.

தும்பை மலர் கசக்கி மூக்கிற் பிழிய நளிர்சுரம் தீரும்.

**சமுத்திராதி நசியம்**

"கண்ட போது கண்டத்தின் வியாதிக்கு
கண்டமே பெருங்காயஞ் சமுத்திரா
பெண்டு முலைப்பாலினாலாட்டியே
உண்டு நாசியில் வுறையப் பிழிந்திடே"

- தே.வை.

சமுத்திராபழம், பெருங்காயம் தாய்ப்பாலில் அரைத்து மூக்கில் பிழிய கண்டத்தின் வியாதிகள், தொண்டைநோய் தீரும்.

**காணிநசியம்**

"பொன்னாங் காணியின் வேரைப் பிடுங்கி வந்து
பூவை முலைப் பாலைவிட்டு நறுக்கியதா
னன்றாக மூன்று நாளிரண்டு நேரம்
நசியஞ் செய்யஞ்சு துளி யொருத்தலை நோய்
சின்னா பின்னப் பட்டு வோடு......."

- தே.வை.

பொன்னாங்காணி வேரை பிடுங்கி சுத்தித்து தாய்ப்பாலிட்டு ஆட்டி 5 துளி வீதம் இருநேரம் 3 நாள் விட்டு வர ஒருதலை நோய் தீரும்.

**குங்குமப்பூ நசியம்**

“பிழ்ந்திடுமின்னம் பெருத்த நசியங் கேள்
கழிந்திடுங்காரங் கருது மெருக்கனும்
இழிந்திடுமாதளம் பூ கொழுந்துடன்
கழுந்திடுங் குங்குமப்பூவுந் தூக்கிடே
தூக்குங் கன்னியின் துய்யமுலைப்பாலில்
தாக்குங் கல்வத்தில் தாழவரைத்துமே
யிக்கும் நாசியில் பாங்காய் பிழிந்திட
நீக்கும் பீனிசம் நீக்கியேயோ டுமே”

- *தே.வை.*

வெங்காரம், எருக்கனிலை, மாதளம்பூ, அதன்கொழுந்து, குங்குமப்பூ இவற்றை சேர்த்து தாய்ப்பால் விட்டரைத்து மூக்கில் பிழிய பீனிசம் தீரும்.

**அருகன் நசியம்**

“ஓடவே மாதுளம் பூச் சாற்றிலுகத் தாவின் நெய்யில்
கூட அருகங் கொழுந்தரைத்து — நாடியிதைப்
பார்த்து வடித்துப் பரிவாக மூக்கிலிடக்
கூர்த்த ரெத்த பித்தம் போங்கூறு”

- *அ.ந.வி.*

மாதுளம் பூச்சாறு, பசுநெய் இரண்டையும் கலந்து அதில் அருகன் கொழுந்தை அரைத்துப் போட்டுகாய்ச்சி வடித்து மூக்கில் நசியமிட ரத்த பித்தம் தீரும்.

## ஊதல்

இது, சில இலைகள் அல்லது மருந்துச் சரக்குகளை வாயிலிட்டு மென்று காது, கண் முதலியவற்றில் ஊதுவது.

அன்றியும் புரையோடியபுண், குதத்துள் ஏற்படும் புண், இவற்றிற்குக் குழல் போன்ற கருவியை உட்செலுத்தி மறுமுனையில் மருந்தை இட்டு ஊதி உட்செலுத்துவதும் ஊதல் என்றே நூற்களில்பேசப்பட்டுள்ளது.

இதற்கென பிரத்தியேக கருவிமுறைகளும் கூறப்பட்டுள்ளது.

### ஊது குழல் அமைப்பு

ஒரு சாண்நீளம், 17.5 கிராம் எடையில், ஓலை கனத்தில் மெல்லிய திரட்சியான குழல், புரையோடிய புண்களில் மருந்தை உட்செலுத்த உதவுவது.

முனை குவிந்ததும் வாய் அகன்றதுமான மரக்குழல். இது மழமழப்பாக செய்து குவிந்த முனையை குதத்துள் செலுத்தி அகன்ற அடிப்பகுதியில் மருந்தை இட்டு ஊத உதவுவது.

1. வெங்காயபூக்களை வாயிலிட்டு மென்று அம்மை நோயில் கண்கள் பாதிக்கப் படாமல் இருப்பதற்கு கண்களில் ஊதுவது.

திப்பிலி, மருக்காரை, ஓட்டடை, கடுகு சம எடை எடுத்து சூரணித்து குழல் மூலமாக குதத்தில் உட்செலுத்தி ஊத இரத்தமூலம் தீரும்.

## நாசிகாபரணம்

மூக்குத் தூள் என்றும், மூக்குப் பொடி என்றும் நூற்களில் பேசப்படும். மருந்து சரக்குகளை சுத்தித்து உரலிலிட்டு இடித்து வஸ்திரகாயம் செய்து மர உரலிலிட்டு நுண்துகளாக கடைந்து எடுத்துக் கொள்ள வேண்டும்.

அளவு: பணவெடை (488 மிகி) வீதம் என நூற்களில் குறிப்பிட்டிருப்பினும் நோயாளன் வன்மை அறிந்து அளவினை மருத்துவன் நிர்மாணித்துக் கொள்ள வேண்டும்.

தொண்டை நோய், முக்குற்றத்தால் தோஷமடைந்த சுரம், அதிகதூக்கம், மனநோய், கண்துடிப்பு, கண் திறக்க முடியாதநிலை, நஞ்சினால் துன்புறுதல், உணர்வு அற்றுப் போதல், பாம்பு கடித்தல் ஆகிய நிலைகளில் தோஷங்கள் அதிகரித்து இருக்கையில் விரைவில் குணமளிக்கக் கூடியது இச்சிகிச்சைமுறை.

இது இருவகையாக உட்செலுத்தப்படும்.

1. வாயால் ஊதி மூக்கில் மருந்தை உட் செலுத்துவது.
2. 2 துவாரமுள்ளதும், ஆறு அங்குல நீளமுள்ளதுமான குழல் கருவியில் சூரணத்தை இட்டு ஊதுவது.

நோய் நிலமைக்கு ஏற்றவாறு அடிக்கடி இச்சிகிச்சை முறையை மேற்கொள்ளலாம். மூக்கிலிடும் மருந்து முறையாகிய நசிய முறையைக் காட்டிலும் உயர்வானது. ஆயினும் சிறிது முறை பிசகினும் மிக்க துன்பத்தை விளைவிப்பதாகையால் மருத்துவன் கவனமாக இச்சிகிச்சை முறையை மேற்கொள்ளவேண்டும்.

### மூக்கிலிடும் மருந்து சிகிச்சைக்கு தகாதவர்கள்:

கருத்தரித்தவள், சுவாசகாசம்,காசம் ஆகிய நோயினால் பீடிக்கப்பட்டவர்கள், காயமுற்றவர்கள், குருதிவாங்கல் சிகிச்சை செய்தவர்கள், கள்ளுண்டவர்கள், விடமருந்தியபேர்கள், புதிதாக சலதோடமடைந்தவர்கள் ஆகியோர் நாசிகாபரண சிகிச்சைக்கு தகாதவர்கள்.

ஆயுட்காலம்: நாசிகாபரண மருந்துகளின் ஆயுட்காலம் 3 திங்கள்

### நவச்சார நாசிகாபரணம்

"பொய்யாதய்யா புகலுந்தேறன்மொழி
ஐயா மாந்தர்க் கறைகிறேனாக்கிராணம்
மெய்யாஞ்சாரம் விரும்பும் யவச்சாரம்
செய்யா ரேவலின் சின்னியெடுத்திடே
எடுத்தெழிலான சுண்ணமும்
தடுத்திடாமல் தனியப் பொடித்துமே

கொடுத்திடாக்கிராணங் கூறிநாசிக்கு
முடுத்த நீர்ப்பாச்சல் முனைந்தோடிப்போகுமே
போகுமே சிரநோயின்றலைவலி
எதிற்கானக மிட்டொதுங்கிடும்"

- *தே.வை.*

நவாச்சாரம், யவாச்சாரம், ரேவல்சின்னி, பூநீறு சம அளவு எடுத்து பொடித்து மூக்கிலிட நீரேற்றம், தலைவலி தீரும்.

**துருசு நாசிகாபரணம்**

"எய்ந்திடவே வாத பித்தந்தன்னால் வந்தயிடங்கெட்ட
மாறலென்ற சுரங்களெல்லாம்
மாய்ந்திடவே வந்த சுரமெல்லாந் தீரு
மாறலுக்கு நாசிகா பரணங்கேளு
காய்ந்திடவே காவியொரு துரிசு நேராய்க்
கலுவத்தில் பொடி செய்து வைத்துக் கொண்டு
சாந்திடவே பணவிடை தான் மூக்கிலூது
சகல சுர மாறலெல்லாந் தரியாதென்னே"

- *அ.வ.*

காவிக்கல், துருசு, சமஎடை எடுத்து பொடி செய்து கொண்டு பணவெடை மூக்கிலிட மாறற் சுரம் தீரும்.

**தேற்றான்வித்துப் பொடி**

"தேற்றாம் வித்தோடு திரிகடுகு சீயக்காய்
சேர்த்தா விருநாசி சேர்பொடித்தூள் — மோர்ந்தாக்கால்
சன்னி பலவுந் தலைவலியும் நீரேற்றம்
விண்ணில் விரைந்தோடும் விட்டு"

- *அ.ந.வி. பாடல் 435*

தேற்றான் விதை, திரிகடுகு, சீயக்காய் சம அளவு எடுத்து பொடி செய்து மூக்கிலிட்டு முகர சன்னி, தலைவலி, நீரேற்றம் தீரும்.

**சுண்டைவேர் பொடி**

"சுண்டைவேரரத்தை பாதி தூள் செய்து மூக்கில் வாங்க
மண்டையில் விளையும் நீரை வாங்கிடுந் தும்மலாகத்
தொண்டையில் கரகரப்புதுடங்கிய சன்னி சூலை
மண்டையில் கண்ணோய் வாயு பழஞ்சுரம் பறந்துபோமே"

- *அ.ந.வி*

சுண்டைவேர் — 1 பங்கு, அரத்தை — லு பங்கு உலர்த்தி இடித்து சூரணித்து ஆக்கிராணம் செய்ய தலையில் உள்ள நீரேற்றம், தொண்டை கரகரப்பு, சன்னி, மண்டை சூலை, கண்ணோய் பழஞ்சுரம் தீரும்.

**நாசிகா சூரணம்**

"செக்காடும் இலுப்பைப் புண்ணாக்குதன்னைச்
செயம்பெறவே தீயினில் சுட்டுத்தானே
மிக்கவே நாலுபலம் யெருக்கம்பாலில்
மிகவரைத்துக் கதிரினிலே காயவைத்துத்
தொக்கயெடு சுண்டைவேர் தும்பை மூலம்
துடியாக உலர்த்தி முன்னிடையே சேர்த்துக்
குழ லிலடைத்துவிடு யென்று சொன்னார்
தாட்டிகமா யாகோபு திண்மைதானே."

- யா.வை.சி

இலுப்பை பிண்ணாக்கை தீயிலிட்டு சுட்டு எருக்கம்பால் விட்டு கரைத்து வெய்யிலில் உலர்த்தி சுண்டைவேர், தும்பை வேர் உலர்த்தி மூன்றும் சமஎடை எடுத்து பொடித்து எடுத்துக் கொள்ள வேண்டும். மூக்கிலிட பீனிசம், தலைவலி சுரம், ஒருதலைநோய் தீரும்.

# களிம்பு

மருந்து சரக்குகளை பொடித்து உரிய நெய் வகை அல்லது வெண்ணெய் சேர்த்து அரைத்து பின் நீர்விட்டு அரைத்து கழுவி எடுத்துக் கொள்வது.

குழம்பு என்றும் நூற்களில் பேசப்படும். இதன் ஆயுட்காலம் 6 மாதங்கள் ஆகும்.

குறிப்பு: இதில் வெண்ணெய் சேர்க்கப்படுவதால் வெண்ணெய் என்று கூறுவது தவறாகும். இங்ஙனம் கூறுங்கால் உள் மருந்து முறையில் 'வெண்ணெய்" என்ற மருந்து முறையுடன் சேர்க்கப்பட்டு தவறாக கையாள ஏதுவாகும்.

எனவே நடை முறை வழக்கில் உள்ள தவறுகளை நீக்கி நூற்களில் சொல்லியுள்ள செய்முறைகட்குள்ள பெயர்களையே கொள்ளுதல் வேண்டும்.

**லிங்கக் களிம்பு**

"தானப்பா களிம்பொன்று சொல்லக்கேளு
தயவான லிங்கமுடன் மிருதார் சிங்கி
ஊணப்பா ரசகர்பூரத்தினோடு
உத்தமனே வெள்ளையென்ற குங்கிலியந்தான்
கோணப்பா கடுக்காயு மாசிக்காயுங்
குணமான காசுக்கட்டி தான்றிக்காயும்
வாணப்பா வோரெடையாயக் கல்வத்திட்டு
வகையாக தானரைக்க விபரங்கேளே
கேளே நீ பசுவினிட வெண்ணெய் போட்டு
கெணிதமா யொருசாம மரைத்தபின்பு
கேளே நீ தண்ணியிலே மிதக்கவைத்து
சுகமாக மற்றா நாளெடுத்துக்கொண்டு
கேளே நீ சூலையப்பா ரணத்திற்பூச
கொடிதான ரணங்களெல்லா மாறிப்போம்"

- *பு.வை. 500*

லிங்கம், மிருதார்சிங்கி, ரசகற்பூரம், வெள்ளைகுங்கிலியம், கடுக்காய்தோல், மாசிக்காய், தான்றிக்காய்தோல், காய்ச்சுக்கட்டி சமஎடை எடுத்து பொடித்து சமஎடை பசுவெண்ணெய் சேர்த்து மூன்று மணி நேரம் அரைத்து உருட்டி நீரிலிட்டு மிதக்க விடவேண்டும். மறுநாள் எடுத்து பத்திரப்படுத்திக் கொள்ள வேண்டும். வெளிப்பிரயோகமாக பயன்படுத்த சூலை, ரணம் தீரும்.

**இரச களிம்பு**

*"சொல்லுகிறேன் புண்களுக்கு களிம்புதன்னை*
*சூதமடா வராகன் ரண்டு லிங்கம் நாலு*
*வெல்லுகிறேன் கெந்தி நாலரையதாகும்*
*வீருக விவை மூன்று சரக்கு மாட்டி*
*சொல்லுகிறதோ ராவினிட வெண்ணை வாங்கி*
*சொல்லுமடா திசைக் கெல்லா மிகக் களிம்பு*
*தீராத புண்ணெல்லாந் தீரும் பாரே."*

*இரசம் 2 பங்கு, லிங்கம் 4 பங்கு, கெந்தி 41/2 பங்கு, சேர்த்து கல்வத்திலிட்டு அரைத்து பசுவெண்ணெய் சேர்த்து 8 நாள் அரைத்து எடுத்துக் கொள்ள வேண்டும் வெளிப்பிரயோகமாக பயன்படுத்த ஆறாத ரணங்கள் ஆறும்.*

**பூரக்களிம்பு**

*"கேளே நீ ரசமென்ற பூரமப்பா*
*செயலாக விராகனெடை வாங்கிவந்து*
*நீரே நீ பசு வெண்ணெய்*
*திறமாகத்தான் போட்டு அரைத்து மைபோல்*
*வீரே நீ பூசிடவும் ரணங்களாறும்*
*விதமான போகருட கடாட்சத்தாலே"*

*- பு.வை*

| | | |
|---|---|---|
| *பூரம்* | — | *4.1 கிராம்* |
| *பசுவெண்ணெய்* | — | *200 கிராம்* |

*ரசகற்பூரத்தை பொடித்து பசுவெண்ணெய் சேர்த்து அரைத்து வெளிப்பிரயோகமாக பயன்படுத்த ரணங்கள் தீரும்.*

**வீரக் களிம்பு I**

*வீரம் 2 கிராம் எடுத்து கல்வத்திலிட்டு நன்கு அரைத்து அத்துடன் பசு வெண்ணெய் 200 கிராம் சேர்த்து நன்கு அரைத்து எடுத்துக் கொள்ள வேண்டும்.*

*வெளிப்பிரயோகமாக பயன்படுத்த பிளவை, புண், மூலமுளை இவை தீரும்.*

*குறிப்பு: இதுவே அமிர்த வெண்ணெய் என வழங்கப்படும்.*

## வீரக்களிம்பு II

*"புகலரிய வீரமொடு ரசகற்பூரம்*
*புதியதொரு சாதிலிங்கம் வகைதான்மூன்றும்*
*செகமறிய வகைக்கிரண்டு கழஞ்சுதூக்கி*
*சேரடா ஆறுபங்கு மேதினெய்யை*
*பகல் முழுதுமரைத்து குளிர்ந்த சலத்திலிட்டுப்*
*பாரடா அதையெடுத்து நீரைவாங்கி*
*இகமதனில் மானிடர்க்குப் புண்ணிலிட்டால்*
*எழுந்த பல விரணமெல்லாமே குந்தானே"*

*வீரம், ரசகற்பூரம், சாதிலிங்கம் சம எடை எடுத்து அரைத்து 6 பங்கு ஆவின்நெய்விட்டு ஒருநாள் பகல்முற்றும் அரைத்து குளிர்ந்த நீரிலிட்டு மறுநாள் எடுத்து பயன்படுத்த புண்கள் தீரும்.*

## துருசு களிம்பு

*"சோமனாதி முக்கழஞ்சு துருசு கழஞ்சு இவையிரண்டும்*
*நாமே சொன்னேம் வெதுப்பியதை வெண்ணெய்தனிலிட்டுச்*
*சாமமரைத்து முடரோமஞ் சாகுமிமை யிலெள்ளளவு*
*வாம தனத்தா யெழுதிடவே வளரு முரோம முதிர்ந்திடுமே"*

*- நா.ந.வி.*

*பச்சைக்கற்பூரம் 3 பங்கு, துருசு 1 பங்கு இரண்டையும் தனித்தனியாக பொரித்து சேர்த்தரைத்து பின் வெண்ணெய் சேர்த்தரைத்து இமை ஓரங்களில் தடவ முட மயிர் உதிரும்.*

## சம்பூரணக் களிம்பு

*"தேடுமிருதாரு தேர்ந்த கற்பூரமும்*
*கூடும் வெள்ளை குலவு குங்கிலியம்*
*தாரு லிங்கந் தயவாய்ச் சேர்த்திடே*
*சேர்த்திடப்பா சிறந்த மாசிக்காயும்*
*தார்த்துமே கடுதான்றி காசிக்கட்டி*
*பார்த்து வோரெடை பாங்காக கல்வத்தில்*
*கோர்த்துமே வெண்ணெய் குலாவியரைத்திடே"*

*"அரைத்திடப்பா வொரு சாமந்தான்*
*நிரைத்து தண்ணீரில் நேராய் மிதக்கவே*
*கரைத்துத் தண்ணீரில் கசடுகளற*

சிரைத்த சிமிழில் சிறப்பாயெடுத்திடே
எடுத்திடு மெழிலான களிம்பிதை
கடுத்திடுஞ்சூலை கடிய ரணங்கட்கு
அடுத்திடும் படியானதோர் மூன்றுநாள்
தொடுத்திடும்படி தேரனுரைத்தனே"

- தே.வை. 1500

| | | |
|---|---|---|
| மிருதார்சிங்கி | — | 10 கிராம் |
| கற்பூரம் | — | 10 கிராம் |
| வெள்ளைபாடாணம் | — | 10 கிராம் |
| வெள்ளை குங்கிலியம் | — | 10 கிராம் |
| லிங்கம் | — | 10 கிராம் |
| மாசிக்காய் | — | 10 கிராம் |
| கடுக்காய் | — | 10 கிராம் |
| தான்றிக்காய் | — | 10 கிராம் |
| காய்ச்சுக்கட்டி | — | 10 கிராம் |
| பசுவெண்ணெய் | — | 90 கிராம் |

தாதுச் சரக்குகளையும், மூலிகை சரக்குகளையும் நன்கு பொடித்து கல்வத்திலிட்டு வெண்ணெய் சேர்த்து 3 மணி நேரம் அரைத்து நீரில் நன்கு கழுவி எடுத்துக் கொள்ள வேண்டும்.

வெளிப்பிரயோகமாக பயன்படுத்த துட்டரணங்கள் தீரும்.

# சீலை

சில நச்சு சரக்குகளை முறைப்படி உரிய நெய் வகைகளுடன் பக்குவமாக்கி சீலையில் தடவி உபயோகப் படுத்தும் முறை. இது நூற்களில் சல்லா என குறிப்பிடப்பட்டுள்ளது.

"உயர்சீலை களிம்பிவைகளறு திங்களாமென்"

என்றதில் இதன் ஆயுட் காலம் 6 திங்கள் என்பதாகும்.

மருந்துகளை அரைத்து சீலையில் தடவி உலர்த்தி

தயாரித்து வைத்துக்கொள்ளும் மருந்துமுறை, வேண்டியபோது நோயுற்ற இடங்களில் வேண்டிய அளவில் கத்தரித்து வாட்டியோ, வாட்டாமலோ போடவேண்டும்.

சீலை வகை மருந்துகட்கு பெரும்பாலும் பயன் படுத்தப்படுவது எள்நெய், ஆமணக்குநெய் ஆகும்.

**அக்கினி சீலை**

"போமென்று அக்கினி சீலையைக் கேளு
பொங்கமுடன் மெழுகதுவும் வராகன் பத்து
ஆமென்று பாண்டத்திலிட்டு மைந்தா
அடவாக வீரமைந்து பொடித்துப்போடு
தாமென்று வுருகையிலே விளக்கெண்ணை விட்டு
தானுருக்கி வடிகட்டி சலத்தில் வாரு
வாமென்ற தனையெடுத்து சிமிழில்வைத்து
வளமாகச் சல்லாமேல் தடவிவையே
தடவியே கைகால் குத்தெடுக்குந் தேகந்
தயவாக எலுமிச்சம் பழச்சார் பூசி
தடவியே சாரத்தைப் பொடித்துத்தூவி
அடவான சீலையை அளவாய்போடு
மடவியே கட்டிடவே பொதுக்கொணாது
மயக்கமுஞ் சோபங் கண்டால் வழித்துப்போடு
தடவியே கொப்புளித்து சலமாகும்
கத்தரித்து விட்டு விடு நீரு போமே
போமே நீ வலிகுத்து தீர்ந்துபோகும்"

தேன்மெழுகு 42 கிராம், வீரம் 21 கிராம், விளக்கெண்ணை 63 கிராம்

தேன்மெழுகு சட்டியிலிட்டு எரிக்க உருகும். உருகும் சமயம் வீரத்தை பொடித்து தூவி இரண்டும் சேர்த்து கலந்தவுடன் விளக்கெண்ணெய் விட்டு நன்கு துழாவி நீரில் சாய்த்து பின் எடுத்து சல்லாதுணியில் தடவி வைத்துக்கொள்ள வேண்டும். கை, கால்களில் கட்டிகள் தோன்றும் சமயம் வலி இருக்கும் இடத்தில் பழச்சாற்றை பூசி நவாச்சாரத்தை பொடித்து தூவி சீலையை வேண்டிய அளவு கத்தரித்து போட அவ்விடம் கொப்புளித்து நீர் சுரந்துவிடும். அதை கத்தரித்து நீரை வெளியேற்ற ஆறி விடும்.

**விளாம்பிசின் சீலை**

"பாடுகிறேனின்ன மொரு சீலை கேளு
பாங்கான விளாம்பிசினுங் கருங்குங்கிலியம்
நாடுகிறேன் சமன் கொண்டு வுருகும் போது
நலமான விளக்கெண்ணை கூடவிட்டு
ஆடுகிறேன் வடிகட்டிக் கலசந்தன்னில்
அடவாகத் தானடைத்துத் துணியில் பூசி
ஆடுகிறேன் ரணங்கள் மேல் போட
ஆறும் சுகமாக அனல் காட்டிபோட்டிடாயே"

விளாம்பிசின், கருங்குங்கிலியம் சம எடை எடுத்து பொடித்து சட்டியிலிட்டு எரிக்க உருகும். உருகும் சமயம் விளக்கெண்ணெய் சேர்த்து வடிகட்டி எடுத்துக் கொள்ள வேண்டும். துணியில் பூசி அனல்காட்டி உருக வைத்து ரணங்கள் மேற்போட புண்கள் ஆறும்.

**பூரச் சீலை**

"போட்டிடவே இன்னமொரு சீலை சொல்வேன்
புகழ்பெரிய மரத்து வெள்ளைப் பலந்தானைந்து
கூட்டிடுவாய் பூரம் விடைவிராகனைந்து
கூட்டியே தானரைத்து பொடியாய்ச்செய்து
மாட்டிடுவாய் தென்னங்கா யெண்ணையாலே
மைந்தனே தானரைத்துத்தண்ணீர்விட்டு
ஆட்டிடுவாய்த் தவளம் போலாகுமட்டும்
அப்பனே புண்மேலே போடப்போமே"

வெள்ளைக்குங்கிலியம் 175 கிராம், பூரம் 21 கிராம். இரண்டையும் பொடிந்து தேங்காய் நெய்விட்டரைத்து நீர்விட்டு கழுவி சீலையில் தடவி புண்களில் போட ஆறும்.

### துரிசுச் சீலை

"வல்லோரே துரிசு துத்தம் வளர்புங்கம் பாலிந்துப்புச்
சொல்லு சம்பிரக்காய் சாற்றிற் துயரற வரைத்துப் பின்னை
நல்ல சீலையிலேயூட்டி நலம் பெறத் திரியதாக்கிப்
புல்லிய வொடுவிலேற்ற பொருதோ ரொடுக்கள் போமே"

- *ப.ரா.சே.*

துரிசு, துத்தம், இந்துப்பு சம எடை எடுத்து பொடித்து புங்கம்பால், பழச்சாறு சேர்த்து நன்கு அரைத்து சீலையில் தடவி உலர்த்தி சிறு சிறு கட்டிகளில் வைக்க மாறும்.

### கறுப்பு சீலை

"மஞ்சள் வசம்பு எருக்கிலையும் மைக்கச் சுட்டுகரியாக்கி
அஞ்சுந் துருசு துத்தமுடன் அரியகௌரி வெள்ளை சங்கு
தஞ்ச அரைத்துத் துணியதனில் தடவியுள் மேற்போட நன்றே
நன்றேவிடத்தின் பிணிதீரும் நடுக்குஞ்சண்டிப் புண் தீரும்
குன்றா திமிரத் தினவுப்புண் கொடிய சிரங்கு ஓடும்போம்
கன்றிப் புடைக்கும் புண்தீரும்கட்டிய சொரியின் புண்களெல்லாம்
இன்றே போவோமென்று சொல்லி யேகுங் கறுப்புச்சீலைக்கே"

- *அ.ர.வை*

மஞ்சள் சுட்டகரி, வசம்பு சுட்டகரி, எருக்கிலை சுட்டகரி, துருசு, துத்தம், கௌரி வெள்ளைபாடாணம் சம எடை எடுத்து தாய்ப்பாலும், கையான தகரைசாறும்விட்டு அரைத்து சீலையில் தடவிபோட நச்சுக்கடிப்புண் ஆறாதழுகும்புண், திமிர்ப்புண், சிரங்கு தீரும்.

## நீர்

எரிச்சல் உடைய புண்களிலும் புரையோடிய புண்களிலும் உட்செலுத்தி குணப்படுத்தக் கூடிய முறையில் கள், சாராயம் போன்றவற்றை ஆதியாகக் கொண்டு திரவ ரூபத்தில் செய்து வைத்துக் கொள்ளப்படுவதே நீர் எனப்படும்.

சிறப்பாக எரிச்சல் உள்ள ரணங்களை ஆற்ற உதவும்.

மேலும் விரணங்களை கழுவுவதற்கு சில நச்சு சரக்குகளை தூய்மையான நீரில் அரைத்து கரைத்து நீர் மயமாய் வைத்துக் கொள்ளுதலும் ஆகும்.

“வர்த்தி பொடியிநீர் நாசிகாபரணமிவை
யொருமூன்று திங்களாகும்”

என்பதில் இம்மருந்தின் ஆயுட்காலம் 3 மாதங்களாகும்.

இம்மருந்து முறைக்கு நூற்களில் சொல்லப்பட்டிருப்பது பெரும்பாலும் ‘பனங்கள்ளே” ஆகும். உரிய சரக்குகளை பனங்கள் விட்டு அரைத்து பனங்கள்ளில் கரைத்து வைத்துக் கொள்வது. சேரும் சரக்குகட்கு ஏற்பவும் ,காணும் நிறத்திற்கு ஏற்பவும் பெயரிடப் பட்டுள்ளது. அகத்தியர் ரணநூலில் இதன் விபரங்களை காணலாம்.

### குளிர்ந்த நீலநீர்

“சொல்லுங் கந்தகந்தலையோடு துருசு கறுத்த குங்கிலியம்
அல்லும் வகைக்குக் கழஞ் சரையாய் சடரும் நீலஞ் சமனாகக்
கல்லுங் கள்ளு விட்டரைத்துக் காசிக்குப்பி தனிலடைத்து
மெல்ல எரிநீர் ரணத்திலிட மெச்சுங் குளிர்ந்த நீலமிதே”

- அ.ர.நூல்

கந்தகம், மண்டை ஓடு, துருசு, கருத்த குங்கிலியம் வகைக்கு 4 கிராம் நீலம் (துத்த பாடாணம்) 16 கிராம் எடுத்து பொடித்து கள்விட்டரைத்து குப்பியிலடைத்து எரியும் புண்களில் இட புண்கள் ஆறும்.

### குளிர்ந்த கரு நீர்

“மஞ்சள் வசம்பு சுட்ட கரி
மதிக்குஞ் சூதம் கெந்தகமும்
அஞ்சும் தினம் நீலமுடன்
அடைவாங் கள்ளு தான்விட்டு
மிஞ்சியரைத்துக் குப்பியிலிட்டு

மிடியாயெரிந்த ரணத்திலிட
கஞ்ச மிகுந்த புண்மாறுங்
கருணைக் குளிர்ந்த கருநீரே"

- அ.ர.நூ

மஞ்சள், வசம்பு, சுட்டகரி, சூதம், கந்தகம், சீனம், (துருசு) நீலம், சமஅளவு எடுத்து அரைத்து பின் கள் வார்த்து 4 சாமம் அரைத்து புட்டியில் பத்திரப்படுத்தவும்.

துணியில் நனைத்து எரிச்சல் உள்ள ரணத்தில் போட ஆறும்.

**மஞ்சள் நீர்**

"வேரிக் கஸ்தூரியு மஞ்சள்
மிருதார் கடகம் நற்கடுக்காய்
சாகுந் துத்தமுடன் வெகுண்ட
தன்மைக் கள்ளு விட்டரைத்து
ஆரக் குப்பி தனிலடைத்து
அரிவா யெரிந்த ரணத்திலிட
ஆரமஞ்சள் தண்ணியதை
யடங்கா நீரும் ரணம் போமே"

- அ.ர.நூ

கஸ்தூரி மஞ்சள், மிருதார் சிங்கி, கடுக்காய்பூ, கடுக்காய் தோல் சூரணம், பால்துத்தம் சம அளவு எடுத்து ஒன்றுபட ஒரு மணி நேரம் அரைத்துப் பின் கள் விட்டு 3 சாமம் அரைத்து புட்டியில் அடைக்கவும். சீலையில் தோய்த்து ரணங்கள், எரிச்சல் உள்ள ரணங்கள் மீது போட ஆறும்.

**வெள்ளை நீர்**

"சங்கு சீனம் வெங்காரம்
சாற்றுந் துத்தம் சாம்பிராணி
வெந்த தலையும் வெண்குக்கில்
விளைந்த கள்ளுவிட்டரைத்துப்
பொங்குங் குப்பி தனிலடைத்துப்
பொரிந்து எரிந்த ரணத்திலிட
இங்குங் குளிர்ந்த விந்நீரை
ஏற்றி ரணத்தை யாற்றிடுமே"

- அ.ர.நூ

சங்கு, படிகாரம், வெங்காரம், துத்தம், சாம்பிராணி, கபால ஓடு, குக்கில்

வகைக்கு ஒரே அளவாக எடுத்து முதலில் சாம்பிராணியை பொடித்து அரைத்து வஸ்திரகாயம் செய்து, கபால ஓட்டையும் பொடித்து வஸ்திரகாயம் செய்து பின் மற்றய சரக்குகளுடன் மேற்படி இரண்டு பொடிகளையும் சேர்த்து ஒரு மணி நேரம் அரைத்து பின் கள் விட்டு 3 மணி நேரம் அரைத்து புட்டியில் அடைக்கவும்.

துணியில் நனைத்து ரணங்கள், எரிச்சல் உள்ளபுண், நெருப்பு, சுட்டபுண் இவற்றில் போட குணமாகும்.

**சிவப்பு நீர்**

"ஆராவமுதே ஆரணங்கே அரிய தண்ணிவகைகேளாய்
நேராய் லிங்க செந்தூரம் நிலைகுங்கிலிய குக்கிலுடன்
சீருங் காவிமண் சீலை திருத்தும் வெள்ளை சமனாக
பேராஞ் சாராயம் விட்டரைத்துப் பெரியகுப்பி தனிலடையே
அரைத்த மருந்து புரையிலிட ஆறுரணமு மெரிவடங்கும்
உடைத்த புரையும் பவுத்திரமும் உளவில் படாகந் தோடகையும்
வெடித்த காதினெழுச்சிகளும் மேலிற்பரவும் வினைதீரும்
மடிக்க சிவப்பு நீர்விடவே மாறும் விரணம் வடிவாமே"

- அ.ர.நா

லிங்கம், இரசசெந்தூரம், வெள்ளை குங்கிலியம், குக்கில், காவிக்கல், வெள்ளைபாடாணம் சம எடை எடுத்து கல்வத்திலிட்டு பொடித்து சாராயம் விட்டு அரைத்து குப்பியில் அடைத்துக்கொள்ள வேண்டும்.

புரையோடிய புண், காது எழுச்சி, கழலை தீரும்.

# வர்த்தி

மருந்து சரக்குகளை உரிய முறைப்படி அரைத்து திரிபோல் உரிய பருமன், நீளத்தில் சுருட்டி நோயுற்ற இடங்களில் செருகி வைப்பது, அன்றியும் சரக்குகளை அரைத்து உரிய திரவப்பொருளில் கரைத்தோ, தைலமாக காய்ச்சியோ துணி அல்லது பஞ்சில் திரியாக செய்து நனைத்து நோயுற்ற இடத்தில் வைப்பது.

புரையோடிய புண், அல்குல் நோய், குறிப்புண், உதாவர்த்தரோகம் எருவாயில் காணும் நோய்கள் ஆகியவற்றை பரிகரிக்க இம்முறை பயனுடையது.

திரிபோல் பயன்படுத்துவதால் நூற்களில் 'திரி" என்றும் பேசப்படும்.

இம்முறையில் மலம் கழிக்க இயலாத நிலையில் ஆசனவாய் வழியாக செலுத்தி மலத்தை வெளி வரச் செய்யவும் இம்முறை உதவும்.

ஆயுட்காலம்: இம்மருந்து முறை மருந்துகள் 3 மாதம் வன்மை உடையவை.

**துரிசு வர்த்தி**

"துரிசு துத்தம் வங்காளம்
துலங்குஞ் சூத மரிதாரம்
அருக்கும் நீலங்கந்தகமு
மட்கும் பச்சை வெட்டுடனே
திரமாயிளநீர் விட்டரைத்துத்
தியங்காச்சீலை தனிலூட்ட
அரங்கப் புரையுஞ் சதைதின்னு
மரிய திரியை யேத்திவிடே"

\- அ.ர.நூ

துரிசு, துத்தம், வங்காளப்பச்சை, இரசம், அரிதாரம், நீலம், கந்தகம், பச்சைவெட்டு சமஅளவெடுத்து, இளநீர் விட்டு இரண்டு சாமம் அரைத்து வெள்ளைத் துணியில் தடவி திரி செய்து புரையோடும் புண்ணில் உட்செலுத்த புண் ஆறும்.

பச்சைவெட்டு — இரசசெந்தூரம்

**ஆமணக்கு வர்த்தி**

"தெரிந்திடாயிழைச் சீலைத்திரித்துடன்
தெரிந்திடாமணக் கெண்ணெயிலூட்டியே
ஊட்டி யபானைத்துள் நீர்த்துவாரமும்
காட்டிடாயே கடிகையீரைந்து

போட்டிடாய்ச் சலம்போக்கு மலத்தையும்
ஆட்டிடாய் வாயு வஸ்துதள்ளோடுமே”

திரிதிரித்து ஆமணக்கு நெய்யில் தோய்த்து ஆசனத்தில் 10 நிமிடங்கள் வைக்க மலம்போக்கும். நீர் போகும் குடலில் தங்கிய வாயு நீங்கும்.

**அத்திப் பட்டை வர்த்தி**

எள்ளை அதிமதுரப்பாலில் இரவு முழுவதும் ஊறவைத்து பகலில் உலர்த்த வேண்டும். இவ்விதம் 6 நாட்கள் செய்து அதிலிருந்து நெய்யை எடுத்து அத்துடன் அத்திப்பட்டை குடிநீர் கலந்து காய்ச்சி பக்குவத்தில் வடித்துக் கொள்ள வேண்டும். இதில் வர்த்தியை நனைத்து பெண்குறியுள் வைக்க பெண் குறிநோய்கள் நீங்கும்.

- அ.சா.

**அன்னபேதி வர்த்தி**

அன்னபேதி, திரிபலை, உவர்மண், மாங்கொட்டை பருப்பு, காட்டாத்திப்பூ, சம எடை எடுத்து பொடித்து தேன்கலந்து வர்த்தியில் தோய்த்து பெண் குறியுள் வைக்க பெண்குறியில் காணும் பிசுபிசுப்பு நீங்கும்.

- அ.சா.

**இந்துப்பு வர்த்தி**

இந்துப்பு, கிரந்திதகரம், கோட்டம், சிறுவழுதுணைவேர், தேவதாருக்கட்டை இவற்றை சமஅளவு எடுத்து சூரணித்து கற்கமாக அரைத்து கற்கத்தின் எடைக்கு 4 பங்கு எள் நெய்யும், எள்நெய்யின் அளவிற்கு 4 பங்கு நீரும் சேர்த்து காய்ச்சி அத்தைலத்தில் வர்த்தியை தோய்த்து பெண் குறியுள் வைக்க அல்குல் சூலை தீரும்.

- அ.சா.

# சுட்டிகை

**இயல்**

*இரட்சையக் கினியினாலு மெரிந்திடுகாரத்தாலும்*
*உரைத்திடு தான னோக்கி யுறுநோயிற் செய்வதாகும்*
*பெருத்த நோய் நிலைமை கண்டும் பேணியதானங்கண்டும்*
*"கருத்துடன் தீங்குறாமற் செய்யெனக் கழறும் வேதம்"*

*- ப.ரா.சே*

இது சுடுகை எனவும், இரட்சை எனவும் நூற்களில் பேசப்படும். பொட்டுச் சுடுதல் எனவும் வழங்கப்படும்.நோய்களில்,அவ்வவற்றிற்கு உரிய இடங்களை அறிந்து, வேறு தீங்குகள் ஏற்படாதுசுட்டிகை இடவேண்டும்.

**சுட்டிகை செய்யும் முறை:**

*"நாடிய மருந்தினாலே நலம் பெறத் தீராவிட்டால்*
*ஏடவிழ் குழலினாளேயியம்பிய முறைகடேர்ந்தே*
*பாடுறாக் கனலின் மீது பழுக்க வைத் திரட்சை செய்யும்"*

என்பதில் முறைப்படி உரிய கருவியை நெருப்பில் காய்ச்சி நோய்க்கேற்ப கூறப்பட்ட இடத்தில் வைத்து எடுப்பது ஆகும்.

மேலும்,

"செய்யுமிச் சுட்டிகையஞ்சு — விதஞ்
..........................................................................
லோகமரமண் கால் காந்தியிது
நோயையடு முபசாந்தி
.........................................................................."

உலோகம், மரம், மண், கால், காந்தி என சுட்டிகை ஐந்து வகைப்படும் என தேரன்தரு எனும் நூல் கூறும்.

உலோகம் என்பதில் அயம் முதல் பலவித உலோகங்களினால் செய்யப்பட்ட ஊசி போன்ற சிறுகம்பி. இதில் நோய்க்கு ஏற்றவாறு சுட்டிகை இட பல்வேறு முத்திரை அமைப்புகளை உடையது.

"அய முதலாகிய லோகம் - பண்ண
லாகாது மிஞ்சிய வேகம்
ஆயினு மிஞ்சிய போது - செய்ய
லாகுந் தடுக்க வெண்ணாது"

என்பதில் அயத்தினால் செய்யப்பட்ட உலோகம் மிஞ்சிய சூட்டை கொள்வதாக இருப்பதால் கூடாது எனினும் வன்மை பொருந்திய நோயில் பயன்படுத்திக் கொள்ளலாம் என்பதில் கொடிய நோய்களில் உலோக சுட்டிகையே மேற்கொள்ள வேண்டும் என்பதாம்.

**சுட்டிகைக்குரிய கருவிகள்**

*"மாதவர் கணித்துச் சொன்ன வச்சிரக்காலே யொன்றாகும்*
*ஓதிய வுடக்கைகாலே யொன்று முக்கவர்கான் மூன்று*
*பேதமி லிருகவர்கால் பிறைக்காலுங் கலப்பைக் காலும்*
*ஏதமில் சங்கிலிக்காலிசைந்த புள்ளடிக் காலொன்றே*
*ஒன்றிய வாளி பொட்டுமுற்ற பொற்றூண்டிலோடு*
*கன்றிடுங் கயிறு போன்ற கருவி யிங்கிவையே யன்றி"*

*- ப. ரா.சே.*

*வச்சிரக்கால்*
*உடுக்கைக்கால்*
*முக்கவர்கான்*
*கலப்பைக்கால்*
*சங்கிலிக்கால்*
*புள்ளடிக்கால்*

ஆளிப்பொட்டு (மோதிரம் போல் நடுவில் இடைவெளியுள்ள பொட்டுக் கருவி) பொற்தூண்டில் என்பனவாம்.

**மரச்சுட்டிகை**

*"மரச்சுட்டிகை தனைநம்பு உருண்*
*மையாகிய மஞ்சட் கொம்பு*
*சூடதனுக் குளதாக்கியந்தச்*
*சூட்டதனைச் சில போக்கி"*

*- தே.தரு.*

*என்பதில் மஞ்சளைச் சுட்டு நோயுற்ற இடத்தில் வைப்பது ஆகும்.*

**மண் சுட்டிகை:**

*"மண் சுட்டிகை யெனல் குடுவை எண்ணெ*
*வாழ்ந்ததாகக் கொண்டது வடுவை*
*அங்கிச்சூட்டை யதற்கேற்றிக்கலை*
*யாற் பற்றிக் கொண்டனல் மாற்றிப்*

பக்குவமாயதை நொச்சி மிசைப்
பையப் பைய வைப்பாய்”

- தே.தரு

எண்ணெய் குடுவையைச் சூடுண்டாக்கி நோயுற்ற இடத்தில் நொச்சியிலையை பரப்பி அதன் மீது வைப்பது ஆகும்.

**கால்சுட்டிகை:**

காலெனுஞ் சுட்டிகையங்கி — யெரி
காங்கை வளிச் சுவாலை தங்கி
வீசுந்தீ காய்தலெங் கெங்கும் — பட
மேலிட்ட நோயெலாஞ் செங்கும்
வேர்வை புறப்பட்ட போதே — பிணி
விட்ட தென்றே யறிமீதே”

வெப்ப மிகுந்த காற்றை உடலில் தாக்கும்படிச் செய்ய இதனால் உடலில் வியர்வை பெருகி நோய் நீங்கும்.

**காந்தி சுட்டிகை:**

“காந்தியெனுங் கதிர்வெய்யில் வன்னி
கடுக்குமது பட மெய்யில்
வாதத்துடன்சந்நியடர்ந்து தொடர்
வாதனைபோய்விடு முடைந்து
உத்த மாங்க மொன்று தள்ளி மற்ற
உறுப்பெலாங் காயலாமுள்ளி
காலையிளங்கதிர் தீது உச்சிக்
காலைக் கதிர் சாயும் போது”

வெய்யிலிற் காய்தலே காந்திச் சுட்டிகை என்பதாகும். இது வாதத்துடனாகிய சந்நிநோய்களுக்குச் சிறப்பானது. தலையைத் தவிர மற்ற உறுப்புகளை வெயிலில் காய விடலாம். காலை வெய்யில் தவிர்த்து உச்சி வெய்யில்,மாலை வெய்யில் உத்தமம்.

**சுட்டிகை இடத்தக்க இடங்கள்**

“உச்சிப்புருவம் வெந்கண்டம் — நுத
லோட்ட முரங் கன்னந்துண்டம்
வாகுவிரலத ரங்கை — யிடை
வாமம் பரட்டிரு கொங்கை
ஆகும்..........................”

- தே.தரு.

உச்சி, புருவம், முதுகு, நெஞ்சு, கன்னம், புறங்கால், அதரம், கொங்கை ஆகியன சுட்டிகை இடத்தக்க இடங்கள்ஆகும்.

**சுட்டிகை இடத்தகாத இடங்கள்:**

"ஆகாத விடங்கள்சந்துமவயவ முனைகண் மற்றும்
தோகாய் முன்னுரைத்த வன்மத்தானங்கள் -`தொண்டைநாபி
தேகாருங் கோசபீசந்திரு விழி யுச்சிமேலும்
ஆகாத நகக் கண்ணாதி யகற்றி மற்றிடங்கணாடே"

*- ப.ரா.சே*

சந்துகள், உறுப்புகளின் முனைபாகங்கள், கண், வர்மத்தானங்கள், குறி, உச்சி, நகக்கண் இவற்றில் சுட்டிகை இடக்கூடாது.

**சுட்டிகை செய்ய தகாதோர்:**

"சுர மதிசாரம் பித்தந் துர்ப்பலம் பாண்டு சோகை
வருமிருதயத்து ரோகம் மருத்திடுமிரத்த பித்தம்
சிரம் விழி தமினோயாதி செப்பிய ரோகத்தோர்க்கும்
உருவுறமூத்த பேர்க்குஞ் சிறுவர்க்கு மிரட்சையாகா"

*- ப.ரா.சே*

சுரம், அதிசாரம், பித்தம், பாண்டு, சோபை, துர்பலம், இருதய நோய், இரத்த பித்தம் சிரநோய், விழிநோய் இவற்றால் பாதிக்கப்பட்டோரும், வயதானவர், சிறுவர் ஆகியோருக்கும் சுட்டிகை செய்யக் கூடாது.

கருங்காலி, இலந்தை விறகுகளின் கரியில் நெருப்பை மூட்டி உரிய கருவியை சூடுண்டாக்க வேண்டும்.

சுட்டிகை இட்டபின் புண் ஆறுவதற்குரிய தைலம், குடிநீர் பூச்சு மருந்துகள் அறிந்து செய்தல் வேண்டும்.

கார சிகிச்சையைக் காட்டிலும், சுட்டிகை மேன்மை உடையது. காரம், அறுவை இவற்றால் நீங்கமுடியாத நோய்கள் சுட்டிகையால் நீங்கும். மேலும் அந்நோய் வராது.

**சுட்டிகையின் சிறப்பு**

"திட்டிகை என வுடல் தேக நோய்களை
நெட்டிகை மைய ரென நீங்கவே யென
லட்டிகை யெனப்பிணி யணிந்துவாகச் செய்
சுட்டிகைச்சிகிச்சையைச் சொல்லுமாவரோ"

*- தே.வெ.*

"சுட்டிகையின் குணமெடுத்து நன்றாய்ச்
சொல்லுகிறேன் முறை தொடுத்துக்
கெட்ட பதார்த்தத்தை நெருப்பில் வாட்டக்
கண்ணிய மாகுமே பொருப்பில்
இப்படிப் போலே யிவ்வுடலை - வாட்டி
யப்பா லறி பிணிவிடலை
நல்ல சிட்டை யிதுபோல - இல்லை
ஞாலத்திலே யினிமேலே"

- தேரன்தரு

பலவகை நோய்களுக்கு உரிய சுட்டிகை முறைகள் பரராசசேகரம்,தேரன்தரு ஆகிய நூற்களில் கூறப்பட்டுள்ளது.

# சலாகை

இது கோல், குச்சி என்றும் பெயர்பெறும். நீண்ட கம்பி. இது பலவகை உலோகங்களினால் செய்யப்படும். புண்களில் ஆழத்தை அறியவும், புண் புரைகளின் உட் செலுத்தி மருந்தையிடவும், மூக்கு, கண் நோய்கட்கான மருந்துகள் இடவும், சுத்தப்படுத்தவும் தகுந்தவாறு பலவித நீள அகலங்களில் வெவ்வேறு முக அமைப்புகளைக் கொண்டது.

**வகைகள்**

*1. தண்டுச்சலாகை : தென்னைஈர்க்கு கனத்தில் 9 அங்குல நீளத்திலும், 2.6 கிராம் எடையுடனும் கம்பிபோல் அமைக்கப்பட்டது.*

*2. ஈயச்சலாகை: 3 அங்குல நீளத்திலும் 18 கிராம் கனமுள்ளது.*

*3. வெள்ளிச்சலாகை: புரை யோடிய புண்ணின் ஆழத்தைஅறிவதற்கு 4 முதல் 5 அங்குல நீளத்திலும் 48 கிராம் எடையுள்ளதுமாக அமையப்பட்டது.*

*4. முச்சிலாகை: 7 அங்குல நீளத்திலும், 12 கிராம் எடையும் மூன்று தகட்டுகாளாய் அமையப் பெற்றது. இது கண்ணோய்களில் காசத்தை நீக்க உதவுகிறது.*

*5. 8 மற்றும் 9 அங்குல நீளத்தில் முனையில் கடலை பருப்பு போன்ற அமைப்பை உடையவை. காது, மூக்கு இவற்றினுள் உள்ள குற்றங்களை நீக்க பயன்படுவது.*

*6. ஆசனத்துவாரத்தில் உள்ள புண்களைத் துடைக்க 10 அங்குலம், 12 அங்குலம் சலாகைகள் பயன்படுகின்றன.*

*7. சர்வி சலாகை: வேள்வி நெருப்பில் நெய் ஊற்றுவதற்குப் பயன்படும் சிறு அகப்பை போன்ற அமைப்பை உடைய சலாகை காரமருந்துகளை இடவும், காதுகளில் உள்ள புண்களை சுத்தப் படுத்தவும் உதவும்.*

*8. சங்கு சலாகை: கொக்கி போன்றமுனையுட வடிவத்தில் கூர்மையற்று, 6 அல்லது 12 அங்குலத்தில் நீளம் உடைய சலாகை புண்களை சுரண்டி சுத்தப்படுத்த உதவும்.*

*9. அஞ்சனக்கோல்: 5 அங்குல நீளத்தில் மத்தியில் மேடம் அமைத்து இரு கடை புறத்திலும் புட்ப மொக்கைப் போல் திரண்டும், மெலிந்தும் இருப்பது.*

*10. காயக்கோல்: 7 அங்குல நீளம், 2 அங்குல பருமன் ,10 கிராம் எடையுள்ளது.*

*11. இருபுறமும் முனைகளுடன் முன்முனை குருக்கத்தி மலரின் மொட்டுபோல் செம்பினால் செய்யப்பட்டது. இது கண்ணோய்களை பரிகரிக்க உதவும்.*

# பசை

மெழுகை ஆதியாகக் கொண்டு செய்யப்படும் மருந்து முறை. பிசுபிசுப்புடன் இருப்பதால் பசை என்பதாம். நூற்களில் "லேபம்" என்றும் பேசப்படும்.

மெழுகை உரிய நெய்யுடன் சேர்த்து உருக்கிச் சரக்குகளை பொடித்துக் கலந்து ஆறவிட்டெடுப்பது. இதற்கு தேன் மெழுகே பிரதானச் சரக்காகும்.

ஆயுட்காலம்: ஓராண்டு.

குறிப்பு: வழக்கில் அநேக வகை பசை முறைகள் உண்டு வழக்கில் தவறாக களிம்பு என்றே குறிப்பிட்டு வருகிறது (உ.ம்.) சிரங்குகளிம்பு, மேகவிரணகளிம்பு, போன்றவை பசைக்கு சொல்லப்பட்ட செய்முறையில் அடங்கினாலும் வழக்கில் களிம்பு என்றே பேசப்படுகிறது.

ஆனால் செய்முறை, ஆயுட்காலம், மருத்துவகுணம் ஆகியவற்றில் இவ்விருமருந்து முறைகளும் வேறுபட்டவை. எனவே மருந்திற்கு உரிய சரியான பெயர்களை வழங்கினால் தான் உரிய நோய்கட்கு மருந்துகளை வழங்கமுடியும். எனவே நடைமுறை தவறுகளை தவிர்த்து வாசிக்கவேண்டும்.

**சிரங்குப்பசை**

| | | |
|---|---|---|
| இரசசெந்தூரம் | — | 2 கிராம் |
| கந்தகம் | — | 4 கிராம் |
| மிருதார்சிங்கி | — | 2 கிராம் |
| வெள்ளைமெழுகு | — | 45 கிராம் |
| தேன்மெழுகு | — | 90கிராம் |
| தேங்காய்நெய் | — | 165 மி.லி |
| நீரடி முத்துநெய் | — | 75 மி.லி |
| வேப்பநெய் | — | 77 மி.லி |

**செய்முறை:**

நெய்வகைகளை ஒன்றாகக் கலந்து அடுப்பேற்றி சூடாக்கி அதில் மெழுகை நறுக்கிச் சேர்த்து, உருகியதும் வடிகட்டி, அதில்பாடாண சரக்குகளைப் பொடித்துக்கலந்து வைத்துக்கொள்ள வேண்டும்.

**பயன்:**

வெளிப்பிரயோகமாக பயன்படுத்த சிரங்கு நீங்கும்.

## தலைவலிப்பசை

| | | |
|---|---|---|
| பூங்கற்பூரம் | — | 10 பங்கு |
| ஓம உப்பு | — | 5 பங்கு |
| புதினா உப்பு | — | 5 பங்கு |
| வெள்ளை மெழுகு | — | 20 பங்கு |
| தேங்காய்நெய் | — | 100 பங்கு |

தேங்காய் நெய்யை சூடாக்கி மெழுகைநறுக்கிச்சேர்த்து உருகியதும் வடிகட்டி அதில் ஓமஉப்பு, புதினாஉப்பு, கற்பூரம் இவற்றை பொடித்து சேர்த்துக்கலந்து வைத்துக் கொள்ளவேண்டும்.

வெளிப்பிரயோகமாக பிரயோகிக்க தலைவலி ,நீர்கோவை தீரும்.

### இலிங்கப்பசை

*"நாலுகளஞ்சு சாதிலிங்கம் நல்ல மெழுகு மிரண்டு பலம்*
*ஏலுந்தேங்கா யெண்ணெய் களி லிரைய வுருக்கி வடித்ததற்பின்*
*சாலவரைத்துச் சேர்வைதனை தடித்த பிளவைப் புண்ணிலிட*
*நீல விழியாய் பொருக்கெழுந்து நில்லாதுலர்ந்து போய்விடுமே"*

*- ப.ரா.சே.*

| | | |
|---|---|---|
| இலிங்கம் | — | 24 கிராம் |
| தேன் மெழுகு | — | 70 கிராம் |
| தேங்காய் நெய் | — | 450 மி.லி. |

தேங்காய் நெய்யை காய்ச்சி மெழுகு சேர்த்து உருக்கி, உருகியபின்வடிகட்டி இலிங்கத்தைப் பொடித்து சேர்த்து ஆறவிட்டெடுக்க வேண்டும்.

வெளிப் பிரயோகமாய் பயன்படுத்தப் பிளவை, புண்கள் தீரும்.

ஆயுட்காலம் : 1 ஆண்டு.

### சந்திரகலாலேபம்

| | | |
|---|---|---|
| கற்பூரம் | — | 5 கிராம் |
| தேன்மெழுகு | — | 5 கிராம் |
| வெள்ளை மிளகு | — | 2.5 கிராம் |
| தேங்காய் நெய் | — | 20 மி.லி. |

*- கு.தா.சீ.வ*

மிளகை பொடித்து வஸ்திரகாயம் செய்து கொள்ள வேண்டும். மெழுகை தேங்காயுடன் கலந்து உருக்கி வடிகட்டி அத்துடன் மிளகுபொடி, கற்பூரம் கலந்து எடுத்துக் கொள்ள வேண்டும்.

வெளிப்பிரயோகமாக பயன்படுத்த தலைநோய், உடல் வலி, நீர்க்கோவை தீரும்.

### அரிதார பசை

"தேங்காயெண்ணெய் காற்படியிற்றேனின் மெழுகு மிரண்டு பலம்
நீங்கா யெண்ணய யதின்மெழுகை நிதானமா முருக்கி வடித்ததன்பின்
பாங்காய்ப் பொன்னரிதாரம் பகர்நாற்கழஞ்சு விட்டரைத்துத்
தீங்கார் பிளவைப் புண்ணிலிடத் தீர்ந்து புண்ணும் பொருக்காமே"

- ப. ரா. சே.

| | | |
|---|---|---|
| தேங்காய் நெய் | — | 450 மி.லி. |
| தேன் மெழுகு | — | 70 கிராம் |
| தாளகம் | — | 24 கிராம். |

தேங்காய் நெய்யை காய்ச்சி அதில் தேன் மெழுகை சேர்த்து மெழுகு உருகியதும் வடிகட்டி அத்துடன் தாளகத்தை பொடித்து சேர்த்து ஆறவிட்டெடுக்க வேண்டும்.

வெளிபிரயோகமாக பயன்படுத்த புண்கள் தீரும்.

### வெள்ளைப்பாடாண பசை

| | | |
|---|---|---|
| வெள்ளைப்பாடாணம் | — | 4.2 கிராம் |
| தேன் மெழுகு | — | 35 கிராம் |
| தேங்காய் நெய் | — | 17.5 மி.லி. |

தேன் மெழுகை உருக்கி உருக்கு முகத்தில் தேங்காய் நெய்யை சேர்த்து சற்று இளஞ் சூடாயிருக்கும் போது பாடாணத்தை பொடித்து தூவி கிண்டி எடுத்துக் கொள்ள வேண்டும்.

வெற்றிலை அல்லது துணியில் தடவி அனலில் காட்டி போட கட்டிகள் பழுத்து உடையும்.

### மேகவிரண பசை

| | | |
|---|---|---|
| இரசம் | — | 17.5 கிராம் |
| லிங்கம் | — | 17.5 கிராம் |
| பூரம் | — | 17.5 கிராம் |
| வீரம் | — | 17.5 கிராம் |

| | | |
|---|---|---|
| பால்துத்தம் | — | 17.5 கிராம் |
| மயில்துத்தம் | — | 17.5 கிராம் |
| மிருதார்சிங்கி | — | 17.5 கிராம் |
| நீரடிமுத்து | — | 17.5 கிராம் |
| கார்போகரிசி | — | 17.5 கிராம் |
| கசகசா | — | 17.5 கிராம் |
| தேன்மெழுகு | — | 17.5 கிராம் |
| தேங்காய் நெய் | — | 175 மி.லி. |

தாது சரக்குகளை பொடித்து வைத்துக்கொள்ள வேண்டும். தேங்காய் நெய்யை காய்ச்சி அதில் மெழுகை சேர்த்து உருகியதும் வடிகட்டி சூடாறுமுன் பொடியைத் தூவிகிண்டி ஆறவிட்டு எடுத்துக் கொள்ள வேண்டும்.

தடிப்புள்ள இரணங்கட்கு தடவி வர தடிப்புக் கரைந்து ஆறும்.

**இரச செந்தூர பசை**

| | | |
|---|---|---|
| இரச செந்தூரம் | — | 2 கிராம் |
| மிருதார்சிங்கி | — | 2 கிராம் |
| கந்தகம் | — | 4 கிராம் |
| தேங்காய்நெய் | — | 200 மி.லி. |
| நீரடிமுத்து நெய் | — | 100 மி.லி. |
| வேப்ப நெய் | — | 100 மி.லி. |
| தேன் மெழுகு | — | 150 கிராம். |

நெய் வகைகள் மூன்றையும் ஒன்றாகக் கலந்து காய்ச்சி தேன்மெழுகை நறுக்கிச் சேர்த்து உருகியதும், வடிகட்டி மூன்று சரக்குகளையும் பொடித்துச் சேர்த்துக் கிண்டி ஆறவிட்டெடுக்க வேண்டும்.

இதனை வெளிப் பிரயோகமாக பயன்படுத்த சிரங்கு, புண் தீரும்.

**குக்கில் பசை**

"தானென்ற தேங்கா யெண்ணெய்
தன்னிலே மெழுகு போட்டு
ஊனென்ற குக்கிலோடே
ஊரெரு முட்டைச்சாம்பல்
வானென்ற மண்டையோடு
மாசிக்காய் குந்திரிக்கம்
நானென்ற தெல்லாஞ் சேர்த்து

நலமுடன் பொடித்துப் போடே
போட்டுமே காய்ச்சிக் கொண்டு
புண்ணதில் விட்டுக் கட்ட
தோட்டமாய்ச் சிலுப்பியந்த
சேர்முலா மெடுத்து வைத்து
ஈட்டமாய் தராசு தன்னில்
இலங்கவே தடவிப் போட
கூட்டமாய் புண்களெல்லாம்
நிலைகுலைந்தேகும் பாரே"

- அ.ர.நா

தேங்காய் நெய்யில் மெழுகு சேர்த்து உருகியதும், குக்கில், எருச்சாம்பல், மண்டையோடு, மாசிக்காய், குந்திரிக்கம் பொடித்துப் போட்டு கடைந்து ஈஸ்வரமூலி இலையில் தடவிப்போட புண்கள் தீரும்.

# களி

சரக்குகளை அரைத்து அரிசி மாவுடன்சேர்த்து களி போல் கிண்டி நோயுள்ளஇடங்களில் பூசிக் கொள்வது.

**கருவேல் களி**

"கருவேலிலைகடுக்காய் பீங்கான் கனத்த புழுங்கலரிசியையதை
மருவுங்காடி தனிலரைத்து மறுகக் காய்ச்சிப் பிறைவளையத்தால்
அருவுங் கண்ணோய் நீர்சிலம்பும் சுடர் வலிக்குந் தலைதோவும்
பெருவிப் போகும் நிச்சயமாய் வேறு மருந்து வேண்டாவே"

கருவேல் இலை, கடுக்காய், பீங்கான் (படிகக்கல்) இவற்றை புழுங்கலரிசியுடன் காடிவிட்டு அரைத்து களி போற் கிண்டி கண்ணை சுற்றி போட கண்ணோய் ,கண் சிவப்பு, தலைவலி தீரும்.

# பொடி

வெளி பிரயோகமாக பயன்படுத்தும் பொருட்டு சரக்குகளை இடித்து சலித்து, நுண்துகள்களாக எடுத்து வைத்துக் கொள்வது.

பெரும்பாலும் நீர், சீழ் வழிகின்ற புண்களில் தூவி பயன்படுத்தும் முறை.

ஆயுட்காலம்: 3 மாதங்கள்

**கடுக்காய் பொடி**

"ஆறாதழுகுஞ் சிலந்திக்கும் ஆன கடுக்காய்தான் வெதுப்பிக்
கூறாய் கொட்டைதனைப் போக்கிக்குறித்துப் பொடித்துப் புண்ணிலிட
ஆறாப்புண்ணும் ஆறிவிடும் அப்பொடிவெண்ணைய் தனில் போட்டுத்
தேறாப் புண்ணுக்கிட்டு வரச்சிலந்திப்புண்கள் தீர்த்து விடுமே"

- அ.ர.நா.

கடுக்காயை வறுத்து கொட்டையை நீக்கி பொடித்து அப்பொடியை புண்களில் தூவிவ ஆறாத புண்கள் ஆறும். இப் பொடியையே வெண்ணெய் தனில் குழப்பி பயன்படுத்த சிலந்திப் புண்கள் தீரும்.

**படிகாரப்பொடி**

"அன்பான சீனியுடன் காசுக்கட்டி
நேரிலே வகைக்கிரண்டு களஞ்சி வாங்கு
நேராகக் குழியம்மி தன்னிலிட்டு
பாரிலே பொடிசெய்து சிமிழில் வைத்து
படுகாயத்திற் போட்டு பொதித்து கட்டே
தேறியே குழிப்புண்ணும் ஆறிப்போகும்
சிறப்பாக யாகோபு திறஞ் சொன்னாரே"

- யா.வை.சி. பாடல் 50

சீனாக்காரம், காய்ச்சுக்கட்டி சம எடை எடுத்து நன்கு பொடித்து, காயம், குழிப்புண், இவைகளில் போட்டுக் கட்டி வர ஆறும்.

**ஆவாரை வித்துப்பொடி**

"சேராவரையின் விதைதன்னைத்
தீய்க்கக் கருக்கித் தூள் செய்து

பேராத்தின் வேர் தனைக்கூட்டிப்
பிழையாதரைத்துச் சுவற்கூட்டின்
சீராய் பிளவைப் புண்ணதில்நெய்
சிறக்கப் பூசித் தூள் தூவில்
தூராப்புண்ணுஞ் சிவந்துலர்ந்து
சுகமாமென்றே மறைகூறும்"

- ப.ரா.சே.

சுவர்க்கூடு — முதுகு

ஆவாரை வித்தை சட்டியிலிட்டுக் கருக்கி ஆத்திவேர் சம அளவு எடுத்து இரண்டையும் சூரணம் செய்து சேர்த்து எடுத்துக் கொள்ள வேண்டும்.

முதுகில் வரும் பிளவை, புண்களில் நெய்யை பூசி மேற்படி பொடியைத் தூவிவர ஆறும்.

**அயப்பொடி**

"பொய்யாதய்யா புகலுங் குரு மொழி
அய்யா மாந்தர்க்கறைவன் பொடியொன்று
செய்யாரா வடம் சிறந்த பீங்கான் தன்னில்
கையதான்றி கடுக்காயுந் தூக்கிடே
தூக்கு மாசக்காய் துடி பலம்
நீக்கும் கார நிகழும் காசுக்கட்டி
பாக்கும் பீங்கான்பழ ரசந்தான் பிழி
காக்குங் கல்வங் கடியவே போட்டிடே
போட்டுமே யரை பொருந்த பூஷிதத்தை
ஆட்டுமே சாமம் அறுபது சென்றவுடன்
கூட்டுமே யெடு குறித்துக் கணேசனை
நீட்டுமே கல்வம் நிழலிலுலர்த்திடே
உலர்த்திடும் பொடியுள்ள பல் ரோகத்தை
கலர்த்திடும் பொடி காலையில் தேய்த்திட
பெலர்த்திடும் தந்தம் பெரிய பல் ரோகங்களும்
அலர்ந்திடாமல லைந்து தானோடுமே"

- தே.வை.

அயப்பொடி, தான்றிக்காய்தோல், கடுக்காய்த் தோல், மாசிக்காய், ஏலம், வெண்காரம், காய்ச்சுக்கட்டி வகைக்கு 1 பலம் எடுத்து பீங்கான் பாத்திரத்தில் போட்டு பழச்சாறு பிழிந்து ஊறவைக்க வேண்டும். பின் கல்வத்திலிட்டு பழச்சாறு விட்டு 5 நாட்கள்

அரைத்துப் பின் கல்வத்தோடேயே நிழலில் உலர்த்தி எடுத்துக் கொள்ள வேண்டும். காலையில் இப்பொடியை பற்களில் தேய்க்க பல் ரோகம் தீரும்.

**உச்சிப்பிளவை பொடி**

"வெள்ளாட்டுப் பாலும் வெதுப்படக்கிச் சாறுநிறை
கொள்ளவதிலே கறுத்த கொள்ளையிட்டக் — கொள்ளளவு
காட்டாமணக்கின் வேர் கானப் பொடி செய்து
போட்டாலுச்சிப் பிளவை போம்"

- தே. வெ.

வெள்ளாட்டுப் பால், வெதுப்படக்கிச் சாறு சம அளவு எடுத்து அதில், கறுத்த கொள்ளை சேர்த்து ஊறவைத்து உலர்த்தி எடுத்துக் கொள்ள வேண்டும்.

உலர்ந்த கொள்ளின் அளவு காட்டாமணக்கு வேரை நன்கு உலர்த்தி இரண்டையும் பொடித்து சேர்த்துப் பத்திரப் படுத்திக் கொள்ள வேண்டும்.

வெளிப்பிரயோகமாக தூவிவர உச்சிப்பிளவை தீரும்.

**கற்றாழை பொடி**

"காடி தனிலவித்துக் கற்றாழையூன் வாங்கி
வாடி வறுத்ததுவும் வாணுதலீர் — ஓடுஞ்சீழ்
கண்ணோவுந் தீரும் கடுகப் பொடியிடித்து
புண்ணோவுந் தீரும் புலர்ந்து"

- தே.வெ.

கற்றாழை சோற்றை காடியிலிட்டு அவித்து பின் உலர்த்தி வறுத்து இடித்துப் பொடித்துக் கொள்ள வேண்டும். புண்களில் தூவி வர புண்கள் உலர்ந்து விடும்.

**சேங்கொட்டைப் பொடி**

"அத்திப்பாலா லம்பா லான சேங்கொட்டையில்
ஒத்திப் பழுத்த புண்ணுள்ளிடவே — செத்துப்
புழுவிழுந்து புண்ணாறும் பூதலத்திற்கெல்லம்
எழுதியிடு மானேயிதை"

அத்திப்பால், ஆலம்பால் சம அளவு எடுத்து சேங்கொட்டையை அதில் ஊறவைத்து பின் உலர்த்தி பொடிசெய்து தூவிவர கொடிய ரணங்கள் தீரும்.

## முறிச்சல்

கை, கால் முதலிய உறுப்புகளில் என்பு பிறழ்ந்தோ,உடைந்தோ இருந்தால் அதை சரியான நிலையில் பொறுத்தி குணப்படுத்தும் மருத்துவமுறை.

இம்முறைகளுக்கு கட்டு முறைகள் மிகவும் அவசியமானது. குருவின் மூலமாகக் கற்றுத் தெளியும் இம்முறைக்கான குறிப்புகள் இதுகாறும் நூற்களில் காணக் கிடைக்கவில்லை.

## கீறல்

கட்டி, பரு, நீர்ப்பிளவை போன்றவற்றில் தங்கியுள்ள நீர், சீழ், இரத்தம் முதலியவற்றை நீக்கி அதனால் ஏற்படும் வருத்தத்தை நீக்குவதற்காகச் செய்யும் முறை:

கீறல் சிகிச்சை செய்ய வேண்டிய எல்லா இடங்களிலும், எப்பொழுதும், மிகநீளமற்றதும், பருமன் அல்லாததும், வளையாததும், உடையாததும், மர்ம ஸ்தானங்களில் காயம் ஏற்படுத்தாததுமான ஆயுதங்களை பயன் படுத்த வேண்டும்.

கீறப்பட வேண்டிய இடங்கட்கு தக்கவாறு கீற்றுக்குரிய கருவிகள் பலவகையாக அமைத்துக் கொள்ளப்பட வேண்டும்.

பருமனான கைப்பிடியும், பசுவின் பல்லைப் போல உருவமும் அரை அங்குலம் கருமுனை உடையதுமான கருவிகளை, எலும்புகள் மேலுள்ள பகுதியில் கீற அமைக்க வேண்டும்.

மாமிசம் உள்ள இடங்களில் கீறவும், தொடைகளின் சந்துகளில் ஏற்படும் கட்டிகளை கீறி பிளக்கவும், பெருங்கட்டி, நீர்ப்பிலிகை இவற்றை கீறி பிளக்கவும் 1 ½ அங்குல கருமுனை உடையதாய் கருவி அமைத்துக் கொள்ள வேண்டும்.

4 அங்குல நீளம், அரை அங்குல முகவட்டம், ½ அங்குல மட்டுமே உள்ள செல்லக் கூடியது காதில் உண்டாகும் கட்டிகளை கீற உதவுவது.

அன்றியும் முக்குற்றநோய்களில் உரிய சிகிச்சை முறையாகிய குடோரி என்பதும் கீறல் என்பதில் அடங்கும். இம்முறையில் நோயாளியின் உச்சந்தலையில் கீறி மருந்தைவைத்து கட்டும் முறை. இதற்கு “குடோரி கருவியே” பயன்படுத்த வேண்டும். அறுவை எனும் தலைப்பின் கீழ் குடோரி கருவி முறை கூறப்பட்டுள்ளது.

### குடோரி மருந்து

"நாவியிரசஞ் சாதிலிங்க நல்ல மனோசிலையரிதாரம்
மேவிய வாரிந்துரிசு துத்தம் வெண்பாஷாணங் கௌரி தொட்டி
தாவிய கந்தகமாமிவைகள் சமனிறைத்திடுமேனிச் சாற்றினிலே
பாவியரைத்து நிழலிலுலர்த்திப் பண்ணிவை கொம்புச்சிமிழ்தனிலே
........................வெந்நோய்க்குமியல் குப்பை மேனியிலைச் சாற்றில்
உவ்விதமாகக் குடோரி செய்தேயுச்சி நின்றெல்லா விடங்களிலும்
அவ்வவ் விடங்களிற் கட்டியிட லகன்றேயோடு மனைவருக்கும்
செவ்விதினாகச் செய்திடுகிற் தீர்ந்திடு நோய்க் கினுமுண்டோ"

- ப.ரா.சே

நாவி
ரசம்
லிங்கம்
மனோசிலை
அரிதாரம்
இந்துப்பு
துருசு
துத்தம்
வெள்ளைபாடாணம்
கௌரிபாடாணம்
தொட்டி பாடாணம்

கந்தகம் - ச்சமஅளவு எடுத்து குப்பைமேனிச்சாற்றில் அரைத்து உருட்டி நிழலில் உலர்த்தி வைத்துக் கொள்ளவேண்டும்.

சன்னி, சூலை, விடக்கடி, உள்வீச்சு, புறவீச்சு ஆகிய நோய்களில் அவ்வவ்விடங்களில் கீறி மருந்தை குப்பை மேனிச்சாற்றில் உரைத்து வைத்துக் கட்ட தீரும்.

# காரம்

மிக்க பிரயாசையுடன் ஆயுதங்களை பிரயோகிக்க வேண்டிய உறுப்புகளிலும், ஆயுத சிகிச்சை செய்து பயன்படாத இடங்களிலும் மூக்கில் உண்டாகும் முளைநோய், ஆசன மூலம், புரையோடிய புண் இவைகளை பரிகரிக்கவும் மருந்து வகைகளை உரிய முறைப்படி புண்ணின் உட் செலுத்தவும் பயன்படும் முறை.

இதில் கார மருந்துகளை அரைத்து மூலிகைநார் அல்லது நூலில் தடவி புரைகளில் உட் செலுத்துவது. இம்முறைக்கு நூல்களில் வெள்ளெருக்க நார் கூறப்பட்டு உள்ளது. வெள்ளெருக்கந் தண்டுகளைக் கொண்டு வந்து நன்கு சுத்தம் செய்து அதன் மேலுள்ள தோல் பகுதியை நீக்கி, உள்ளே காணும் நார் போன்ற பகுதிகளைக் கிழித்து எடுத்துக் கொள்ளவேண்டும்.

*"பவுத்திரம் நோய் பரிகரிப்பு முறையில்*
*வெள்ளெருக்கம் நாராக்கி புரணிபோக்கி*
*விடமான மருந்தையதன் மேலேயப்பி*
*உள்ளிருக்குந் தமரளவு மேலே குத்தி*
*யோடுமெழு மூன்றுனாளப் பகர்ந்து கட்டி*
*நள்ளனைய தயிருந் சோறும் வைத்துக் கட்டிடில்"*

*- அ.ந.நூல் பாடல் 55*

வெள்ளெருக்கத்தின் புறணியை நீக்கி, நாராக்கிக் கொண்டு அதில் கார மருந்தை தடவி புரையுட் செலுத்தி புரையில் மேற்புறமாக குத்தி வாங்கி இரு முளையையும் சேர்த்துக் கட்டி 21 நாட்கள் கட்டி வைத்து பின் தயிருஞ் சோறும் வைத்துக் கட்ட வேண்டும்.

*"மூல முளை அறுக்கச் சொல்லிய இடத்தில்*
*வெள்ளெருக்கு நாரதனாற் சரடேயாக்கி*
*யியம்பவிம் மருந்ததனை மேலே தீற்றி*
*உள்ள குதமளவுங் கண்டு மேலே சுற்றி*
*யுறு சாரு மூன்று நாட் பகிர்ந்து கட்டி*
*தள்ளளை தயிர் சோறு ஏழுநாள் கட்டி*
*நாறு முளையது விழுந்து நாசமானாற்*
*சல்லிவிழுங் குழலாரே நறு நெய்விட்டுக்*
*கை விரலால் சுற்றிவை கனப்பு போமே"*

*- ப.ரா.சே.*

வெள்ளெருக்கு நார் பிரித்து காரமருந்தை அதில் தடவி மூல முளையைச்சுற்றிக் கட்டி எனக் கூறியிருப்பதிலும் வெள்ளெருக்கு நாரே காரசிகிச்சைக்கு பயன்படும்.

**காரமிட்ட பின் பரிகரிக்கும் முறை**

“பறித்திடும் புண்ணிற் காரம் பகைத்து நில்லாமன் மாற்றுத்
திருந்திடுத் தயிருந் சோறும்பிசைந்துவை மூன்று நாளும்
அறிந்து வைத்தமரக்கட்டி யிலிழந்து வெப்பாற்றிய பின்னைச்
சிறந்திடு மெண்ணெய் பண்ணத் தெளிந்து நன் மருந்து செய்யும்”

கார மருந்துகள் இட்ட பின் அவற்றின் வெம்மை நீங்க தயிரும்சோறும் சேர்த்து பிசைந்து வைத்துக்கட்டி பின் புண்கள் ஆறுவதற்கு உரிய மருத்துவம் செய்தல் வேண்டும்.

கார மருந்து முறைகளில் பெரும்பாலும் மருந்தின் கொடுமை குறைய அநேக முறைகளில் சீலை சுட்ட சாம்பல் சேர்க்கப்படும்.

**சவ்வீர காரம்**

“சவ்வீரம் கழஞ்சு மூன்று தாய் முலைப் பாலிற்றானும்
நவ்விய னாலூற வைத்து நல்நெலுமிச்சஞ் சாற்றில்
கவ்வியவே அரைத்து நல்ல கெட்டியாயிருக்கும் போது
உவ்வியவே புரைகட்கெல்லாம் போடுவாய் காரந்தானே”

“காரந்தான் மூன்று நாள் தாம் கட்டுவாய் தயிறுஞ்சோறும்
தாரினிற் புரைகட்டோடே தான் விழும்”

- அ.ர.நூல்

வீரத்தை தாய்பாலில் மூன்றுநாள் ஊறவைத்து பின் எலுமிச்சம் பழச்சாற்றில் அரைத்து புரைகளில் போட ஆறிவிடும். பின் மூன்று நாள் தயிர் சோறு பிசைந்து கட்ட வேண்டும்.

**கௌரி காரம்**

“கௌரியைப் பொடித்து நன்றாய்க் கோரின்னா மணக்கத்
தவியெண்ணெய் தன்னிலிட்டுத் தானதைக் குழைத்துக் கொண்டு
குவிந்திடுமாணி தன்னில் குணமுடன் போட்டபோது
அவிந்திடுமாணி யெல்லா மலறியே யெழுந்துபோமே”

கௌரிப்பாடாணத்தை பொடித்து ஆமணக்கு நெய்யிலிட்டு குழைத்து காலாணியிலிட மாறும்.

**மஞ்சள்காரம்**

“மஞ்சள் கவுரி அரிதாரம் வகையாஞ்சுண்ணந் துத்தமுடன்
அஞ்ச மிருதார் சிங்கியுடன் அரிய வெள்ளை குங்கிலியம்
மிஞ்ச வகைக்கும் பலந்தானும் விளங்கச் சீலை சமனாக
வஞ்ச இடித்துப் பொடியாக்கி மதியாச் சண்டி முளையிலிடே

- அ.ர.நூல்

கவுரிபாடாணம், அரிதாரம், சுண்ணாம்பு, துத்தம், மிருதார்சிங்கி, வெள்ளை குங்கிலியம் வகைக்கு 35 கிராம் எடுத்து இதற்கு சம எடையாக 210 கிராம் சீலை சுட்டசாம்பல் சேர்த்து அரைத்து புண்களிலிட புண் ஆறும்.

**பச்சைக்காரம்**

“மிருதார் சிங்கி யரிதாரம் மிடுக்கு வெள்ளை துருசுடனே
பருக்கா வெள்ளை மருந்ததுவும் பாங்காய் துணியும் சமனாக
நெருக்கா திடித்துப் பொடியாக்கி நிலைக்குஞ்சண்டி பவுத்திரமும்
அருக்கா மூலங் குட்டமறு மதிகப் பச்சை காரமிதே”

- அ.ர.நூல்

மிருதார்சிங்கி, தாளகம், வெள்ளைபாடாணம், துருசு, வெள்ளை குங்கிலியம், துணி சுட்ட சாம்பல் சம எடை எடுத்து பொடித்து போட மூலம், பவுத்திரம் தீரும்.

# அட்டை விடல்

வீக்கம் நீக்கும் செய்கைக்காக காரிரத்தத்தை வெளிப்படுத்தும் முறைகளில் அட்டை விடல் ஒன்று. இரத்தத்தை சுத்தி செய்யுமிச்

சிகிச்சை முறையை முதியவர்க்கும், பெண்களுக்கும், சிறுவருக்கும், மென்மை உடலைப் பெற்றோர்க்கும், ஆயுத சிகிச்சைக்குப் பயந்தவர்களுக்கும் பித்த உடம்பினர்க்கும் சிறப்பாய் உபயோகிக்கலாம். அட்டை நீரில் பிறந்து வசிப்பதினால், இனிப்பையும் குளிர்ச்சியையும் உடைத்தாயிருத்தலின் பித்த நோய்கள் நீங்கும் என்று கூறப்படுகிறது. ஓர் அட்டை சுமார் 120 துளி இரத்தம் வரை உறிஞ்சும் வன்மை உடையது. அட்டை உறிஞ்சுவதனால், 12 அங்குலம் வரை உள்ள இரத்தம் வெளிப்படும்.

ஒரே சமயத்தில் 4 அல்லது 6 அட்டைகளுக்கு மேல் விடக் கூடாது.

அடிபட்ட வீக்கங்கள், கட்டிகள், கிரந்திவீக்கங்கள், சுளுக்கு, தோல் என்பு போன்ற உறுப்புகளைப் பற்றிய வீக்கங்கள் ஆகியவைகளுக்கு அவ்விடங்களில் அட்டையை விட்டு இரத்தத்தை வெளிப்படுத்த அந்நோய்கள் தீரும்.

மருத்துவத்திற்கடங்காத வாந்தியில், நெஞ்சுக்குழியில் விட நீங்கும்.

தாங்காத தலைநோய்க்கு நெற்றிப் பொட்டில் விட அது தணியும். தணியா விடின் பிடரியில் விட வேண்டும்.

சுரத்திலுண்டாம் மார்புநோய், வயிற்றுநோய் ஆகியவற்றிற்கு நோய் கண்ட இடத்தில் விடவேண்டும்.

இரத்த மூலத்தில் இரத்தம் தடைப்படுவதனால் உண்டாம் தலைநோய்க்கு, அட்டையை குதத்தைச் சுற்றி விட நீங்கும். ஆனால், இது குதத்திற்கு புகாவண்ணம் காத்துக் கொள்ள வேண்டும்.

சூதகத் தடையினால் உண்டாம் தலைநோய் நீங்கத் தொடைகளின் உட்பக்கம் கடிக்க விடவும்.

**அட்டையை சுத்திக்கும் முறை**

அட்டையைக் கடிக்கவிடுமுன், அதைச் சுத்திசெய்ய, ஒரு வாயகன்ற பீங்கான் பாத்திரத்தில் மஞ்சள் கரைத்த நீரிட்டு, அதில் அட்டையை விட அதன் உடம்பினின்றும் கோழையொத்த கழிவுப்பொருள் வெளியாகும். பின்பே அந்த அட்டையை உபயோகித்தல் வேண்டும். இக்கழிவுப்பொருள் அதிகமாயிருப்பினும் அது நீரில் சுறுசுறுப்பாய் ஓடாவிடினும் அவ்வட்டை பற்றாது. அதனைப் பயன்படுத்தக் கூடாது.

## நோயாளியைத் தயாரிக்கும் வகை

நோயினனுக்கு, முன்னால் பேதிக்கு அல்லது வியர்வை பெருகுவதற்கு அல்லது வாந்திக்கு கொடுத்து, மறுநாள் அட்டையை விடவேண்டும். மற்றும் அட்டை விடும் போது, நோயாளிக்குப் பட்டினியோ, தூக்கமின்மையோ கூடாது. அன்றியும், அது விடவேண்டிய இடத்தை உவர் மண்ணும் மணலும் கொண்டு கழுவிச் செம்மண்ணால் பூச வேண்டும்.

இதனை,

"சத்தியில் மாந்த ருக்குந் தையல்பிள் ளையர்த மக்கும்
ஒத்துநின் றூட்டு வித்து உறக்கமுந் தவிர்ந்தி டாமல்
மத்தியா னத்து மேலாய் மண்கொண்டு சுத்தி பண்ணிப்
பற்றிய நோய்கள் தன்னைப் பார்த்து அட்டை கட்டே"

என்று கூறியிருப்பதாலறியலாம்.

## கடிக்கும்படி செய்யும் வகைகள்

வாய் குறுகலான நீர் நிறைந்த பாத்திரத்தில் அட்டையை விட்டு, அப்பாத்திரத்தின் வாயை கடிக்கவிட வேண்டிய இடத்தில் கவிழ்த்து, நீர் வெளிப்படா வண்ணம் பிடித்தால் பற்றும். பற்றாவிடின், இடத்தை துடைத்து, ஒரு துளி பாலைத் தடவி, நீரில் நனைத்துப் பிழிந்த பஞ்சால் அட்டையை மெல்லெனப் பிடித்துவிடப் பற்றும். இதற்கும் பிடிக்காவிடின், இடத்தைச் சுத்தமான குண்டூசி கொண்டு இரத்தம் சற்றே கசியும் வண்ணம் கீறி, அதன் மீது அட்டையை விட அது உடனே பற்றிக் கொள்ளும்.

அட்டையின்முகம் பெரிதான முனை குதிரைக் கொளம்பு போன்ற உருவத்துடன் மிக நுண்ணிய வியர்வைத் துளியுடன் தோன்றினால், நன்றாய்க் கவ்விக் கொண்டதென்று உணர்ந்து, அதன்மீது ஈ மொய்த்து இரத்தம் இழுப்பதைத் தடுக்காமலிருக்க ஈரத்துணியிட்டு மறைக்கவும்.

கடித்த அட்டை கீழே விழ அட்டை அரைமணியிலிருந்து நான்கு மணி நேரத்திற்குள் இரத்தத்தைக் குடித்துத் தானே கீழே விழுந்து விடும். கீழே விழச் செய்ய வேண்டுமாயின் உப்புநீர் அல்லது காடிநீரைக் கடிவாயில் தெளிக்கவும். அட்டை மூக்கின் துளை, குதம், குய்யம், இவ்விடங்களில் புகுந்துவிடின், அதனை வெளிப்படுத்த மேற்படி சிகிச்சையே பொருந்தும்.

## கடிவாயில் இரத்தத்தை நிறுத்தவும் பெருக்கவும்

அட்டை விழுந்தபின் கடிவாயினின்றும் இரத்தம் அதிகமாக வெளிப்படின், பொரித்த படிகத்தூள், துருசின்தூள், மஞ்சட் தூள், பஞ்சு சுட்ட கரி, சீலைசுட்டக்கரி, சிலந்திக்கூடு, மாசிக்காய்த் தூள், இவைகளுள் ஏதாவதொன்றைக் கடிவாயிலிட இரத்தம் நிற்கும். நிற்காவிடின், கடிவாயைவிரலால் சிறிது நேரம் அழுத்தினாலும், காடிக்காரமுனையால் தொட்டாலும், துண்டுச் சீலை வைத்து அழுத்தமாகக்

கட்டினாலும் நின்றுவிடும். இதற்குப் பலன் இல்லையேல், பழுக்கக் காய்ச்சிய ஊசியால் கடிவாயைச் சுட நிற்கும். மெழுகுத் தைலத்தையும் கையாளலாம்.

கடிவாயினின்றும் இரத்தம் வெளிப்படும்படி செய்ய, வெந்நீர், தவிடு, நொச்சியிலை, வேப்பிலை இவைகளுள் ஒன்றைக் கொண்டு ஒற்றிடமிடவும்.

அட்டை விடுதல் நன்கு நிறைவேறிற்றெனில், கெட்ட இரத்தம் நீங்கியவுடன், நோயினால் உண்டான சோகமும் வேதனையும் நீங்கும்.

அட்டைக் கடியினால் உண்டான புண்ணுக்குச் சிகிச்சை

காடி, காரெள், கற்றாழை இம்மூன்றையும் அரைத்து மேல் பூசி வந்தாலும், கற்றாழை மடலைச் சுட்டு இரண்டாய்ப் பிளந்து மஞ்சள் தூளைத் தூவிப் புண்ணின் மீது வைத்துக் கட்டினாலும் நீங்கும்.

# அறுவை

"குடவயிறுடைய வேழமுகன் கழற்றலை மேற்கொண்டே
இடமிகு நரம்பிலுற்ற வெழுச்சிகள் பிளவையாதி
விட மிகு கடிகை தன்னை யறுத்திடப் பண்டிதற்காய்த்
திடமுறு முனிவரந்நாட் சத்திர விதி செய்தாரே"

- ப.ரா.சே.

உள் மருத்துவத்தால் நீக்கமுடியாத பிளவை கட்டி, கழலை, எழுச்சிகள் ஆகிய நோய்களை சத்திரத்தால் நீக்க வேண்டியது என்பது விதியாகும்.

இவ்வாறன சத்திர விதிக்கென நூற்களில் இருபத்தி ஆறு வகைக் கருவிகள் கூறப்பட்டுள்ளன.

**கருவிகளின் வகைகளும், அமைப்பும்:**

"மண்டலாக்கிரம் விருத்தியுற்பல மருவுகை
கொண்ட கோடரி சூசி குறும்பி வாங்கி
ஒண்டொடி கபத்திரம் பணபத்திரந் துவி முகம்
விண்டக கன்னி விதஞ்சாரி விரிகி வேதச பத்திரமே"

"தூண்டில் வீணை யங்குசம் பிரசோதி சோதி நிறை தாரை
காண்ட தத்திரி கூர்ச்ச நீள் படிச மங்குலி சத்திரம்
மீண்டு மந்தர் முகத்தினோ டசை முகம் பையென விரித்தோர்
வேண்டுஞ் சத்திரமெட்டு மெட்டு மோர்பத்து மென்ன விளம்பினார்".

மண்டலாக்கிரம், விருத்தி, உற்பலம், சூசி, கோடரி, முத்தரி, கத்தரி, குறும்பிவாங்கி, கபத்திரம், பணபத்திரம், துஷமுகம், கரபத்திரம், விண்டக கண்ணி, சாரி, விரிகி, வேதசபத்திரம், தூண்டில் வீணை, அங்குசம், பிரசோதி, சோதி நிறை, தாரை, தத்திரி, கூர்ச்சம், நீள்படிசம், அங்குலிசத்திரம் அந்தர்முகம், அசைமுகம், என்பதாகும்.

இவற்றுள் சிலவற்றிற்கு அமைப்பின் இயலும், கருவிகள் சமைக்கும் விதி முறைகளும் கூறப்பட்டுள்ளது.

**கத்தரி**

"ஆகிய காம்பி ரண்டுக் கீரறு கழஞ்சு ருக்கைப்
பாவியே யடித்து நீட்டிப் பதத்திலை விரலே கொண்டு

மேவியே யஞ்சு கூறிட் டிருகூறும் விரித்து மரிக்
காவஞ் சவரம் பற்றக் கத்தரி யென்ன லாமே”

**குறும்பிவாங்கி**

“எண்ணியே சலாகை புற்போ லிருவிர லகலம் வாங்கிப்
பண்ணியே முனையி லெட்போற் பதியவே மடக்கித் தாழ்த்திக்
கண்ணியார் செவியிற் பூந்த கடுந்தும்பி யெறும்பு பூளை
அண்ணவே யடுத்துக் காதிற் குறும்பியு மகற்ற லாமே.”

**கபத்திரம்**

இருப்புத் தகடங் கிருபலத்தை யிருநால் விரலிற் சாரித்தே
உருக்குத் தகடு மொருபலத்தை யுள்ளே வைத்து மேன்மடக்கி
நெருப்பிற் காய்ச்சி நாலுதர நிளைவா யடித்து வெந்தெடுத்துப்
பருக்கச் சாணை தனைவைத்தாற் பரிவாய்ச் சலாக பத்திரமே

**பணபத்திரம்**

இரும்புநாற் கழஞ்சு வாங்கி யீரைந்து விரலே நீட்டி
அரும்புபோன் முனைய கத்தி லாவரை விறகிற் காய்ச்சித்
துரும்புபோ லிசைபண் பாடுந் தொண்டையி லடைப்புண் டாகில்
இறும்பண பத்தி ரத்தை வைத்துளை நாக்கிற் கொள்ளே.

**கரபத்திரம்**

உருக்கு மிரும்புஞ் சரியாக வோரைந் திரட்டி கழஞ்சாக்கிச்
சுருக்கக் காய்ச்சி யாறுவிரல் துலங்க நீட்டி யதிற்பாதி
நெருக்கி யடித்தே யிரண்டுவிர லகலங் கொள்ள நெடிதாக்கிப்
பருக்கும் வியாதி யில்லெலும்பிற் பரிவாய்க் கீறும் பத்திரமே

**விண்டகண்ணி**

பற்றியே பதின்க ழஞ்சா மிரும்பினாற் பகர நீட்டி
உற்றுமே பதினாலான வங்குல முயரங் கொண்டு
மத்தென முனையில் மூன்று கூறுடன் வகுத்து நீக்கிப்
புத்துடன் கடிகைக் காகும் புகல்விண்ட கண்னி யாமே

**சாரி**

அல்லறீ ருருக்கி ரண்டு கழஞ்சிலே யன்ப தாகச்
சொல்லி விருநான் கெட்டு விரலிடை துவளக் கூட்டி
நெல்லிடை முனையை நன்றா யொளியுறு நிறம தாக்கி
பல்லினில் வியாதி யேய விதஞ்சாய் விடுத்த வாறே
விரிகி — நெல் முனை போன்று அமைக்கப்படும் ஆயுதம்.

**மண்டலாக்கிரம்**

தெருக்குந்தலைநெல்லொருங்கின
ளவாய்க்குழியினிறை தசையைப்
பொருக்குகள் நறுக்குங் கருவிக்குப்
பொருந்தும்பேர் மண்டலாக்கிரமே

**விருத்தி**

நிறையிலுருக்குக் கழஞ்சானால் நீள மாறு விரல்கொண்டு
சூறையாக் கருவி மூன்றுவிரல் கொள்ளும் வடிவு முக்கோணம்
பெறுமோர் விரலி னகலமதாய்ப் பிடங்கு மடியும் பின்றாழ்ந்து
முறைகூர் நீண்டு விற்போல முதுகு வளையும் விருத்தியதே

**உற்பலம்**

கூறிய வுருக்கி ரண்டு கழஞ்சிலை விரலாய்க் கொண்டு
மரிலாள் கருவிக் காம்பு கால்விர லரையுங் கூட்டி
மீறிலாக் கிரமுஞ் செய்ப வகத்தினி லருக்கக் கண்ணில்
ஊறிய காசங் குத்தக் கருவியுற் பலம் தாமே

**சூசி**

உற்றதோ ருருக்கி ரண்டு கழஞ்சிலே யுருட்டி நீளம்
பற்றுநூல் விரலே கூட்டிப் பக்கத்தின் முனையைத் தீட்டிப்
புற்றுடன் கடிகை நீக்கப் புரையவை முதலா வுள்ள
சித்திரஞ் செய்யச் சூசி சிலாகையை விடுக்க நன்றே

**குடோரி**

உருக்கு மிரும்பு மொருகழஞ்சா யொன்றாய்க் கூட்டிப்பதத்தடித்து
நெருக்கி யாறு விரனீட்டி நெற்போன் முனையை யுள்வளைத்துச்
செருக்கும் வாய்ச்சிதன்வாய்போற் நெறிவாய்வடித்துவைத்தெடுத்துக்
குருத்திலிடிக்குந்தலைவலிக்குநரம்புதிறக்குங் குடோரியிதே.

**முத்தரி**

நன்றுநீ ருருக்கை வாங்கி நால்விர னீளங் கூட்டி
ஒன்றதாய் மூன்று பங்கிட்டொருபங்கு வாய்க்கூறாக
நின்றவேல் பலகை போல் நீளமாய்க் குலவ நீட்ட
அன்றிய காது குத்து முத்தரிக் கருவி யாமே.

நோய்களுக்கு ஏற்ற அறுவை முறைகள், அறுவைக்குப்பின் ஆற்றும் விதி முறைகள் யாவும் அந்தந்த நோய்களுக்கு கீழ் நூற்களில் விரிவாகக் கூறப்பட்டுள்ளது.

# கொம்பு கட்டல்

நோயாளியின் என்புகள் உடைந்து விட்ட நிலையில் அதனை இணைத்து மீண்டும் ஒட்டிக் கொள்ளும்படி செய்வதற்கு அவ்வுறுப்புகளில் மரச் சட்டம் வைத்துக் கட்டுதலாம். இக்கட்டுமுறை பெரும்பாலும் நீள என்புகளில் ஏற்படும் முறிவுகளை நீக்க உதவுவது.

இக்கட்டுமுறையை பொருத்துகளில் கட்டக்கூடாது. ஆயினும் வம்சி கோர்வையில் ஏற்படும் முறிவிற்கு நீள சட்டம் வைத்துக் கட்டும் முறை உள்ளது.

இக்கட்டு முறைக்காக பயன் படுத்தும் கொம்புகள் தென்னை மட்டை, மூங்கில் இவற்றால் தயாரிக்கப்படுகிறது.

மருத்துவர் இதனை சிறுசிறு சிலும்பல் இல்லாமல் கத்தி கொண்டு தேவையான நீள அகலத்தில் சீவி வைத்துக்கொள்ள வேண்டியது.

இது வழக்கில் சீழி, மட்டை என்றும் பேசப்படுகிறது. கொம்பு தயாரிப்பதில் தென்னைமட்டையே உயர்ந்தது.

**கொம்பின் அளவுகள்**

கொம்பை ஒரு சாண், நான்குவிரல், ஒரு முழம் ஆகிய அளவில் நீளத்திலும், ஒருவிரல், இரு விரல் அகலத்திலும் லு விரல் கனத்திலுமாக சீவி துணி கொண்டு சுற்றி வைத்துக் கொள்ள வேண்டியது.

என்புகள் ஒடிந்த நிலையில் அவற்றை சரியாக உரியநிலையில் பொருத்தி வைத்து மேல் துணி கொண்டு சுற்றி அதன்பின்தான் கொம்புகளை வைத்து பின் கொம்புகளை சேர்த்து துணி கொண்டு சுற்றக்கட்ட வேண்டும்.

இதனால் கொம்புகள் நேரடியாக தோலில் உராய்ந்து புண்கள் ஏற்படாவண்ணம் பாதுகாக்கப்படுகிறது. கொம்புகளை வைத்துக் கட்டும் முறையில் கை என்புகளாயிருப்பின் உள்பக்கமாகவும், கால் என்புகளாயிருப்பின் வெளிப்பக்கமாகவும் துணியை சுற்றிக் கட்ட வேண்டும்.

கட்டும் துணியானது அகலத்தில் 4 விரல் அளவிலும் நீளத்தில் தேவைக்கு ஏற்பவும் அமைத்துக் கொள்ளவேண்டும். இதற்கு சில தைல முறைகளும், முட்டைவெண்கரு, புளியங்கொட்டைதோல் முதலியவை பயன்படுத்தப்படுகிறது.

இம்மருத்துவ முறை "குரு முறையாக" மட்டுமே அறிந்து கொள்ள முடியும்.

— *ஒடிவு முறிவுகள் நூல் 1200.*

## உறிஞ்சல்

துட்ட ரத்தம், விரணங்களில் உள்ள சீழ் முதலியவற்றை உரிய கருவிகள் மூலம் உறிஞ்சி வெளிப்படுத்தி ஆற்றும் முறை.

உறிஞ்சல் முறைகளில் கொம்புகளும், கொம்புகளை போன்ற கருவிகளும், சுரைகுடுக்கை, குடுவை போன்ற கருவியும் பயன்படுத்தப்படும். வாதத்தால் கெட்ட ரத்தத்தை கொம்பு கொண்டு உறிஞ்சும் முறையாலும், கபத்தால் கெட்ட ரத்தத்தை சுரை குடுக்கை, குடுவை போன்ற முறையிலும் உறிஞ்சி வெளிப்படுத்த வேண்டும்.

இவ்விரு கருவிகளிலும் தர்ப்பை முதலியவற்றால் உள்ளே சுவாலையிட்டு கொளுத்தி உள்ளுள்ள வாதத்தை நீக்க நோயுள்ள இடங்களில் கவிழ்த்து வைத்தல். அது அங்குள்ள வாத கப தோடத்தை நீக்கிவிடும்.

நெருப்பின் தொடர்பால் உறிஞ்சுமுறை கருவிகளாக இவை இருப்பதால் இரத்தபித்த முறைகளில் பிரயோகிக்க கூடாது.

**உறிஞ்சு குழலின் அமைப்பு:**

8 அங்குலம், 10 அங்குலம், 12 அங்குலம் ஆக மூவகை நீள அளவில் மேலே 3 விரல் அளவில் முகமும், முனையில் வெண் கடுகு செல்லத்தக்க அளவில் துவாரமும், முனையில் முலைக் காம்புபோலும் அமைக்கப்பட்டு மெல்லிய தோலால் கட்டப்பட்டு இருக்கும்.

வாதம், நஞ்சு, இரத்தம், நீர் இவற்றால் கெட்டுப் போன தாய்ப்பாலை உறிஞ்ச பயன்படும்.

“கொம்பீரைந்தங் குலமாம் வாழையின்
குருத்தொப்பது பூணகல விரண்டங்குலம்
மேனிவீக்கத்தை வீட்ட வல்லதே
வெளியிடத் தக்க மிகுபயனாயதே”

கொம்பானது 10 நீளத்தில் வாழையின்குருத்தை போல அடி அகன்று நுனி சிறுத்தும் குருதி கேட்டினால் வரும் வீக்கத்தையும், கட்டி முதலியவற்றிலும் இரத்தத்தை கீறி உறிஞ்ச பயன்படுத்தலாம்.

# குருதி வாங்கல்

குருதி வாங்கல் முறையானது சிரைவிதி எனவும், இயந்திரிபு எனவும் பல சொற்களால் பேசப்படும்.இத்தலைப்பில் கூறப்பட்டுள்ளவை யாவும்

பராசசேகரம் எனும்நூலில் காணலாம்.மேலும் குருதி வாங்கும் இயல்புடைய நோய்நிலைகள், அவ்வவற்றிற்கு உரிய குருதி வாங்கும் முறைகள் யாவும் நோய்த் தொகுப்பின் கீழ் அந்நூலில்கூறப்பட்டுள்ளது.

“சீத வுட்டணங்களோ டிரத்தம் வற்றி யுட்புறம்
மோதவுற் றெழுந்தரோக முற்றியே மிகுந்திடும்
போதமுற் றெழுந்த காலை பொங்கு துட்டரத்தமும்
ஏதமுற்ற நாடிகீண் டெடுக்க நோய்கள் போமே”

“இப்படி யுரோகந் தன்னிலியைந்திடுங் குணங்கள் கண்டு
மெய்ப்பட வுதிரம் வாங்கி மேவியே மருந்து செய்க
அப்படி செய்யா யாகி லடுத்த நோய் போகாதென்று
செப்பிடு முனிவர் வாக்குத் தேர்ந்துசெய்குறிகள் காணே”

### இரத்தம் எடுக்கக் கூடாத காலம்

“உதித்தெழு சீத மிக்கு மனலுருத் தெழுந்தகாலும்
கொதித்தெழு காற்றின் முன்புங் கொடுபனி மிகுந்ததாலும்
மதித் தெழு முறக்கத்தார்க்கு மருவுமிக்கால பேதம்
விதிப்படி யிவைகளெல்லா மாய்ந்திட வேண்டுமன்றே.”

### இரத்தம் எடுக்கத் தகாதவர்கள்

“இசைந்த பன்னாறுக் குள்ளு மெழுபதின் மேலுமிங்கன்
அசைந்திட வுதிரம் வாங்கலவர் மக்கா காதென்னும்
வசம்பெறு நசையிலார்க்கும் வரள் மிக வுடையபேர்க்கும்
கசம் பெறு ரோகியென்று கருதுமானிடர்க்கு மாகா”

“கருதிய வாதரோகி கனத்தெழு சூலி யாமம்
பெருகிய ரத்த பித்தம் பெலத்தெழு சுவாசகாசம்
மருளதி சாரஞ் சத்தி மகோதரம் பாண்டுசோபை
வெகுவிட விவைக்கு நாடி விண்டிலாகா தென்னே”

### குருதிவாங்கும் நாடி இயல்பு அறிதல்

"சுத்தமாயியற்றிரிக்கிற் சுடர்விடு நாடி தன்னை
ஒத்திடக் குறுக்கே யோடிற் குத்திடலாகா தென்னும்
மத்தமாய் மறைந்து நிற்கின் மருவவுமாகாதென்னும்
ஒத்ததோர் நாடி கண்டு குத்திட லுறுதியாமே"

### சிரை விடுமுன் செய்யவேண்டுவன

துய்யதோர் மேனி யெல்லாத் துவக்கற நனைத்துப் பின்னைப்
பையவே முழுகச் செய்து பயின்றீச மாற்றிக்கொண்டு
வெய்யவோர் பொழுது தன்னில் விதிபெறச் சுவேதிப் பித்துச்
செய்யவே மற்றை நாளிற் றேர்ந்து பின் கிரியை செய்யே

நரம்புறத் திறக்கும் போது நலமுள வுணவு கொண்டே
உரம்பெற வோடு காய்ச்சி யொற்றிட முண்டந் தன்னில்
சிரம்பெற வொற்றிப் பின்னாத் திகழவே யியந்தி ரித்துப்
புரந்தூ னுதிரம் வாங்கப் பரமுனி யருளிச் செய்தான்

உன்னிரு சாணி லுள்ள வுயரத்தி லிருக்கை சேர்த்தி
மன்னிய முழந்தாண்மேலே மகிழ்ந்திரு கூர்ப்பம் வைத்துப்
பன்னிய முஷ்டி தன்னைப்பதியிரு மன்னை தன்னில்
மன்னிய சீலை கூட்டி மலாவே முறுக்குங் காணே

### குருதி வாங்கும் முறை

பிறகுற முறுக்கும் போது மிந்திரு தட்டங் கூட்டித்
திறம்படச் சுத்த முன்னே சிக்கெனப் பிடித்துக் கொண்டு
புறம்பெழத் தெசனி தன்னாற் புடைக்கவே தெறித்துப்பார்த்து
நிறமுறக் கண்ட நாடி யங்குட்டத் தமுக்கிப் பாரே

பார்த்துப்பின் னதனி னன்கு பயின் றிடுங் குடோரி தன்னால்
சீர்த்திடக் கைப்பி டித்துத் திசைநடு நாடி வைத்துச்
சேர்த்திடும் வலக்கை கொண்டு சேர்நடு விரற்றெ றித்தே
ஆர்த்திடக் குத்திப் பின்னை யதிற்சுடர் வாங்கு மாறே

"குருகிய குடோரிகொண்டு கண்டிருநாடி தன்னை
உருவுறக் குத்தும்போதே யுன்னிகைகைநடுங்கிடாமல்
வெருவிய வன்மந் தள்ளி விரைவுறு புத்தி தன்னால்
பரவியே குத்தவென்று பகர்ந்தனர் முனிவரம்மா"

"பரிசனஞ் செய்த பின்னைப் பண்பினாற் பிடித்துக் கொண்டு
கருதிய நாடி தன்னைக் காட்டிய விரிகை தன்னாற்
பெருகிய வுதிரந்தோன்றப் பேணியே கிரியை செய்ய
மருவுமா முனிவர் தாமு மகிழ்வுறச் செப்பினாரே."

**குடோரிகருவியின் அளவு**

"குடோரி யேழரை யங்குலம் நிறை காற்பலம்"

குடோரியினால், சொல்லியுள்ள நோய்கட்கு தக்கவாறு உரிய காரிரத்த குழாயைகீறி விரிகையினால் விரித்து துட்டரத்தத்தை வெளியேற்ற வேண்டும்.

**குடோரி செய்யும் விரிகை முறை:**

காரிரத்தக் குழாயை கீறுங்கால் விரிக்கச் செய்ய நெல் போன்ற முனையுடைய விரிகையெனும் ஆயுதத்தால் விரித்து குருதி வடியச் செய்ய வேண்டும்.

மாமிசம் அடர்த்தியாயுள்ள இடங்களில் யவா அரிசி அளவும், மற்ற இடங்களில் நெல் அளவும் குருதி நாளத்தை கீற வேண்டும்.

**இரத்தப் பெருக்கை உண்டாக்கும் முறை**

தகரை விரை, ஏலரிசி, கற்பூரம், கோட்டம், வட்டத்திருப்பி, வாய்விடங்கம், தேவதாரு, சுக்கு, மிளகு, திப்பிலி, மஞ்சள், எருக்கு மொட்டு, புங்கு இவைகளில் கிடைத்த வரையில் சேகரித்து உலர்த்தி சூரணித்துக் கொள்ள வேண்டும்.

குடோரி செய்தபின் கீறிய வாயில் இரத்தம் வெளிப்படாவிட்டால் மேற்படி சூரணத்தை தூவ இரத்தம் நன்கு வெளிப்படும்.

ஒரு முறை குருதி வாங்கல் செய்ய கீறியவுடன் இரத்தப் பெருக்கு ஏற்பட்டு ஒரு முகூர்த்த நேரத்திற்குள் தானாகவே நின்று விட்டால் நன்றாக குடோரி செய்யப்பட்டதற்கு அடையாளம்.

குருதி நன்கு வெளிப்பட்ட பின் அவ்விடத்தை, மேலிருந்து கீழாக கட்டை விரலில் அழுத்திக் கொண்டு கருவியை மெள்ள வெளிப்படுத்தி எண்ணெயில் நனைத்த பஞ்சை கீறப்பட்ட இடத்தில் வைத்துக் கட்ட வேண்டும்.

பின்னும் இரத்தம் மிகுதியாக வெளிப்பட்டால் இரத்தப் பெருக்கை நிறுத்த ஞாழல், காவி, இலவம் பிசின், ஆல், அரசு, தான்றிக்காய், காட்டாத்திப் பூ, கொம்பரக்கு, கடல்நுரை, தேவதாருபிசின் இவற்றை கிடைத்த வரையில் சூரணித்து தூவ வேண்டும்.

குருதி வாங்கல் எனும் சிரைவிதி குருவழியாகவே கற்றுத்தேர்தல் வேண்டும்.

## பீச்சு

ஆசனவாய் மற்றும் ஆண், பெண் குறி வழியாக உரிய மருந்து பொருட்களை உட்செலுத்தி மருத்துவம் செய்யும் முறை.

இது "வஸ்தி" எனவும் வழங்கப்படும். இதற்கு உரிய கருவி பீச்சுக் கருவி என்றழைக்கப்படும்.

**பீச்சுக் கருவியின் இலக்கணம்**

வயது, பலம், உடல் இவற்றிற்கு ஏற்ப கருவியின் அமைப்பை மாற்றிக் கொள்ள வேண்டும்.

ஆசன துவாரம் வழியாக பீச்சு கொடுக்கும் கருவி முறையில் வெள்ளாடு, செம்மறி ஆடு, மான், பசு இவற்றில் ஏதாவது ஒன்றின் சிறு நீர்பையை எடுத்து அதில் எண்ணெயுடன் பயற்றுமாவை சேர்த்து பூசிக்கழுவி வழவழப்பாகச் செய்து துவாரம், முடிச்சு நரம்பு தடுப்பு இல்லாது செய்து கொள்ள வேண்டும்.

கடுக்காய் கஷாயத்தினால் பதனிட்டு சிவப்பு நிறமாகத் தயார் செய்து கொள்ள வேண்டும். இவ்விதம் பக்குவப்படுத்தப்பட்ட பைகள் தற்காலம் கிடைக்கக் கூடியது. அதன்பின் வஸ்தி குழலானது தங்கம், வெள்ளி போன்ற உலோகங்கள் சங்கு, மான் கொம்பு, வைரம் பாய்ந்த கருங்காலி, மூங்கில், நாணல் முதலியவற்றால் கோணலின்றி வழுவழுப்பாயும் பசுவின் வால் போன்று அடிப்பகுதி கட்டைவிரல் சுற்றளவிலும், விசாலமாயும், போகபோகச் சிறுத்து நுனிப்பகுதி சிறு விரல் சுற்றளவிலும் அமைக்கப்பட வேண்டும்.

கருவியின் நுனிப்பகுதியில் உள்ள துவாரம் காட்டுபயறு, உளுந்து, கடலை இலந்தை கொட்டை இவை நுழையத் தக்கதாயிருத்தல் வேண்டும்.

கருவியின் நீளமானது 5 அங்குல முதல் 9 அங்குலம் வரை அமைக்கப்பட வேண்டும்.

அடிப்பகுதியில் உள்ள துவாரத்திலிருந்து 3 அங்குலம் தள்ளி ஒவ்வொரு அங்குலத் திற்கும் தடை வளையம் வைத்து அமைக்க வேண்டும்.

பதப்படுத்தபபட்ட சிறுநீர்பையின் வாய்பக்கத்தை திறந்து வஸ்தி கருவியின் அடிப் பாகத்துள் நுழைத்து தடை வளையத்துடன் இறுக்கமாக கட்டி வைக்க வேண்டும்.

சிறுநீர் பையின் மற்றொரு துவாரத்தின் வழியாக பீச்சு மருந்து பொருட்களை உட்செலுத்தி அதன் வாயை இறுகக் கட்டிக் கொள்ள வேண்டும்.

**பீச்சுக் கொடுக்கும் முறை**

நோயாளியை அவனின் கால் பக்கம் உயர்ந்தும், தலைப்பக்கம் தாழ்ந்தும் இருக்கும் படி படுக்கச் செய்ய வேண்டும். இடது பக்கமாகச் சாய்ந்து படுக்கச் செய்து கொள்ள வேண்டும். இடதுக்காலை நீட்டி வலது காலை மடக்கி வலது கையை அதன்மேல் வைத்துக் கொள்ளும்படி செய்ய வேண்டும்.

பீச்சுக் கருவியிலும், மலத்துவாரத்திலும் நெய்யைபூசி கருவியை முதல் தடைவளையம் வரை உட் செலுத்த வேண்டும். பின் நிதானமாக பையை அமுக்கி மருந்தை உட் செலுத்த வேண்டும். ஆண், பெண் குறிகளில் பீச்சு செய்யும் முறைக்கு உண்டான கருவிகள் தங்கம், வெள்ளி முதலிய உலோகங்களினால் வழவழப்புள்ளதாயும், விரல் கணுவைப் போல் 12 மடங்கு, ஏறத்தாழ 12 அங்குலம் உடையதாக இருத்தல் வேண்டும், அடியில் பருத்தும், நுனியில் சிறுத்தும் இரு புறமும் துவாரத்துடன் அமைக்கப்பட வேண்டும். நுனிப்பகுதியின் துவாரமானது கடுகு செல்லக் கூடிய அளவு இருக்க வேண்டும். பெண் குறியில் செலுத்தக் கூடிய பீச்சுக் கருவியின் நுனிப்பகுதி பயறு நுழையக் கூடியதாயும், 2 லிட்டர் பீச்சு மருந்து கொள்ளத் தக்க பைகளுள் அடைக்கப்பட்டு பீச்சு கருவியில் இணைக்கப்பட வேண்டும்.

பீச்சு மருந்துகள் குடிநீராகவோ, எண்ணை வகைகளாகவோ இருக்கலாம். குடிநீர் முறைகளில் தேன், உப்பு, கல்கம் இவை அடங்கும்.

விரைவில் மலங்களை வெளியேற்றி உடலை இளைக்கச் செய்து விரைவில் உடலுக்கு வலிவை அளித்து எவ்வித துன்பங்களையும் உண்டாக்காமையால் பீச்சு முறை சிறப்புடையது.

மலம் கழிக்கச் செய்வதற்கு மட்டுமின்றி சிறுநீர்ப்பை, கருப்பை முதலியவற்றை கழுவி சுத்தப்படுத்தவும் இம்முறை உதவும்.

பெண்குறி நழுவல், வலி, வெள்ளை, பெரும்பாடு இவற்றிலும் பீச்சு செய்யலாம்.

தற்காலத்தில் நவீன முறையில் பல வகை பீச்சுக் கருவிகள் நடைமுறையில் உள்ளன.

## "அக, புற மருந்து தொகுப்புகள்"
## எனும் இந்நூலை தொகுக்க ஆதாரமான நூற்கள்


அகத்தியர் வைத்திய ரத்தின சுருக்கம்

அகத்தியர் வல்லாதி

அகத்திய மாமுனிவர் திருவாய் மலர்ந்தருளிய செந்தூரம் — 300

அகத்தியர் பாண்ட வைப்பு

அகத்தியர் பன்னிரு காண்ட வைத்தியம்

அகத்தியர் ரண வைத்தியம்

அகத்தியர் வைத்திய காவியம்

அகத்தியர் வைத்திய சூத்திரம்

அகத்தியர் நயனவிதி — 500

அமிர்த சாகரம் — வைத்திய விளக்கம்

அஷ்டாங்க சங்கிரகம்

தேரையர் வெண்பா

தேரையர் கரிசல்

தேரையர் தைல வர்க்கச் சுருக்கம்

தேரையர் காப்பியம்

தேரையர் வைத்தியம்

யாக்கோபு வைத்திய சிந்தாமணி

யாக்கோபு லோக செந்தூரம்

யாக்கோபு வைத்திய வாத சூத்திரம்

தன் வந்திரி பகவான் திருவாய் மலர்ந்தருளிய வைத்திய காவியம்

திருவள்ளுவ நாயனார் நவரத்ன வைத்திய சிந்தாமணி

பரராச சேகரம்

புலிப்பாணி வைத்தியம் — 500

போகர் — 700

போகர் சத்த காண்டம்

பால வாகடம்

நாமதீப நிகண்டு

நாக முனி நயனவிதி — 200

சித்த வைத்திய திரட்டு

சித்த மருத்துவாங்கச் சுருக்கம்

குணபாடம் — மூலிகை வகுப்பு

தாது சீவ வகுப்பு

சிகிச்சா ரத்தின தீபம்

ஸரக ஸம்உறிதை

போகர் 7000 3ம் ஆயிரம்

தேரையர் தரு

அகத்தியமாமுனிவர் பரிபூரணம் — 400

வைத்தியக் குறள்.

